


# பாரா முகங்கள் சில பார்வைகள்

பத்மா சோமகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராமுகங்கள்..... சிலபார்வைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராமுகங்கள் ......
# சிலபார்வைகள்

பத்மா சோமகாந்தன்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு – சென்னை
2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராமுகங்கள் சில பார்வைகள்
– பத்மா சோமகாந்தன் எழுதியது
பதிப்புரிமை © 2008 பத்மா சோமகாந்தன்

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
– 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை – 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12,

Paramukangkal..... Sila Parvaikal
by: Pathma Somakanthan

First Edition © 2008

*Published by* **Kumaran Book House**
- 361,1/2 Dam Street, Colombo -12,Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* **Kumaran Press (Pvt) Ltd.**
- 361,1/2 Dam Street, Colombo -12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

"எழுத்துத் துறையில் பிரமைகள் அதிகம்" என்று ஒரு நூலின் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பார் எழுத்தாளர் அசோகமித்திரன். புனைகதைகளுக்கான முக்கியத்துவம் தான் அவரை அப்படிக் குறிப்பிட வைத்திருந்தது. இன்றையச் சூழலில் கவிதை, சிறுகதை, நாவல் உள்ளிட்ட புனைவுப் படைப்புகளையும் தாண்டி எழுத்துத்துறை பரந்து விரிந்திருக்கிறது. கட்டுரைகள், விமர்சனங்கள், சுயசரிதை, வாழ்க்கை வரலாறு, ஆய்வுகள் எனப் பரவலாக பலதரப்பட்டப் படைப்புகள் தமிழில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அச்சுத் துறையின் நவீன தொழில் நுட்பமும், புத்தகங்களின்பால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஈர்ப்பும்தான் இதற்குக் காரணம் என்று கூடச் சொல்லலாம்.

எழுத்து, தன் பன்முகத் தன்மையுடன் புழக்கத்தில் இருந்தாலும் வாசகன் தன் ருசிக்கேற்ற நூல்களைத்தான் தேர்வு செய்கிறான், தேடிச் செல்கிறான். பதிப்புத்துறையில் இருக்கும் பலரை நான் பார்த்திருக்கிறேன். கவிதை, சிறுகதை, கட்டுரை ஆகியவை அவர்களைப் பொறுத்தவரை விற்பனை ஆகாத பண்டங்கள். புத்தகம் வெளிவந்து ஓராண்டு காலத்துக்குள் அதை விற்றுக் காசாக மாற்றத்தக்க புத்தகங்கள் என ஒரு பட்டியல் உண்டு. சுயமுன்னேற்ற நூல்கள், சமையல் குறிப்புகள், சனிப்பெயர்ச்சிப் பலன்கள், ஜோதிட சாஸ்திரம்....... என்ற ஒரு சிறிய பட்டியல் அது.

இன்றைய தமிழ் இலக்கியச் சூழல் இப்படியிருக்க "பாராமுகங்கள் - சில பார்வைகள்" என்ற இந்த நூல் விற்பனைக்கான எந்தவிதமான நோக்கத்தையும் கொண்டிருக்காமல் வெளிவருவது ஆச்சரியத்தைத் தருகிறது. எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் எழுதியிருக்கும் இந்நூல் எத்தனையோ பேருக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்தரக்கூடிய, வாழ்வின் மிக நுட்பமான பகுதிகளில் நிலவும் சிக்கல்களுக்குத் தீர்வு தருகிற நூல். "வீரகேசரி" வார இதழில், "நெஞ்சுக்கு நிம்மதி" என்ற தலைப்பில் இதே வகைக் கேள்விபதில்கள் ஒரு தொகுப்பாக வெளிவந்திருக்கின்றன.

தமிழில், "கேள்வி - பதில்கள்" ஒரு நூலாக வருவது மிக அரிது. "பெரியாரின் கேள்வி பதில்கள்", "மதன் கேள்வி பதில்கள்", " சோ பதில்கள்".. என வெகு சில உதாரணங்கள் மட்டுமே தமிழில் உள்ளன. வெகுஜனப் பத்திரிகைகளில் வெளியாகும் நடிகைகளின் உடல்கூறுகள் சம்பந்தமான கேள்விகளோ, பதில்களோ இந்நூலில் இல்லை. அதே சமயம் தனிமனித அந்தரங்கம் சம்பந்தமான கேள்விகளுக்கான விடைகள் என்றும் இந்நூலைச் சொல்லிவிட முடியாது. எத்தனையோ வாசக, வாசகிகளின் வாழ்வில் பிரச்சனைகளுக்கும், சந்தேகங்களுக்கும், ஆத்மார்த்தமாக ஆய்வுக் கண்ணோட்டத்தோடு விடை தந்திருக்கிறார் பத்மா சோமகாந்தன்.

"அரச மரத்தைச் சுற்றி வழிபட்டால், பெண்களுக்குக் குழந்தை பிறக்கும்" என்ற நம்பிக்கை நம் பாரம்பரியமான நம்பிக்கைகளில் ஒன்று. இதற்கு விஞ்ஞானபூர்வமான விளக்கம் கொடுக்கிறார் இந்த நூலின் ஆசிரியர். இது அவருக்கு இருக்கும் பரந்துபட்ட அறிவை நமக்குப் பறைசாற்றுகிறது.

இது மட்டுமல்ல, பிள்ளையைத் தனியே இரண்டு மைல்கள் தூரத்தில் இருக்கும் பள்ளிக்கு அனுப்பத் தயங்கும் தாய், காதலில் சிக்கி தீர்வு தேடி அலையும் இளைஞன், பெண்கல்வி தேவையா எனக் கேட்கும் பெண்.. எனப் பல வகையான மனிதர்களின் கேள்விகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. அத்தனை கேள்விகளுக்கும் நறுக்குத் தெறித்தாற்போல் "இதுதான் தீர்வு" - என அழகாகப் பதில் தருகிறார் பத்மா சோமகாந்தன். கல்வித்து றையில் பலகாலம் இருந்தவர் என்பதால், கேள்விகளுக்குப் பதிலளிப்பது இவருக்கு எளிதாக இருக்கிறது. அதே சமயம், மனித நேயமும், ஒரு சமூகத்தை ஆய்வுக் கண்ணோட்டத்தோடு பார்க்கும் பார்வையும் இவருக்கு இருப்பதால் மனித வாழ்வின் அத்தனை நுட்பமான கூறுகளுக்கும் இவரால் பதிலளிக்க முடிகிறது.

இலக்கியம் என்பது மனிதர்களுக்கானது. மனித வாழ்க்கை யைப் பேசுவது, ஆராய்ந்து, சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவைதான் இலக்கியத்தின் தலையாயப் பணியாக இருக்க முடியும். "கேள்வி - பதில்" வாயிலாக இப்பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் பத்மா சோமகாந்தன். எல்லோருமே படித்துப் பயன்பெற வேண்டிய மிக முக்கியமான நூல் இந்நூல். வாழ்த்துக்கள்.

**திலகவதி ஐ.பி.எஸ்.**
*பிரபல நாவலாசிரியர்,*
*மொழிபெயர்ப்பாளர், படைப்பாளர்,*
*கூடுதல் காவல்துறை இயக்குனர், சென்னை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

இந்நூல் வெறும் கேள்வி - பதில் கூறும் நூல் அல்ல. பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த பிரச்சனைகளையும் அலசும் நூல். ஆசிரியர் பத்மா சோமகாந்தன் அவர்களின் பல்துறை அறிவையும் அனுபவங்களையும் விவேகத்தையும் அறிவிக்கும் நூல்.

பத்மா சோமகாந்தன் பயிற்சி பெற்ற ஆசிரியராகச் சேர்ந்து ஆசிரியராக, அதிபராக பணி செய்து ஓய்வு பெற்றவர். பல ஆயிரம் மாணவ, மாணவியரைப் பயிற்றுவித்த அனுபவம் பெற்றவர். இலக்கியம் படைப்பதிலும் அனுபவம் பெற்றவர். அவரது சிறுகதைகள், கட்டுரைகள் நூலாக வெளியிடப் பெற்றது. ஈழத்தில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் பரவலாகப் புகழ் பெற்றவர். அவரது கணவர் சோமகாந்தன் சிறந்த எழுத்தாளர். நீண்டகால திருமண வாழ்வில் மகப்பேறு பெற்று, வளர்த்துப் பல்வேறு பிரச்சனை களைத் தீர்த்த அனுபவமும் பெற்றவர்.

மேலும் உளவியல் ரீதியாகப் பிரச்சனைகளை அணுகும் அனுபவமும் பெற்றவர். அன்னாரின் சிந்தனை ஆழ, அகல அறிவுகளை இந்நூலில் பல்வேறு வாசகர்களால் எழுப்பப்பட்ட பிரச்சனைகளுக்கு எல்லாம் தக்க ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிய தனிச் சிறப்பான இந்நூலை ஓய்வாக ஆழமாகப் படிப்போர் எளிதில் அறியலாம்.

ஏறக்குறைய 120 வரையான நபர்கள் தத்தமது பிச்சினை களை நட்போடும் நம்பிக்கையோடும் கூறி, ஆசிரியரின் ஆதரவையும் அறிவுரையையும் வேண்டினர். ஆசிரியரும் அப்பிரச்சினைகளுக்கு ஓரிருவரியில் பதில் கூறிவிடாது, அவரவர் மன ஆழத்தை அளந்து விபரமாக பதிலளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக நடுத்தர வயதில் இயல்பாகக் காதல் வயப்பட்டு நான் ஒருவரைக் காதலிக்கிறேன் எனக் கூறி, தமது பிரச்சினை களை விரிவாகக் கூறி அறிவாய்ந்த பதிலை, நவீன ஆலோசனை வேண்டுவதாக கடிதங்களைப் பார்க்கலாம். ஆசிரியரின் பதில்களும் ஆதரவும், நம்பிக்கையும் ஊட்டுவதாகவும் அவரவர் ஆழ் மனதை அணுகி அறிவுரை வழங்குவதாகவும் அமைந்திருப் பதைக் கவனிக்கலாம். சாதி, மதம், இனம், மொழி, சீதனம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அவரவர் விரிவாகக் கூறி ஆலோசனை கேட்கின்றார்கள்.

இன்றைய அரசியலால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், இடம் பெயர்தல், குடும்ப இழப்புகள், முதுமைப் பிரச்சினைகள், சந்ததி தொடர்ச்சியால் ஏற்படும் இடைவெளிகளும் முரண்பாடுகளும் வினாக்களில் கவனிக்கலாம்.

ஆசிரியர் பத்மா சோமகாந்தன் பெண்ணியம் சார்ந்த கொள்கை கொண்டவர். ஆயினும் குடும்ப அமைப்பை, சந்ததித் தொடரை வேண்டியவராகவே பதில் கூறுவார். இன்றைய சமூக அமைப்பை முற்றாகப் துறப்பவரல்ல.

கணவன் - மனைவி, புதுமணத் தம்பதிகள் பாலியல் பிரச்சினைகளும் ஆங்காங்கே எழுப்பப்படுகின்றன. அவற்றிற் கெல்லாம் தக்க ஆலோசனைக் கூறியுள்ளார். குடும்பப் பிரச்சினைகள் பலவும் அவரின் நம்பிக்கையுடன் முன்வைக்கப்படு கின்றன. ஆசிரியர் தீர்வுகள் கூறப்படுகின்றன.

ஆசிரியரின் அனுபவ அறிவும் கற்ற அறிவையும் அவரது புதிய சிந்தனைகளையும் இந்நூலில் கற்கலாம். பல்வேறு மக்களுடனும், சமூகத்தவருடனும், நம்பிக்கையுடனும், நாணயத்து டனும், உறவாடும் போக்கையும் இந்நூல் மூலம் அறியலாம். தெளிவு பெறலாம்.

பத்மா சோமகாந்தனுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்

**செ. கணேசலிங்கன்**
சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பாராமுகங்கள்........ சில பார்வைகள்"

? எனது மனம் சில பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு நான் முடிவெதுவும் எடுக்க முடியாமல் தவித்துச் சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கிறேன். நான் நன்கு படித்தவள். 20 வயதுக்கும் மேலாகிறது. நான் நல்ல அழகி என்னை ஒருவர் 4 வருடங்களாகக் காதலித்து வருகிறார். அவர் O/L படித்து அண்மையில் அரசாங்க வேலையிலும் சேர்ந்திருக்கிறார். அவரின் குடும்பப் பொருளாதாரமும் பரவாயில்லை. எனினும் வெளிநாட்டிலிருக்கும் எனது மச்சானை நான் திருமணம் செய்ய வேண்டுமென எனது பெற்றோர் விரும்புகின்றனர். இன்னொரு வாலிபனும் அஷோக் என்னைக் காதலிப்பதாகக் கூறிவருவதுடன், நான் காதலித்து வருபவர் என்னை வெறுக் கும் வகையான செயல்களைச் செய்து, பின் என்னை ஏமாற்றி விட்டான். இப்போது வேறொருவர் என் மீது கண் வைத்துச் சிரித்துப் பழகுகிறார். நல்லவர் போலத் தெரிகிறது. என் வீட்டாருக்கு இது ஓரளவுக்குத் தெரியும். ஆனால் அவர் என்னிலும் பார்க்க உயரம் குறைவு. வாலிபனுக்குரிய கம்பீரமும் காணாது. அவனின் பெற்றோர் சீதனமும் கேட்கக் கூடும். என்ன செய்வ தென்று தெரியாமல் சஞ்சலப்படுகிறேன். இதற்கொரு நல்ல வழி சொல்லுங்கள்.

கனகா, கஹட்டகஸ்திகிலியா

✲ உமக்கு ஒரு பிரச்சினை இருப்பதாக நீர் தெரிவித்திருந்த கடிதத் தைப் படித்தேன். உமது வயதும் இருபதைக் கடந்துள்ளது. எனவே நாம் வளர வளரப் பல்வேறுவகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியே இருக்கும். பிரச்சினைகள் எமது அறிவுக்குச் சத்தூட்டுவதாகவும் அமைவதுண்டு. சாதாரண சிறிய அற்ப விஷயங்களையெல்லாம் நாம் மனதில் போட்டுக் குடைந்து குடைந்து அவ்விஷயங்களைப் பெரிதுபடுத்துவதில் அர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேயில்லை. எல்லாவற்றிற்கும் ஒரு புன்னகையோடும் தன்னம்பிக்கையோடும், துணிச்சலோடும் முகம் கொடுக்கப்பழகிக் கொண்டால், பிரச்சினைகள் நம்காலடியில் பணிந்து ஒதுங்கிவிடும்.

உம்மை ஒருவர் நாலு வருடங்களாகச் சுற்றிச்சுற்றி வருவதுடன் உம்மை அவர் காதலிக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளீர். அவர் A/L படித்ததுடன் அரசாங்கவேலை கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் தெரிகிறது. அவரது பொருளாதார நிலையும் ஓரளவு O.K பண்ணக்கூடியதாகத் தெரிவித்துள்ளீர். அதே வேளை உமக்கு வெளிநாட்டில் மச்சான் இருக்கிறார். உமது பெற்றோர் அவரைத் திருமணம் செய்யும்படி கூறுகின்றனர்.

இவ்விருவரையும் பற்றி நீர் பிரஸ்தாபித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். ஆனால் உமது மனநிலை என்ன? நாலு வருடங்களாக ஒருவர் உம்மைக் காதலித்தால், உமது பதில் விளைவு என்ன? விளக்கமாக இல்லையே? காதல் என்று சொன்னால், அவர் தனது காதலை எப்படி, எச்சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தினார்? அடுத்து இன்னொருபையன் உம்மைக் காதலிப்பதாகக் கூறி, முதலில் காதலித்தவர் உம்மை வெறுக்கக் கூடிய விதத்தில் நடந்து உம்மையும் ஏமாற்றிய செயலை அறிந்த போது எனக்கே மிகவும் வியப்பாகவும் கவலையாகவும் இருந்தது.

நல்ல கௌரவமான குடும்பத்தில் பிறந்து படித்து நல்ல தொழிலிலும் அமர்ந்து சிறப்புப்பெற்று, சுண்டி இழுக்கும் அழகுப் பெட்டகமாகவும் இருந்து கொண்டு (இவை உமது கடிதத்தில் தரப்பட்டிருந்த விபரங்கள்) அடிக்கடி பையன்களோடு நெருங்கிப் பழகுவதும் எல்லாருமே உம்மைக் காதலிப்பதாகக் கற்பனை செய்து கொண்டு மனதை அலையவிடுவது இந்த வயதுக்குரிய உணர்ச்சியே தவிர உண்மையான காதல்தான் இது என என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவை இந்த வயதில் ஏற்படும் மனச்சலனங்களே தவிர உள்ளத்தைத் தைத்துமலரும் காதல் என ஏமாந்து விடக்கூடாது.

மூவரைச்சந்தித்த நீர் கடைசியாக நல்லதொழிலில் அமர்ந்திருக்கும் அம்மா பிள்ளையான நல்லவரான நான்காவது வாலிபரை உமது வீட்டாருக்கு தெரியக் காதலிப்பதாக எழுதியுள்ளீர். அதே நேரம் "அவரது உயரம் கம்மியெனவும் உமக்குத் தோதாகத் தோற்றத்தில் அதிக கம்பீரமில்லாதவரெனவும், அவரது வீட்டார் வரதட்சணை கேட்டுச் சமர்புரியக்கூடுமென்றும்" பயப்படுகிறீர்.

அவருடன் பழகுவது அரைமனதாகவும் அருவருப்பாயுமிருப்பதாகவுமுள்ள குற்ற உணர்ச்சி உம்மையதிகம் சீண்டுகிறது. இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைய உணர்வுகளைக் காதலென எப்படி வர்ணிக்கலாம்? எனினும் உமது சஞ்சலமான கடிதத்தைப் பலமுறை படித்தேன். உமது உள்ளத்திற்கு ஆறுதலும் அமைதியும் அறிவும் தரக்கூடியதாக என்ன ஆலோசனையைத் தரலாம் என யோசித்தேன். பல நல்ல விஷயங்கள் என் மனதில் உதித்தன. சிலவற்றை நீர் ஏற்றுக் கொள்வீர் என்ற நம்பிக்கையுடன் புத்திமதியாகவும் நல்லதொரு வருங்காலத்தை நீர் அமைத்துக் கொள்வதற்காகவும் குறிப்பிடு கின்றேன்.

இத்தகைய மனக்குமுறல்கள் எல்லாம் பருவ வயது, ஸ்திரமற்ற மனநிலை ஆகியவற்றாலேயே பெரிதும் ஏற்படுகின்றன. "கண்டதும் காதல்" கொள்வது என்ற அவசரமும் நல்லதல்ல. இவையெல்லாம் எழுந்தமானமான உணர்வுகள் இவற்றிற்கு மென்மையான உள்ளம் படைத்தோர் இலகுவில் பலியாகிவிடுவர். வாழ்க்கை என்பது இன்று தோன்றி நாளை மறைவதல்ல. நீண்ட காலம் பல நன்மை தீமைகளை அனுபவித்து வாழ வேண்டிய பெரும் பயணம், அதற்கு எமது மனதை நாம் பயன்படுத்தித் திடப்படுத்துவதோடு, நல்ல ஜோடிப் பொருத்தமாக ஒருவரை யொருவர் நன்கு விளங்கிக் கொண்டு, விட்டுக்கொடுத்து அனுசர ணையுடன் நடந்து கொள்ளக்கூடிய பெருந்தன்மை வாய்ந்த ஒருவர் வரும் வரை காத்திருக்க வேண்டும். நல்ல நேரம் வர எல்லாமே நல்லதாக வந்து அமையும், எதற்கும் அவசரப் படக்கூடாது "ஓடு மீன்ஓடி உறுமீன் வருமளவும் காத்திருக்குமாம் கொக்கு" என்ற பாடலில் சொல்லப்பட்டதைப் போல நல்ல தருணம், நல்ல வாய்ப்பு கட்டாயம் வந்தே தீரும். அது வரை பொறுமையோடு காத்திருக்கவும். எதிலும் அவசரம் கூடாது.

✉ ✉ ✉ ✉

**? நெஞ்சுக்கு நிம்மதிதரும் தங்கள் பதில்களை மங்கையர் கேசரியில் பார்த்து மகிழ்வுற்றேன். நீண்ட நாட்களாக எனது மனதை உறுத்தும் விடயமொன்றை உங்களிடம் கேட் கின்றேன். தயவுகூர்ந்து மங்கையருக்குத் தான் பதில் என்றல் லாது எனது வினாவுக்கும் நல்லதொரு பதிலைத் தவறாது தாருங்கள்.**

**நான் திருமணமாகி ஒருவருடம் நிறைவு பெற்று விட்டது. நானும் எனது மனைவியும் ஒருவரையொருவர் விரும்பி மணமுடித்தாலும், தற்போது அவளுடைய போக்கு என்னைச் சிறிது வருத்துகிறது. எதற்கெடுத்தாலும் எரிந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விழுவதும், தனது நண்பிகள் மத்தியில் என்னைக் குறைத்துப் பேசுவதும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இதை மாற்றியமைத்து நிம்மதிதர நல்லதொரு வழி சொல்லுங்கள்.**

குமரப்பா, பூண்டுலோயா

* "ஆசை அறுபதுநாள் மோகம் முப்பது நாள்" என்ற ஒரு பழமொழி கிராமப்புறங்களில் வழங்குவது உங்களுக்குத் தெரிந்திருக்குமென நம்புகிறேன். ஆனாலும் நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் விரும்பி மணமுடித்த தம்பதியினர். கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் புரிந்து கொண்டு அனுசரித்துப் போவதற்கு ஒரு வருடகால அனுபவம் போதுமானது. அப்படியிருந்தும் உங்கள் மனைவியின் சிடுசிடுப்புக்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

வேலைப்பளு முழுவதையும் அவளே சுமப்பதன் காரணமாகத் தேகாரோக்கியம் குன்றி அலுப்புத் தட்டியிருக்கலாம். உங்கள் வருமானம் அவர் கற்பனை செய்த வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லாதிருக்கலாம்.

உங்கள் பழக்க வழக்கங்கள் சகவாசங்கள் பிடிக்காமலிருக்கலாம். உங்களுக்குக் குடிப்பழக்கம் இருக்கின்றதா, அப்படியெனில் அதுவும் காரணமாக இருக்கலாம்.

திருமணம் முடித்த ஆரம்ப காலங்களைப் போல, தொழில் விட்டு நேரகாலத்திற்கு வீட்டிற்கு வந்து, பொழுது போக்கிற்காக உங்கள் மனைவியை வெளியே அழைத்துச் செல்லும் பழக்கத்தைக் குறைத்து விட்டீர்களா?

அண்மையில் உங்கள் மனைவி கிராமத்திலுள்ள தனது வீட்டிற்குச் சென்று திரும்பினவரா? அவ்வாறெனில் அவரது தாய் அல்லது அயலிலுள்ள உறவினர்கள் "இன்னும் உனக்குக் குழந்தை கிடைக்கவில்லையா?" என அவளைச் சீண்டியிருக்கக்கூடும். திருமணமாகி ஒரு வருடத்துக்குள்ளேயே பெண் என்பவள் குழந்தையொன்றைப் பெற்று விட வேண்டுமென்ற தப்பான நம்பிக்கை கிராமப் புறங்களில் நிலவுவதுண்டு. இவற்றைப் பற்றி ஆறுதலாக உட்கார்ந்து மனைவியுடன் பேசிப்பகிர்ந்து கொள்ளுங்கள்.

காரணத்தைக் கண்டுபிடித்து அதை நிவர்த்திக்க முயலுங்கள். உங்களின் "செக்ஸ்" குறைபாடு அல்லது அவளின் விருப்பத்துக்குமாறான உங்கள் செக்ஸ் துன்புறுத்தல் விரக்தி நிலைக்கு இட்டுச் செல்லக்கூடியதே. அதுவே காரணமெனில், இருவரும் மருத்துவரொருவரை அணுகி ஆலோசனை கேட்பதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? உங்களிடம் ஆறுதலும், யோசனையும் பெற இக் கடிதத்தை எழுதுகின்றேன். எனக்கு இரு குழந்தைகள். ஒன்று இரண்டு வயதாயிருக்கும்போதே தவறிவிட்டது. எனவே மிகவும் கண்ணும் கருத்துமாக நானும் எனது கணவரும் எம் உயிரை வைத்தே மற்றக் குழந்தையை வெகு கவனமாக வளர்த்து வருகிறோம். அவனுக்கு வயது 6. எமது வீட்டிற்கு அருகாமையில் பாடசாலைகள் இல்லை. ஒரு மைல் இரண்டு மைலுக்கு அப்பால் தான் பாடசாலைகள் உண்டு. எமது குழந்தை வீட்டில் நன்றாகப் படிக்கிறான். பாடசாலைக்கு அனுப்பப் பயமாக இருக்கிறது. போக்குவரத்து வசதிகளும் இல்லை. குழந்தைகளைக் கடத்திச் செல்லும் செய்திகளும் மனதை வெருட்டுகிறது. குழந்தையை நாலைந்து மணிநேரம் பிரிந்திருக்கவும் முடிவதில்லை. பயமாகவும் வேறு இருக் கிறது. பதின்மூன்று பதினான்கு வயது வந்து, நன்கு அறிவு வரும் வரை வீட்டிலேயே வைத்து நல்ல பாடம் சொல்லிக் கொடுத்து பின் பள்ளியில் சேர்க்க முடியுமா? பதில் தாருங்கள்!

ராஜ்குமார் தம்பதி, கற்பிட்டி

* எல்லாப் பெற்றோருமே தங்கள் குழந்தைகள் மீது உயிரை வைத்தே வளர்க்கிறார்கள் என்பது உண்மை. உங்களுக்கு ஒரு குழந்தை தவறியதால் ஏற்பட்ட கசப்பான அனுபவம் உங்களைப் பயப்பிராந்தியில் மூழ்கடிக்கிறது.

உங்கள் குழந்தையைப் பாடசாலைக்கு அனுமதியா திருப்பது தவறு. என்னதான் நாம் வீட்டில் வைத்துப் பாடம் சொல்லிக் கொடுத்துப் பிள்ளையின பாடநூல் அறிவை வளர்த் தாலும், பிள்ளை பாடசாலை சென்று கல்வி கற்பதே உகந்தது. ஏனெனில் வீட்டில் பெற்றோருடன் அன்புச் சூழலில் செல்லம் கொஞ்சிக் கொண்டேயிருக்கும் குழந்தையின் புற ஆற்றல்கள் கிளர்ச்சி பெற்று வளர்வதற்கான சூழ்நிலை வீட்டில் சற்று மந்த மானதே. பாடசாலையில் எனில், ஆசிரியர் சக மாணவர் மீது அன்பு செலுத்துதல், கீழ்ப்படிதல், பல்வேறு மட்டங்கள், சூழல்களிலிருந்து வரும் குழந்தைகளுடன் சேர்ந்து பழகுதல், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை எதனையும் அனுசரித்துப் போதல், கூட்டு முயற்சிகள் எனப்பலவகையான உணர்வுகள் வளர்வதற்கானமையமாக பாடசாலைகள் விளங்குகின்றன. வீட்டில் தனிமையிலிருந்து படிக்கும் பிள்ளை தன்னலமிக்க தாகவும், தன்னையே எதற்கும் முன்னிலைப்படுத்திச் சிந்திக்கும் சுயநலப் போக்குக் கூடியதாகவும் வளருமென்பதில் சந்தேக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேயில்லை. அல்லாமலும் கல்விப் போதனைக்கென விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் கல்வி பெறுவதால், சமூகத்தில் வெற்றி பெறக்கூடிய பிரஜையாகக் குழந்தைகள் வளர்வர். குழந்தைகள் கடத்தப்படுதல் சம்பந்தமாகவும் குறிப்பிட்டிருந்தீர்கள். இது மிகவும் அபூர்வமாக நிகழும் நிகழ்ச்சியே. அதற்கு கருத்து வேறுபாடுகள், பகைமை, பணம் பறிக்கும்நோக்கம், தனிப்பட்ட கோபதாபங்கள் எனப் பல காரணிகள் இருக்கலாம். இத்தகைய காரணங்களால் உங்களுக்குப் பயமிருப்பின், பிள்ளையை நீங்களோ அல்லது தகுந்த பாதுகாப்புடனோ பாடசாலைக்குக் கூட்டிச் செல்ல வழிசெய்யுங்கள். எக்காரணம் கொண்டும் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பாமல் வைத்திருக்க வேண்டாம். அல்லாமலும் பிள்ளைகள் எவ்வளவு திறமையாகக் கற்றாலும், அதற்குரிய தராதரச் சான்றிதழ் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. இச் சான்றிதழ்கள் பதிவு செய்யப்பட்ட, அரசாங்க அல்லது பிரத்தியேகப் பாடசாலைகளினாலே அளிக்கப்பட வேண்டும். அத்தகைய உறுதிப்பத்திரம் இல்லாமல் மேற்கொண்டு கல்வியைத் தொடரவும் முடியாது. எனவே எல்லாவகையாலும் சிந்தித்துப் பார்த்தால் பிள்ளைகளுக்குப் பாடசாலைக் கல்வி மிக மிக முக்கியம். அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியது பெற்றோர்களுடைய கடமையாகும். வசதிகளின்றி வறுமையில் வாடி வீதியில் திரியும் பிள்ளைகள் கூட 14 வயதிற்குள் கட்டாயக் கல்வி கற்கவேண்டிய சட்டம் இலங்கை அரசாங்கத்தால் வலிறுத்தப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் வசதிகளோடுள்ள நீங்கள் இக்கட்டாயக் கல்வியைப் பாடசாலை மூலம் அளிக்காவிடின் தண்டனைக்குள்ளாக வேண்டியும் நேரிடலாம். எனவே வீண் கற்பனைகளில் மூழ்கி, மனந்தளராமல் பிள்ளையைப் பாடசாலையில் படிப்பதற்காக உடனே ஆவன செய்ய வேண்டியது உங்கள் கட்டாயமான பொறுப்பாகும்.

✉ ✉ ✉ ✉

**? எனக்கு வயது 76, யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து கொழும்பிலுள்ள எனது மகள் வீட்டில் வசிக்கின்றேன். எனது மகள் என்னை அன்பாகக் கவனித்துக் கொள்கிறாள். அவளுக்கு வளர்ந்த இரு பெண்பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த என் இரு பேத்திகளும் அடிக்கடி என்னைச் சீறிச் சினந்து ஏசுகிறார்கள். என்மீது அன்பாகவோ தயவுடனோ நடப்பதில்லை. நான் எனது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகளை ஒழுங்காகப் பணிவாக வளர்த்தேன். இவ்விரு பெண்களின் போக்கு காரணமாக அவர்களின் எதிர்காலம் எப்படியிருக்குமோவெனப் பயப்படுகின்றேன். இவர்களைத் திருத்துவதற்கு வழிவகை கூறுங்கள்.**

லெட்சுமி, மோதரை

* எனது தாய்க்குச் சமமான வயதைக் கொண்ட உங்களின் கடிதத்தைப் பார்த்து துயரமடைந்தேன். நடுங்கி நடுங்கி உங்கள் எழுத்து இருப்பது போலவே மனமும் இருப்பதை என்னால் உணர முடிகின்றது. அம்மா காலம் வேகமாக ஓடிக் கொண்டிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் வாழ்ந்த சூழ்நிலை, உங்கள் மகளை வளர்த்த சூழ்நிலை முதலியவை கழிந்து எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. உங்கள் பேரப்பிள்ளைகள் வளர்வது புதிய சூழ்நிலையிலும் காலமாற்றத்தின் விளைவினால் ஏற்பட்ட புதிய போக்குகளின் மத்தியிலும். தலைமுறை இடைவெளி காரணமாக இளந்தலைமுறையினரின் அவசரப் போக்குகள், முதியவர்களைக் கனம் பண்ணாமை, பணிவின்மை, அடக்கமின்மை என்பன பல குடும்பங்களில் இன்று காணப்படுவது உண்மையே. நீங்களும் பழைமைப்பிடிக்குள் மனதைத் தொடர்ந்தும் சிக்கவைத்துக் கொண்டிருக்காமல், நெகிழ்ச்சித்தன்மையோடு அவர்களுடன் பழகுங்கள். ஓடுகிற மாட்டை ஓடித்தான் வழிக்கு கொண்டு வர வேண்டுமென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

உங்கள் பேரப்பிள்ளைகளுக்கு அவர்கள் ஆறுதலாக இருக்கும் போது நற்பண்புகளை உணர்த்தும் நல்ல கதைகளைச் சொல்லலாம். அவர்கள் மீது அன்பையும் அக்கறையையும் காட்டுங்கள். அன்பினால் எதையும் சாதிக்கலாமென்பதை நான் சொல்லித்தானா நீங்கள் அறியவேண்டும்.

✉ ✉ ✉ ✉

**? எனது ஆருயிர் நண்பனின் பரிதாபநிலையைத் தங்களுக்கு எழுதுவதால் எனக்கும் ஆறுதல் நண்பனுக்கும் தகுந்த பதில் கிடைக்கும் என்பதால் இதனை எழுதுகிறேன். எனது நண்பன் கொழும்பில் நல்லதொரு நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். கடந்த ஆறு வருடங்களுக்கு முன் அவர் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். திருமண ஏற்பாடுகள் பூர்த்தியாகும் திருமணப் பதிவு நாளில், மணமகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டார் சொன்னபடி சீதனம் கொடுக்கவில்லை. திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோருமே பெரிய மனிதர்கள். அதனால் மணமகன் வீட்டார் எதுவும் பேசாமல் திருமணத்தை நடத்தி முடித்தார்கள். இப்போது இரண்டு குழந்தைகளும் உண்டு. நண்பன் கொழும்பில் வேலை பார்ப்பதால் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வீடு வருவார். அப்படி அவர் வந்தாலும் வீட்டில் மனைவியோ அல்லது மாமாவோ இவரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அதுவுமல்லாமல் சில வேளைகளில் குத்தல் கதைகூடக் கதைப்பார்கள். இவைகளைக் கேட்டுக் கொண்டு இருக்க முடியாது என முடிவெடுத்து மனைவியைக் கூட்டிக் கொண்டு கொழும்பில் வீடெடுத்து வசிப்பதற்காக மனைவியை அழைத்தால் அவரின் மனைவி சொல்லுவாளாம். "வாப்பா சொன்னார் கொழும்புக்குப் போக வேண்டாம்" என்று இவைகளை எண்ணும் போது திருமணம் முடித்தது ஏன்? என சில வேளைகளில் எண்ணத் தோன்றி என்னிடமே வந்து அடிக்கடி முறையிடுகிறார் நண்பர். இதைக் கேட்டுப் பரிதாபம் தாங்க முடியாமல் தான் உங்களிடம் ஆலோசனை கேட்டு எழுதுகிறேன். தகுந்த பதிலைத் தாருங்கள்.**

அப்துல்காதர், அக்கரைப்பற்று

✱ உமது நண்பர் வீட்டார் திருமணப் பேச்சு நடைபெற்ற காலத்திலேயே, பெருந்தொகையைச் சீதனமாகக் கேட்டு அட்டகாசப்படுத்தி, பெண்வீட்டாரின் மனதை நோகச் செய்து விட்டார்களென நினைக்கிறேன். மணமகளும் அதனால் மனம் நொந்திருப்பாள். நல்ல தொழிலில் அமர்ந்து பணம் சம்பாதிக்கும் உமது நண்பன் கூட சீதனத்துக்கு ஆசைப்பட்டது தவறு. உங்கள் மதத்தில் கூட மணமகன் மணமகளுக்கு "மகர்" கொடுத்து திருமணம் செய்வது தான் வழக்கம். முற்காலத்திலிருந்தே பெண் வீட்டாருக்கு சீதனம் கொடுத்து அவளையும் அவர் குடும்பத்தாரையும் மகிழ்வித்து மணமுடிப்பது தான் வழக்கம். சீதனம் அவர்களின் எதிர்காலத்துக்கு ஒரு உத்தரவாத அடையாளமாக இருந்தது. இந்து சமயத்திலும் மணமகன் வீட்டாரே மணமகளுக்கு சீதனம் கொடுக்க வேண்டுமென்பது வழக்கமாயிருந்தது. காலப் போக்கில் ஆணாதிக்க சமூகத்தில் பேராசை காரணமாகப் பெண்ணைச் சீதனம் கொடுத்துக் கரையேற்ற வேண்டிய நிலைமை தோன்றியது வெட்கக்கேடான செயலாகும். திருமணம் முடிந்த பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது நண்பரின் மனைவி வீட்டார், இப்படி நடந்து கொள்வது சரியல்ல. அவர்கள் வீட்டு மருமகன், அவருக்குரிய அன்பையும் மதிப்பையும் அளிக்க வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த அவரின் மனைவி இன்னும் பெற்றோரின் எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பதும் சரியல்ல. இவ்வளவு நாட்களாகியும் அவளைப் புரிந்துகொண்டு அவளின் அன்பை உமது நண்பர் வென்றெடுக்க முடியாமல் போன தன் காரணம் புரியவில்லை. உமது நண்பரின் இந்த இயலாமைக்கு என்ன காரணம்? கோபக்காரனா? குடிப்பழக்கம் உள்ளவரா? வெகுளியா? எப்படியிருப்பினும் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது உமது நண்பரின் மனைவி அவருடன் சேர்ந்து தனிக்குடித்தனஞ் சென்று வாழ்வதுதான் சரியானது. எனினும் அவள் பக்க காரணங்களையும் உமது நண்பர் கருத்தில் எடுக்க வேண்டும்.

✉ ✉ ✉ ✉

**? உங்கள் பதில்கள் பெண்களுக்கு வலுவூட்டுகின்றன. எனக்கும் பெண்களால் சில மனச்சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவற்றை உங்களிடம் கேட்டுத் தெளிவுபெற இதனை எழுதுகின்றேன். நான் திருமணமானவன். ஆனாலும் கூட என்னோடு ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் பெண்கள் மீது அவர்களுடைய கவர்ச்சியான தோற்றம், இனிமையான பேச்சு, பழகும் இங்கிதம் இவற்றால் என்மனம் ஆட்டங்காணுகின்றது. இப்பெண்களுடன் அன்பாகப் பழகிக் காதல் பண்ணலாமோ என மனம் வீறுகொள்கின்றது. அப்படிச் செய்வது தவறு என அறிவு கடிவாளம் போட்டாலும் மனம் தறிக் கெட்டுப் பாயவே துணிகின்றது. இதற்கான வழியொன்றைத் தெரிவியுங்கள்.**

சந்திரன் , வத்தேகம

* உங்கள் மனதின் உணர்வுகளை வெளிப்படையாகக் கூறியிருப்பதை நான் மதிக்கின்றேன். எனினும் உங்கள் அலைச்சல் தவறு. நீங்கள் திருமணமானவர். அன்பைச் சொரிந்து காதல் பண்ண என்றொருத்தி காத்துக்கொண்டே இருக்கிறாள். அப்படியொருத்தி உங்களுக்கென வீட்டில் இருக்கும் போது வேறு பெண்களின் கவர்ச்சியான தோற்றம், இனிமையான பேச்சுகளிலெல்லாம் உங்கள் மனதை அலையவிடுவது பச்சைத் துரோகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிவான எத்தனமும் ஆகும். மனம் ஒரு குரங்கு. மரத்துக்கு மரம் தாவ அவாவுவது அதன் இயற்கை. மனதைக் கட்டுப்படுத்தி நேரிய பாதையில் அதனை இட்டுச் செல்வதுதான் எமது முயற்சியாகவும் அறிவு நெறியாகவும் அமைய வேண்டும். சிறிய சலனங்களுக் கெல்லாம் மனதை அடைவுவைக்கக் கூடாது. "மனம்போன போக் கெல்லாம் போகவேண்டாம்" என இதற்காகத்தானே ஔவைப் பாட்டி இடித்துச் சொல்லி எச்சரித்துள்ளார்.

✉ ✉ ✉ ✉

**? உங்களை எனது அம்மாவென நினைத்து எனக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை எழுதுகின்றேன். தெளி வான பதில் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனது சொந்த இடம் வவுனியா. எனது தாயாரும் திருமண மாகாத 3 சகோதரிகளும் அங்குதான் வசிக்கிறார்கள். நான் எமது குடும்பத்துக்கு ஒரே ஆண்பிள்ளை. குடும்ப வறுமை காரணமாக இங்கு எனது நண்பன் ஒருவனின் வீட்டில் தங்கியிருந்து பொது நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறேன். போர் நடைபெற்ற காலத்தில் விமானக் குண்டுவீச்சினால் அப்பா இறந்துவிட்டார். என்னை மேலும் படிக்க வைக்க வசதியில்லாததால், நான் வேலை பார்த்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை. எனக்கு அதிகப்படிப்பு இல்லாவிட்டாலும், கம்பீரமான உடற்கட்டும் (கடும் உழைப் புக் காரணமாக) அழகும் உண்டு என கூட வேலைப்பார்ப் பவர்கள் கூறுவார்கள். சில பெண்கள் வேலைத்தளத்தில் என்னை நெருங்கி வந்து காதலிக்க முற்பட்ட போதும், எனது குடும்பச் சூழ் நிலையை மனதில் கொண்டு, நான் அவர் களில் இருந்து ஒதுங்கிக் கொண்டேன். இப்போது சில மாசமாக ஒரு முஸ்லிம் பெண்பிள்ளை, என்னை அடிக்கடி பார்ப்பதும் புன்சிரிப்புக் கொள்வதுமாக இருந்தவள், ஒரு மாலை நேரம் தனியாக இருவரும் வேலையிலிருந்து செல்லும்போது றோட்டில் யாருமில்லாத வேளையில், திடீரென்று என்னை முத்தமிட்டுவிட்டாள். எனக்கு வயது 21. அவளுக்கு என்னிலும் பார்க்க நாலு வயசாவது அதிகமாக இருக்கும். தான் என்னைக் காதலிப்பதாகவும், கலியாணஞ் செய்தால் என்னையே செய்துகொள்வதெனவும் கெஞ்சினாள். அவள் வயசில் எனக்கு மூன்று அக்காமார் இருப்பதாகவும், முடியாது என்று நான் சொல்லியும் அப்பெண் கேட்பதா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யில்லை. வயது எல்லாம் இந்தக் காலத்தில் யாரும் பார்ப்பதில்லை என்றும் அவளுக்கும் மூன்று மூத்த சகோதரர்கள் இருப்பதால், எனது அக்காமாரின் திருமணத்துக்காகச் சீதனம் கொடுக்க அவர்கள் போதுமான பணம் தருவார்களென்றும் கூறுகிறாள். நான் குழம்பிப்போய் இருக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?**

மகேந்திரன் , ஓட்டமாவடி

* கம்பீரமான உடற்கட்டும் அழகுமுள்ளவராக நீர் விளங்குகிறீர் என உம்முடன் வேலைபார்க்கும் நண்பர்கள் கூறியிருப்பதையிட்டு உள்ளூர நீர் பெருமிதமடைந்திருப்பதை என்னால் உணர முடிகிறது. குடும்பத்தில் ஒரே ஆண்பிள்ளை எனப் பாசத்தையும் உணவையும் சேர்த்து உமது அம்மாவும் சகோதரிகளும் ஊட்டி வளர்த்ததாலும் நீர் நோஞ்சானாக இல்லாமல் கட்டுமஸ்தான கவர்ச்சியானவராக வளர்ந்திருக்கலாமல்லவா? அவ்விதமான கம்பீரத் தோற்றத்தினால் உம்மையறியாமலே. உமது அடிமனதில் பல பெண்கள் உம்மை விரும்புவது போல ஓர் எண்ணம் உதித்திருக்கலாம். இந்தவயதில் அது சகஜமானது. இவ்வாறான மனோநிலையில் உம்முடன் பணியாற்றுகிற முஸ்லிம் பெண் உம்மைக்கட்டிப்பிடித்தது....என்பது உமது புனைவு நிகழ்ச்சியாகவுமிருக்கலாம். அப்படி நிஜமாகவே இந்நிகழ்ச்சி நடைபெற்றிருந்தால், அச்சமும் நாணமும் நாய்களுக்காம் எனப் பாரதி கூறியதை தப்பர்த்தம் செய்து கொண்டு அப்பெண் புரிந்த வக்கிரத்தனமென்றே கூறவேண்டும். உண்மையாக நடைபெற்றிருந்தால், இதுவும் ஒருவகையான பாலியல் துன்புறுத்தலே. இது உமது கனவுலகச் சஞ்சரிப்பே தவிர உண்மையாக நடந்திருக்க மாட்டாதென நம்புகிறேன். எவ்வாறெனினும் அப்பெண் தனது அண்ணாமார் உமது அக்காமாருடைய திருமணத்துக்காகப் போதிய சீதனம் தருவர் எனக்கூறியுள்ளதில் எந்தளவு உண்மையுண்டு? அவர்களிடம் அதற்கான பொருளாதார வசதிகள் இருக்கிறதா என்பதையிட்டு நீர் விசாரித்து ஆராய்ந்து பார்த்ததுண்டா? மேலும் அப்படி அவர்கள் தமது தங்கைக்கு உம்மைத் திருமணம் செய்வதற்காகப் பெருந்தொகைப் பணம் தருவதாக இருந்தாலும், தமது மதத்துக்கு மாறி வராத வேற்று மதத்தைச் சேர்ந்தவருக்கு - அவர் மதம் மாறிய பின்பே மணம் செய்து கொடுப்பர். இதனை இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள் மிகக் கடுமையாகக் கடைப் பிடிப்பதை 21 வயதேயான உம்மால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? இந்த நிலைமையில் நீர் மேற்கொள்ள வேண்டிய ஒரே ஒரு செயல் உமது அம்மா சகோதரிகளிடம் மீளச்சென்று இணைந்து கொள்ளவேண்டியதே. இப்பொழுது போர்த்தணிவு நிலவுவதன் காரணமாக வவுனியாவில் பல புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படு கின்றன. அதில் பணிபுரிவதற்கு அங்கு வாழும் மக்களுக்கு முன்னுரிமை அளிப்பார்களென்பது நிச்சயம். அதனால் அங்கு உமக்கொரு தொழிலைத் தேடிக் கொள்வதில் பெரும் சிரமம் எதுவு மிருக்குமென நான் நினைக்கவில்லை. அரசசார்பற்ற பல தொண்டர் நிறுவனங்களும் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட வுள்ளதால் நீர் வவுனியாவில் வேலை ஒன்றைப் பெறுவதற்கு அவர்களால் உதவமுடியும். அதற்காக முயற்சிக்கவும்.

✉ ✉ ✉ ✉

**? நான் கடந்த 4 வருடங்களாக ஒருபெண்ணைக் காதலிக் கிறேன். அவளுக்கு வயது என்னைவிட 13 குறைவு. எங்கள் காதலுக்கு இரு வீட்டார் பக்கங்களிலிருந்தும் எதிர்ப்பு, எனினும் இருவரும் திருமணம் முடித்தே தீருவது எனத் தீர்மானித்துள்ளோம். எனக்கு ஓர் அந்தரங்கமான பிரச்சினை உண்டு. அது என்னவென்றால், எனக்குள்ள சுய இன்பப் பழக்கம் காரணமாக ஆண்மைக் குறைவு ஏற்பட்டி ருக்கிறது. வைத்தியரிடம் காட்டி மருந்து எடுத்தும் இதுவரை சரியாகவில்லை அது சரியாகச் சுகமடையாவிட்டால், என்ன செய்யலாமென மூன்று வழிகளைப் பற்றிச் சிந்தித்துள்ளேன். அவளிடம் எனது உண்மை நிலையைக் கூறி, அவள் சம்மதித் தால் அவளைத் திருமணம் முடிப்பது. அல்லது அவளுக்கு ஒன்றும் சொல்லாமலே திருமணம் செய்வது அல்லது வேறு காரணம் எதையாவது சொல்லித் திருமணத்தைத் தவிர்த்து விடுவது. இவற்றில் எதைச் செய்யலாமெனத் தடுமாறு கிறேன். நான் உண்மையைக் கூறாமல், என்னை நம்பியுள்ள அவளைத் திருமணம் முடிப்பது பெரும்பாவம். வேறு காரணத்தைக் கூறி காதலிப்பவளைத்தவிர்ப்பது மிகவும் பாவம். அவளுக்கும் தெரியாமல் அவளை மணம் முடித்தக் கொள்வது பெருந்துரோகம் உண்மையைக் கூறி அவளை மணம் முடித்துக் கொண்டாலும் - எந்தப் பெண்ணும் தாம் பத்திய சுகமில்லாமல் வாழ்நாள் முழுவதும் வாழ்க்கை நடத்துவாள் என்பது ஐயத்துக்கிடமானதே. இதற்கு அவள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சம்மதித்தாலும் இவ்வாழ்க்கை நிலையான நிம்மதியானதாக அமையுமா என்பதும் கேள்விக்குரியது இதில் எந்த முடிவை நான் எடுப்பது பொருத்தமானது?**

கனகன் , மல்லாகம்

* உங்களைப் போன்ற மனச்சாட்சியுள்ள மனம் திறந்து உண்மை பேசும் மனிதர்கள் இருப்பது மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது. ஆண்களில் அநேகமானவர்கள் திருமணத்துக்கு முன்னர், சுய இன்பத்திலீடுபடுவது - பாவமான ஒரு விஷயமல்ல. உங்களுக்கு அதைவெளியில் சொல்லும் துணிவு இருக்கிறது. மற்றவர்கள் அதை மறைத்துக்கொள்கிறார்கள். வித்தியாசம் அவ்வளவே இப்பழக்கம் சிலரிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடுவதும் உண்மையே. சிறந்த வைத்தியரிடம் சிகிச்சை பெற்றால் உங்களின் ஆண்மைக்குறைவை நிவர்த்தி செய்து கொள்ளுமளவுக்கு மருத்துவத்துறை முன்னேறியிருக்கிறது. மிகச் சிறந்த மருத்துவ நிபுணரிடம் ஆலோசனை பெறுங்கள். சீர்செய்ய முடியாதென அவரும் கூறினால் அவளிடம் உண்மையைச் சொல்விட்டு - உங்களிலும் பார்க்க 13 வயது குறைவான அந்தச் சின்னப் பெண்ணைத் திருமணம் செய்யாமல் இருப்பதே சரி. அவளின் மகிழ்வும் உங்கள் மகிழ்வும் காலமெல்லாம் "நாய்கடி பூனைகடி" என ஆகிவிடக்கூடாது. திருமணபந்தம் செழிப்பதற்கு தாம்பத்திய உறவு பிரதானமானது.

✉ ✉ ✉ ✉

**? எனது வயது 24. நான் ஒரு கடையில் வேலை செய் கின்றேன். எனக்கு மூன்று அக்காமாரும் ஓர் அண்ணாவும் இருக்கிறார்கள். அப்பா இறந்துவிட்டார். அம்மா மாத்திரம் எங்களுடன் இருக்கிறார். எனது சகோதரங்களில் மூன்று பேர் திருமணம் முடித்து விட்டனர். நானும் அம்மாவும் சின்ன அக்காவும் தான் ஒன்றாக இருக்கின்றோம். எனது அக்காவுக்கு திருமணம் செய்வதற்காக மணமகன் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம். அப்படி இருக்கையில் நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளும் என்னைக் காதலித்தாள். நான் காத லிப்பது வேறு யாருமல்ல, எனது சொந்த மருமகளை. அவள் வீட்டில் அனைவருக்கும் சம்மதம் ஆனால் என் வீட்டில் யாருக்கும் அந்தப் பெண்ணைப் பிடிக்கவில்லை. காரணம் கேட்டேன். அவள் ஏற்கனவே இரண்டு மூன்று பேருக்கு மேல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காதலித்து அவர்களால் கைவிடப்பட்டவள், கெட்டுப் போனவள் என்று அவளின் ஊரில் இருந்து வந்த எமது உறவினர்கள் சொன்னார்கள். அதனால் உன்னையும் என்னால் பலி கொடுக்க முடியாது. அப்படி மீறி அவளுடன் சேர்ந்து வாழ்வது என்றால் எங்கள் இருவரையும் கொன்று விட்டு, அதற்கப்புறமாக அவளைத் திருமணம் செய்துகொள் என்று ஒரேயடியாகச் சொன்ன அம்மா, அதற்குப் பிறகு என்னிடம் பேசுவதில்லை. நான் ஒரு அனாதையென்ற உணர்ச்சி என்னிடம் உதித்துக் கொண்டு இருக்கின்றது. எல்லோரையும் விட்டு விட்டு வெகு தூரத்திற்கு சென்று விடுவோம் என்று நினைக் கையில் தாய்ப்பாசம் என்னைத் தடுக்கின்றது. என்னைப் பெற்றவளுக்காக எனது காதலை அர்ப்பணிக்கின்றேன். இதை அந்தப் பெண்ணிடம் எப்படிச் சொல்வது?**

யோகா , ராகலை

✻ உமது மருமகள் முறையான பெண்ணை நீர் காதலிப்பதையும், அவளைத்திருமணம் செய்ய விரும்புவதையும் அவள் பலரிடம் சகவாசம் கொண்டவள் என உறவுக்காரர்கள் கூறுவதனால் உமது தாயார் வெறுக்கிறார், மறுக்கிறார் என எழுதியிருந்தீர். ஒரு தாயின் இடத்திலிருந்து பார்த்தால், எந்தத் தாயும் தனது அருமை மகன் பாழுங்கிணற்றில் வீழ்ந்து அழிந்து போவதை விரும்பமாட்டாள். உமது காதலியின் குடும்பத்தினர் மீது பொறாமை கொண்ட உறவினர்கள் இப்படியொரு கட்டுக்கதையை அப்பெண் மீது அபாண்டமாகச் சோடித்து, இத்திருமணத்தைத் தடுப்பதற்கு உமது அன்னையாரைச் சன்னதமடையச் செய்திருக்கலாம். தமது திருமணமாகாத பெண்ணொருத்திக்காக உம்மை அப்பிக் கொள்வ தற்கான அவர்களின் சூழ்ச்சித் திட்டமாகவும் இருக்கக்கூடும். எடுத்த எடுப்பில், அம்மாவுக்காகக் காதலைத் தியாகம் செய் கின்றேன் என்ற முடிவுக்குவராமல் சீராக ஆராய்ந்து, உமது காதலி பங்கப்படாதவளென்பது உண்மையெனின், அதனை உமது தாயாரிடம் நிரூபிக்க வேண்டியது உமது பொறுப்பு.

உண்மை எது என்பதை உணர்ந்து கொண்டால் உமது தாயார் திருமணத்துக்குக் குறுக்கே நிற்கமாட்டார். பந்து இப்போது உமது பக்கமே உள்ளது. சரியான திக்கை நோக்கித் திறமையாக அடித்து விளையாட வேண்டியது உம்மைப் பொறுத்ததே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? நான் ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனது வயது 26. எனக்கு 16 வயது இருக்கையில் என்னை ஒரு வாலிபன் காதலித்தார். அப்போது நான் க.பொ.த (சாதாரணதரம்) படித்துக்கொண்டிருந்தேன். அவர் இந்துமதத் தினைச் சேர்ந்தவர். அச்சமயம் வெளிநாட்டு வேலை வாய்ப் புக்காக காத்துக் கொண்டிருந்தார். அவர் என்னைக் காதலிப் பதாக என்னிடம் பல முறை கூறியும் நான் அவரது காதலை ஏற்கவில்லை. இதற்குக் காரணம் எனது குடும்பச் சூழ்நிலை. மற்றது எனக்கு படிப்பில் இருந்த அக்கறை. சிறிது காலத்தின் பின் அவர் வெளிநாடு சென்று விட்டார். அதன் பின் நான் படித்து இன்று ஒரு ஆசிரியையாக தொழில் புரிந்து கொண்டிருக் கிறேன். இவ்வளவு காலத்திலும் நான் எவ்வளவோ கஷ்டங்கள், துயரங்களை அனுபவித்து வந்திருக்கிறேன். எனது 17வது வயதில் என் தந்தையின் மரணம். எனக்கு ஒரு தங்கை, அவளையும் என்னைப் போல் ஒரு நிலைக்குக் கொண்டு வர நானும் எனது அன்னையும் மிகச் சிரமப் பட்டோம். ஆனால் அவளோ காதல் பெரிது என்று அவளது 19 வயதில் கல்வியையும் விட்டு விட்டு காதலனுடன் போய் விட்டாள், இதனால் எங்களுக்கு பெரும் அவமானமும் வேத னையும் ஏற்பட்டது. ஆனாலும் என் அன்னைக்கு என்னால் ஓர் ஆறுதல். இதனை எல்லாம் சகித்துக் கொண்டு என் மனதில் காதலுக்கு இடம் கொடுக்காமல் இன்று வரை வாழ்ந்து வருகிறேன். இவ்வாறு இருக்கையில் என்னைக் காதலித்த இளைஞர் வெளிநாடு சென்று 10 வருடங்களாக இன்னும் இலங்கை திரும்பவில்லை எனவும், அவரது வீட்டில் அவருக்கு மணம் பேசியதாகவும், அவர் திருமணத்தை தட்டிக் கழித்ததாகவும், கடந்த இரு மாதங்களுக்கு முன் எனக்கு தெரியவந்தது. என்றாலும் நான் அவரைப் பற்றி கடந்த 10 வருட காலத்திலும் நினைத்ததுமில்லை. எவரிடமும் விசாரித் ததுமில்லை. தற்செயலாக அவரது உறவுக்காரப் பெண்மணி ஒருத்தியை சந்தித்த போது தான் இவ்விடயம் எனக்குத் தெரிய வந்தது. அதாவது அம்மா அவர் கடந்த பத்து வருடங் களுக்கு முன் காதலிப்பதாகக் கூறியபோது அவரையும், அவரது காதலையும் நிராகரித்த போது, அச்சம்பவத்தை நான் பெரிதாக எடுக்கவில்லை. இவ்விடயம் என் அம்மாவிற்கும் தெரியும். ஆனால் கடந்த மாதம் அவர் வெளிநாட்டில் இருந்து இலங்கை திரும்பி உள்ளார். அத்துடன் எனது அம்மாவுடன் அவரது வீட்டாரையும் பேசச் சொல்லி என்னை மணம் முடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதம் கேட்டுள்ளார். ஆனால் அம்மா எனக்கு இப்பொழுது திருமணம் செய்யும் எண்ணம் எதுவும் இல்லை. திருமணம், காதல், கீதல் எல்லாவற்றின் மேலும் ஒரு வெறுப்பு. இதற்கு முக்கிய காரணம் எனது தங்கையின் காதல் தான். இதனால் என் மனதில் ஏற்பட்ட துயரத்தாலும் காயத்தாலும் நான் ஒரு வரையும் காதலிப்பதுமில்லை, திருமணம் செய்து கொள்வது மில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டேன். மேலும் வீட்டிலும் எனக்கு சில திருமணங்கள் பேசினர். ஆனால் நான் மறுத்து விட்டேன். இந்நிலையில் என் தாயாரே இறுதியில் இவ் இளைஞனையாவது (சமயத்தையும் பார்க்காமல்) திருமணம் செய்யுமாறு விடாப்பிடியாக நிற்கிறார். ஆனால் நானோ என் முடிவை மாற்றிக் கொள்ளப்போவதாக இல்லை. அதே சமயம் என் அம்மா என்னிடம் கெஞ்சுவதைப் பார்க்க எனக்கு மிகத்துன்பமாக உள்ளது. இதனால் என் வீட்டில் நிம்மதி என்பதே இல்லாமல் போய்விட்டது. எனக்கும் அம்மாவிற்கும் இடையில் சில மனக்கசப்புகள் தோன்றப் பார்க்கின்றன. இதனை நான் விரும்பவும் இல்லை. இதற்கான என் முடிவைக் காட்டுவதற்கு ஒரு சிறந்த பதிலைத் தாருங்கள். ஆனால் இதற்கான முடிவு எனக்கும் என் தாயாருக்கும் திருப்தி தர வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை. இவ் விடயத்தால் என் நிம்மதி எல்லாம் குறைந்து வாழ்க்கையே வெறுக்கும் அளவுக்கு வந்து விட்டேன். என்னால் எவரையும் திருமணம் செய்ய முடியாது. எனது பிரச்சினைக்கு ஒரு சிறந்த தீர்வை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன்.

அனுஷியா, ஆரையம்பதி

* உமது பிரச்சினைகளை விளக்கமாக எழுதி எனது அபிப் பிராயத்தையும் முடிவையும் கேட்டுள்ளீர். உமது தாயார் உம்மை விரும்பும் அந்த நபரை (அவர் வேறு மதமாக இருந்தாலும் பரவாயில்லை என) மணம் செய்யும்படி கெஞ்சுகிறார். ஒரு தாயின் நிலையில் அவருடைய எண்ணம் சரியானதே. அவர் மிகவும் பொறுப்புணர்வோடு தனது குழந்தையின் பிற்காலத்தையிட்டு யோசிக்கிறார். இளமையும் முறுக்கும் இருக்கும்போது எல்லோ ரும் இப்படிப் பிடிவாதத்துடன் இருப்பது இயல்பு. வயது போகப் போக உடம்பும் தளரத் தொடங்கத்தான் தனக்கொரு துணையோ, பிள்ளைகள் பேரப்பிள்ளைகளோ, தன்னைப் பார்க்க, எடுத்து நிமிர்த்த, நேசிக்க இல்லையே என்ற ஏக்கமும் கவலையும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியானதொரு நிலைமையினால்தான் இன்று பல முதியோர் இல்லங்கள் முளைவிட்டிருக்கின்றன.

எனவே உமது தாயாரின் கோரிக்கையில் நியாயமிருக்கின்றது. அதேநேரம்உம்முடைய நிலையையும் என்னால் நன்கு கருத்தில் எடுக்க முடிகிறது. திருமணம் என்பது ஒருவர் மட்டும் விரும்புவதால் நடைபெறும் சங்கதி அல்ல. இருமனங்களும் இணைவதே திருமணபந்தமென்பர். ஆரம்பந்தொட்டே உம்மைக் காதலிப்பதாகத் தெரிவித்தவருக்கு, அதில் நீர் அதிகம் ஈடுபாடு காட்டவில்லையென்பதை அறிய முடிகிறது. தந்தையாரின் மரணம், தங்கையின் செயல் போன்றவற்றினால் உமது மனநிலையில் பல காயங்கள் ஏற்பட்டுவிட்டன. எனவே திருமண வாழ்க்கையை வெறுப்பதில் உறுதியாக இருக்கிறீர். உமது அம்மா கூறுவதைவிட அதற்கு மேல் எதுவும் சொல்லக்கூட நான் விரும்பவில்லை. அத்தோடு இன்று நீர் தொழில் புரிந்து கொண்டு உமது சொந்தக் காலில் நிற்கக் கற்றுக் கொண்டு விட்டீர். மணம் செய்வதையும் விரும்பவில்லை எனவே இன்னும் மேற்கொண்டு படித்து உமது தரத்தையும் அறிவையும் வளர்த்துக் கொள்வதோடு சமூக சேவைகள், பொதுத் தொண்டுகள் என்பவற்றில் உமது ஓய்வு நேரத்தைச் செலவிட முடியும். அடித்து அப்பம் தீத்த முடியுமா? எனக் கிராமப் புறங்களில் ஒரு பழமொழி கூறுவர். ஒருவர் விரும்பாத விடயத்தை வற்புறுத்தித் திணிக்க முடியாது என்பதுதான் அதன் கருத்து.

திருமணம் போன்ற துணை ஒன்று தேவை என நீர் நினைக்கின்ற போது, நீர் முதியவராகி விடுவீர். நீர் ஒரு உறுதியான முடிவை எடுத்து, அதனை அம்மாவிற்கு விளங்கும் படி சாந்தமாக எடுத்துச் சொல்லி, அந்த ஜீவனையும் சாந்தமுறச் செய்ய வேண்டிய கடமைப்பாடும் உமக்கு உண்டு.

**? எனக்கு வயது 29. திருமணம் முடிந்து 03 வருடங்கள். எங்களுக்கு இப்பொழுது குழந்தை தேவையில்லையென்று குடும்பக்கட்டுப்பாட்டு ஊசி பாவித்து வருகிறேன். எனது கணவர் என் மீது சரியான இரக்கம். அதே போல் நானும் அவருடன் சரியான இரக்கம். நாங்கள் பிள்ளைப் பேற்றைத் தள்ளிப் போடக் காரணம் குடும்ப நிலைமைதான். எனது பிரச்சினை என்ன வென்றால் எனக்கு ஊசி போடும் திகதி வந்ததும் நான் ஊசி போடவில்லை. காரணம் எனது கணவர் வெளியூரில் இருக்கிறார். அவர் என்னை விட்டு ஒரு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நொடி கூடப் பிரிந்திருக்கமாட்டார். அவர் போன பின்பு எனக்கு இரவில் தூக்கமில்லை. ஒரு நாள் திடீரென தலையிடி ஏற்பட்டது. டாக்டரிடம் காட்டிய போது அவர் என்னைப் பற்றி நிறைய விளக்கங்கள் கேட்டுவிட்டுச் சொன்னார் குடும்பக் கட்டுப்பாட்டு ஊசி பாவித்ததால் தான் இந்த நோய் வந்துள்ளது என்று சொல்லி தூக்கத்திற்கு மருந்து தந்தார். ஆனால் குடும்பக்கட்டுப்பாட்டு ஊசி பாவிக்கச் சொன்னது ஒரு பெண் நோயியல் நிபுணர் (V.O.G) தான். இவைகளைப் பார்க்கும் போது எனக்கு பைத்தியம் பிடித்து விடும் போல இருக்கிறது. அம்மா என் தலையிடி குணமாக என்ன செய்ய வேண்டும்?**

ஜனபா கையூம், மாபோல

✱ நீங்கள் மிகவும் மென்மையான உள்ளம் உடையவர் போல் தெரிகிறது. உங்களுக்கு ஏற்பட்ட தலையிடிக்குக் காரணம் குடும்பக்கட்டுப்பாட்டு ஊசி பாவித்ததே என ஒரு வைத்தியர் கூறுகிறார். அவ்வூசியைப் பாவிக்கச் சொன்னதும் இன்னொரு வைத்திய நிபுணர்தான். தலையிடி மாற்ற முடியாத பெருந் தொல்லைகளைத் தரும் வியாதியல்ல.

தலையிடிக்கான காரணங்கள் பற்பல உண்டு. தலையிடி ஏதோ ஒரு நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம். வாழ்க்கையில் நாம் பற்பல மனக்கஷ்டங்களையும் உடல் உபாதைகளையும் தாங்கித்தான் ஆகவேண்டும். அதுவே வாழ்வின் இயல்பு. எனவே இச்சிறு நோயான தலையிடிக்கே தாங்கள் உடைந்து போவ தென்றால்... வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் பெரும் இடிகளுக்கெல்லாம் எங்கே ஓடிப்போய்ப் பதுங்குவது? தலையிடி கருத்தடை ஊசிபாவிப்பதன் பின்விளைவாகக் கூட இருக்கலாம் எதற்கும் தாங்கள் நல்லதொரு வைத்தியரை நாடி ஆலோசனை பெறுவதே சரியானது.

✉ ✉ ✉ ✉

**? எனக்கு வயது 27, எனக்கு 2001 ஆம் ஆண்டு திருமணப் பதிவு நடைபெற்றது. அதன் பின்னர் தான் சீதனமாக எனக்கு காணி தருவதாகக் கூறியும் பெற்றோரினால் தரமுடி யாத சூழ்நிலை ஏற்பட்டது. அது எனக்குச் சரியான பயத் தையும், கவலையையும் உண்டு பண்ணியது. இத்தோடு நிறுத்தி விடுவோம், கல்யாணமே வேண்டாம் என்று வீட்டில் கூறினேன். வீட்டுப் பெரியவர்கள் நண்பிகள் என்னைச் சமாதானப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி, எல்லாம் சரியாக்கலாம் என்று கூறிச் சம்மதிக்க வைத்தார்கள். திருமணப்பதிவின் பின்பு கல்யாணம் நடை பெறாவிட்டாலும் அவமானம் தானே. நான் பின் விளைவுகளுக்குப் பயந்தேன் எனது மாமியாரிடம் காணிப்பிரச்சினை பற்றிக் கதைத்தபோது அவர்கள் பெருந்தன்மையுடன் இவ் விடயம் பற்றிப் பெரிதுபடுத்தாது திருமணமும் நல்லபடியாக நடை பெற்றது. எனது பெற்றோரும், சகோதரனும் முடிந்த அளவில் எங்களது வசதிக்கும் நிலைமைக்கும் மீறியே கடன்பட்டுக் கல்யாணம் நடந்தது. புகுந்த வீட்டினர் மிக நல்லவர்கள், மாமா, மாமி, மச்சாள், மச்சான் என எல்லோரும் நல்லவர் களே. என் கணவரும் மிகவும் நல்லவர். எனக்கு இங்கே எந்த வித குறையும் இல்லை. இவை இவ்வாறிருக்க எனக்கு எனது வீட்டினர் பற்றிச் சதா கவலையாக உள்ளது. எனக்காக கடன் வாங்கிக் கல்யாணம் செய்து வைத்தார்கள். எனது அண்ணா இவற்றையெல்லாம் எப்படித்தான் அடைக்கப் போகிறாரோ தெரியவில்லை. சதா இவற்றை நினைத்து ஒரே கவலைதான். காலப் போக்கில் எல்லாம் (மறந்து போய் விடும்) சரியாகிவிடும் என்று நினைத்தேன். ஆனால் அப்படி சுயநலமாகவும் இருக்க முடியவில்லை. எனக்கு இவற்றை எல்லாம் நினைக்கும் போது அழத்தான் முடிகிறது. தினமும் இரவில் அழுதபின் நித்திரை கொள்வேன். கல்யாணம் ஆகி நான்கு மாதங்களின் பின், எனது கணவர் வெளிநாட்டில் வேலைசெய்யச் சென்றுள்ளார். அவர் பக்கத்தில் இருந்தாலா வது மனப் பாரம் குறையுமோ என்னவோ? ஏன் தான் கல்யா ணம் செய்தேன் என்ற நிலையில் இப்போது உள்ளேன். பேசாமல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஏதாவது அனாதை இல்லத்தில் போய்ச் சேர்ந்து விடலாமா என்று கூட நினைப் பேன். நான் எனது இக்கவலையைப் பற்றி எனது கணவரி டமோ, நண்பிகளிடமோ, அம்மாவிடமோ, யாரிடமும் கூறியதில்லை. அவர்கள் என்னால் கவலைப்படக் கூடாது. வெளியில் காட்டிக் கொள்வதுமில்லை. சிரித்தபடிதான் இருக்கிறேன். கடவுளிடம் கண்ணீருடன் மன்றாடுகிறேன். உங்களிடமிருந்து ஒரு தகுந்த ஆறுதலை, எதிர்பார்த்து எழுது கின்றேன். இவ்வளவுக்கும் உங்களுக்கு எழுதியதிலே பாதிப் பாரம் குறைந்தது போல் உள்ளது.

வாசுகி , திருமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உமது சீதனப்பிரச்சினை, திருமணம், புகுந்தவீடு, கணவர் முதலிய விடயங்களைப் பற்றி நீரும் உமது பெற்றோரும் நண்பர்களும் பயந்தது போல், கவலையடைந்தது போல் எதுவும் நடக்காமல் நடந்திருப்பது உமக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே மன அமைதியையும் நிறைவையும் தருகிறது. இதற்கெல்லாம் உமதும் உம்மோடு சேர்ந்தோரதும் நல்ல பண்பட்ட உள்ளங்களே காரணமாகும். முக்கியமாக உமது புகுந்த வீட்டாரைப் போற்ற வேண்டும். உமக்கு ஆண்டவனின் ஆசீர்வாதமும் நிறையவே உள்ளது. நமது நாட்டில் ஒவ்வொரு பெண்ணும் திருமணம், அதனோடு நிழலாக நிற்கும் சீதனம், பின்னர் கணவன், மாமா, மாமி, உறவினர், வாழ்க்கையில் அமைதி என ஒவ்வொரு தடங்கலையும் தாண்ட வேண்டுமே என்ற ஏக்கத்தில் அரைவாசிப் பெலனையும் அமைதியையும் இழக்கிறாள். ஆனால் எல்லா வற்றிற்கும் பயந்த படி பின்வாங்கிக் கொண்டிருந்தால் முன்னே றுவது எப்படி? உமக்கு யாவும் சிறப்பாக அமைந்திருப்பது எமக்கு மகிழ்ச்சியே.

நீர் வீட்டாரைப் பற்றி யோசித்து இன்னும் மனதைப் போட்டு அலைக்காது, எதிர் மறையாகச் சிந்தித்து வீணாக அமைதியைக் கெடுக்காது, யாவும் நன்றாக சிறப்பாகவே நடக்கும் என மனதில் உருப்போட்டுக் கொள்ளும். அழுது கவலைப்பட வேண்டாம். குனிந்து கீழே பாருங்கள். எமக்குக் கீழே எத்தனை பேர் அளவிட முடியாத உபத்திரவங்கள், இடைஞ்சல்களுக்குள் சிக்கி, வாழ்க் கையையே தொலைத்து விட்டுத் துன்பத்தில் உழலுகிறார்கள். உமது நல்ல, பற்றுமிக்க உள்ளம் வீட்டாரின் கஷ்டங்களை எண்ணிப்பார்த்து துயருற வைக்கிறது. நீர் மகிழ்ச்சியாக ஆறுதலாக இருப்பதைப் பார்க்கும்போதுதான், உமது வீட்டாருக்குத் தமது துன்பமெல்லாம் மறைந்துவிடும். உற்சாகத்துடன் உழைத்துக் கடனை அடைத்துவிடுவார்கள். என்ன பெரிதாக நேர்ந்து விட்டது நீர் கண்ணீர் விட்டபடி இருக்க? பெற்றோரை விட்டுப் பிரிந் திருப்பது சிலகாலம் ஒரு மாதிரி இருக்கலாம். காலம் போகப்போக யாவும் பழக்கத்துக்கு வந்துவிடும்.

கொடுமைப்படுத்தாத அருமையான மாமி, மாமா, மச்சாள், மச்சான்மார் என்போருடன் அன்பாகப் பழகிச் சந்தோ ஷமாக வாழ்க்கையை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டி யது உமது பொறுப்பாகும். அநாதை மடத்தை நாடுவதற்கு உமது தரப்பில் எந்தவித நியாயமும் இல்லை. வெறுமனே கற்பனையில் மனதைக் குழப்பிக் கொண்டிருக்கிறீர். வாழ்க்கையை வளமாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது கணவர் வெளியூர் சென்றிருக்கிறார். சில காலத்தில் நீரும் அவரோடு போய்ச் சேர்ந்து வாழ வாய்ப்புகள் வரலாம்.

⊠ ⊠ ⊠ ⊠

**?** நான் மிகவும் சிக்கலான பிரச்சினையில் தவித்துக் கொண்டிருக்கிறேன். எனது வாழ்க்கைக்கு வழி காட்டுங்கள் அம்மா. 23 வயதான நான் A/L 2ம் வருடத்தில் படிக்கும் போது முதலாம் வருடத்தில் எனது ரியூஷன் வகுப்பில் படித்த ஒருவரைக் காதலித்தேன். எமது காதல் வீட்டிற்குத் தெரியவர, என்னை வேறு இடத்திற்கு அனுப்பி படிக்கவைத்தார்கள். சாதி, மதம், அந்தஸ்துக்களால் எங்கள் காதல் பிரிக்கப்பட்டது. அதன் பிறகு எமக்குள் தொடர்பு அற்றுப்போய் விட்டது. ஒரு வழியாக A/L பரீட்சையில் நல்ல முறையில் பாஸ் பண்ணி தொழிநுட்பக்கல்லூரியில் படிக்கச் செல்லும் போது என்னை ஒருவன் காதலிப்பதாகக் கூற, முதலில் மறுத்த நான் அவனது வார்த்தைகளை நம்பி வீட்டாருக்கு தெரியாமல் திருமணம் செய்து கொண்டேன். திருமணம் முடிந்து சிறிது நாட்களுக்குள் அவனது சுயரூபம் தெரிய வந்தது. அடியும் உதையும் சித்திரவதையுமாக எனது வாழ் நாட்கள் கடந்தன. போதாதக்குறைக்கு குடி, களவு , சூதாட்டம், பல கள்ளத் தொடர்புகளும் இருப்பது தெரிய வந்தது. எனது வாழ்க்கையைப் பார்த்து இருதய நோயாளியான எனது அம்மாவும் இவற்றை சகிக்க முடியாமல் கவலையில் இறந்து விட்டார். அதன் பிறகும் அவன் திருந்தவில்லை. இவற்றைப் பார்த்த வீட்டார்கள் அவனிடமிருந்து என்னைப் பிரித்துக் கூட்டி வந்தனர். இரண்டு வருடமாக அவனைப் பிரிந்திருந்தேன். மறுபடியும் எனக்கு அவன் தொடர்ந்து தொந்தரவு தர "டைவோஸ்" கோரி விண்ணப்பித்துள்ளான்.

இந்நிலையில் 5 வருட இடைவெளிக்குப் பின் எனது பழைய காதலனை சந்தித்தேன். எனது விடயங்களை அறிந்த அவர் என்னை மறுமணம் செய்யப் போவதாகக் கூறினார். அவர் தனியார் கம்பெனி ஒன்றில் வேலை செய்பவர். எனது கவலையைக் கூறியபோது ஆறுதல் கூறினார். ஏற்கனவே வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவம் என்னைப் பய முறுத்தியது. அதனால் வீட்டாரிடம் விடயத்தைக் கூறினேன். வீட்டில் பழையபடி எதிர்த்தார்கள் என்னைக் கேவலமாக எண்ணினார்கள் இதனால் அவரிடம் விடயத்தைக் கூறவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர் துணிந்து வந்து எம் விட்டாருடன் கதைத்தார். முதலில் ஏற்றுக் கொள்வது போல் இருந்தது. ஆனால், அவர் மதம் மாறமுடியாது என்று திட்ட வட்டமாகக் கூறவே, இப்போது மறுபடியும் வீட்டில் அவரை எதிர்க்கிறார்கள். நான் இனி மறுமணம் முடிப்பதாய் இருந்தால் வீட்டாரின் சமமதத்துடன் தான் மணம் முடிக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. நான் என்ன முடிவு செய்வது என்றும், எனக்கு ஒரு நல்ல பதில் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.**

சியாமளா, கேகாலை

✱ நீர் இரு கசப்பான அனுபவங்களுக்கு உட்பட்டிருப்பதைப் பார்த்து மனம் வேதனை அடைகின்றேன். உமது முதலாவது காதலன், ஏற்கனவே சாதி, மதம், அந்தஸ்து என்ற காரணங்களால் பிரிக்கப்பட்டார் எனக்குறிப்பிட்டுள்ளீர். திரும்பவும் அவர் தற்போது உம்மைச் சந்தித்தபோது தனது சமயத்தை விட்டுக் கொடுக்க தயாராக இல்லை என்கிறார். உண்மைக் காதல் என்பது பணம், பொருள், சாதி, சமயம் போன்றவற்றிற்கும் அப்பாற்பட்டது, என்று நூல்கள் விபரிக்கும். அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது...?

எதற்கும் நீர் இரண்டாம் முறை ஒருவரைச் சந்தித்துக் காதல் பண்ணிக் கஷ்டத்தைத் தனியே சுமந்தது போலல்லாது உமது வீட்டிலுள்ளோருடனும் கலந்து வெளிப்படையாகப் பேசி, ஒரு திடமான முடிவுக்கு வருவதே நல்லது என நான் கருதுகிறேன். காதல், திருமணம் என்னும் போது ஒருவருக்கொருவர் பல விடயங்களில் விட்டுக் கொடுத்தும், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டும், அற்பவிடயங்களையெல்லாம் பெரிதுபடுத்தாமல், மன்னித்தும் அன்பு பாராட்டியும் வாழ்வதிலேயே அதன் வெற்றி தங்கியிருக்கிறது. உம்மீது அக்கறை கொண்ட உமது வீட்டிலுள்ள உறவுகளோடு, ஆறுதலான நல்லமன நிலையில் அவர்கள் இருக்கும் நேரத்தில் ஆராய்ந்து முடிவை மேற்கொள்ளவும், அவசரப்பட்டதால், எற்கனவே ஒரு தடவை கசப்பான பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறீர் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

✉ ✉ ✉ ✉

**? நான் தினமும் எனது கணவனுக்கு உரிய பணி விடைகளையெல்லாம் ஒழுங்காகச் செய்து முடிக்கிறேன். அவர் ஓரளவு படித்தவர். அப்படியிருந்தும் அவர் என்னை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரியாகப் புரிந்து கொள்கிறார் இல்லையே எதற்கெடுத் தாலும் "சள், புள்"ளென எரிந்து விழுவதும், நான் சொல் வதை காதில் வாங்காது இருப்பதும்.......... போதாதற்கு தனது தாய் சகோதரங்களைக் கண்டால் இன்னும் ஒரு படி மேலாக .......... "உர்" ரென்பதும், எதையும் அலட்சியப்படுத்துவதும், என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே என்ன செய்ய?**

செல்வி , புலோலி

* உமது கணவனின் போக்கு உமக்கு அமைதிதரவில்லை யென்பதால் நீர் தளர்ந்து போயிருப்பதை உணர்கின்றேன். உமது கணவருக்கு ஓய்வொழிச்சல் இல்லாத வேலைப்பளுவோ, கடன் போன்ற ஏதாவது தொல்லைகளோ அல்லது உடல் நிலையில் ஏதாவது குறைபாடோ இருப்பதன்தாக்கம் இப்படி யாகத் தனது பெலவீனத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனந்தமான அமைதியான சூழ்நிலையில்லாத தையும் காரணமாகக் கொள்ளலாம். சில விடயங்களை எதிர்பார்த்து அவை கிட்டாது ஏமாற்றமடைந்ததன் பிரதிபலிப்பும் இப்படி ஒரு நடத்தைக்கு தூண்டலாம், எல்லா வசதி வாய்ப்புக்கள் இருந்தும் சிலருடைய இயல்பான குணங்கள் இப்படி வெளிப்படுத் தப்படலாம். இதற்காக நீர் மனந்தளரக்கூடாது. என்ன காரணமா யிருக்கலாம் என்பதை நிதானித்து ஆராய்ந்து பார்க்கவும். அதற்காக நீர் உமது பொறுமையை, சமநிலையை இழந்து விடக் கூடாது. உம்மை மாத்திரமல்ல உம் போன்ற பல பெண்களை பெற்றோர் கள், கணவன்மார்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதே பல சிக்கல்கள் பிரச்சினைகள் ஏற்படக் காரணமாயமைகின்றது. தாம்பத்திய வாழ்க்கையில், அன்பும் அரவணைப்பும், விட்டுக் கொடுக்கும் பண்பும், பொறுமையும் அவசியம். பல பெரியவர் களுடைய வாழ்க்கையில் இத்தகைய கஷ்டங்கள் தலை தூக்கி யுள்ளன. பேரறிஞர் சோக்கிறற்ரீசின் மனைவி தினமும் அவருடன் சண்டை போட்டு திட்டியபடியே இருப்பார். ஒரு நாள் வழமை போல் அவர் சண்டை போட்டுக் கொண்டிருந்த போது சோக் கிறற்ரீசின் நண்பரொருவர் வந்திருந்தார். அறிஞர் அவருடன் அளவளாவியபடியிருந்தார் கடுங்கோபமுற்ற அவரது மனைவியார் மாடியிலிருந்து சோக்கிறற்ரீசின் தலை மேல் தண்ணீரை அள்ளி ஊற்றினார். அறிஞர் அதைச் சாதாரணமாக ஏற்றுக் கொண்டு முதலில் இடி இடித்தது. இப்போ மழை கொட்டுகிறது. என்று அமைதியாகக் கூறிச்சமாளித்தாராம். இப்படியே பெரும் சிந்தனாவாதியான கார்ல் மார்க்ஸ்ஸின் வாழ்விலும் மனைவியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுடுசுடு" வென்று பேசுவார். சிறந்த பொதுவுடமைக் கருத்துக் களைக் கொண்ட, உலகின் வரலாற்றையே மாற்றியமைக்கக் கூடிய தத்துவங்களை விளக்கும் "மூலதனம்" என்ற அருமையான நூலை, மிகச் சிறந்த சிந்தனைப் பொக்கிஷத்தை பல ஆண்டுகால உழைப்பின் முயற்சியினால் எழுதி முடித்தார். இந்நூலை வரவேற்று பாராட்டாத அறிஞர்களே இல்லையெனலாம். அரும் பொக்கிஷமான அந்த நூலைப் பற்றி அவரது மனைவியார் என்ன கூறினார் தெரியுமா? இந்த நூலை எழுதுவதற்கு செலவிட்ட காலத்தை, ஏதாவது தொழில் செய்திருந்தால் எமது வாழ்க்கைக்கு தேவையான மூலதனத்தைப் பெற்று எத்தனை இன்பமாகவும், ஆனந்தமாகவும் நாம் வாழ்ந்திருக்கலாம் எனக் குறைப்பட்டாராம்.

இப்படி நான் குறிப்பிட்டப் பெண்கள் தமது கணவன் மாரைப் புரிந்து கொள்ளவில்லையென்று மாத்திரம் அர்த்தமல்ல, பெரியவர்கள் வாழ்விலும் இத்தகைய சங்கடங்கள் தலை நீட்டி யுள்ளன என்பதை தெரிவிப்பதற்காகவே இவற்றைக் குறிப் பிட்டேன். இருள் மேகங்கள் சில காலத்தில் விலகிவிடும். ஒளிபரவவே செய்யும். எதற்கும் நீங்கள் கவலைப்படாமல், மனம் சோர்ந்து விடாமல், நல்லவற்றை நினைத்து நல்லனவற்றையே செய்யுங்கள். சிறந்த பலன் நிச்சயம் கிடைக்கும். ஆறுதலும் மன அமைதியும் நிலவும் வேளையில் உங்கள் கணவரிடம் உங்கள் ஆதங்கத்தை விளக்கமாகத் தெரிவியுங்கள், கலந்து பேசுங்கள். மகிழ்ச்சியான நிலைமை உங்களை நாடிவரும்.

✉ ✉ ✉ ✉

**? திருமணம் செய்து 3, 4 ஆண்டுகளாகியும் குழந்தை கிடைக்காதவர்கள் அரசமரத்தைச் சுற்றி வழிபட்டால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும் என்கிறார்களே, இது உண்மையா? நம்பலாமா?**

கமலி, நீர்கொழும்பு

* தற்காலத்தில் திருமணமாகி சில ஆண்டுகளில் பெண்கள் கருத்தரிக்காதிருந்தால், வைத்தியர்களை நாடி அவர்களுடைய யோசனையின் படி மருந்துகள் உட்கொண்டோ, செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறைகளைக் கைக்கொண்டோ தம் விருப்பங்களை நிறைவேற்றுகின்றனர். அந்தளவுக்கு நவீன உலகின் விஞ்ஞான வளர்ச்சி முன்னேறியிருக்கிறது. என்றாலும் பண்டைக் காலத்தில் பல நம்பிக்கைகளை மையமாகக் கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை நகர்த்தினர். அதில் மணமாகியும் சில ஆண்டுகள் குழந்தை கிடைக்காதோர் விரதமிருந்து அரசமரத்தைச் சுற்றி வழிபட்டால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும் என்று நம்பி வாழ்ந்தவர்களும் உண்டு. ஆனால் அதனுடைய விளக்கத்தை அவர்கள் சரியாக தெரிந்து கொள்ளவில்லை. அரச மரத்தைப் பற்றி ஆராய்ந்து அறிந்தவர்கள் இந்த நம்பிக்கையில், விஞ்ஞான உண்மை இருப்பதாக தெளிவுபடுத்தியுள்ளனர். அதாவது பெண்கள் கர்ப்பம் அடைவதற்குத் தடையாக இருக்கும் மலட்டுத் தன்மைக்கு அவர்களது கர்ப்பப்பையிலுள்ள சில தீய கிருமிகளே காரணமாய் உள்ளன. அக்கிருமிகளை அழித்தொழிக்கும் ஆற்றல் கொண்ட உயிரணுக்கள் அரச மரத்தில் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இத்தகைய ஆற்றல் கொண்ட உயிரணுக்கள் அரசமரத்தைச் சுற்றும் பெண்களுடைய சுவாசத்தில் கலக்கிறது. பின் இரத்தத்தில் சேர்ந்து கருப்பையினுள் உள்ள தீய கிருமிகளை அழிக்கின்றன. இதனால் பெண் கருத்தரிக்க தடையாகவுள்ள தன்மை நீங்குகிறது. அவள் தாய்மை அடைய வாய்ப்புக் கிட்டு கிறது. இதுதான் அந்த நம்பிக்கையில் பொதிந்து கிடக்கும் உண்மையாகும். இப்படிப் பல இயற்கை மருத்துவ முறைகள் விளக்கமின்றி, வெறும் நம்பிக்கைகளாக மறைந்து கிடக்கின்றன.

✉ ✉ ✉ ✉

**? எனது வயது 20. உயர்தரம் வரை படித்து விட்டு தற்போது வீட்டில் இருக்கிறேன். எனது தந்தையார் சிறுவயதில் இறந்து விட்டார். அதன் பின் தாயாருடன் வசித்து வந்த நான் சில ஆண்டுகளுக்கு முன் இங்கு இடம் பெற்ற வன்செயல் ஒன்றில் தாயாரையும் பலிகொடுத்து விட்டேன். என் கண் முன் இந்த "ஷெல்" தாக்குதல் நடைபெற்றதால் என்னால் இத் துயரத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இந்நினைவுகள் வரும் போதெல்லாம் எவ்வளவு நேரம் அழுவேன் என்று எனக்கே தெரியாது. தாயார் இறந்ததில் இருந்து எனது மாமாவுடன் வசித்து வருகின்றேன். அவர்கள் என்மேல் எவ்வளவுதான் அன்பாகவும் ஆறுதலாகவும் இருந் தாலும் தாயில்லை, தந்தையில்லை என்ற எண்ணம் என்னை இந்நிமிடம் வரை வாட்டுகிறது. என்னிடத்தில் எப்போதும் ஒரு சோகம் உள்ளது. இவ் உலக வாழ்க்கையில் சந்தோசம் ஒன்றுமே இல்லையென்று நினைக்கிறேன். ஏதோ வாழ்க்கையில் 50, 60 வருஷம் வாழ்ந்து விட்ட மாதிரி ஒரு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரக்தி உணர்வு ஏற்படுகின்றது. இறந்தால் தான் நிம்மதி என அடிக்கடி நினைப்பேன். இந் நினைவினால் என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. பைத்தியம் ஏதாவது பிடித்து விடுமோ என எண்ணத் தோன்றுகின்றது. என் கவலைக்கு ஒரு வழி காட்டுங்கள்.**

ஜனா , செங்கலடி.

✱ சிறுவயதில் தந்தையை இழந்த பின்னர் ஒரே பற்றுக்கோடாக இருந்த தாயையும் ஷெல்தாக்குதலில் இழந்த சோகத்தை துயரம் தோய எழுதியுள்ளீர். உயர்தரம் வரை கல்வி கற்று நீர் உயர்ந்திருப்பது இந்தச் சோக இழையுள்ளும் மெல்லிய மகிழ்வைத் தருகிறது. ஜனா நீர் மாத்திரமல்ல, உம்மைப்போல எத்தனை சிறார்கள், பிஞ்சுகள், குழந்தைகள், பெற்றோரை இழந்து உற்றார் யாருமின்றி இடம் பெயர்ந்து, அநாதைகளாக, அங்கங்களையும் இழந்து ஊனமுற்றவர்களாக ஆஸ்பத்திரிகளில் முடங்கிக் கிடக்கி றார்கள். வீட்டுக்கு வீடு வெவ்வேறு வகையான இழப்புக்களை சிறிய நாடான இலங்காபுரியில் கொடூரமான யுத்தம் ஏற்படுத்தி விட்டது. எத்தனை அழிவுகள் தமிழர்கள் தம் சொந்த முகவரிகளை இழந்து அகதிமுகாம்களில் இன்னும் வாழ்வு நடத்துகிறார்கள். 20 வயதே நிரம்பிய நீர் 50, 60 ஆண்டுகள் வாழ்ந்து விட்ட மாதிரி யான உணர்வு ஏற்படுவதாக, உமது துயரின் ஆழம்காரணமாகப் பேசுகிறீர். "இறந்தால் நிம்மதி எனஅடிக்கடி நினைப்பேன்" என்ற உமது வார்த்தைகள் கொள்ளியால் சுடுவது போல வருத்துகின்றன. சந்தோஷத்தை யார் ஏற்படுத்துவது? எல்லாம் எமது மனநிலை யையும், ஆற்றலையும் பொறுத்ததே. நாம் கற்பது ஏன்? "நாம் இடறும் போது சோர்வினால் தள்ளாடும் போது நம்மை இறுக்கிப் பிடித்து வைத்து ஊக்கமும் உயிரூமூட்டுவன நாம் கற்ற கல்வியும் பெற்ற அறிவுமேயன்றோ" என சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். உலக இன்பங்களில் மயங்கி, வெறும்கோழைகளாக வாழாமல், துன்பங்களையெல்லாம் எதிர்த்துப் போராடி அங்கெல்லாம் இறை வனுடைய ஆதரவு உண்டு என்பதைக் காண்பதே சிறந்த வாழ்வு முறையாகும்" என்று வள்ளுவர் என்ன சொன்னார்?

"துன்பம் வருங்கால் நகுக". துன்பத்தை புன்னகையுடன் ஏற்று அதனைச் சவாலாகக் கொண்டு வாழ்வதே அர்த்தமுள்ள வாழ் வாகும். வாழ்வு முழுவதும் மகிழ்வான சூழலே அமைந்திருப்பின் அங்கே உமது முயற்சிக்கும் உழைப்பிற்கும் எங்கே வேலை? வாழ்க்கையே உப்புச்சப்பற்றதாகி விடுமே இன்பமும் துன்பமும் இணைந் ததுதான் வாழ்க்கை என்ற கசப்பான உண்மையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளவேண்டும். அநாதரவான நிலையிலிருந்த உம்மை, உமது மாமா ஆதரவு தந்து இத்தனை வருடங்களாக உதவி செய்து A/L வரை படிக்க வைத்துள்ளார். மேற்கொண்டு உமது கல்வியைத் தொடரவோ, அல்லது வேறு தொழிலொன்றில் ஈடுபடவோ நீர் முயற்சிப்பதே நல்லது. பெண்களுக்கான பிரச்சினைகளைத் தீர்க்க உதவும், தொழில் வாய்ப்பிற்கான உதவிகளைஅளிக்கவும் கூடிய பல தொண்டர் ஸ்தாபனங்கள், பெண்கள் அமைப்புக்கள் உள்ளன. அவற்றிடம் நீர் உதவியை நாடலாம். நல்லோர் நட்பு, சகவாசம் , சிறந்த நூல்களைத் தெரிவு செய்து வாசிக்கும் பழக்கம் என்பன மனநிம்மதியைத் தருவதோடு அறிவை வளர்த்துக் கொள்ளத் துணையாகவும் அமையும், பொழுதும் பயனுள்ள முறையில் நிம்மதியாகக் கழியும். அருமையாகக் கிடைத்த இந்த மானிடப் பிறவி நிம்மதியின்றிக் கழிந்து, பைத்தியம் பிடித்துவிடுமோ என ஏங்குவதில் அர்த்தமில்லை. உணர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்காமல் அறிவு பூர்வமாகவும் சிந்திக்கப்பழக வேண்டும். யுத்தத்தால் சீரழிந்தன பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள், உயிரிழந்தனர் 70,000 மக்கள். ஊனமுற்றோர்தொகை மிகப்பெரிது எனச் செய்திகளில் தினமும் பார்க்கிறோமே எப்படியோ எமக்கு விடிவு வரும். அது விரைவில் நிகழும் என் நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போம்.

✉ ✉ ✉ ✉

**? எனது வயது 23, நான் வேலை செய்கிறேன். நான் ஒரு பெண்ணைக் காதலிக்கின்றேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள். ஆனால் அவள் பெற்றோரினதும் சகோதரர்களினதும் சொல்லைத்தட்டமாட்டாள். அவளது பெற்றோரோ அவளுக்கு வெளிநாட்டில் மாப்பிள்ளை பார்க்கிறார்கள். அதை அவளிடம் கேட்டபோது பெற்றோரின் விருப்பப்படி தான் வெளிநாடு போவதாக கூறினாள். நான் அவளுடன் அன்பாக கதைத்தாலும் அவள் சில சமயங்களில் அன்பாக பேசுவாள். சில சமயங்களில் என்னை வெறுத்துப் பேசுவாள். எந்த நேரத்தில் என்ன கதைப்பாள் என்று தெரியாது. ஒரு பெண்ணின் மனது பெண்ணுக்குத் தான் தெரியும். நான் அம்மாவைப் பிரிந்து கொழும்பில் வசிக்கின்றேன். உங்களை என்னுடைய அன்னையாகக் கருதி எனது கவலைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன். அம்மா எனக்கு ஆறுதலும் கூறி தக்க பதிலும் தர வேண்டும்.**

பிரகாஷ், கொழும்பு -04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ எனது விளக்கம் நீர் எதிர்பார்க்கின்ற மகிழ்ச்சியை உடனே தரமாட்டாது என நினைக்கிறேன். எனினும் காலப்போக்கில் அது சரி என்பதை நீர் உணரக் கூடும். நீர் காதலிப்பதாகக் கூறும் பெண், உம்மை விட வயதாலும் அனுபவத்தாலும் சிறியவள் என எண்ணுகிறேன். மனோரம்மியமான கனவுகளைச் சுமந்து கொண்டு இனிய கற்பனைகளில் பறந்து கொண்டிருந்த அவளின் உள்ளம் பொழுது போக்கிற்காக உம்மீது இலேசாகப் படிந்திருக்க, அதை நீர் ஏன் காதலாக எடுத்துக் கொள்ள வேண்டும்? எதிர்கால வாழ்க்கையைப் பற்றி உறுதியான முடிவை எடுக்கத் தெரியாமல் இளம்வயதில் ஆண் பெண் என்போர் வீட்டுக்கு வெளியே கோவில், பூங்கா, கடற்கரை, தியேட்டர், விளையாட்டுத்திடல், ரியூட்டரி வகுப்பு எனச் செல்லுமிடங்களில் இதனையும் ஒரு விளையாட்டாகவே எடுத்துக் கொள்வதைப் பல சந்தர்ப்பங்களில் காண முடிகிறது. அதன் பின்விளைவுகளை வாலிபம் உணருவதில்லை. அவளுக்காக நீர்காத்துக் கொண்டிருப்பதை நிறுத்தி விடும். இனிய கனவொன்றைக் கண்டு விட்டால் மனம் மகிழுமே தவிர அது யதார்த்தமாகி விடுமென எண்ணிக் கொள்வதில் அர்த்தமில்லை. அது போலத்தான் இதுவும் எனக் கருத்தில் கொள்ளவும். அவளும் அவளின் பெற்றோரும் நினைப்பதுபோல அவள் வெளிநாட்டுக்குச் சென்று நன்றாக வாழட்டும். அதற்குக் குறுக்கே நீர் நிற்க வேண்டாம் "கிட்டாதாயின் வெட்டென மற" என்ற பழமொழிப்படி நடக்கவும். அம்மாவைப் பிரிந்து கொழும்பில் வாழும் நீர் உமது பாசம் முழுவதையும் அம்மாவின் நினைப்பில் தவழவிடும். காலப்போக்கில் உமக்குப் பொருத்தமான ஒருத்தி வாழ்க்கைத் துணையாக அமைவாள். உமக்கு இப்போது 23 வயதுதானே? உழைத்து முன்னேறுவதில் அக்கறையைச் செலுத்தும். எல்லாம் நல்லபடியாக வந்து அமையும்.

✉ ✉ ✉ ✉

**? நீங்கள் இதுவரை காலமும் பெண்களின் மனக்கவலைகளுக்கு ஆரோக்கியமான சரியான பதில்களை அளித்துக் கொண்டிருந்தீர்கள். ஏன் அக்கா ஆடவர்களின் மனதிலும் எத்தனையோ பாரச்சுமைகள் இருக்கும்தானே? அவைகளுக்கும் உங்களிடம் தகுந்த பதில்கள் இருக்கும் தானே? அதனால் எனது உடன்பிறவா சகோதரனின் சுமையை என் சுமையாக நினைத்து எழுதுகிறேன். பதில் தருவீர்கள் என்ற பூரண நம்பிக்கையுண்டு. எனது நண்பர் (வயது30) தனியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறுவனமொன்றில் வேலை செய்து வருகிறார். அவர் வேலை செய்யும் இடத்தில் நிறையவே பெண்கள், ஆண்கள் என்று வேலை செய்கிறார்கள். அனைவருடனும் சகோதரர்கள் போல மிகவும் அன்பாகப் பழகுவார். அந்தவகையில் அவருக்கு ஒரு காதலியும் கிடைத்தாள். அதே வேகத்தில் திருமணமும் முடித்தார். இப்போது என்ன பிரச்சினையென்றால் வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக ஓடிக்கொண்டிருக்கும் போது இடையில் அவரது மனைவிக்கு திடீரென சந்தேகம் எழத் தொடங்கி விட்டது. தன்னைக் காதலித்துக் கைப் பிடித்தது போல் வேறு யாருடனும் இப்படி நடந்து கொண்டிருப்பாரா? என்று சந்தேகம் எழுந்ததினால் நண்பர் தற்போது முன்னர் செய்த வேலையை விட்டு விட்டு கூலி வேலை செய்து வருகிறார். ஆனால் அவருக்கோ எல்லாத் தொழிலும் செய்யவும் முடியாது. பழகிய தொழிலைச் செய்ய மனைவியின் சந்தேகம் தடுக்கிறது. இப்படியான வாழ்க்கை வாழ்ந்து வரும் நண்பனுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?,**

நவ்பர், கிண்ணியா.

* பெண்கள் தமக்கேற்படும் சிக்கல்களை வெளியே நண்பர்களிடமோ, அயலவரிடமோ சொல்லி ஆறுதல் பெற முடியாமல் மனசுக்குள் வைத்துப் பொருமி வேதனைப்படுகிறார்கள். மங்கையர் கேசரியின் "நெஞ்சுக்கு நிம்மதி" அவர்களின் பிரச்சினை களைத் கொட்டித்தீர்க்கும் வடிகாலாக அமைந்திருப்பதால், அவர்களிடமிருந்தே அநேக கடிதங்கள், ஆலோசனை கேட்டு வருகின்றன. அதனால் ஆண்களுக்குப் பிரச்சினைகளில்லை என்று அர்த்தம் இல்லை. ஏற்கனவே உங்களைப் போன்ற ஆண்களிட மிருந்து வந்த பிரச்சினைகள் தொடர்பான விசயங்களுக்கு நான் ஆலோசனைகளை அளித்திருப்பதை இப்பகுதியை நீங்கள் தொடர்ந்து படிக்காததால் அவதானிக்கவில்லையெனக் கருது கிறேன். இனி விஷயத்துக்கு வருவோம். உங்கள் நண்பன், தான் பணியாற்றிய இடத்திலிருந்தே ஒருத்தியைக் காதலித்து மணந்துள்ளார். அவளைப்போலவே அவ்வேலைத்தலத்தில் பல பெண்கள் பணியாற்றுகிறார்கள். பரந்த மனங்கொண்ட உங்கள் நண்பரை தான் எவ்வாறு காதலித்தாள் என்பது இப்போது மனைவியாக மாறிவிட்ட அவளுக்கு நன்கு தெரியும். அதனால் பரந்த மனங்கொண்ட அவளின் கணவனை வேறு யாரும் பறித்துக் கொண்டு விடுவார்களோ என அவள் அஞ்சுவதில் நியாயமில்லா மலில்லை. சந்தேகம் என்ற விஷப்பாம்பு சம்சாரம் என்ற பந்தத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்துவிட்டால், குடும்பம் நரகமாகி அழிந்துவிடும். வருமானம் குறைவாயிருந்தாலும், வேறொரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் உங்கள் நண்பரின் முடிவு சரியானதே. தயவு செய்து அக்கணவன்-மனைவி உறவில் உங்களைப் போன்ற மூன்றாம் தரப்பினர், அனுதாபம் காட்டுவது போல் மூக்கை நுழைப்பதை நிறுத்தி விடுங்கள். அவர்கள் கஞ்சியோ, கூழோ குடித்து அன்பாக வாழப் பழகிக் கொள்வார்கள்.

✉ ✉ ✉ ✉

**?** **எனக்கு வயது 24. சகோதரர்கள் மூவர். எங்களுக்கு சகோதரிகள் இல்லை. எனது சிறிய தந்தைக்கு இரண்டு பெண் பிள்ளைகள், ஆண் சகோதரர் எவரும் இல்லை. திருமண மாகவில்லை. அவர்கள் இருவரையும் 20 வருடங்கள் நாட்டு நிலைமை காரணமாகப் பிரிந்திருந்தோம். தற்போதைய சமாதானச் சூழலில் அவர்களைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் அவர்கள் இருவருடனும் என் சகோதரிகள் என்ற பாசத்தில் உயிருக்கு உயிராக பழகி வந்தேன். அதே போன்று அவர்களும் என்னுடன் பழகினார்கள். இப்படியான பாசத்தை என் தங்கையர் மீது நான் வைத்திருந்ததை அறிந்த எனது சிறிய தாயார் குடும்பத்தினர் என் தங்கையரையும் என்னையும் பற்றி கேவலமான முறையில் எனது உறவினர்களிடம் கதைத்திருந்தனர். இவ்விடயம் எனக்குத் தெரிய முன்னர் தங்கையருக்குத் தெரியவந்து விட்டது. நான் என் தங்கையருடன் அப்படியொரு தவறான நோக்கத்தில் பழகவில்லை என்பதில் தெளிவாக இருந்தேன். வழமை போன்று என் தங்கையரின் வீட்டுக்குச் சென்றிருந்த போது என் தங்கைமார் என்னுடன் கதைக்கவில்லை. இதனால் நான் மிகவும் வேதனைப்பட்டு, என்ன காரணம் என்பதை அறியமுற்பட்டவேளை, விடயம் எனக்கு தெரிய வந்தது. இது சம்பந்தமான முடிவினைக் காணும் பொருட்டு என் தாயாரிடமும், என் சகோதரரிடமும் கூறியிருந்தேன். என் தங்கைமார் என்னுடன் கதைக்காதற்கான காரணம் பற்றி நான் வினவிய போது மைத்துனர் முறையான ஒருவர் என் தங்கைமாருக்கு எமது பாசத்துக்கு மாசு கற்பிக்கும் வகையில் நேரடியாக கூறியிருந்தாராம். இதனால் மனதில் வேதனையுற்ற என் தங்கைமார் என்னுடன் கதைக்காமல் இருப்பது எனக்குத் தெரிய வந்தது. என் தங்கைமார் என்னுடன் கதைக்க முற்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போது என்னால் கதைக்க முடியாமல் போய்விடுகின்றது. இதனால் என் தங்கைமாரையும் என்னையும் திட்டமிட்டு பாசப்பிணைப்பில் இருந்து நீக்கியவர் சிறியதாயாரா? அல்லது மைத்துனர் முறையானவரா? என்ற கேள்விகள் என் மனதில் எழுந்த போது என் மனதில் மைத்துனர் முறையான வர்தான் இதற்கான காரணம் என்று தோன்றுகிறது. என் தங்கைமாரில் ஒருத்திக்கு இந்த மாத இறுதியில் வெளி நாட்டில் திருமண ஏற்பாட்டுக்கு தயார் செய்து இருக்கிறோம். இந்த வகையில் இதனையும் தெரிந்து கொண்டு என்மீதும் என் தங்கைமார் மீதும் சந்தேகம் கொள்வது எப்படி? நான் தங்கையர் மீது வைத்த பாசத்தைப் போன்று வேறு எவரிட மும் வைத்ததில்லை. இது எனது வீட்டாருக்கும் தெரிந்ததே. நாட்டின் சூழ்நிலை காரணமாக எனது தாய் தந்தையரை விட்டு 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து பிரிந்து வாழ்கின்றேன். இப்படி இருக்கும் போதுதான் தங்கைமார் என்ற பாசத்தில் பழகினேன். எனவே நீண்ட வரிகளைக் கொண்ட என் கடிதத்தைப் பார்த்து விட்டு சற்றும் கோபப் படாமல் பொறுமையாக இருந்து என் மனதுக்கேற்ற பதி லினை எனக்குத் தருவதுடன் அதனை என் தங்கையரும் பார்த்து என் நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம்.**

றொபின்சன் , மாதம்பை

✲ சகோதரிகளுடன் கூடப்பிறக்காத நீர் நாட்டின் போர்ச் சூழ்நிலை காரணமாக 20 ஆண்டுகள் பிரிந்திருந்து விட்டு, உமது சிறிய தந்தையாரின் பெண்பிள்ளைகள் மீது சகோதர பாசத்தைக் கொட்டி மகிழ்ந்தது இயல்பானதே. அதனால் உம்மையும் அவர்களையும் சேர்த்துப் புனிதமான சகோதர உணர்வைப் புரிந்து கொள்ளாமல், உமது சிறியதாயாரின் உறவினரோ மைத்துனர் முறையானவரோ நன்கு ஆராயாமல் கெட்டதனமாக முடிச்சுப் போட்டு கதைத்தது தப்பு. இன்று உலகம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறது. எனினும் அவர்களைப் போன்றவர்கள் 50, 60 ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணக் கிராமப்புற சமூகத்தின் மனநிலையிலேயே இருக்கிறார்கள். கொடியயுத்தம், அகதி முகாம் வாழ்க்கை, இராணுவத்தினரின் பாலியல் வல்லுறவு, அவலங்கள் என எத்தனை அக்கிரமங்களைத் தமிழ்ச் சமூகம் எமது நாட்டில் சந்தித்து விட்டது. எனினும் பலரின் மனப்பாங்கு இன்னும் மாறாமல் அதனைத் தவறான வழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்து இருப்பது துரதிர்ஷ்டமே. உமது உள்ளம் தூய்மையாக இருக்கிறது. அதில் கள்ளம் கபடமில்லை என்பதை உமது கடிதத்தைப் படிக்கும் போது என்னால் உணர முடிகின்றது. இன்று எமது நாட்டில் அநேக சந்தர்ப்பங்களில் இளம் பெண்கள் குடும்ப உறவினர்களாலேயே பாலியல் துஷ்பிரயோகங்கள், வன்முறை களுக்கு ஆளாகின்றனர் என்பதை பத்திரிகைகள் மூலம் அறியமுடி கிறது. 20 ஆண்டுகளுக்குப் பின் நீர் வளர்ந்த வாலிபனாக உமது சிறிய தகப்பனார் குடும்பத்தினரைச் சந்தித்திருக்கிறீர். உமது உள்ளமும் அந்தக் குடும்பத்துப் பெண்பிள்ளைகளின் உள்ளமும் சகோதர பாசத்தால் பிணைப்புற்றிருக்கின்ற போதிலும், நீங்கள் நெருங்கிப் பழகுவது ஆபத்தில் முடிந்துவிடுமோ என அவர்களின் அன்னை அஞ்சுவதில் நியாமில்லாமலும் இல்லை. இப்படிப் பல இடங்களில் நிகழ்ந்திருப்பதை அவள் கேள்விப்பட்டிருக்கலாம். சமூகத்தின் பார்வையில் உங்கள் நெருக்கமான சகோதரபாசம், தப்பிதமாக கற்பிதம் செய்யப்படலாம். அதனால் உங்கள் போக்குவரத்து, பழக்கம் ஓர் எல்லையுடன் இருக்கட்டும். நீர் நினைக்கும் அளவுக்கு சமுதாயத்தின் நோக்கு இன்னும் உயர்ந்த நிலையை எட்டவில்லை. பனையின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் கள்ளுக் குடிக்கிறான் என்ற நிலையிலேயே இருக் கிறது. அந்தச் சகோதரிகளுக்குப் பொருத்தமான திருமண ஏற்பாடுகளை செய்து உதவிகளைப் புரிய முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. இப்படி ஆக்கபூர்வமான உதவிகளைப் புரிந்து உமது மேலான தன்மைகளைச் செயல்பூர்வமாகக் காட்டுவதன் மூலம் உமது சகோதரிகள் உமது பாசத்தை என்றும் மறக்க மாட்டார்கள். ஏன் அவர்களின் தாயாரும் உமது உயர் பண்பு களையும் பாசத்தையும் பார்த்து உம்மீது மதிப்பும் மரியாதையும் கொள்ளுவார். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் கூறியதை நீர்படித்திருக்கலாம். மனதை அலட்டிக் கொள்ளாமல் அதனைப் பின்பற்றுக.

✉ ✉ ✉ ✉

**? எனக்குப் பருவமடையும் வயதில் இரு பெண் குழந்தை கள். மூத்தவள் 13 வயது. அடுத்தவள் 10 வயது. மூத்தமகள் அமைதியும் அடக்கமும் பயந்த சுபாவமும், எதையும் என்னைக் கேட்டு அனுமதிபெற்றே செய்யும் போக்கும் உடை யவள். இரண்டாவது மகள் சொல்லி வைத்தாற் போல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெடியன்கள் மாதிரி ஏறுவது இறங்குவது பாய்வது ஓடுவது என்று கொஞ்சமும் கூச்சமின்றித் துள்ளித்திரிகிறாள். அல்லா மலும் கண்ட கண்ட பெடியன்களை சேஷ்டை, நையாண்டி பண்ணுவது, எதிர்த்துப் பேசுவது, கேலிபண்ணுவது என்ப வற்றில் மிகுந்த விருப்பமும் குதூகலமும் கொள்பவள். இவள் பருமடைந்த பின்னும் இப்படிப் பழகினால்....... என எண்ணும் போதே தலை சுற்றுகிறது. இத்தகைய துடியாட்ட மானவளை எப்படித் திருத்தி எடுப்பது எனத் தெரியாது தவிக்கின்றேன். வெளிநாட்டில் வேலை பார்க்கும் எனது கணவர் வேளைவர, யாவும் சரிவரும் நீர் ஒன்றும் கவலைப் பட வேண்டாம் என்கிறார். என் மனது கேட்க வில்லை எனக்கொரு புத்திமதி சொல்லுங்கள் அம்மா.**

சரோஜா, வெளிமடை

✻ பிள்ளைகள் ஒரு தாய்வயிற்றில் பிறந்தாலும் ஒரே தன்மையின ராயிருப்பர் என நாம் எதிர்பார்க்க முடியாது. உங்கள் 12 வயது மகள் அவளது இயல்புக்கேற்ப இருப்பதையிட்டு நீங்கள் ஏன் கவலை கொள்ள வேண்டும். துன்பமென்றால் என்ன? கஷ்டம் எப்படியிருக்கும் என்பவற்றை அறிந்து கொள்ளாதமென்மையான இளம் பருவ வயது. துள்ளுவது, ஆடுவது, ஓடுவது என்பன இந்த வயதில் அமைய வேண்டிய இயல்பான குணங்கள், சொத்தியாக அங்கக் குறைவோடோ, மனச்சிக்கலோடு உள்ள குழந்தைகள் தான் தம் செயல்களில் பின் தங்கியிருப்பர். விவேகமும் அறிவு வளர்ச்சியும் உள்ள பிள்ளைகள் நீங்கள் குறிப்பிட்டுள்ளது போன்ற உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பர். அவர்களுக்கு ஆண், பெண் என்ற வேறுபாடுகளில் அதிகம் அக்கறையில்லை. பெற்றோரும் சமுதாயமுமே பிள்ளைகளை ஆண் பெண் என்று வேற்றுமைப்படுத்திப் பார்க்கின்றனர். சமூகம் பெண்ணை ஒதுங்கி வாழத்தூண்டுகிறது. குழந்தைகள் கேலி பண்ணி வேடிக்கையாக விளையாடுவதற்கு நீங்கள் ஏன் கவலையடைய வேண்டும்? சேஷ்டைகள் கேலிப்பேச்சுகள் என்பனவெல்லாம் வயதுவர, அறிவுவளர அவை ஆதவனைக் கண்ட பனியாகிவிடும். இவ் வுலகில் ஆண்களுக்கு எத்தனை உரிமையும் ஆசையு முண்டோ அத்தனையும் பெண்களுக்கும் உண்டு. ஆண் பெண் என்ற வேறுபாடு இறைவன் படைப்பில், உடலியல் வேறுபாடே தவிர மற்றும்படி தன்மைகள், குணங்கள், பழக்கவழக்கங்கள், அறிவு முதலியவற்றில் எவ்விதவேறுபாடும் இல்லை. பெண்கள் அடங்கியொடுங்கி இருக்க வேண்டுமென்று கட்டுப்படுத்தி அடக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பது சமுதாயப் பழக்கமேயன்றி வேறில்லை. பிள்ளைகள் நல்லவர்களாக வல்லவர்களாக வளர்க்கப்பட வேண்டியவர்களே யன்றி ஆண்பெண் வேறுபாடுள்ளவர்களாக வளர வேண்டுமென அறிவுலகம் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் வளர்ந்த சூழ்நிலையைத் தற்காலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தே அச்சம் கொள்கின்றீர்கள் போலத் தெரிகிறது. குழந்தை வளர்ப்பில் பெற்றோருடைய பங்கு பெரும்பங்குதான். இளமையிலேயே பிஞ்சு நிலையிலேயே பிள்ளைகளின் மனதில் நாம் உயர்ந்த விழுமியங்களை ஆழமாகப் பதித்துவிட வேண்டும். பிற உயிர்களிடம் அன்பாக இருத்தல், உண்மைபேசுதல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், நன்றிமற வாமை, ஆபத்தில் உதவுதல் என்பனபோன்ற அறவழிகளைப் பிள்ளைகள் பின்பற்றத் தூண்டிவிட்டால் எமக்கும் அமைதி, அவர்களுடைய வாழ்வும் சிறக்கும். இன்றைய உலகம் நேற்றை யதைப் போன்று இல்லை. பாரிய இடைவெளி இரண்டின் மத்தியிலும், விஞ்ஞானமும் தொழிநுட்பமும், வீச்சாகவளர்ந் தோங்கும் இக்கால கட்டத்தில் கணினியுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பினும் வாழ்வின் அடிப்படைக் குணாம்சங்களை நாம் மறந்துவிடவோ தூக்கி வீசிவிடவோ முடியாது.

✉ ✉ ✉ ✉

**? நான் கண்டி மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட 22 வயதுடைய ஒரு பெண். தற்பொ ழுது தனியார் நிறுவனம் ஒன்றில் குமாஸ்தா (Clerk) ஆக வேலை செய்து வருகிறேன். நான் எனது 16 வயதிலே சிங்கள இளைஞர் ஒருவரைக் காதலிக்க ஆரம்பித்தேன், தற்பொழுது இக்காதலுக்கு 7 வருடங்கள் ஆகின்றது. இக்காதலுக்கு 6 வரு டங்களாக இருக்கும் போதே அவர் வேறு ஒரு பெண்ணை பதிவுத்திருமணம் செய்து இருக்கின்றார். ஆனால் எனக்கு இந்த விஷயம் தெரியவில்லை. பிறகு எங்கள் காதல் விஷயம் பல பேருக்குத் தெரியவந்துவிட்டது. எங்கள் வீட்டாருக்கும் தெரிந்து விட்டது. எனது அம்மா என்னிடம் இந்த காதல் விஷயம் உண்மையானதா எனக் கேட்டார். நானும் ஆமாம் என்றேன். பிறகு என்னிடம் அதை (காதலை) மறந்து விட வேண்டும் என்று கூறினார். அதற்கான காரணத்தைக் கேட்டேன். அப்பொழுது அம்மா, அவர் வேறு ஒரு பெண் ணை பதிவுத் திருமணம் செய்து ஒரு வருட காலமாகிறது என்று கூறினார். இதைக் கேட்டதும் என்னைத் தூக்கி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிந்தது போல் இருந்தது. என்ன செய்ய வேண்டும் எனப் புரியாம லிருந்தது. பின் நான் காதலித்தவரைச் சந்தித்து இதைப் பற்றிக் கேட்டேன். பலமுறை வற்புறுத்திக் கேட்டும் இல்லை என்று கூறினார். நானும் அதை நம்பி மேலும் ஒரு மாதமாக காதலித்தேன். பின் ஒருநாள் எனது நண்பி என்னைச் சந்திக்க என் வீட்டுக்கு வந்திருந்தாள். அவளிடம் நடந்த எல்லா விஷயத்தையும் கூறினேன். அப்பொழுது அவள் கூறினாள் "உன் அம்மா சொன்ன விஷயம் உண்மைதான், அவர் வேறு ஒரு பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்து இருக்கிறார்" என்று கூறினாள். நான் மீண்டும் ஒருநாள் அவரைச் சந்தித்து அவர் வாயாலேயே உண்மையை அறிந்து விட்டேன். அவர் வேறு பெண்ணை பதிவுத் திருமணம் செய்தார் என்பதையும், என்னிடம் அதைப் பற்றிக் கூறினால் நான் அவரை விட்டு விடக் கூடும் என்று எண்ணி அவர் அதை மறைத்ததாகவும் கூறினார். அவர் அப் பெண்ணை விருப்பமில்லாமலும் வீட்டில் சில பிரச்சினை காரணமாகவும் பதிவுத் திருமணம் மாத்திரம் செய்ததாகக் கூறினார். இப்பொழுது என் தலையே வெடித்து விடும் போல் இருக்கிறது. அவர் கூறுகிறார் என்னை அவருக்கு மறக்க முடியாதாம். அவருக்கு என்னையும் மனைவியாக்க வேண்டு மாம். அவர் கடைசிவரையும் என்னைக் கைவிடாமல் காப் பாற்றுவதாகவும் கூறுகிறார். மேலும், உண்மையான காதலுக்குப் பதிவுத் திருமணம் முடிக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லையாம். இரு மனங்களிலும் காதல் இருந்தால் கடைசிவரையும் ஒன்றாக இருக்க முடியும் என் றும், அவரை எக்காரணம் கொண்டும் கைவிட வேண்டாம் எனவும் கூறினார். இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்று புரியவில்லை. எனது மனதில் உண் மையான காதல் இருப்பதால் அவர் சொல்லும் படி நடக்கலா மெனத் தோன்றுகிறது. ஆனால் எதிர்காலத்தை நினைக்கும் பொழுது பயமாகவும் உள்ளது. நான் அவர் சொல்லுப்படி நடப்பது தவறு என நினைத்து அவரை மறக்கப் பலமுறை முயற்சி செய்தேன். என்னால் முடியவில்லை, இதற்கு நான் என்ன முடிவை எடுக்க வேண்டும். அந்த முடிவுக்கு என்ன முயற்சி செய்ய வேண்டும் என்பதைத் தயவு செய்து தெரியப் படுத்தவும்.

மனோ , திகன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ "காதலரிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்பது ஆன்றோர் வாக்கு. காதலிப்போர் இருவராயினும் அவ்விருவருடைய கருத்துகள் ஒரேவகையான முடிவையே கொண்டிருத்தல் அவசியம். இங்கே "வாழ்க்கை" யென்ற முக்கியமான விஷயத்தில் நீர் காதலித்தவர் உமக்குத் தெரியாமலே இன்னொருத்தியைப் பதிவுத் திருமணம் செய்துவிட்டார். இது பற்றிப் பின்னர் தான் உமக்குத் தெரியவந்திருக்கிறது. அதாவது உமக்குரிய இடத்தில் இன்னொருத்தியை இருத்திவிட்டார். அதன் பின்னரும் உம்மைக் காதலிப்பதாகக் கூறும் இந்தப் பசப்புவார்த்தைகளை நம்பி நீர் இன்னும் சீரழிய வேண்டாம். ஒருத்தனுக்கு ஒருத்தி என்பதுதான் நமது பாரம்பரிய மரபும், நாம் கைக்கொள்ள வேண்டிய முறையும். இரண்டு தோணிகளில் கால் வைத்துப் புறக்கவிழும் வாழ்க்கையை நாம் ஏன் மேற்கொள்ள வேண்டும்? இளம் வயதானாலும், சொந்தக்காலில் நிற்பதற்குப் பெலமாக ஒரு தொழிலிலும் ஈடுபட்டிருக்கிறீர். அதையிட்டு நீர் பெருமையடையலாம். இந்தக் காதல் விவகாரம் உமக்கு எதிர்பாராது ஏற்பட்ட ஒரு விபத்து என எண்ணி அதைத் தூக்கி எறிந்து விட்டு மனதைச் சாந்தப்படுத்திக் கொள்ளவும். வாழ்க்கையில் இது ஒரு அனுபவப்பாடமாக அமையட்டும் இன்னும் அதனுள் புகுந்து பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகாமல், வேதனையை முளையிலேயே கிள்ளி விடுவதே சரியான வழியாகும். உமது தொழிலில் மென்மேலும் முன்னேறவும் வளர்ச்சியடையவும் முயற்சி செய்யவும். போன காதலை ஒரு கனவாக மறந்துவிட்டு, ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முயற்சிகளிலீடுபட்டு, நல்ல விஷயங்களை அலசி ஆராய்ந்து அவற்றில் மனதைப்பதிக்கவும். அறிவுதரும் நல்ல நூல்களை வாசிப்பதால் மனம் அமைதிபெறும். நல்லோர் நட்பு, பெரியோர் அறிவுரை, சிறந்த பொழுதுபோக்கு என்பன மனித மனதை உயர்த்தக்கூடியவை. கடவுள் நம்பிக்கை, நல்ல சிந்தனை கொண்ட உள்ளம், என்பன உமக்கு மன அமைதியையும் சிறந்ததொரு எதிர்காலத்தையும் தேடித்தரும். மனம் சோராமல், நடந்ததை எண்ணிவருந்தாமல் உற்சாகத்துடன் உமது வேலையையும், பொழுதையும் மேற்கொள்ளவும்.

**? எனக்கு வயது 72, எனது இருபிள்ளைகளும் - ஓர் ஆணும் பெண்ணும் திருமணமாகி வெளிநாட்டில் குழந்தை குட்டிகளோடு நன்றாக வாழுகிறார்கள். நான் இங்கு தூரத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறவினருடைய வீட்டில் வாடகைக்கு அறையொன்றில் வாழு கின்றேன், தடித்த மூக்குக் கண்ணாடி ஊடாக உங்கள் "நெஞ் சுக்கு நிம்மதி" பதில்களைத் தவறாமல் படித்து வருகிறேன். உங்கள் பதில்கள் புதுமையாகவும் நல்ல முறையாகவும் அமைந்துள்ளன. எனக்கும் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று ஆசையாக உள்ளது. எனது கேள்வி இது தான்: எனது இந்தவயதிலும் கணவனை இழந்து, பிள்ளை களைப்பிரிந்து வாழ்ந்தாலும் ஏதாவது செய்ய முடியுமா? அதாவது சாதிக்க முடியுமா? என்ற கேள்வி என்னை ஆட்டிப் படைக்கிறது. வீண் வார்த்தையாடிப் பிறரோடு மனக்கிலேசம் அடையாமல் அமைதியாயிருப்பது எனது போக்கு.**

மகேஸ் தம்பையா, கொழும்பு-06

* அன்பார்ந்த மகேஸ் தம்பையா அவர்களுக்கு, கணவனை இழந்தாலும் பிள்ளைகளைப் பிரிந்து வாழ்ந்தாலும் நீங்கள் அமைதியாக சந்தோஷமாக வாழ்வது மகிழ்ச்சி தருகிறது. வயதாகினாலும் கூட மனதில் இளமையும் உற்சாகமும் பெற்று ஏதாவது சாதிக்க வேண்டுமென நீங்கள் விரும்புவது மிகமிக வரவேற்கக்கூடிய விஷயமே மனிதர் நல்ல விடயங்களை நிறைவேற்றுவதற்கு மன உற்சாகமும் ஆர்வமும் தான் முதலில் அவசியம். தமிழ் நாட்டில் கிருபானந்தவாரியார், ஈ. வே. ரா பெரியார், ராஜாஜி ஆகியோர் தமது முதுமைப் பருவத்திலும் எத்தனையோ உரைகளை நிகழ்த்தி, நூல்களை ஆக்கி, பெரும் சாதனைகளைப் படைத்துள்ளனர். ஏன் நமது நாட்டில் கூட தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் துர்க்கா துரந்தரி , இலக்கியக் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் எத்தனை சிறப்பாக, எடுத்துக்காட்டாகத் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் நிர்வாகத்தைப் பொறுப்பாக நடத்திவருவதுடன், அநாதைக் குழந்தைகளுக்கு காப்பகம்,பெண்களுக்கு காப்பகம் எனப் பல சமூக சேவைகளையும் சிறப்பாகச் செய்து வருகிறார். இதேபோல் காலஞ்சென்ற, நோபல் பரிசைப் பெற்ற திரேசா அம்மையார் வறுமையால் வாடும் குழந்தைகளுக்கும் ஏழ்மை யாலும் நோயாலும் தவிக்கும் பிணியாளர்களுக்கும், ஏனையோ ருக்கும் அவர்களருகேயிருந்து பாராமரித்து, ஆறுதல் கூறி ஆதர வளித்துப் பெரும் சாதனையை நிலைநாட்டிப் புகழையும் பெற்றுள்ளார்.

"டிட்டியன்" என்ற இத்தாலியர் ஒருவர் தமது 99 வயதில் ஓவியம் ஒன்றை வரைந்து உலகப்புகழைப்பெற்றார். டென்னிஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஆங்கிலக்கவிஞன் "கடலைக்கடத்தல்" என்ற தனது உலகப்புகழ்பெற்ற கவிதையைப் படைத்தபோது அவருக்கு வயது 83 புகழ்பெற்ற "இலியட்" என்ற கிரேக்க வீரகாவியத்தை மொழி பெயர்த்த அறிஞர் ஹாபஸ் ஸுக்கு அப்போது வயது 88. கீர்த்தி மிக்க ஜெர்மனிய அறிஞரான கதே, தனது 86 வயதில் புவுஸ்டன் என்ற நூலை எழுதிப்பெரும் புகழ்பெற்றார்.

இன்னும் ஏன்? அடிக்கடி தொலைக்காட்சி நாடகங்களில் சந்திக்கும் நடிகர் நம்பியார், இந்த 84 ஆவது வயதிலும் நாடகங் களில், திரைப்படங்களில் நடிப்பதுமல்லாமல் வருடா வருடம் தவறாமல் மாலைபோட்டு விரதமிருந்து சபரிமலையிலுள்ள ஐயப்பன் ஆலயத்துக்கு கால்நடையாகச் சென்று தரிசித்து வருகிறார்.

இவற்றையெல்லாம் அறியும் போது சாதனைகளைச் சாதிப்பதற்கு வயது எல்லை இல்லையென்ற உண்மையை நாம் உணர வேண்டும். அத்தோடு நாம் என்னத்தைச் சாதித்தோம் என்ற ஏக்கமும் எம்மிடமும் எழுவது இயல்புதான். ஆற்றலுக்கும் அறிவுத்திறமைக்கும் உழைப்புக்கும் வயது மூப்பு ஓர் எல்லை யேயல்ல.

வயோதிபத்தில் கூட நாமும் எம்மால் முடிந்த வரை பிறருக்கு உதவியோ, தொண்டோ செய்து வாழ்வதுதான் உண்மையிலேயே அர்த்தமுள்ள வாழ்வாக அமையும். நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் அங்கவீனமுற்றோர், அகதிகள், பெற்றோரை இழந்த அநாதைக் குழந்தைகள், மனநிலை பாதிப்புற்றோர் என்போரின் நலன்களைக் கவனிக்க பல அமைப்புகள், தொண்டர் நிறு வனங்கள் இன்று இயங்கி வருகின்றன. அவற்றில் சேவை செய்யப் பலர் தேவைப்படுகின்றனர். இன்றைய நிலையில் இத்தகைய உதவிகள் பெரிதும் அவசியமானவை. இவற்றில் இணைந்து உங்கள் சேவையை அளிக்கலாம்.

**? எனக்கு வயது 21. O/L படித்துக் கொண்டிருந்த போது ஒரு பெண்ணைக் காதலிக்க விரும்பினேன். எனது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த ஒரு பெண் சிரித்துப் பழகினாள். அவள் எனக்காக தவிக்கிறாள் என நினைத்துப் பழகினேன். படிப்பில் கவனஞ் செலுத்தாமல், அவளுக்குப் பின்னால் சுற்றித்திரிந்ததால், நானும் அவளும் பரீட்சையில் சித்தியடையவில்லை. அந்தக் கோபத்தில் அவள் நான் தனது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிப்பைக்குழப்பிவிட்டதாக என்னை ஏசி, இனி முகத்தில் விழிக்கப்படாது, தான் என்னைக் காதலிக்கவில்லை என அடித்துக் கூறி விலகிவிட்டாள். தொடர்ந்து படிக்கவோ, தொழில் ஏதாவது பார்க்கவோ மனங்குழம்பிக் கிடக்கிறது அவளை என்னால் மறக்கமுடியவில்லை. அவளே எனக்கு மனைவியாக வரவேண்டும். அவளுடன் தான் நான் வாழ வேண்டும் அல்லது தற்கொலை செய்து சாக வேண்டும். என்ற முடிவில் இருக்கிறேன். உங்களின் ஆறுதலான சரியான ஆலோசனையை எதிர்பார்க்கிறேன். விரைவாக பதில் தாருங்கள்.**

தெல்தோட்டை

* நீர் கேட்டுக் கொண்டபடி உமது பெயரை வெளியிடவில்லை. நீர் ஏழு புல்ஸ்காப் பேப்பரில் எழுதிய கட்டுரைபோன்ற மிக நீண்ட கடிதத்தை மிகக் கஷ்டப்பட்டுக்கவனமாகப் படித்தேன். பத்திரிகையின் இடப்பிரச்சனை காரணமாக உமது கேள்வியைச் சுருக்கி வெளியிட்டுள்ளேன். உம்மைப் போலவே மற்றும் பலர் தமது மனப்பாரங்களை இறக்கி வைக்கும் சுமை தாங்கியாக எனக்குப்பல பக்கங்களில் கடிதங்களை எழுதிக்கொண்டிருக் கின்றனர். இதேபோல் கட்டுக்கட்டாக வரும் கடிதங்களைப் படித்துப் பிரச்சினை என்ன? அதற்குச் சரியான தீர்வுமார்க்க மென்ன? என்பவற்றை ஆலோசிப்பதற்கே எனக்குப் பலமணித்தி யால நேரம் தேவையாக இருக்கிறது. சிலர் காலக்கெடுவும் விதித்து ஆலோசனை தருமாறு வேண்டுகின்றனர்.

நீர் க.பொ.த.(சாத) படிக்கிற போதே எவளையாவது காதலிக்க வேண்டும் என்ற எண்ணத்துக்குக் குழையடித்த யாரோ நண்பர்கள் வேடிக்கை பார்ப்பதற்காக உமது தலையில் சன்னதம் ஏற்றிவிட்டார்கள். நீரும் எவளாவது ஒருத்தி உம்மைக்காதலிக்க வேண்டுமென அலையத் துவங்கி விட்டீர். உமது வகுப்பு மாணவி ஒருத்தி தற்செயலாகச் சிரித்துவிட, அதை நீர் காதலென்று நினைத்து அவளைச் சுற்றிவர, அவள் மறுக்க ........ அவளும் நீரும் பரீட்சையே சித்தியடையாமல் படிக்கிற காலத்தை வீணாக்கியது தான் கண்ட பலன். உம்முடைய உபத்திரவம் தாங்க முடியாமல், அவள் தன்னை நீர் இனிச்சந்திக்கப் படாது, தான் உம்மைக் காதலிக் கவுமில்லை என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டாள். காதலிப் பதற்கு, பருவம் வரவேண்டும் அதற்குரிய வயது வரவேண்டும். இவற்றையெல்லாம் அறியாமல் சினிமாவையோ சின்னத்திரை சீரியல் நாடகத்தையோ பார்த்துவிட்டுக் காதல் வேட்டையாடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டு, உமது உள்ளத்தையும் படிப்பையும் கெடுத்துக் கொண்டு விட்டீர். தொடர்ந்தும் அவள் தான் மனைவியாக வர வேண்டும் அல்லது தற்கொலை செய்யத் தீர்மானித்திருப்பதாக எழுதியிருக்கிறீர். வாழ்க்கையை நாம் பெற்றுக் கொண்டது வாழ்வதற்கே தவிர சாவதற்கல்ல. தற்கொலை செய்வது முட்டாள் தனம். கோழைகள் தான் இத்தகைய போக்கைப்பற்றிச் சிந்திப்பர்.

21 வயது வாலிபனான உமக்கு நல்ல மகிழ்வான, பொலிவான எதிர்கால முண்டு. தற்கொலை செய்வது என்ற முட்டாள் தனமான பிடிவாதத்தை விட்டு விட்டு, நடந்தவற்றைக் கெட்ட கனவாக மறந்து விட்டு, உமது மனதையும் நேரத்தையும் ஏதாவது பிரயோசனமான நல்ல விடயங்களில், தொழிலில் முழுமையாக ஈடுபடுத்தி உமது திறமையைக்காட்டி, வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சி செய்யும். மனம் நல்ல சிந்தனையுடன் நல்ல விடயங்களில் ஈடுபட்டால் நல்லன எல்லாம் உம்மை வந்தடையும். ஒரு பெண்ணும் உம்மைத் தேடி, விரும்பி, காதலித்துத் திருமணம் செய்து கொள்ள முன் வருவாள். எனவே நம்பிக்கையைக் கை விடாமல் உமக்கு தொழில் ஒன்றைத் தேடிக்கொண்டு முற்று முழுதாக உம்மை அதில் ஈடுபடுத்தும். வெற்றியும் மகிழ்ச்சியும் உம்மைத் தேடி ஓடிவரும்.

✉ ✉ ✉ ✉

**? எனது கணவர் அரச அலுவலகம் ஒன்றில் வேலை பார்க்கிறார். எமக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறாள். அவளைப் பராமரிப்பதே பெரும் சிரமமாக இருக்கிறது. எனக்குச் சில காலமாகத் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. எனது கணவரோ நாம் ஒரு ஆண்குழந்தையை பெற்றுக் கொள்ள வேண்டுமென அங்கலாய்க்கிறார். என் நண்பிகள் இனிக் கருத்தரிக்க வேண்டாம். கார்ப்பத்தடை செய்துகொள். அல்லது தொய்வு நோயினால் மூச்சுவிடுவதில் சிக்கல் ஏற்பட்டு ஆபத்தாகிவிடும் என எச்சரிக்கிறார்கள். சில வேளைகளில் இப்படி மூச்செடுக்கும் சிக்கலில் மாட்டி நான் அவஸ்தைப்பட்டுள்ளேன். நான் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தத்தளிக்கிறேன். நான் என்ன செய்யலாமெனத் தயவு செய்து புத்திமதி கூறுங்கள்.**

தங்கா, முந்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இவ்வாறான ஒரு கேள்விக்கு ஏற்கனவே ஆலோசனை கூறியிருக்கிறேன் நீங்கள் அதனை வாசிக்கவில்லைப் போலும். நீங்கள் இருவருமே படித்தவர்கள். அடுத்த குழந்தையைப் பெறுவதென்பது - கணவன் மனைவி இருவரும் கலந்தாலோசிக்க வேண்டிய விடயம். எனினும் தன்னுடைய தேகாரோக்கியம், கருத்தரிக்கும் சக்தி, குழந்தையைப் பெற்றுப் பராமரிக்கும் உடற்பலம் முதலியவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது அடுத்த குழந்தையைச் சுமந்து பெற்றெடுக்க வேண்டும் என்ற விஷயத்தைத் தீர்மானிப்பதில் பெண்ணின் கருத்துக்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும். நீர் ஆஸ்துமா நோயாளி எனக் கூறுகின்றீர். இரு குழந்தைகளையும் கவனித்து ஆளாக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. ஆண் குழந்தை வேண்டுமென்பதற்காக அவசரப்பட்டு அடுத்து கர்ப்பம் தரிக்க வேண்டுமென உமது கணவர் ஆசைப் படுவது தவறு. இதை நீர் துணிவோடு எடுத்து உமது கணவரிடம் விளக்க வேண்டும். ஆசைப்படுவதற்கெல்லாம் இடம் கொடுத்து விட்டால் பின் அவதியில் மாட்டிக் கொள்ள நேரிடும். அன்பான கணவரென்றால் நீர் பிள்ளைபெறும் யந்திரமல்ல, உமது ஆரோக்கியம் அதற்கு மேலாக உமது உயிராபத்து முதலியவற்றில் அவருக்கு நிறைய அக்கறையிருக்க வேண்டும். அன்பாக இவற்றை அவருக்கு உணர்த்தவும். நல்ல வைத்தியரைச் சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதும் சிறந்தது. ஆசைக்கு ஓர் பெண், ஆஸ்திக்கு ஒரு ஆண் என்ற பழைமைவாதச் சிந்தனையில் உமது கணவர் இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் சஞ்சரிப்பது ஆச்சரியமும் வேடிக்கை தருவதுமாக இருக்கிறது. உடற்கூறு ரீதியில் வேறுபாடே தவிர பிள்ளைகளென்றால் பெண்ணென்றா லென்ன? ஆணென்றாலென்ன? இரண்டும் சமமானவர்கள் தான். சரியான வளர்ப்பு, முறையான பராமரிப்பு, சிறந்த கல்வி பெறுவதற் கான வாய்ப்புகள் என்பன அளிக்கப்பட்டால், ஆணுக்கு சமமான வற்றைப் பெண்பிள்ளைகளாலும் நிறைவேற்றிக் காட்டமுடியும் என்பதைப் பல பெண்கள் நிரூபித்து வருகின்றமை கண்கூடு. தற்போதைய உமது உடல் நிலையில், உங்கள் பெண் பிள்ளைக் குச் சிறந்த கல்வி அளித்து அவளை மேலும் ஈடுபாடுள்ள துறை களில் வளர்த்து சொந்தக்காலில் நிற்கச் செய்வது உங்கள் கடமையும் பொறுப்புமாக இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? எத்தனையோ காரண காரியங்களையெல்லாம் நான் யோசித்து, கணக்குப்போட்டு, நான் செய்ய வேண்டும் என்று நினைக்கும் காரியத்தை என் மனைவி வேண்டாம் என்று சொன்னால் நான் அதைச் செய்யாமல் விட்டு விடுவேன். மீறிச் செய்தால் பின்பு அவ்விடயம் தொடர்பாக மிகவும் கஷ்டப்படுவேன். என் கணக்குப் பிழையாகப் போய் விடும். அந்தவிடயம் பிரச்சினையையும் சிக்கல்களையும் உண்டாக்குவதை அனுப வித்திருக்கிறேன். மற்றவர்கள் "உனக்கு மனைவி சொல்லே மந்திரமா" எனக் கேலி செய்கிறார்கள். மந்திரங்கள் மனதின் உச்ச நிலையில் வெளிப் பட்டவையே. பூரணமாக மனதிலிருந்து எனது மனைவி எது சொன் னாலும் என்னைப் பொறுத்தவரை அது மந்திரமாகி விடுகின்றது. ஆண்கள் அறிவை மட்டுமே நம்புகிறார்கள். மனைவி மனதை நம்புகிறாள். அதனால் அந்த மந்திரம் பலித்து விடுகிறது. இது என் சொந்த அனுபவம். பெண்களை ஏற்றிப் போற்றி எழுதி வரும் உங்களுக்கு இத் தகவலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

லக்ஷ்மிநாதன், ஆனைக்கோட்டை

* ஆண்களின் அறிவையோ ஆற்றல்களையோ குறைத்து மதிப்பிட முடியாது. ஆணும் பெண்ணும் இணைந்ததுதான் சமுதாயம். கல்வியறிவூட்டப்பட்ட பெண் எந்த விஷய மென்றாலும் அவசரப்படாமல் ஆழ்ந்து சிந்திக்கிறாள். பின் விளைவுகளைப் பற்றிய உள்ளுணர்வு அவளை எச்சரிக்கின்றது. அந்த வகையைச் சேர்ந்தவரே உங்கள் மனைவி. அவ்வாறான ஒரு பெண்மணி உங்களுக்குத் துணைவியாக வாய்த்திருப்பதால், உங்களால் சிக்கல் களின்றி முன்னேற முடிகின்றதென்பதை மனம் திறந்து ஒப்புக் கொள்ளுகிறீர்கள். ஆனால் இவ்வாறான மனப்பக்குவம் இன்னும் பல ஆடவர்களிடம் ஏற்படாமலிருப்பது வருத்தத்துக்குரியது. தீர்மானங்களை எடுப்பது, செயல்படுத்துவது நிர்வகிப்பது என்பவற்றில்ல பெண்களைப் பங்கு பற்ற விடாமல், அதற்குரிய வாய்ப்புக்களை வழங்காமல் "பெண் புத்தி பின் புத்தி" என நையாண்டி செய்யும் ஆண்கள் கூட்டம் இன்னும் இருக்கிறது. பிள்ளை பெறவும், சமைத்துப் போடவும், படுக்கையைப் பகிர்ந்து கொள்ளவும் படைக்கப்பட்டவள் தான் பெண் என்ற பழைமை வாதப் போக்கு படிப்படியாக உடைந்து வருகின்றது. இந்த 21 ஆவது நூற்றாண்டு முடிவதற்குள்ளாவது இப்போக்கு நொருக்கப் பட்டுவிடும் என்ற நம்பிக்கையை உங்கள் கடிதம் ஏற்படுத்தி யுள்ளதற்குப் பாராட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? இன்றைய காலகட்டத்தில் பெண் கல்வி முக்கியம் என்பது எல்லோராலும் உணரப்பட்டுள்ளது. நாம் எமது பிள்ளைகளைச் சீதனச் சிறையிலிருந்து விடுவிக்கவும், ஏதாவது படித்து நாலுகாசாவது சம்பாதித்து வாழ்க்கையைக் கொண்டு நடத்தட்டும் என்று எண்ணி மிக மிகக் கஷ்டப்பட்டு, எங்கடை கஷ்டத்தைப் பெரிதுபடுத்தாமல் பொறுத்துக் கொண்டு, பிள்ளைகள் படித்து முன்னுக்கு வரட்டுமென்று ஒத்தாசை பண்ணுகிறோம். ஆனால் இன்றைய நிலையில் நாம் கேள்விப்படும் கதைகளையும், பத்திரிகையில் வெளிவரும் கல்வி கற்கும் வளர்ந்த பெண்களுடைய நடவடிக்கைகளையும் பார்க்க மிகவும் அந்தரமாகவும் அச்சமாகவும் இருக்கிறது. நாம் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டிப் பிள்ளைகள் படித்து நல்லாய்வரட்டுமெனப் பள்ளிக்கு அனுப்ப, அவர்கள் அங்கு நீலப்படம் பார்ப்பது, கெட்ட நடவடிக்கைகளில் இளம் பெடியளோடு திரிவது எனச் சொல்லவே கூச்சமான காரியங்களில் ஈடுபட்டுத்திரிகிறார்களே இதற்காகவா ஏழைப் பெற்றோராகிய நாம் பெண் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம்? இவர்களை நாம் கண்டிக்கவும் யோசனையாக உள்ளது. ஏடாகூடமாக ஏதும் செய்து விடுவார்களோ என்று எமக்கு மனப்பயம். பழைய காலம் மாதிரியே வீட்டிற்குள் அடக்கி யொடுக்கி வைத்துத் தான் பெண்பிள்ளைகளை வளர்க்க வேண்டுமா? பெண்கள் படிக்க வேண்டும் நல்லாக முன்னுக்கு வரவேண்டும் என்று உங்கள் பதில்களில் குறிப்பிடுகிறீர்கள். ஆனால் பலன் இப்படியாகிறதே நாம் என்ன செய்வது? எங்கள் பெண் பிள்ளைகளுடைய அறிவு திறபடக்கூடியதாக நல்ல பதிலை எழுதி எமது பிள்ளை களுக்கும் எமக்கும் வழிகாட்டுங்கள்.

பாக்கியம், சிவமணி
சின்னம்மா, அச்சுவேலி

* *நீங்கள் மூவரும் ஒன்றிணைந்து உங்களை வருத்தும் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். பெண்பிள்ளைகளுக்கும் கல்வி கொடுக்கப்பட வேண்டியது பெற்றோருடைய தலையாய கடமையாகும். பணவருவாய் குறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தும், உங்கள் வறுமைச் சுமையோடு பெண்பிள்ளைகளைக் கல்வி கற்க வைக்கும் சுமையையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு செயல்படுவதைப் பாராட்டுகின்றேன். வீட்டு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை, கல்வியின் அவசியம் பற்றி உணராமல் பிள்ளைகள் வீணே காலத்தைக் கழிப்பதுமல்லாமல் , தீய நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிகமிகத்தவறானது. மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது. ஆனால் அதேநேரம் அவர்களுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டி, தெளிவுபடுத்தி அறிவுரை கூறுவதே நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது. அடித்தோ, ஏசியோ கண்டிக்க முற்பட வேண்டாம்.எதற்கும் இத்தகைய தவறுகளை அம்மாணவி களுடைய கல்லூரி ஆசிரியர்களிடமோ அதிபரிடமோ எடுத்துச் சொல்லி அவர்களுடைய உதவிகளையும் அறிவுரைகளையும் நாடுங்கள். நீங்கள் புத்தி புகட்டுவதைவிட, பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்களிடம் இப்பிரச்சினைகளை ஒப்படைத்தால் அவர்கள் வெற்றிகரமாக இவற்றுக்கு ஒரு முடிவு காண்பர். கல்வியின் முக்கியத்துவத்தை, அதனால் நாமடையும் அறிவுத்திறன்களை, சிறுவயதிலிருந்தே ஒழுக்கம், கீழ்ப்படிவு மற்றும் நற்பண்புகளை கட்டுக்கோப்புடன் பயின்று வந்திருந்தால் இத்தகைய செயல்களில் நுழைவதற்குச் சற்றுத் தயங்குவர், பின்வாங்குவர்,அல்லாமலும் இந்த இளமைப் பருவ வயதும் சில குழப்பங்களை மனதில் ஏற்படுத்துவது இயல்பு, அந்த நேரங்களிலெல்லாம் ஆசிரியர், பெற்றோர் ஆகியோரது ஒருங்கிணைந்த கண்காணிப்பும், நட்பும், தொடர்பும் பிள்ளைகளோடிருப்பின் இவை போன்ற தவறுகள் ஏற்படுவது அரிது. உடல் மாற்றத்தோடு ஏற்படும் வளர்ச்சியும் அதனால் மனதில் உண்டாகும் கிளர்ச்சிகளும், பாலுணர்வும் சரியான வழிநடத்தல் அற்ற தன்மையும், முறைகேடான நட்புச் சூழலும் இத்தகைய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. பெற்றோர் தமது வேலைப்பளுக்கள், உழைப்பு ஆகியவற்றில் மட்டும் மூழ்கி விடாது பிள்ளைகள் எங்கே, யாரோடு பழகு கிறார்கள் என்றெல்லாம் அறிந்து கொள்வதில் அக்கறை கொள்ள வேண்டும். பிள்ளைகளுடைய பொழுது போக்குகளிலும் அக்கறை காட்ட வேண்டும். பிள்ளைகள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறும் போதும் விடுப்பூக்கம் காரணமாகச் சில விளக்கங்களைக் கேட்கும் போதும், உரிய முறையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில், தெளிவுபடுத்திப் பதில் கொடுக்க வேண்டும். மனம் விட்டுப்பேச வேண்டும் . அதிகார அடக்கு முறைத் தொனிகளைத் தவிர்த்து, அன்பாகவும் அரவணைப் போடும் அவர்களது சந்தேகத் தேடல்களை நிவர்த்தி செய்யின் அவர்கள் மனம் ஒருமைப்பட்டு உங்கள் அன்புச் சங்கிலியில் இறுகி நிற்பர். பிள்ளைகள் தவறுகள் செய்வர் என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும். அவற்றை மன்னித்து நல்வழி காட்டுவதே பெரியோரின், கற்றவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாகும். அதை விட்டுத் தலை தலையென அடித்துக் கொண்டு வானம் இடிந்தது , உலகம் அழிந்தது என நாம் அல்லல் படுவதில் அர்த்தமில்லை. கத்தியினால் கொலையும் செய்யலாம், பாரிய இரத்தக்காயங்களையும் ஏற்படுத்தலாம். இனிய பழங் களையும் வெட்டிப் புசிக்கலாம். நல்ல காய்கறிகளையும் வெட்டிச் சமைக்கலாம். எனவே ஒவ்வொன் றையும் நாம் பயன்படுத்தும் பக்குவத்தில்தான் அதன் நன்மையும் தீமையும் பொதிந்துள்ளது. பெண்பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே செல்வது, கல்வி கற்று அறிவைப் பெருக்குவதற்கே தவிர ஆபாசப்படங்களைப் பார்ப்பதற்கும் தீய வழிகளில் நடை போட்டுத் தம்மை அழித்துக் கொள்வதற்குமல்ல என்பதை அவர்களும் நன்குணர வேண்டும்.

✉ ✉ ✉ ✉

**? எனக்கு 33 வயது. திருமணம் முடித்து இரண்டு பெண் குழந்தைகள் முறையே 8, 6 வயதுகளில் எமக்கு உள்ளனர். சொந்தமாக ஆட்டோ வைத்து தொழில் செய்கின்றேன். நான் பேனா நண்பர் பகுதி மூலம் என்னைத் தொடர்பு கொண்ட ஒரு பெண்ணை காதலித்துக் கரம் பிடித்தேன். எனது திருமணம் எனது பெற்றோருக்கு துளியும் விருப்பமில்லை. நாம் திருமணம் செய்து ஒன்பது ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் திருமணத்திற்கு முன்னர் ஒரு வாழ்க்கை எப்படி அமையவேண்டும் என மனக்கோட்டை கட்டினேனோ அந்த வாழ்க்கை எனக்கு அமையவில்லை. ஏன் எனில் அவளை நான் புரிந்து கொண்ட அளவிற்கு என்னை அவள் புரிந்து கொள்ளாமல் இருக்கிறாள். ஒரு நாளைக்கு என்தொழில் மூலமாக சுமார் ஆயிரம் ரூபாய் வரையில் வருமானம் கிடைக்கிறது. இருந்தும் இது வரையில் ஒரு செப்புக் காசேனும் மீதமில்லை. அப்படியே நான் மீதப்படுத்தி ஏதாவது ஒரு பொருளை வாங்கினாலும் அதை நாலே நாளில் உடைத்து இல்லாமல் ஆக்கி விடுவாள். என் நாவிற்கு ருசியான சமையல் சமைத்துத்தரமாட்டாள். ஒரு பெண் ணுக்கு சிக்கனமே சிறந்த வழி. ஆனால் அவளிடம் அதுதுளி தானும் இல்லை. இதனால் வீட்டில் வருமானம் இருந்தும் வறுமைதான் மிச்சம். நானும் எவ்வளவோ அன்பாகவும் அதட்டியும் சொல்லிப் பார்த்தேன். ஆனால் பயன்இல்லை. என் பிள்ளைகளின் பாடசாலைத் தேவைகளை கூடக் கவனிக்கமாட்டாள். என் அத்தனை சகோதரர்களும் நல்ல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலையில் இருக்கும் போது என் நிலையையும் என் மனைவியின் போக்கையும் பார்த்து நான் மிகவும் மனம்நொந்து போய் இருக்கிறேன். சில வேளைகளில் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று கூட நினைத்த துண்டு. ஆனால் எனது இரு பிள்ளைகளின் முகத்தை பார்த்தவுடன் அவ்வெண்ணத்தை கைவிட்டுவிட்டேன். என் மனைவியுடன் இனியும் சேர்ந்து வாழ என்னால் இயலாது. அவ்வளவிற்கு பாதிப்படைந்து விட்டது என் மனம் ரணமான உள்ளத்திற்கு ஆறுதலான மருந்தொன்று தாருங்கள்.**

ராமசாமி, மஸ்கெலியா

* முன்னரே முகம் தெரியாத பெண்ணை, பத்திரிகை பேனா நண்பர் பகுதி மூலம் முகவரி தெரிந்து தொடர்பு கொண்டு அவளின் குடும்பப் பின்னணி என்ன என்பதைக்கூடத் தெரியாமல் அவசரமாகத் திருமணம் செய்து கொண்டு விட்டீர். உம்மைப் போலவே பலர் காதல் என்பது எப்போதும் இனிப்பாகவே இருக்கும் எனக் கற்பனை செய்து கொள்ளுகின்றனர். அதனால் தான் அடிக்கரும்பிலிருந்து சுவைக்கத் துவங்கி, காலப்போக்கில் நுனிக்கரும்பு சப்பும் நிலைக்கு வந்து விடுகின்றது. திருமணபந்தம் இறுக்கமாகவும் மகிழ்வாகவும் இருப்பதற்கு, தம்பதிகளிடையே ஆழமான புரிந்துணர்வும் பல விட்டுக் கொடுப்புகளும் இருக்க வேண்டும். உமது மனைவி பணத்தின் அருமை தெரியாத பெரிய பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவளோ? உமது வருமானம் அவளுக்கு அற்பமாகத் தெரியலாம். 9 ஆண்டுத் திருமண வாழ்க்கை என்கிறீர். இரு பெண் குழந்தைகளும் இருக்கின்றன இத்தனை காலமாகியுமா அவளுக்கு உங்கள் குடும்பத்தை உமது வருமானத்துக்குள், சிக்கனமாக, சிறப்பாக நடத்த முடியாமலிருக்கிறது. எங்கோ, ஏதோ ஒரு வித கோளாறு உங்களிருவரிடையேயும் உள்ளது. சிலவேளைகளில் அவளின் தாம்பத்திய உறவுகளை முழுமையாக உம்மால் நிறைவு செய்ய இயலாத குறைபாடுகள் தொடர்பான பிரச்சினையாகவும் இருக்கலாம். அல்லது உம்மிடம் அவளுக்குப் பிடிக்காத கெட்ட பழக்கங்கள், வேறு பெண்களுடன் தொடர்பிருப்பதான அவளின் தவறான கற்பனை முதலியவற்றால் அவள் மனம் பாதிப்புற்றிருக்கலாம். அவளுக்கு உமது வருமானம், வாழ்க்கை முறையில் பிடிப்பில்லா மலும் இருக்கலாம். அல்லது அவள் மனக்கோளாறு உள்ள ஒரு பெண்ணாகவும் இருக்கக்கூடும். எதற்கும் அவளை ஒரு மனநல மருத்துவரிடம் காண்பித்து ஆலோசனை பெறுவதேசிறந்த வழி .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலித்து முடித்த திருமணம் என்பதால், 9 வருட வாழ்க்கைக்குப் பின் அவளை அம்போ என நீர் கைவிடுவது சரியல்ல. எதற்கும் சரிப்பட்டு வராவிடில் இருவரும் சட்டப்படி பிரிந்து கொள்ளலாம். அவ்வாறெனில் அவளுக்கு நீர் ஜீவனாம்சம் செலுத்த வேண்டியிருக்கும். அவளால் பிள்ளைகளிருவரையும் பராமரித்துக்கொள்ள முடியவில்லையென்பதை சட்டப்படி உம்மால் நிரூபிக்க முடியுமானால், அவர்கள் 5 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளென்பதால் அவர்களை வளர்க்கும்பொறுப்பையும் உரிமையையும் அவள் விரும்பினால் நீர் பெற்றுக் கொள்ள முடியும். உமது பக்கமிருக்கும் காரணங்களின் அடிப்படையிலேயே இவ்வழிமுறைகளைக் கூறியுள்ளேன். உமது மனைவி பக்கத்துக் காரணங்களையும் சரியாக அறிந்து கொண்ட பின்பே சரியான முடிவுக்கு வர என்னால் முடியும்.

✉ ✉ ✉ ✉

**? 26 வயது வாலிபனான நான் சீர்திருத்தமாகச் சிந்திப்பவன். நான் வேலை செய்யும் இடத்துக்கு அருகில் ஒரு வியாபார நிலையத்தில் வேலை செய்யும் பெண் என்னைச் சந்திப்பதுண்டு. நாம் இருவரும் சந்தோஷமாகப் பேசி மகிழ்வதுண்டு. அவளின் கலகலப்பான பேச்சு எனக்கு மிகவும் பிடிக்கும் அவள் கணவனால் கைவிடப்பட்டவளென்றும் அவளுக்கு வயது 32 எனவும் அறிகிறேன். அவளுக்கு ஒரு குழந்தையும் உண்டு. ஒரு வருடமாக நாம் பழகினாலும் வாயால் கதைப்பதைத் தவிர வேறுவித தொடர்புகள் எதுவுமில்லை. நேரிடையாகக் கேட்டால் தவறாக எண்ணி விடுவாளோ எனத் தயங்கி ஒரு நாள் ஒரு நீண்ட கடிதமெழுதி, அதில் நான் அவளை மணமுடிக்க விரும்புவதாகத் தெரிவித்து, அவளுடைய முடிவைக் கேட்டு, அக்கடிதத்தை அவளிடம் கொடுத்தேன். அன்று முதல் அவள் என்னிடம் கதைப்பதில்லை. கண்டாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விடுகிறாள். மேலும் அக்கடிதத்தை யாரோ எழுதிக் கொடுக்க, அவர் சார்பில் நான் அதை அவளிடம் கொடுத்ததாக அவளின் ஸ்தாபன நிர்வாகியிடம் சொல்லிவிட்டாள். அவர் என்னிடம் விசாரித்த போது அப்படியொன்றும் நடக்க வில்லையெனச் சொல்லி விட்டேன். அந்தப் பெண்ணுக்கு வாழ்வு கொடுக்க விரும்பிய எனக்கு அவளின் செயல் விசித்திரமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. நான் செய்தது தப்பா?**

செல்வம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✻ நீர் சீர்திருத்தமாகச் சிந்திக்கும் வாலிபன் என்று கூறியிருப்பதை வரவேற்கின்றேன். ஆனால் சீர்திருத்தம் என்ற பேரில், மற்ற வர்களின் விஷயங்களில், ஆழமறியாமல் காலை விட்டு, உம்மையும் மற்றவர்களையும் உபத்திரவப்படுத்த முற்படுவது சரியல்ல. அப்படிச் செய்வதன் மூலம் மூக்குடைபட வேண்டிவரும் என்ற நல்லதொரு பாடத்தையும் படித்திருக்கிறீர்.

உமது வேலைத்தலத்துக்கு அருகிலுள்ள நிறுவனத்தில் பணிபுரிகின்ற பெண் - உம்மிலும் பார்க்க வயது கூடியவள். ஒரு பிள்ளையின் தாய், வேலைப்பளுவின் மத்தியில் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் உம்முடன் கலகலப்பாகப் பழகுகிறாளே என்பதற்காக, அப்பழக் கத்தை நீர் தப்பிதமாகக் கற்பனை செய்து கொண்டு விட்டீர். யாராவது பெண்ணொருத்தி ஓர் ஆணுடன் சிரித்துப் பழகினால் அது காதலுக்கான வெளிப்பாடு என்ற தவறான மனப்பான்மை, சீர்திருத்தவாதிகள் என்று கூறிக்கொள்ளும் உம்போன்ற ஆண் களிடம் கூட நிலவுவதை அறியும் போது ஆணுலகம் இன்னும் சரியாகச் சிந்திக்க முற்படவில்லையே என வருத்தமும் வெட்கமுமாக இருக்கிறது. பிரிந்து போன தனது கணவன் மீண்டும் வருவான் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவள் இருந்திருக்கலாம் அல்லது வாழ்க்கையில் தான் அனுபவித்த கொடுமைகளால், திருமணத்தையே வெறுப்பவளாகவும் இருக்கலாம். ஓராண்டுக்கு மேல் அவளுடன் கதைத்துப் பழகியும் இவற்றை ஓரளவேனும் கிரகிக்க முடியாத சிந்திக்கத் தெரியாத "சீர்திருத்த வாதி" யாக நீர் இருப்பதை அறியும்போது உம்போன் றவர்களுக்காக அழுவதா? சிரிப்பதா? எனத் தெரியவில்லை. ஓராண்டுக்கு மேலாக கலகலப்பாகப் பழகி வந்த அவள் உம்மைத் தனது தம்பிபோல் எண்ணிப் பழகியிருக்கலாம். இவ்வளவு தூரம் பழகி வருபவளிடம் உமது திருமண விருப்பத்தை சாடை மாடையாக அவளுக்கே தெரிவிப்பதற்குப் பதிலாக அதென்ன காதல் கடிதம்? அப்பெண் செய்தது சரியே. உமது உபத்திரவம் தொடரக்கூடாது என்பதற்காக அப்பெண் முழுமையாக உம்முடன் பேச்சை நிறுத்திக் கொண்டதும், தனது நிறுவன அதிகாரியிடம் கடிதத்தைக் காண்பித்ததும் மிகவும் சரியானதே, இனிமேலாவது சீர்திருத்தவாதி என எண்ணிக் கொண்டு, நீர் மற்றவர்களின் விஷயங்களில் மூக்கை நுழைக்காமல், உம்மால்முடியாவிட்டால், உமது பெற்றோர், உறவுப் பெரியவர்களிடமாவது கூறி உமக்குப் பொருத்தமான பெண் ஒருவரைத் தேர்ந்தெடுத்து விரைவில் திருமணம் செய்து கொள்ளவும்.

✉ ✉ ✉ ✉

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? எனது அக்காவுக்கு திருமணமாகி 3 வருடங்கள் ஆகியும் இன்னும் குழந்தை இல்லை. அவர் அநாதை மடத்தில் ஏதாவது குழந்தையை தத்தெடுத்து வளர்க்க முடிவு செய்திருக் கிறார். ஆனால் சில அநாதை மடங்களில் விசாரித்து பார்த்திருக்கிறார்கள். அங்கு பல கேள்விகள் கேட்கிறார்கள். அங்கு உடனடியாக ஒரு குழந்தையை எடுப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அங்கு பல கேள்விகள் கேட்கிறார்கள். அக்காவுக்கும் வயது போய்க் கொண்டிருப்பதால் அவர் இதை நினைத்து எந்நேரமும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார். தத்தெடுத்துக் கொள்வதற்கு எனக்கும் ஒரே கவலையாக இருக்கிறது. உடனடியாக ஒரு குழந்தையை அநாதை மடங்கள் இருக்கின்றனவா என்பதை விபரமாக அறியத் தாருங்கள்.**

மனோ, மோதரை

* உமது அக்காவுக்குத் திருமணமாகி மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் குழந்தை பிறக்காததால் உமது அக்காவும் பெற்றோரும் கவலையடைந்துள்ள நிலையைப் பார்த்து நீர் துன்பப்படுகிற பாச உணர்வையும் அவர்கள் மீது உமக்குள்ள அக்கறையையும் என்னால் உணரமுடிகின்றது. எத்தனையோ பெண்கள் திருமணமாகி 7, 8 ஆண்டுகள் கழிந்த பின்னர் கூட கர்ப்பந்தரித்துள்ளனர். திருமணமாகி மூன்றாண்டுகளுக்குள் பிள்ளை பெற்றுவிட வேண்டுமென்று எவ்விதசட்டமும் இல்லை. எல்லாக் குடும்பங்களிலுமே கல்யாணம் முடித்து ஓரிரு ஆண்டு களில் ஒரு குழந்தையைப் பெறாவிட்டால் அவளுக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லை என்று முடிவு செய்து மலடி என்ற முத்திரை யையும் குத்திவிடுகிறார்கள். இது 21ம் நூற்றாண்டு. விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவத்துறை முதலியவை வெகு உயரத்துக்கு வளர்ந்து விட்டன. செயற்கை முறையில் பெண்ணின் கர்ப்பப் பையில் குழந்தையை உருவாக்குகிறார்கள். பரிசோதனைக் குழாய்களிலும் குழந்தைகள் உருவாக்கப்படுகின்றன. உமது அக்கா மற்றும் அவரின் கணவரை பரீட்சித்துப் பார்த்து அவர் களுக்கு குழந்தை பெற வாய்ப்பில்லை என மருத்துவ நிபுணர்கள் கருத்துத் தெரிவித்து விட்டார்களா? அப்படி இல்லை எனில் இருவரும் முதலில் மருத்துவச் சோதனை செய்விக்கட்டும். சிறுகுறைபாடு களிலிருந்தால் மருத்துவ சிகிச்சை மூலம் சரிசெய்து கொள்ள முடியும். அவரின் கணவரில் சிறு குறைபாடிருந்தாலும் மருத்துவம் மூலம் சரி செய்து கொள்ளலாம். அவ்வளவு தூரத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவத்துறை முன்னேறியுள்ளது. இதைச் செய்யாமல் வெறுமனே அக்காவுக்கு மலடிப்பட்டம் சூட்ட வேண்டாம். தம்பதிகளுக்குக் குழந்தை பிறக்காவிட்டால் பெண்கள் மலடு என்ற தவறான மனப்பாங்கு சமூகத்திலிருந்து துடைத்தெறியப்பட வேண்டும். பல சந்தர்ப்பங்களில் ஆணிடமும் குறைபாடு இருப்பதனால் பெண்ணினால் கருத்தரிக்க முடிவதில்லை என்பதை மருத்துவர்கள் நிரூபித்துள்ளனர். இந்த உண்மையை ஆண்களோ அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ ஏற்றுக்கொள்வது தாழ்வான விஷயமென எண்ணுகின்றனர். அதனால் எடுத்த எடுப்பில் பெண் மீது பழியைத்தூக்கிப்போட்டு விடுகிறார்கள். உமது அக்காவும் கணவரும் மனம் விரும்பி ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக்கொள்ள விரும்பினால் அவ்வாறான ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்வதற்கு கைவிடப்பட்ட அநாதைக் குழந்தைகள் காப்பகங்கள் கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் உள்ளன. உமது கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று பல்வேறு விசாரணைகளைச் செய்த பின்பே சட்ட பூர்வமான வழிமுறைகளுக்கமைய உங்களுக்குக் குழந்தையைத் தருவார்கள். உடனடியாக எடுத்த எடுப்பில் ஒரு குழந்தையை அவசரப்பட்டு நீங்கள் தூக்கிக் கொண்டு வரமுடியாது.

✉ ✉ ✉ ✉

**? அம்மா நான் ஒருவரை 7 வருடமாக காதலிக்கின்றேன். அவரும் என்னை உயிருக்குயிராகக் காதலிக்கின்றார். ஆனால் எங்கள் இரு வீடுகளிலும் கடுமையான பிரச்சினை. ஜாதி, மதம், எல்லாம் ஒன்றாக இருந்த போதிலும் இரு வீட்டாரும் கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவிக்கின் றார்கள். எனது காதலனுடன் ஒரு நாள் கதைத்துக் கொண்டு போனதை அயலவர்கள் கண்டு அவரின் வீட்டில் சொல்லி விட்டார்கள். அவர்கள் எங்கள் வீட்டில் எனது அப்பாவிடம் வந்து ஏசி விட்டுப் போனார்கள். இதனால் எங்கள் வீட்டில் அவரிடம் பேச வேண்டாம் என்று எனது அப்பாவும் அம்மாவும் என்னிடம் கெஞ்சினார்கள். அவர்களின் கண்ணீ ரைப் பார்த்து நான் அவருடன் இனி கதைக்க மாட்டேன் என்று அவர்களுக்கு சத்தியம் பண்ணிக் கொடுத்து விட்டேன். இரண்டு நாள் கழிந்தவுடன் அவருக்கு நான் கடிதம் எழுதி னேன். எனக்கு இனிக் கடிதம் போட வேண்டாம். போன் பண்ண வேண்டாம். என்னை மறந்து விடவும் என்றுநான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய கடிதம் அவரின் கையில் கிடைத்தவுடன் அவருக்கு நெஞ்சு வருத்தம் வந்து வைத்திய சாலையில் அனுமதித்து விட்டார்கள். அவர் கொழும்பில் புடவைக் கடையொன்றில் வேலை செய்கின்றார். அவர் வைத்தியசாலையில் இருந்து வந்தவுடன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். "நீ இல்லா விட்டால் நான் உயிரோடு இருக்க மாட்டேன். எனக்கு எதுவும் நடந்துவிட்டால் நீ ஒரு சொட்டு கண்ணீர் கூட விடக்கூடாது" என்று எழுதி, சாகப்போகும் காதலன் என்று கடிதத்தை முடித்திருந்தார். நாங்கள் இருவரும் ஒரே ஊரில் வசிப்பவர்கள் இவர் கொழும்பில் இருந்து எங்கள் ஊருக்கு நெஞ்சுவலி காரணமாக வந்துவிட்டார். என்னால் அநியாயமாக ஒரு உயிர் போகப் போகுதே என்று பயந்து நான் அவரிடம் போன் மூலம் தொடர்பு கொண்டு கதைத்து விட்டேன். அப்போது அவர் எனது முடிவை கேட்டார். நான் அவரிடம் அவர் கூப்பிடும் போது வருகிறேன் என்று சொல்லி விட்டேன். அடுத்த வருட ஆரம்பத்தில் நான் கூப்பிடும் போது வரவேண்டும். அப்படி இல்லை என்றால் அதே நிமிடத்தில் உயிரை விட்டு விடுவேன் என்று சொல்லிவிட்டார். ஆனால் தற்போது எங்கள் இரு வீட்டாரும் நாங்கள் இருவரும் கதைப் பதில்லை என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் இருவரும் போன் மூலம் கதைத்துக் கொள்கின்றோம் நான் வீட்டாருக்கு பண்ணிக்கொடுத்த சத்தியத்தை என்னால் காப்பாற்ற முடியவில்லையே என்ற பயம் என்னுள் இருந்து கொண்டே இருக்கின்றது. எனது அப்பா என் மீது அதிகமான நம்பிக்கையை வைத்திருக்கின்றார். அவருக்கு துரோகம் செய்ய போகின்றேனே என்று ஒவ்வொரு கணமும் யோசித்து கொண்டிருக்கின்றேன். என்னுடைய பிரச்சினை முழு வதையும் இக்கடிதத்தில் எழுதியிருக்கிறேன். தகுந்த ஆலோச னையைத் தாருங்கள்.

கலாமதி , டிக்கோயா

* உமது 15 ஆவது வயதிலிருந்து நீர் ஒருவரைக் காதலித்து வருகிறீர். அவரும் உம்மை உயிருக்கு உயிராக காதலிக்கிறா ரென எழுதியிருக்கிறீர். உமது காதலரும் ஒரே ஜாதி, மதத்தைச் சேர்ந்தவரென்பதால் அது தொடர்பாகவும் இரு பகுதிப் பெற்றோர் களும் தடை சொல்வதற்குக் காரணம்இல்லை. இரு பகுதிப் பெற்றோரிடமும் எதிர்ப்பு ஏற்பட்டிருப்பது வேறு என்ன காரணத் தினால் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் தொழில் பார்க்கிறார். நீரும் தொழில் பார்க்கிறீர். மேலும் இருவருமே மேஜர் வயதைத் தாண்டியவர்கள். அதனால் பெற்றோர்களின் சம்மதம் இல்லாமலே இருவரும் திருமணம் செய்வதற்குச் சட்டத்தில் இடமிருக்கிறது. நீங்கள் இருவருமே பெற்றோர் என்ற பாசக்கூட்டுக்கு வெளியே வரத் தயங்குகிறீர்கள். அதில் நியாயமிருக்கிறது. பெற்று வளர்த்த பெற்றோர்களின் சம்மதத்துடனும் ஆசீர்வாதத்துடனும் திருமணம் நடைபெறுவது தான் சிறப்பும் மகிழ்ச்சியும் அளிக்கும். வயதுக்கு வந்த நீங்கள் இருவரும் தெருவில் சுற்றித் திரிந்தால் தங்களின் அனுமதியில்லா மலேயே உங்கள் திருமணத்தை நிச்சயித்து விட்டீர்கள் என்ற கோபத்தில் உங்கள் இருபகுதிப் பெற்றோரும் சம்மதம் தராமல் முரண்படுகிறார்களோ எனவும் எண்ணுகிறேன். அல்லது உமது காதலனின் பெற்றோர் அவர்களுக்கு கொழுத்த சீதனத்துடன் ஒரு பெண்ணைக் கொத்திக்கொள்ளலாமெனக் காத்திருந்த நம்பிக்கை வீணாகிப் போகிறதே என்ற கொதிப்பினால் உங்கள் வீட்டுக்கு வந்து அப்பாவை ஏசிவிட்டுப் போயிருக்கலாம். அதனால் ஏற்பட்ட சினத்தினால் உமது பெற்றோர் இவ்விடயத்தில் மனம் புண்பட்டு எதிர்க்கிறார்களோ என்றும் தெரியவில்லை. உமது காதலன் தற்கொலை செய்வேன் எனக் கோழைத்தனமாக உம்மை வெருட்டிக்கொண்டிருப்பதிலும் பார்க்க முதலில் தனது பெற்றோரைச் சாந்தப்படுத்தி நிலைமையை எடுத்துக் கூறி உமது பெற்றோரைப் பெண் கேட்டு அணுகுவது சிறந்த வழிமுறை. அதே போல் உமது பெற்றோரிடமும் நீர் நிலைமையைப் பொறுமையாகத் தெளிவுபடுத்தி இணங்கச் செய்யவேண்டும். அதைவிட்டு விட்டு ஏழு வருடங்களாக உயிருக்கு உயிராகக் காதலிக்கிறோம் என வெறுமனே மனதில் ஏங்கிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. காதலித்தால் மட்டும் போதாது துணிவும் தேவை.

✉ ✉ ✉ ✉

**? என்னை ஒருவர் காதலிப்பதாகக் கூறி என்னிடம் அவர் நண்பர் மூலமாக முடிவு கேட்டிருந்தார். நானோ முடியாது என்று சொல்லி அனுப்பினேன். இருந்தும் அவர் எனது குடும்பத்தில் இதைப்பற்றிக் கூறி அவர்களிடம் இருந்து நல்லதொரு பதிலைப் பெற்றுக்கொண்டார். எனது குடும்பத்தினர் அவரைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தி என்னைச் சம்மதிக்க வைத்து விட்டனர். நான் எனது அம்மாவின் மேலுள்ள பாசத்தினால் ஆம் என்று கூறி முடிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொல்லி விட்டேன். அவர் என் மேல் கொண்ட காதலால் மூன்று கடிதங்கள் தந்தார். நானும் ஒரு கடிதம் கொடுத்து ள்ளேன். இதையறிந்த எனது உறவினர்கள் நண்பிகள் அனைவரும் என்னைத் திட்டுகின்றனர். அவரைத் திருமணம் முடிக்க வேண்டாம் என்று கூறுகின்றனர். எனக்குத் அவர் மேல் எதுவிதமான ஆசையும் இல்லை. எனக்கு என் மாமாவின் மகனைத் திருமணம் செய்யவே விருப்பம். நான் மாமாவின் மகனை விரும்புவது யாருக்கும் தெரியாது. ஆனால் மாமாவின் மகன் என்னை விரும்புகிறாரா? என்பதும் எனக்கு தெரியவில்லை. இப்போது பேசியுள்ள திருமணத்தில் இருந்து நான் விலகுவதற்கு எனக்கு நல்ல பதிலைத் தாருங்களம்மா.**

தங்கவடிவு, அவிசாவளை

* உமது சிக்கல் வித்தியாசமானதொன்றாக இருக்கிறது. ஆனாலும் அதை விடுவிப்பது அவ்வளவு கஷ்டமாகப்பட வில்லை. அவ்வாலிபன் உம் மீது நாட்டம் கொண்டு விருப்பம் கேட்டிருக்கிறார். நீர் முடியாது என்று கூறிய போதிலும் முறையாக உங்கள் வீட்டுக்கு வந்து பெரியவர்களிடம் பெண் கேட்டிருக்கிறார். நீரும் ஓம் என்று உமது வீட்டாருக்குத் தலையசைத்தபடியால் அவர்களும் அதற்கு இணங்கிவிட்டனர். பின்னர் உமது நண்பிகள் அவரைப் பற்றி ஏதோ கூறி உமது மனதைக் குழப்பிவிட்டிருக் கின்றனர். அவர் நடத்தைப் பிசகானவரா? ஒழுக்கம் கெட்ட குடிகாரனா? எந்த விபரத்தையும் நீர் எழுதவில்லை. அதனால் உமது நண்பிகள் (?) என்போரில் யாராவது ஒருத்தி அவர் மீது கண் வைத்திருக்கலாம். அதற்காக தளம்பல் மனங்கொண்ட உம்மை உசுப்பிவிட்டுக் குழப்புகின்றனரோ எனவும் நான் சந்தேகிக்கின்றேன்.

பெற்றோர்கள் கூறுகிறார்களே என்பதற்காக, விருப்பமில் லாதவன் கட்டுகிறதாலிக்கு கழுத்தை நீட்டுகிற அந்தக்காலம் இப்போது மலையேறிவிட்டது. தமது எதிர்கால வாழ்க்கை சம்பந்தப்பட்ட தென்பதால் இப்போதைய பெண்கள் தலை நிமிர்ந்து பெற்றோரிடமும் தமது திருமணம் பற்றிய விருப்பு வெறுப் புக்களை மனம் விட்டு கலந்துரையாடுகின்றனர். உண்மையாகவே உமக்கு இவ்வாலிபனைப் பிடிக்கவில்லையெனில் பதுங்கிக் கொண்டிருக்காமல் உமது தாயாரிடம் உண்மையைச் சொல்லி யிருந்திருக்கலாம். எனவே உமது அடி மனம் முழுமையாக இவ்வாலிபனை வெறுக்கவில்லை. நண்பிகள் தான் குழப்பத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்த முனைகின்றனர் போலும் கூடாதநட்புக்கு உமது நண்பிகள் நல்லுதாரணமாக விளங்குகின்றனர். தமது வேடிக்கை மற்றவர்களின் மனதில் எவ்வளவு வேதனையை ஏற்படுத்தும் என்பதை உணராத ஜடங்களாகவே என்கண்களுக்கு அவர்கள் தெரிகிறார்கள்.

நீர் விரும்புபவரிலும் பார்க்க, உம்மை எவர் விரும்புகிறாரோ அவருடன் உமது வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்வதன் மூலம் திருமண வாழ்க்கையில் உமக்குக் கூடுதலான மகிழ்ச்சியும் அன்பும் கிடைக்கும் என்பது அனுபவப்பட்டவர்களின் கருத்து. "அரசனை நம்பி புருஷனை கைவிட்ட மாதிரி" எனக் கிராமப் புறங்களில் ஒரு பழமொழி உண்டு. நீரும் அதனைக் கேள்விப்பட்டிருக்கலாம். உமது மாமாவின் மகனைக் கைப்பிடிக்க விரும்புகிறீர். அவர் இதுவரை வேறெவளின் கையையாவது பிடித்திருக்கக்கூடுமல்லவா? வாழ்க்கை என்பது வெறும் கற்பனையல்ல. யதார்த்தமாகச் சிந்தித்து, சித்திக்கக் கூடியதைப் பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். அம்மாவையும், எமாற்றி, திருமணம் நிச்சயிக்கப்பட்ட பைய னையும் ஏமாற்றி, நீரும் உமது எதிர்கால வாழ்க்கையை ஏமாற்றிப் பாழடிக்க வேண்டாம். யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவும்.

✉ ✉ ✉ ✉

**? நான் திருமணம் செய்து 6 வருடங்களின் பின் அருமை பெருமையாக இப்போதுதான் ஒரு பெண்குழந்தைக்கு தாயாகியுள்ளேன். இதனால் எமது குடும்பத்தவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. பிள்ளைக்கு என்னமாதிரியான பெயர் சூட்டுவது என்பதில் முடிவு செய்யமுடியாமல் உள்ளது. எனவே உங்கள் ஆலோசனையைக் கேட்பதற்காகவே இதனை எழுதுகிறேன். காலமாற்றத்திற்கும் நாகரிகத்துக்கும் ஏற்பக் குழந்தைக்கு கிரண், ஸ்நேகா போன்ற இரண்டு மூன்று எழுத்துக்களைக்கொண்ட ஸ்டைலான பெயராக வைக்க லாமென நான் ஆசைப்படுகிறேன். எனது கணவரும் பெற் றோரும் நல்ல நீண்ட பழங்காலப் பெயராக மரகதவல்லி அல்லது அம்பாளின் பெயர் ஒன்றை வைக்கலாமென ஆர்வங் காட்டுகிறார்கள். எனவே இது விஷயத்தில் உங்கள் அபிப்பி ராயத்தை அறிய விரும்புகிறோம்.**

சத்தியவாணி, நெடுங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அழகானதும் அர்த்தம் கொண்டதுமான பெயர்கொண்ட நீர் குழந்தைக்குப் பெயரிடுவது பற்றிய பிரச்சினை பற்றி எழுதி யுள்ளீர். உமது பெற்றோர் எத்தனை அர்த்தமுள்ள அழகான பெயரை உமக்குச் சூட்டியுள்ளனர் என நான் வியக்கிறேன்... பிள்ளைக்குப் பெயரிடுவதில் பெற்றவர்களுக்கு முதலிடம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. என்றாலும் பிள்ளைக்குப் பெயரிடும் போது அர்த்தமுள்ள அழகான பெயரைத் தெரிவு செய்வதும் அவசியமே. எமது மரபுமுறைப்படி, குழந்தையின் நட்சத்திரத்துக்குப் பொருத் தமான முதலெழுத்துக்களை பஞ்சாங் கத்தில் குறிப்பிட்டிருப்பர்.

அந்த எழுத்துக்களையொட்டி பெயரை வைப்பர் ஒரு சாரார் சில குடும்பங்களில் தாயின், அல்லது தந்தையின் பெற்றோருடைய பெயரையே சூட்டுவதுமுண்டு. சிலர் தாம் வணங்கும் தெய்வத்தி னுடைய பெயரை அல்லது குல தெய்வத்தின் பெயர்ரைச் சூட்டு வதுண்டு. சிலர் தம் மனதைக் கவர்ந்த நடிகர், பெரியவர், எழுத்தாளர் வீரத்தியாகிகளுடைய பெயர்களை பிள்ளைகளுக்கு சூட்டுவதுண்டு.

ஆனால் நாம் என்ன நோக்கில் பெயரிட்டாலும், அந்தப் பெயரைப் பிரபல்யப்படுத்தி பேர் புகழை நிலைநாட்டுவது அந்த தனிப்பட்ட நபரையே பொறுத்தது. எடுத்துக்காட்டாக அறிஞர் அண்ணாதுரை, காமராஜர் போன்றோரை எடுத்துப் பார்த்தால் இப்பெயர்களுக்கே பெருமை சேர்த்தது அவர்களுடைய ஆற்றலும் நடத்தையும் இலட்சியங்களும் தான். இவற்றையும் நாம் மனங்கொள்ள வேண்டும். சமயப் பற்றுடையோர், இறைபக்தி யுடையோர் சமயப் பெரியார்களுடைய பெயரைச் சூட்டி மகிழ்வர். இத்தகைய பெயர்களைச் சூட்டுவதால் காலமெல்லாம் தாம் சமயப் பெரியார்களையும் கடவுள் பெயர்களையுமே நினைத்துக் கொள்வதாக ஒரு திருப்தியும் பெரியவர்களுக்கு ஏற்படுவதுண்டு.

ஆனால் கிரண், கதக் என்பன சிறிய பெயர்களாயினும் அர்த்தமேயில்லாதவை போலியான நாகரிகத்தில் ஊறிப் பிள்ளைகளின் பெயர்களைக் கெடுத்து விடக்கூடாது. மீனா, வதனி என அர்த்தமுள்ள மிகச்சுருக்கமான பெயர்கள் பெருவாரியாக இருக்கின்றனவே. அவற்றைவிட்டு நாகரிகமோகத்தில் தடுக்கி விழுந்து விடக் கூடாது. சுருக்கமானதும் கருத்துள்ளதுமான அழகிய தனித்தமிழ்ப் பெயர்களைச் சூட்ட வேண்டுமென்ற கருத்து நிலை ஓங்கியுள்ள இக்காலத்தில், அழகிய, சிறிய தனித்தமிழ்ப் பெயரொன்றை உங்கள் பிள்ளைக்குச் சூட்டுவது மிகப் பொருத்த மானது என்பதே எனது அபிப்பிராயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**?** **எனக்கு வயது 19. நான் முஸ்லிம். அவர் இந்து. இருவரும் மனப்பூர்வமாக காதலிக்கிறோம். நான்படித்து விட்டு வீட்டில் இருக்கிறேன். அவர் நல்ல வேலையில் இருக்கிறார். நாங்கள் கடிதம் மூலமும், போன் மூலமும் தொடர்பு கொள்வோம். அவர் என்மேல் உயிரையே வைத்து உள்ளார். எனது பிரச்சினை என்னவென்றால் எனக்கு அடுத்த மாதம் எனது மச்சானை திருமணம் செய்ய வீட்டில் ஏற்பாடு செய்து உள்ளார்கள். என் மச்சானிடம் சில கெட்ட பழக்கங்கள் உண்டு. எனது வீட்டார்கள் அவரையே தான் திருமணம் செய்ய வேண்டும் என்று என்னை வற்புறுத்துகிறார்கள். நான்தற்கொலை செய்து கொள்ளலாமா எனவும் யோசிக்கிறேன். எனக்கு நல்ல ஆலோசனை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நான் இதை எழுதுகிறேன். எனது வீட்டாரிடம் எங்கள் காதலைக் கூறினோம். அதற்கு அவர்கள் மறுக்கிறார்கள். நாங்கள் இருவரும் என்ன செய்யலாம் உங்கள் ஆலோசனை என்ன?**

பரீனா , கல்ஹின்னை

* வாழ்க்கை வாழ்வதற்கேயொழியத் தற்கொலை புரிவதற்காக அல்ல. காதலுக்கு எதிர்ப்பு வந்து விட்டதே எனக் கலங்கித் தற்கொலையை நாடுவது கோழைகளின் செயல். விவேகமும் துணிச்சலும் கெட்டித்தனமும் இருந்தால் எதிர் நீச்சல் போட வேண்டும். அப்படியில்லையென்றால் பெற்றோரின் சொற்படி இணங்கிப் போக வேண்டும். நீங்கள் இருவரும் வேறு வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள். நீங்கள் முஸ்லிமாக இருப்பதால் ஏனைய மதங்களைப் போல அன்றி இஸ்லாமிய மதம் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளைக்கொண்டது. அதற்கு வெளியே வந்து நீர் இஷ்டப்பட்டமாதிரி இந்து ஒருவரைத் திருமணம் செய்வதென்பது மிகவும் கஷ்டமான விடயம். அவர் இஸ்லாமிய மதத்தைத் தழுவிக் கொண்ட பின்னரே உம்மைத் திருமணம் செய்ய உமது சமயமும் சம்பிரதாயங்களும் அனுமதி அளிக்கும் அதற்கு உமது இந்து மதக் காதலர் சம்மதமாயிருக்கிறாரா? ஒருவரின் மதத்தை மாற்றிக் கொள்ளுமாறு வலியுறுத்துவது மனச்சாட்சிக்கு விரோதமான செயல். கஷ்டத்தின் காரணமாக பிழைக்க வேறு வழியின்றி வேற்றுமத மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண் வேலைக்குச்செல்லும் இளம் பணிப்பெண்களே இஸ்லாமியப் பெயர்களைச் சூட்டிக் கொண்டு உள்ளத்தால் தாம் பிறந்த மதத் தைப் பூஜித்துக் கொண்டு வாழ்கிறார்கள். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இப்படி ஒரு நிலைமை வட இலங்கைச் சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தவர்களை எதிர்நோக்கியது. ஒல்லாந்தர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டவர்களுக்கே கல்வி வாய்ப்பு, உத்தியோகம் போன்றவற்றைக் கொடுத்தமையால் சைவர்கள் ஞானஸ்நானம் பெற்று வெளியே கிறிஸ்தவர்களாக நடித்தனர். இரகசியமாக வீட்டில் அனுஷ்டானங்கள், சைவ வழிபாடுகளைக் கடைப்பிடித்தனர். தமிழ் நாட்டில் மத வேறுபாடுகளுக்கு அப்பால் மணமுடித்து இணைந்து மகிழ்வாக வாழும் ஜோடிகள் பலரைச் சந்தித்திருக்கிறேன். முஸ்லிமைக் காதலித்து மண முடித்த இந்துப் பெண் பொட்டு பூவுடன் இந்துக் கோவிலுக்குப் போகிறாள். அவளின் கணவர் மசூதிக்குச் சென்று தொழுகை புரிகிறார். பெரு நாட்கள் பண்டிகைகளுக்கு ஜோடியாகப் பெற்றோர்களிடம் சென்று வருகிறார்கள் இதே போல இந்துவை மணம் முடித்த முஸ்லிம் பெண்ணும் தனது மதஅனுஷ்டானங்களைப் பின்பற்று வதில் கணவன் குறுக்கிடுவதில்லை. இவ்வாறான ஜோடிகளிடம் நல்ல புரிந்துணர்வு இருப்பதால் தமது மதத்தை மற்றவர் மீது திணிப்பதில்லை. நமது நாட்டில் மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த பலர் வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று தாம் விரும்பியவரை மணமுடிப்பது சகஜமாகி வருகிறது. பணம் அதிகாரபலம் உயர் அந்தஸ்துக்கு முன்னால் மதக்கட்டுப்பாடுகள் மண்டியிட்டு விடுகின்றன. ஆனால் உம்மைப் போன்ற சதாரண மட்டத்திலுள்ள வர்களையே மதமும் அதனோடிணைந்த சம்பிரதாயங்களும் ஏறிமிதிக்கப் பார்க்கின்றன.

உம்மைப் பொறுத்தவரை உந்தக் கூட்டுக்கு வெளியே வரக்கூடிய பலமும் துணிவும் உம்மைப் போன்றவர்களிடம் ஏற்படக் கூடிய சாத்தியப்பாடு இன்னும் உண்டாகவில்லையென நான் கருதுகிறேன். அதனால் பெற்றோர் கூறுவதைப் போல உமது மச்சானைத் திருமணம் செய்து கொண்டு, அவனைத் திருத்து வதற்கு முயற்சிக்கவும். சமூகத்தில் விழிப்பும், மாற்றமும் ஏற்படும் வரை, இப்போதைக்கு இதுவே கதி.

**? நான் .க.பொ.த உயர்தரம் முடித்து விட்டு வீட்டில் இருக்கிறேன். மேலும் நான் பொழுது போக்காக இசை நிகழ்ச்சிகள் நடத்துவதுண்டு. இவ்வாறான ஓர் இசை நிகழ்ச்சியிலே நான் ஒரு பெண்ணைச் சந்தித்தேன். அவரை எனக்குப் பிடித்து விட்டது. விருப்பம் கேட்டேன். அவரும் சம்மதித்து விட்டார். ஆனால் நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டு தான் காதலிக்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரம்பித்தோம். நாங்கள் காதலிக்கத் துவங்கிச் சில வாரங்களே ஆகின்றன. இந்நிலையில் நான் கூறினேன் நாம் ஒருவரை ஒருவர் தொட்டுப்பேச வேண்டாம் ஏனெனில் நீங்கள் என்னை விட்டுப்போனாலும் (எனது காதலி வெளி யூரைச் சேர்ந்தவர்) என்னால் தாங்கி கொள்ள முடியாது. எனவே நாம் நெருங்குவதைத் தவிர்க்கலாம் என்று கூறினேன். (நெருங்குவது என்று குறிப்பிட்டது எல்லை மீறுவதை அல்ல) ஆனால் எனது காதலியோ நாம் நெருக் கமாக அன்னியோன்யமாக இருந்தால் தான், நாம் ஒருவரை ஒருவர் விட்டு வெளியூர் சென்றாலும் பாச உணர்வு அதிக மாக இருக்கும் என்று கூறுகிறாள். ஆனால் தொட்ட காதல் விட்டுப் போகும் என்பார்களே? நான் தொடுவதால் எனது காதல் விட்டுப் போகும் என்றால் நான் தொடவேமாட்டேன். இருந்தும் என்னை ஒன்றுமே தெரியாத வெகுளி என நினைத்து எனது காதலி என்னை விட்டு போய்விடக் கூடாது. எனவே உங்களிடமிருந்து நான் என்ன செய்யலாம் என்கிற யோசனையை எதிர்பார்க்கிறேன்.**

இசைப்பிரியன் , நாவற்குடா

* நீர் படித்து விட்டு மற்றவர்களைப் போல ஊர் சுற்றி அலைந்து திரியாமல் இசைத்துறையில் ஈடுபட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதறிந்து மகிழ்ச்சி, உமது மகுடி இசை ஒரு பெண்ணையும் மயக்கி விட்டிருக்கிறது. அவளை உமக்கும் பிடித்து விட்டது ஆக சில வாரத்துக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து விட்டதாக எழுதி யிருக்கிறீர். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்குச் சில கிழமைகள் போதாது. மனதாரக் காதலிப்பவர்கள் ஒருவரை ஒருவர் தொட்டுக் கொள்ள வேண்டும், கட்டிப்பிடிக்க வேண்டு மென்பதில்லை. மனதால் ஒருவரது மனதை மற்றவர் நன்கு தொட்டுக் கொண்டால் மிகுதியைத் திருமணத்துக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். உம்மைத் தொட்டுப் பேச வேண்டாம் என அவளுக்கு நீர் கூறிய அறிவுரை சரியானதே. ஒருவரை ஒருவர் தற்காலிகமாகப் பிரிந்து வெளியூர் செல்ல நேரிட்டால் பாச உணர்வு பெருகுவதற்குத் தொட்டுத் தட்டிப் பேச வேண்டுமென்ற அவளின் கூற்றுத் தப்பானது. பாசம் என்பது உள்ளத்தில் பொங்குவது - உடலில் அல்ல. அவள் காதல் பற்றி மனத் தெளிவற்ற ஓர் அவசரக்குடுக்கை போலத் தெரிகிறது. தன்னை நீர் தொட்டுப் பேசவில்லையே என்ற ஏமாற்றத்தில் அவள் உம்மிடமிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகவும் கூடும். அவள் மனப்பக்குவமில்லாத இளம் பெண்ணாக இருக்கிறாள். இப்படிப்பட்டவர்களே எடுத்த எடுப்பில் கட்டிப் பிடிப்பதே காதல் எனக் கருதி, தமது எதிர்காலத்தைத் தொலைத்து விட்டுக் கலங்கி நிற்கிறார்கள். தகுந்த புத்திமதி சொல்லி அவளுக்குத் தெளிவுஏற்படுத்த முயற்சித்துப் பார்க்கவும்.

✉ ✉ ✉ ✉

**? எனக்கு வயது 24, படித்து விட்டு, மாலை நேர வகுப்பு களில் படித்துக் கொண்டிருக்கிறேன். தற்போது எனக்கு வீட்டில் மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். என் அக்காவுக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன் திருமணம் நடந்தது. மிகவும் நல்ல குடும்பம். அவரின் ஒன்றுவிட்ட தம்பி ஒருவர் அக்காவின் திருமணம் முடிந்தபின் என்னைத் திருமணம் செய்து கொள்வதற்காக விருப்பம் கேட்டார். எனக்கு அவரை பிடித்திருந்தது. வீட்டாரிடம் கேட்கச் சொன் னேன். ஆனால் அவர் கேட்கவில்லை. குடும்ப விசேஷங் களில் அடிக்கடி சந்தித்தோம். இருவருக்கும் அதிகமாகவே ஒருவரை ஒருவர் பிடித்து விட்டது. தினமும் தொலைபேசி மூலம் பேசுவோம். ஒருவரை ஒருவர் அதிகமாகவே விரும்ப ஆரம்பித்தோம். வீட்டிற்குத் தெரியாமல் ஜாதகம் பார்த்தோம். நன்றாக இருக்கின்றது. எனது வீட்டாருக்கு அவரை ரொம்பப் பிடிக்கும். அவரின் வீட்டாருக்கும் என்னை அதிகமாகவே பிடிக்கும். அவர் அவரின் அண்ணனின் கட்டுப்பாட்டில் வாழ்ந்தவர். கொஞ்சம் வசதியானவர்கள். அவருக்குத் தனது அண்ணனிடம் மதிப்பும், மரியாதையும், பயமும் பாசமும் அதிகமாகவே உண்டு. தற்போது தமது அண்ணன் இந்தத் திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள மாட்டார். நீங்கள் வேறு யாரையாவது திருமணம் செய்து கொள்ளுங்கள்" என்கின் றார். எனக்கு காரணம் புரியவில்லை. அவர் சொல்ல மறுக்கின்றார். மனதில் அவர் இன்னும் என்னை நினைத்துக் கொண்டிருக்கின்றார். கேட்டால் மறைக்கின்றார். அவரைத் திருமணம் செய்யப் போகின்றோம் என்ற நம்பிக்கையை மனதில் அதிகமாக வளர்த்துவிட்டேன். என்னால் அவரை மறக்கவே முடியவில்லை. என்ன செய்வதென்றே புரிய வில்லை. ஒரே குழப்பமாக உள்ளது. சில வேளைகளில் ஏதாவது தவறான முடிவு எடுத்து விடுவேனோ என்று கூடத்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோன்றுகின்றது. அம்மா எங்கள் இருவரையும் சேர்த்து வைக்கும் வழியே இல்லையா?**

நிலா , நுவரெலியா

* இத்தகைய முறைபாடுகளுள்ள பல கடிதங்களுக்கு ஏற்கனவே ஆலோசனைகளை அளித்துள்ளேன். பெண்பிள்ளைகள் தம்மோடொத்த ஆண்களுடன் பழகுவது இன்றைய உலகில் சர்வசாதாரணமாக நிகழ்கின்றது. என்றாலும் பருவமடைந்த இருபாலாரும் தாம் தமது நாட்டுச் சூழல், மதம், கலாசாரப் பண்பாடுகளுக்கமையவே பருவ உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் இவர்களுடைய பழக்கங்கள்அமைய வேண்டுமென நல்லெண்ணம் கொண்ட எல்லோருமே விரும்புவர். கல்வியும், சமயமும் இதனையே வலியுறுத்துகின்றன. எனினும் அவசரம் மிக்க சில இளம் ஆண்களும் பெண்களும் தம்மோடு பழகும் எதிர் பாலாரில் மயங்கித் தம்மையே தொலைத்துவிடுகின்றனர். ஓர் ஆணோடு பெண்ணோ ஒரு பெண்ணோடு ஆணோ சாதாரணமாகச் சிரித்துப் பேசியவுடன் அத்தொடர்பைக் காதலாக ஏற்றுக் கற்பனைக் கோட்டைகளை அடுக்கி விடுகின்றனர். உண்மை தெரிந்ததும், ஏமாற்றத்தினால் சோர்வுக்கும் வாழ்வில் விரக்திக்கும் ஆளாகின்றனர். இன்னொரு விஷயத்தையும் இதில் நான் ஞாபகப்படுத்த வேண்டும். சீதனம் என்ற பிசாசு இன்னும் பெண்களை பின்தொடர்ந்து துரத்திக்கொண்டு தான் இருக்கிறது. பேச்சு மேடைகள், கருத்தரங்குகள், கதைகள், நாவல்கள், கட்டுரைகள் என எத்தனையோ வடிவங்களில் சீதனத்துக் கெதிராகக் கருத்துக்கள் பரிமாறப்பட்டாலும் கப்பலைக் கவிழ்க்கும் திமிங்கிலம் போலத் தக்க தருணத்தில் இந்தச் சீதனப் பிசாசு தலையை நீட்டிப் பல காதல் ஜோடிகளைக் கவிழ்த்துள்ளது. பெரும்பாலான ஆண்கள் கலியாணமென்று பேசத் தொடங்கி னால் சீதனப் பேயின் பிடியில் சிக்குண்டு, அப்படிஇப்படியென்று "தண்ணி" காட்டி விட்டுக் கம்பி நீட்டிவிடுவர். உம்முடைய கதையும் இப்படியிருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. எனினும், நீர் பூரணமாக விரும்புவதால் உமதுபெற்றோர், பெரியோர் மூலம் வரன் வீட்டாரைச் சந்தித்து விஷயத்தை விளக்கி நடவடிக்கை எடுப்பது உசிதமான தென்று எனக்குப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? நான் படித்துக் கொண்டே வேலை பார்க்கும் 23 வயதுப் பெண். க.பொ.த உயர்தரத்தை கலவன் பாடசாலையில் படிக்க வேண்டிய சூழ்நிலையில் பல ஆண் நண்பர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. படிக்கும் காலத்தில் திறமை யான மாணவியாக இருப்பதைப் பார்த்த சிலர் என் படிப் பைக் குழப்பமுயன்றார்கள். ஆண்களுக்கு பெண் எப்போதும் அடிமை என்று அப்போது புரிந்து கொண்டேன். ஆனால் என்மனதை இயன்றவரை ஒரு முகப்படுத்திப் படித்து இன்று நல்ல நிறுவனம் ஒன்றில் தொழில் புரிந்து வருகின்றேன். அன்று கண்டால் "ஹலோ" மட்டும் சொன்ன ஒரு நண்பன், இப்போது நெருங்கிய நண்பனாகி விட்டான். 6 வருடங் களாக என்னுடன் பழகி வந்த அந்த நண்பன் இப்போது நான் என்ன கேட்டாலும் செய்கிறான். எனக்கு 7 நாட்களும் வேலை நாட்களாகையால் கல்வி சம்பந்தமாக நிறைய உதவி செய்கிறான். அவனைப் பற்றி என் வீட்டிலும் தெரியும். என் நெருங்கிய தோழி ஒருத்தி அவன் என்னை லவ் பண்ணு கிறான் என்றுகூறுகிறாள். ஆனால் அவன் அந்த அர்த்தத்தில் ஒரு வார்த்தைதானும் பேசுவதில்லை. ஆனால் உரிமை யோடு பேசுவான், நிறைய புத்திமதி கூறுவான். ஏன் அம்மா காதலித்தால் மட்டுமே உதவி செய்வார்களா? எனக்கு இப்போதுள்ள பயம் என்னவென்றால் அவன் மனதில் அப்படியொரு எண்ணம் இருந்தால் நான் அவனுடன் பழகு வதை நிறுத்த வேண்டும். ஆசைகாட்டி மோசம் செய்யக் கூடாது. அவன் மனதில் நட்பு மட்டும் தான் இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை காதல் என்பது கல்யாணத்திற்கு அப்புறம் தான். நம் மனதை நாம் கட்டுப்படுத்தினால் யார் என்ன செய்ய முடியும்? என் குடும்பத்தில் நான் செல்லப்பிள்ளை. அவன் சில வேளை என்னை சகோதரியாக நினைத்திருக்கலாம். ஆனால் என் நண்பி என்னைக் குழப்புகிறாள். நான் குழம்பமாட்டேன். திடீரென அவனின் நட்பை உதறிவிட முடியாது அம்மா. நான் எந்த ஆணுடன் பழகினாலும் எல்லோரையும் என் பக்கம் ஈர்த்து விடுவேன். அமைதியான நான் சில வார்த்தைகள் தான் பேசுவேன். அலுவலகத்தில் பழகுபவர்கள் எல்லோரும் என்னோடு ஒட்டாக இருப்பார்கள். எனக்கு என் அண்ணன் கள் மீது அளவு கடந்த பாசம். அந்த அன்போடு கதைப்பதால் தான் என்மேல் எல்லோரும் பிரியம் வைக்கிறார்களோ தெரியாது. இப்போது இந்த நண்பனை என்ன செய்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யார் பார்த்தாலும் அவன் என்னை விரும்புவதாகக் கூறு கிறார்கள். அவனின் செயற்பாடு அப்படி? என் மனதும் சற்று சஞ்சலப்படுகிறது என்பது உண்மையே எனக்கு நாளையே திருமணம் நடக்கலாம். அப்போது அவனின் நிலை எவ்வாறி ருக்கும்? சந்தோஷமாக என்னை வாழ்த்துவான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அவன் என்னை விரும்பினாலும் என்னிடம் கூற மாட்டான். காரணம் நான் அவனை ஏற் கமாட்டேன் என்று அவனுக்குத் தெரியும். தேவையான நல்ல ஆலோசனை தர வேண்டி நிற்கிறேன்.**

சங்கவி, மாதம்பிட்டி

✱ நீர் சாந்தமும் மன உறுதியும் கொண்ட தெளிவான அறிவுள்ள இளம்பெண்ணாக இருப்பது மனமகிழ்ச்சியைத் தருகின்றது. ஆண்களின் குறுக்கீடுகளை உமது பாடசாலை நாட்களில் துச்சமெனக் கருதிப் படித்து தொழில் பார்க்கும் நிலைக்கு வந்துவிட்டதைக் கண்டு மகிழ்கிறேன். ஆறுவருடங்களாகப் பழகி வரும் உமது நண்பன் உமது இனிய சுபாவத்தை நன்கு மதிப்பவராகத் தெரிகிறது.

நீர் கூறுவதுபோல் தனது சகோதரியாகக் கருதிப் புத்திமதி களையும் உதவிகளையும் அளித்துக் கொண்டு வருகிறார் எனவும் கொள்ளலாம். ஆறுவருட நெருக்கமான பழக்கத்தில் நீங்கள் இருவரும் எல்லை மீறாமல் இருப்பதிலிருந்தே உங்களிருவரின் உள்ளத்தை உணர முடிகிறது. இளம் ஆணும் பெண்ணும் நெருங்கிப்பழகினால் விளக்கம் இல்லாதவர்கள் அவர்களைப் பார்த்து காதலர்கள் என முட்டாள்தனமாகக் கற்பனை செய்வது வழக்கம். உமது நண்பி அந்த ரகத்தைச் சேர்ந்தவள். அவளின் மனவளர்ச்சியும் பெற்ற அனுபவமும் அவ்வளவே. காதல் என்பது கலியாணத்துக்கு அப்புறமே என்ற உமது உறுதியான நிலைப்பாடு சரியானதே. ஒரு ஆண் சிரித்துப் பழகிவிட்டால் அதைக் காதல் என எண்ணி அவனது தன்மைகள் என்ன என்பதைக் கூட ஆராயாமல் எடுத்த எடுப்பில் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு அவன் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் ஆட்டம் போட்டு அவனுடன் கட்டிப்புரண்டு நெருங்கிப் பழகி அவன் தன் இச்சையைத் தணித்துவிட்டு நைஸாக நழுவி விட, தவித்துக் கொண்டிருக்கும் பல இளம் பெண்களின் பரிதாபக் கதைகளை, எனக்கு வந்து சேர்ந்துள்ள கடிதங்களின் மூலமாக என்னால் அறிய முடிகிறது. இந்நிலையில் கலியாணத்துக்குப் பிறகே கணவனாக வருபவனைக் காதலிப்பது என்ற உமது நிலைப்பாடு சரியானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாகக் காதலித்து நேரிய வழியில் நடந்து திருமணம் புரிந்து மகிழ்ச்சியாக வாழும் ஜோடிகளும் இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அப்படியானவர்கள் இன்றைய சமுதாயத்தில் சிறு தொகையினரே.

நீர் தன்னை ஏற்கமாட்டீர் என்று தெரிந்த கொண்டே அவன் உமக்கு உதவிசெய்கிறான் எனக் கூறுகிறீர் அப்படியென்றால் ஒரு சகோதரன் அல்லது நல்ல நண்பன் உமக்கு ஒரு திருமணம் நடக்கும் போது மனமார வாழ்த்தாமல் இருப்பான் என ஏன் வீண் கற்பனை செய்கிறீர். மனதைக் குழப்பிக் கொண்டிருக்க வேண்டாம். உமக்குத் திருமண வயது வந்துவிட்டது. சுணங்கிக் கொண்டிருக்காமல் உம்மை நன்கு புரிந்து கொள்ளக் கூடிய மணமகனாகப் பார்த்துத் திருமணம் செய்து வைப்பதற்கான முயற்சிகளை உமது பெற்றோரும் பாசமுள்ள அண்ணன்மாரும் சேர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

✉ ✉ ✉ ✉

**? நான் ஒரு ஆங்கில ஆசிரியர். நகரப்பாடசாலை ஒன்றிலிருந்து கிராமப்பாடசாலை ஒன்றிற்கு மாற்றலாகிச் சென்ற போது அப்பாடசாலையில் கணிதம் கற்பிக்க வந்திருந்த ஆசிரியை ஒருத்தியைக் கண்ட போது காதலிக்கத் தொடங்கிவிட்டேன். ஆனால் நான் இது நாள் வரை அவளுடன் பேசியதே இல்லை. ஆனால் அவளைக் காணும் போதெல்லாம் எனது மனம் என்னுள் இருப்புக் கொள்ளாது தவிக்கிறது. நாம் இருவரும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள். எனக்கு அவளுடன் பேசுவதற்கு இரண்டு தடைகள் மட்டுமே உள்ளன. முதலாவது நான் சற்றுக் கூச்ச சுபாவம் உள்ளவன். இரண்டாவது, பலர் முன்னிலையில் வைத்து அவள் என்னை அவமானப்படுத்தி விடுவாளோ என்ற பயம். எனது பிரச்சினையைத் தீர்த்து வைப்பீர்களென நிச்சயமான எதிர்பார்ப்புடன் முடிக்கிறேன்.**

குணா, சங்கானை

* கல்லூரிகளில் க.பொ.த. சாதாரணம், உயர்தரம் முதலிய வகுப்புகளில் படிக்கின்ற மாணவ மாணவிகளிடமிருந்து காதல் பிரச்சினை பற்றி வந்து குவிகின்ற கடிதங்களில், ஓர் ஆசிரியரின் கடிதமும் மாட்டிக் கொண்டிருக்கிறதே. ஆசிரியர் என்ற போதிலும் நீரும் ஓர் இளைஞர், உமக்கும் உள்ளமும் உணர்ச்சிகளு மிருப்பதால் உமது பிரச்சினைக்கு ஆலோசனை கேட்டிருப்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறொன்றும் இல்லை. உமது பாடசாலையில் கணிதம் கற்பிக்கும் அந்த ஆசிரியையைக் காதலிப்பதாக எழுதியுள்ளீர். இது ஒரு தலைப்பட்சக் காதலாகவே தெரிகிறது. ஏனெனில் அவளுடன் இதுவரை நீர் கதைக்கவேயில்லை. காதல் என்பது இருவருக்கிடையிலும் ஏற்பட வேண்டும். சரி, இனிப் பிரச்சினைக்கு வருவோம்.

நீங்கள் இருவரும் மதத்தால் வேறுபட்டவர்கள் . உமது கூச்ச சுபாவம் அவளுடன் பேசத்தடுக்கிறது. உமது காதலை நீர் அவளிடம் வெளிப்படுத்தினால் அவள் ஏசி அவமானப்படுத்தி விடுவாளோ என்ற உமது அச்சம், இவை மூன்றுமே உமக்கு முன் உள்ள பிரச்சினைகள்.

சாதி, மத, இன வேறுபாடுகள் இன்று நிஜமாக உறுதியுடன் மனமொன்றிக் காதலிப்பவர்களினால் நொறுக்கப்பட்டு, அவர்கள் சந்தோஷமாகத் திருமண வாழ்வில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது. அதனால் அது இக்காலத்தில் ஒரு பெரிய தடைக்கல் அல்ல. உமது கூச்ச சுபாவத்தை நீரே சரி செய்ய வேண்டும். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்ற நிலையில் இருக்கக் கூடாது. காதலிப்பதற்குத் துணிவும் நம்பிக்கையும் வேண்டும். அது இல்லாவிட்டால் ஒரு தலைப் பட்சக்காதலை மனதிற்குள் மூடி மறைத்துக் கொண்டு வாய்ப்பை நழுவ விட வேண்டிய நிலை ஏற்படும். அப்பெண்ணும் ஓர் ஆசிரியை. படித்திருப்பவள், பண்பும் இருக்கும். கூச்சத்தை ஒதுக்கிவிட்டு பண்பாகவும் இதமாகவும் சக ஆசிரியர் என்ற வகையில் முதலில் மெதுவாக விஷயங்களைக் கதைக்கத்துவங்கும் எடுத்த எடுப்பில் "ஐ.லவ் யூ" சொல்லிக் கோபத்தை ஏற்படுத்த வேண்டாம். அவசரப்படாமல் கதைக்கவும். சந்தர்ப்பம் வாய்க்கும் போது முதலில் உமது பின்னணி பற்றி எடுத்துக் கூறும். அவளாகவே தன்னைப் பற்றியும் கூற முன் வருவாள்.

அவளுக்கு ஏற்கனவே பெற்றோர் பொருத்தமான ஒருவரை நிச்சயித்திருக்கலாம். அல்லது அவள் வேறு யாரையாவது காதலிக்கலாம். இவற்றை அறிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு உமது விருப்பத்தை வெளிப்படுத்தக்கூடாது. வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் நீர் அவளை வாழ்த்திவிட்டு மறந்துவிட வேண்டும். அப்படி ஏற்பாடுகள் எதுவும் இல்லையெனில் அவளும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினால் காதலைத் தொடரலாம். இருவரும் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் உங்களிடையே அதிகரித்த புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? என் பிரச்சினை ஒன்று இரண்டு அல்ல. அவற்றில் தற்பொழுது மன உறுத்தலான ஒரு சில விடயத்தை வேதனையுடனும் கண்ணீருடனும் எழுதுகிறேன். நீங்கள் தான் தகுந்த ஆறுதலைத் தரவேண்டும். நான் சிறு வயதிலிருந்தே ஒரு வேற்றின குடும்பத்துடன் நட்பாக இருந்து வந்தேன். அவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்று யாருமே என்னிடம் கூறியதில்லை. அதாவது ஊரில் ஒதுக்கப்பட்டவர்கள். இவர்கள் சென்ற வருடக் கடைசியில் நான் கூறியதாக ஒரு கதையை சம்பந்தப்பட்டவர்களிடம் கூறி ஊரில் மானத்தை வாங்கிவிட்டார்கள். நான் அப்படியொன்றும் கதை கூறவே இல்லை. அதன் பின் நான் அவர்களுடனான தொடர்பை முற்றாக நிறுத்திக் கொண்டேன். என் வீட்டுக்கு பக்கத்து வீட்டில் இருக்கும் இரு நண்பிகளை நான் உயிராக நேசித்தேன். ஆனால் அவர்கள் அவர்களது தேவையை நிறைவு செய்யும் மட்டும் என்னை உபயோகித்துக் கொண்டார்கள். ஆனால் என்னோடு கதைக்கும் போது நன்றாகச் சிரித்துக் கதைப்பதால் நான் பழைய சோகங்களை எல்லாம் மறந்து சந்தோஷமாக இருப்பேன். அவர்களும் சரி அவர்களுடைய குடும்பத்தில் எல்லோருஞ் சரி, அவர்கள் சிரித்து கதைப்பார்கள் இல்லாவிட்டால் கண்டாலும் காணாமல் செல்வார்கள். இப்பொழுது இருவரும் நான் கூறிய அந்த குடும்பத்துடன் இணைந்து பழிவாங்குகிறார்கள். நான் நடத்தை கெட்டவள் என்றும் என்னுடன் யாரும் கதைக்க வேண்டாம் என்று நிறையப் பேரிடம் கூறியதாக என்னிடம் வந்து கூறினார்கள். நான் ஒருவரைக் காதலிப்பதை அவர்களிடம் கூறியிருந்தேன். அவர் அந்த வேற்றினக் குடும்பத்துடன் தீவிர நட்பு. நான் எத்தனையோ முறை அந்த வீட்டுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அளவோடு நிறுத்திக் கொள்ளும் படியும் கூறினேன். அவர் கேட்கவில்லை. நானும் அலுத்துப் போய்விட்டு விட்டேன். சிகரட் பழக்கமும் அவருக்கு உண்டு. அதையும் நான் வருடக் கணக்காகக் கூறியும் நிறுத்தவில்லை. இதன் காரணமாக எனக்கு அவர் மேல் நம்பிக்கை குறைந்துவிட்டது. உங்களிடம் மனம் விட்டுக் கூறுகிறேன். அவர் வெளி நாட்டுக்கு இரண்டு மாதத்தில் செல்லவுள்ளார். அதற்குள் என்னைப் பாலியல் பலாத்காரம் செய்து விட்டு செல்லச் சொல்லி வற்புறுத்தியுள்ளார்கள் அந்த வீட்டுப் பெண்கள். இப்படி மனதில் விஷத்துடன் பழகுபவர்களுடைய நட்பு தேவையா? என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காதலன் ஏற்கனவே ஒரு முறை சந்தேகப்பட்டு என்னை விட்டு விட்டார். அதன் பின் ஒரு பெண்ணைக் காதலித்தார். தற்பொழுது நீதான் முதலும் கடைசியும், இனி யாரையும் மணக்கமாட்டேன் என்று கூறினார். இது எனக்கு மன உறுத்தலாய் உள்ளது. இதனால் பெற்றோர் அமைத்துத் தரும் வழியை ஏற்க உள்ளேன். நான் அவரை விட்டது தவறா? எனக்கு நண்பி யாருமில்லை நீங்கள் தான் ஆறுதல் கூற வேண்டும்.**

அபி, வவுனியா

* நீர் படித்துவிட்டு வீட்டில் தொழில் எதுவுமின்றி இருப்பதாக நினைக்கிறேன். நிறைய உமக்கு நேரம் கிடைப்பதால் போலும் நேரத்தைக் கழிப்பதற்காக நண்பிகள், கதைத்துப் பழகுவதற்காக வீடுகள், காதல் என்று அவர்களைப் பற்றிய பின்னணி, அவர்களின் குணநலங்கள் மற்றும் தன்மைகளை மட்டிட்டுக் கொள்ளக் கூடிய அனுபவமும்அறிவு முதிர்ச்சியும் போதாத அப்பாவிப் பிள்ளையாக இருக்கிறீர். அதனாலேயே மாறி மாறி உமக்குப் பிரச்சினைகளும் ஏமாற்றங்களும் வந்து கொண்டிருக்கின்றன. கூடாதவர்கள் என்று உணர்ந்த பின் அவர்களின் சகவாசத்தை ஒதுக்கி விடுவது புத்தி சாலித்தனமானது. ஏச்சுப் பேச்சுகளைப் பொருட்படுத்த வேண்டாம். அவற்றைக்கண்டு பெரிதாக மனதைச் சஞ்சலப் படுத்திக் கொள்ளவும் கூடாது. வீட்டில் நீர் அமைதியாக இருந்து நல்ல நூல்களைப் படிப்பதிலோ, தையல் வேலை, கம்பியூட்டர் பயிற்சி போன்றவற்றில் ஈடுபடுவதிலோ உமக்கு ஆறுதல் ஏற்படும். மனமும் ஒரு நிலைப்படும். தேவை ஏற்பட்டால் வெளியே செல்லும் போது உமது பெற்றோருடன் செல்லப் பழகிக் கொள்ளவும். நண்பிகள் என எவரையும் நம்பி தேவையில்லாத கதைகளை வளர்க்க வேண்டாம். முடிந்தளவு அந்த வீட்டைச் சேர்ந்த எவரையும் சந்திப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும். ஏமாற்றுக் காரனான உமது காதலனுக்கு நீர் முழுக்குப் போட்டு விட்டது சரியே. உமது பெற்றோர் பொருத்தமான ஒருவரைக் கூடிய விரைவில் உமக்குத் திருமணம்செய்து வைத்து அக் கணவருடன் நீர் வேறொரு ஊரில் சில காலம் வாழ்வதன் மூலம் பழைய குப்பைகளை எல்லாம் மறந்து மகிழ்ச்சியாக எதிர் காலத்தில் வாழ முடியும் .

✉ ✉ ✉ ✉

**? எனது வயது 26, A/L வரை படித்துள்ளேன். தற்போது வீட்டில் இருந்து கொண்டு கணினி வகுப்புகளுக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்லுகிறேன். நான் மூன்று ஆண்டுகளாக ஒருவரை விரும்புகிறேன். அவரும் என்னை விரும்புகிறார். திருமணம் செய்து கொள்ளவும், ஆயத்தமாக இருகிறார். ஆனால் பிரச்சினை என்னவென்றால் அவர் வெள்ளாளர்குலம், நானோ பள்ளர் குலம், திருமணத்துக்குப் பின் அவர் வீட்டில் இருந்து பிரச்சி னைகள் உண்டாகுமா? என் பெற்றோருக்கு விசயம் தெரியும். அதனால் எதிர்க்கின்றார்கள். இதற்கு நல்ல அறிவுரை கூறுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.**

செவ்வந்தி , தாவடி

* காதலுக்குத் தடையாகவுள்ள இன, மத, சாதி மற்றும் அந்தஸ்துகள் ஒழிக எனச் சிறுகதைகள், நாவல்கள், திரைப்படங்கள், மேடைப்பேச்சுகள் முதலியவை கர்ஜித்த போதிலும், வாழ்க்கையில் இவற்றை எதிர்கொள்ளுகின்றபோதுதான் பிரச்சினையின் ஆழத்தையும் கஷ்டங்களையும் நிஜமாக உணர முடிகிறது. உமக்குத் திருமண வயது வந்து விட்டது. உமக்குப் பிடித்தமான வரையும் தேர்ந்து எடுத்துக் காதலிக்கத்துவங்கி விட்டீர். இந்த மூன்று ஆண்டுகளில் இருவரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டிருப்பீர்களென நினைக்கிறேன். காதலித்தால் மட்டும் போதாது. எந்நிலை வந்தாலும் இணைந்து வாழ முடியும் என்ற நம்பிக்கையும் துணிவும் இருவருக்கும் இருக்க வேண்டும். இருபகுதிப் பெற்றோர்களின் எதிர்ப்பு உங்கள் இருவரை எதிர் நோக்கியுள்ளது. பெற்றோர்கள், சுற்றம் என்ற பாசக் கட்டுகளை உதாசீனப்படுத்தி உடைத்துக் கொண்டு வெளியே வந்து இணைந்து கொண்டு வாழமுடியும் என்ற துணிச்சல் இருவரிடமும் உறுதியாக இருந்தால் மட்டுமே தொடர்ந்து முன்னோக்கிக் காலடி எடுத்து வையுங்கள். ஆரம்பத்தில் அட்டகாசம் போட்டு எதிர்த்தாலும் காலப்போக்கில் இருபகுதிப் பெற்றோர்களும் கோபம் தணிந்து நீங்கள் வாழுகின்ற வாழ்க்கையின் சீரையும் சிறப்பையும் பார்த்து இறங்கிவர வேண்டியதுதான். இப்படி மண முடித்துச் சிறப்பாக மகிழ்வாக வாழும் பல ஜோடிகளின் வாழ்க்கையையும் பின்னர் கோபம் தணிந்து பிள்ளைகளைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு, பேரப்பிள்ளைகளைப் போட்டி போட்டுக்கொஞ்சிக் குலவும் பெற்றோர்களையும் நான் நன்கு அறிந்திருக்கிறேன். பிள்ளைகளின் மகிழ்ச்சிபொங்கும் வாழ்க்கை தான் பெற்றோரின் திருப்தியென்பதை மறுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? எனக்கு சில விஷயங்கள் மனதிற்கு கஷ்டமாக இருக்கிறது. எனது மன ஆறுதலுக்காவும், எப்படி இந்த விஷயத்தை நான் அணுக வேண்டும் என்பதற்காகவும் கொஞ்சம் புத்தி சொல்லுங்கள். எனக்கு வயது 18 எனக்குத்திருமணமாகி விட்டது. எனது கணவரின் வயது 20 அவர் என்மீது மிகவும் பிரியமும் பாசமும் உள்ளவர்தான். என்றாலும் சினிமா என்றால் அவருக்குச் சாப்பாடும் வேண்டாம். ஒரே பைத்தியம். படம் பார்ப்பதில் அவருக்கு சலிப்பே இல்லை. 4 படம் கூட ஒரு நாளில் பார்த்து முடிப்பார். எனது பிரச்சினை என்ன வென்றால், எனது கணவருக்கு நான் ஒரு சினிமா நடிகை போல, ஆட வேண்டுமென ஒரே ஆவல். எனக்கோ வெறுப்பும் கோபமுமாக இருக்கிறது. எனக்கொரு வழி கூறுங்கள்**

அமுதா, தெல் தெனியா

* பக்கம் பக்கமாக வரையப்பட்டிருந்த உமது கடிதத்தைச் சுருக்கி உமதுகேள்வியின் சாராம்சத்தை மட்டும் குறித்துள்ளேன். இன்றைய இளைஞர்கள் சினிமா மோகத்தில் மூழ்கி, வாழ்வின் அர்த்தத்தையும் ஆழத்தையும் அறியாதவர்களாக வெறும் மாயை யில் உழல்வதை அனுபவத்தில் கண்ட பெரியவர்கள் சினிமாவின் மீது பழி சுமத்துவது உண்மைதான். ஆனால், சினிமாவோடு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டால் அவர்கள் நடனம், ஓவியம், இசையோடு தொடர்பான கலைகளையும், அலங்காரம், "செட்டு"கள் அமைத்தல் போன்ற கலைகளை வளர்க்கவும், கருத்துக்களைத் தெட்டத் தெளிவாகப் புலப்படுத்தவும், மொழி, கவிதை, பாடல், உரையாடல் முதலியவற்றை வளப்படுத்தவும் பல்வேறு வகையான கலைஞர்களை வளர்த்தெடுக்கவும், கூடிய ஒரு தொழிற் பண்ணையாகத் தமிழகத்தில் சினிமாத்துறை விளங்குகிறது என்கின்றனர்.

மிகவும் காத்திரமும் கனதியுமான இவ்வூடகத்தின் மூலம் பல அரிய வரலாறுகளையும், சரித்திரபூர்வமான சம்பவங் களையும், அபூர்வமாக மக்கள் மனதில் பதியவைக்கும் சாதனமாக சினிமா விளங்குகின்றது. முதல் தரமான ஊடகமாக விளங்கும் சினிமா மூலம் பல நல்ல அறிவுரைகளை புட்டுவைத்து மக்களைச் சிந்திக்கத்தூண்டி வாழ்க்கையை நெறிப்படுத்த சினிமாவினால் முடியும். திரைப்படங்கள் சில தமது கருது கோளைத் தவறவிட்டு விட்டதால் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக முடிந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சினிமா யாவுமே அப்படியானவையென்று தூக்கி வீசிவிட முடியாது. சினிமாத் தயாரிப்பாளர்கள் பல கோடி பணச் செலவில் பல நாட்கள் அநேக கலைஞர்களை ஒன்றிணைந்து, உழைத்துப் படத்தை நிறைவு செய்கின்றனர். இப்படங்கள் எல்லா மட்டத்திலும் வெவ்வேறு அனுபவம், ரசனை, கலைத்துவம் என்ற தரங்களிலுள்ளவர்கள் மத்தியில் திரையிடப்படுகின்றன. பன்னாடை போல தேவையான ரசத்தை ஒழுக விட்டு விட்டு வெறும் கழிவுகளையே வடித்து வைத்துக் கொள்ளாமல், அவற்றிலுள்ள நல்ல கருத்துக்கள், காட்சிகள், கலை நுட்பங்கள் என்பவற்றை ஏற்றுச் சுவைத்துக் கொள்வதோடு எமது அறிவு மட்டத்தை உயர்த்துவதை நாம் இலக்காகக் கொள்ள வேண்டும். அதை விடுத்து, சினிமாவில் வரும் நடிகரைப் போல நம்மைக் கற்பனை பண்ணிக் கொண்டு ஆடுவதும் கூத்தாடுவதும் கலைசார்ந்த ரசனையிருந்தாலும் கூட, அறிவு சார்ந்த வளர்ச் சியாகக் கொள்ள முடியாது. நீர்க்குமிழியைப் பார்த்து உண்மை யென மனதைத் தொலைப்பதாகவே அமைந்து விடும்.

உமது கணவர் மட்டுமல்ல இளம் வயதினர் பலர் இப்படிச் சினிமாக் கனவுகளில் தம்மைத் தொலைத்து விட்டு உண்மையை உணரும் போதுதான், அதன் வெறுமையை விளங்கிக் கொள்வர் அறிவர். இதற்காக தான் இளமைப் பருவத்திலிருந்தே பிள்ளைகள் நல்ல விஷயங்களை அறியவும் உணரவும் சுவைக்கவும் கூடிய முறையில் அவர்களை நெறிப்படுத்த வேண்டுமெனக் கல்வி யாளர்கள் மிகக் கவனிப்புடன் இருப்பர்.

சினிமாவில் வரும் காட்சிகள், அலங்காரங்கள், பாடல்கள், இசை என்பன எல்லாமே கவர்ச்சியையும் நேயர்களின் மனதை எப்படியும் கொள்ளை கொள்ளக் கூடிய விதத்திலுமே அமைக் கப்பட்டிருக்கும் ஆதலினால் கிளுகிளுப்படையும் இளம் உள்ளங்கள் அக்காட்சிகளிலேயே லயித்து, மனதை பறிகொடுத்து அதன் வசமாகிவிடுகின்றனர். தமது சொந்த வாழ்விலும் அக்காட்சிகளை கண்டு களிக்கும் கனவுகளில் மூழ்கிவிடுகின்றனர். அதன் பலனே நேரகாலந் தெரியாமல், சினிமா உலகிலேயே சஞ்சரிக்கும் வாழ்க்கையைத் தொடருகின்றனர். சினிமா வேறு, நமது சொந்த வாழ்க்கை வேறு, இதனை உமது கணவர் உணரச் செய்யவும், சினிமா நல்லதொரு கட்புலசாதனம். கண்ணுக்கு, மனதுக்கு, காதிற்கெல்லாம் இனிமையான காட்சிகளைக் கொள்ளை கொள்ளையாகத் தரும் என்பது உண்மை தான். உமது கணவருக்கு உண்மையை எடுத்துக் கூறிப் புத்தி சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியது உமது கடமை. நாம் தான் நம்மைக் கட்டுப்படுத்தி நல்லவற்றை மாத்திரம் பார்த்து ரசித்து நமது வாழ்வுக்கு அறிவார்ந்த விடயங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும். சினிமாவின் ஏனைய அம்சங்களை ஏற்காமல் தவிர்த்துவிட வேண்டும். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்றொரு பழமொழியும் உண்டு. வாழ்க்கையில் இளைஞர்கள் நல்ல இலட்சியங்களைக் கடைப்பிடிக்கும் போக்கு உள்ளவர்களாக வாழத்தலைப்பட வேண்டும்.

⊠ ⊠ ⊠ ⊠

**? எனக்கு வயது 24, சிறுவயதில் என்னிடம் சில ஆண்கள் தவறாக நடக்க முற்பட்டனர். நான் எப்படியோ தப்பித்து விட்டேன். இதனால் நான் ஆண்களை நம்புவதில்லை. அவர்கள் மேல் வெறுப்பு காதல், கல்யாணம் என்பது கூட எனக்குப் பிடிக்காது. நான் வேலை செய்யும் இடத்தில் நடப் பவைகளைப் பார்த்தால் கல்யாணமே வேண்டாம் என்கிறது மனம். கல்யாணமான ஆண்கள் நடந்து கொள்ளும் விதத்தை பார்க்கும் போது எப்படி ஓர் ஆணை நம்பி எம் எதிர் காலத்தை ஒப்படைப்பது? அதற்காக எல்லா ஆண்களையும் பிழை என்று சொல்லவில்லை. எப்படி நம்புவது என்று தான் கேட்கிறேன். ஒருவருடத்திற்கு முன் வீடு விஷயமாக கதைக்கப் போன இடத்தில் தாம் என்னைக் கண்டதாகக் கூறி ஒருவர் ரெலிபோன் மூலம் கதைத்தார். பிறகு அவர் அடிக்கடி எனக்கு ரெலிபோன் எடுத்தார். நான் அவரைச் சரியாக பார்த்தது கூட இல்லை. ஒரு மாதம் கூடப் பழக்கம் இல்லை. அதற்கிடையில் என்னை விரும்புவதாகக் கூறினார். காதலில் நம்பிக்கை இல்லாத எனக்கு கண்டதும் காதல் என்றதும் கோபம் வந்தது. என் வீட்டில் இதனைச் சொன் னேன். அவரை வீட்டுக்கு முறைப்படி வருமாறு சொல்லச் சொன்னார்கள். ஒரு காரியம் செய்ய வேண்டியுள்ளதால் அதனை முடித்துக் கொடுத்து விட்டு பெண் கேட்க வரு கிறேன் என்றார். காரணம் அவர் வேறு மதம். ஆகவே இந்தக் காரியத்தை செய்து முடித்தால் என் வீட்டில் எதிர்ப்பு இருக் காது என்று நினைத்தார். அதுவரையும் அவரிடம் அன்பாக ஒரு நண்பனைப் போல் பழகும்படி கேட்டுக் கொண்டார். மூன்று முறை நான் வேலை பார்க்கும் இடத்திற்கு வந்து போனார். அவரோடு எனக்குக் காதல் வரவில்லை. அவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல் செல்வாக்கு உடையவர். பகைத்துக் கொள்ளப் பயமாக இருந்தது. நண்பர்களாக இருப்போம் என்றால் விட மாட்டேன் என்கிறார். தனியாக காணவேண்டும் என்றார். மறுத்து விட்டேன். என்னை வேறு யாராவது மணக்க முன் வரவிடாமல் தடுப்பேன் என்றும், வீட்டார் சம்மதிக்கா விட்டாலும் என்னை எப்படியாவது கல்யாணம் முடிப்பேன் என்றும் சவால் விட்டார். எனக்குப் பயமாக இருந்தது. ஒரு நாளைக்கு குறைந்தது 10, 12 தடவைகளாவது எனக்கு ரெலிபோன் எடுப்பார். ஐந்து மாதங்களின் பின் திடீர் என அவனிடம் இருந்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. நானும் கதைக்கவில்லை. விட்டால் போதும் என்று இருந்தேன். பிறகு சரியாக ஒன்றரை மாதத்தில் எனக்கு தொலைபேசி எடுத்தார். தனது காரியம் சரி என்று அப்பாவிடம் சொல்லும்படி சொன்னார். மீண்டும் என்னுடன் போனில் கதைக்கத் தொடங்கினார். ஆனால் வீட்டுக்கு வரச் சொல்னால் முடியாது என்பார். இந்நிலையை புரிந்து கொண்ட என் நண்பி இவருடன் கதைத்து ஒரு முடிவுக்கு வருவோம் என்றாள். ஆனால் என்னை விரும்புவதாகச் சொல்லி என் நண்பியையும் விரும்புவதாக சொன்ன இவரைப் பற்றி நினைக்கும் போது பயமாக உள்ளது. எனக்குப் பெற்றோர் வேறிடத்தில் திருமணம் செய்து வைக்க முயற்சி எடுத்து வருகின்றனர். நான் என்ன செய்யலாம்? ஆலோசனை கூறுங்கள்.**

சரளா, கட்டுக்கலை

✻ பெண்கள் சிறுமிகளாக இருக்கும்போது, குடும்பத்தில் அல்லது அயலிலுள்ள ஆண்களால், அல்லது தனித்திருக்கும்போது வீட்டுக்கு வரும் ஆண்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவது அநேக இடங்களில் நடைபெறுகிறது. காயம், இரத்தப்பெருக்கு ஏற்பட்டாலன்றி பாதிக்கப்பட்ட இச்சிறுமிகள் பயத்தினாலும், வெட்கத்தினாலும் இதனைப் பெற்றோருக்குக் கூடச் சொல்லாமல் மறைத்துவிடுகின்றனர். அண்மையில் ஒரு மிருகம் தனது மகள் மீது கூடப் பாலியல் துஷ்பிரயோகம் புரிந்தது என்ற செய்தியைப் பத்திரிகையில் படித்தேன். நீர் புத்திசாதுரியம் மிக்கவரென்பதால் இப்படியான சேட்டைகளிலிருந்து தந்திரமாக தப்பி விட்டீர். சிறுவயதில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் சிறுமிகளின் மனங்களில், அவற்றை அவர்கள் வெளியே சொல்லாவிட்டாலும், மனதிலே ஆண்கள் வெறி கொண்ட பேய் பிசாசுகள் என்ற பயமும் வெறுப்பும் நிலைத்திருக்கும். இதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவதற்குச் சிறந்த மனோதத்துவ நிபுணர்களின் ஆலோசனையும் பரிகாரங்களையும் பெற வேண்டும்.

இப்போது உமது பருவத்தில் உமது தசையைப் பசியாற ஒருவன் காதல் எனக் கூறி நாடகமாடுகின்றான். கண்டவுடன் காதல் என்ற ரீதியில், உமது அழகையும் உடலையும் கெடுத்து விட்டு நழுவ முயற்சிக்கும் நழுவல் பேர் வழியாகவே அவன் காணப்படுகின்றான். உமது நண்பியையும் காதலிப்பதாகக் கூறுகிறீர், அவனது நிலையற்ற மனநிலையைப் புரிந்து கொள்ள முடிகிறது. அவன் அரசியல் செல்வாக்குள்ளவன் என நீர் குறிப்பிட்டிருப்பதால், உம்மைப் போலியாக வெருட்டி தனது நோக்கத்தை மேற்கொள்ளத் துடிக்கிறான். பெற்றோருக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தி, அவசியமானால் பொலீசிலும் பாதுகாப்புக்காக முறைப்பாடு செய்யவும், எனினும் அவர்கள் இவ்வாறான விஷயங்களில் வெகு அசமந்தமாகவே நடவடிக்கையெடுப்பார்கள் என்பது நாடறிந்த சங்கதி. வேலை செய்யும் இடங்களில் ஆண்களினால் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருவதைத் தடுப்பதற்காகப் பெண்களின் உரிமைகளுக்கான அமைப்புகள் பல வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்ற போதிலும் முழுமையாக இவ்வாறான சம்பவங்கள் ஒழியவில்லை.

சட்டங்களினால் மட்டுமே இவற்றை நீக்க முடியாது. அச் சட்டங்களைச் சரியாக நடைமுறைப்படுத்துவோரும் விழிப்பாக இருந்து ஜரூராகக் காரியமாற்றினாலேயே ஓரளவுக்கு இவ்வாறான சம்பவங்களை போக்கடிக்க முடியும். வேலைத் தலங்களில் ஆண்களின் தொல்லை தாங்க முடியாத துணிச்சலான சில பெண்கள், கால் செருப்புகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். எல்லாப் பெண்களுக்கும் அத்தகைய துணிவு இல்லை.

வேலைத் தலங்களில் பணியாற்றுகிற சாதாரண ஆண்கள் மட்டுமல்ல, நிர்வாகத்திலுள்ள அதிகாரிகள் சிலரும், பதவி உயர்வு, கூடுதல் சம்பளம், சந்தோஷமூட்டிக் கவரச்செய்யும் பரிசுப் பொருட்கள் முதலியவற்றைத் தாம் குறி வைக்கும் பெண்களுக்கு அன்பளிப்புச் செய்து ஆசைகாட்டி மோசஞ் செய்வதுமுண்டு. எதற்கும் பெண்கள் எச்சரிக்கையாக இருக்காவிட்டால் சீரழிய வேண்டியது தான். இவற்றையெல்லாம் மனதில் போட்டுக் குழப்பிக் கொண்டு முழு ஆண் சமுதாயத்தையுமே வெறுப்பதோ தள்ளி வைப்பதோ சரியல்ல.. ஆண்களில் அநேகர் நற்பண்புகளையும் மனப்பாங்கையும் புரிந்து கொண்டவர்கள். உமக்குத் திருமணவயதாகி விட்டது. இனியும் தயங்கிக் கொண்டிருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம். உமக்குப் பொருத்தமான உம்மை நன்கு புரிந்து கொள்ளக் கூடிய ஒருவரை உமது பெற்றோர் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைக்க வேண்டியது அவசியம்.

✉ ✉ ✉ ✉

**? நான் உங்கள் அபிமான வாசகி. நீங்கள் எழுதி வெளிவந்த கதைகள் கட்டுரைகளைத் தவறாது படித்துள்ளேன். வாரா வாரம் கேசரியில் வெளிவரும் "நெஞ்சுக்கு நிம்மதி" என்ற பகுதியை நானும் எனது ஆசிரிய குழாமும் தவறாமல் படித்து அதைப்பற்றிய அபிப்பிராயங்களையும் கலந்துரையாடு வோம். உங்கள் சேவையை மெச்சுகின்ற அதே வேளையில் பாடசாலையில் கற்பிக்கும் இளம் ஆசிரியர்களாகிய நாம் எமது மாணவச் செல்வங்களுக்கு அறிவூட்டலோடு மாத்திரம் நில்லாமல் சேவை மனப்பாங்கையும் புகுத்துவதற்கு என் னென்ன உபாயங்களைக் கையாளலாமென்பதை அனுபவ மிக்க ஆசிரியராகவும் ஆற்றல் கொண்ட கல்லூரி அதிபரா கவும் பணிபுரிந்த உங்களிடம் கேட்க விரும்புகிறோம்.**

சாதனா, மொரட்டுவை

* மாணவர் மிக மிக அக்கறை கொண்ட ஆசிரியராக உம்மை இனம் காண்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களிற் பலர் இப்பகுதியை வாசிப்பதாகக் கூறியிருப்பது எனக்கு உற்சாகம் அளிக்கிறது.

மாணவரைச் சமூக சேவையில் நாட்டங்கொள்ளச் செய்வதென்பது மிக முக்கியமான அம்சமே. இதனை இளம் பருவத்திலிருந்தே கற்றுக் கொள்வது என்பது மிகவும் வரவேற்க வேண்டிய செயல். அநேகமான சிறு பிள்ளைகள் வீட்டில் பெற்றோர் கூறுவதைவிட வகுப்பில் ஆசிரியர் கூறுவதையே வேத வாக்காக ஏற்றுக் கொள்வர். இது நான் எனது சொந்த அனுபவத்தில் கண்ட உண்மை. எனவே நாளிலும் பொழுதிலும் மாணவர்க ளோடு பழகும்போது சமூகத்திற்காகச் சேவை செய்த பெரியவர்க ளுடைய வாழ்க்கை வரலாறுகளில் சில சம்பவங்களை விளக் கமாகப் பிள்ளைக்கு எடுத்துக் கூறி சேவையின் மகத்துவத்தைச் சொல்லிக் கொடுக்கலாம். சாதாரண பெண்ணான அன்னை தெரேசா ஆசிரியர் தொழிலை மேற்கொண்டிருந்தவர். அவர் எவ்வாறு வறியவர்களுக்கும், தொழுநோயாளிகளுக்கும், ஊனமுற்றோருக்கும், வாழவழியின்றித் துயர் மிகுந்தோருக்கும் அன்பும் ஆதரவும் நல்கி உறுதுணையாக இருந்து ஆறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார்? ஆயிரக்கணக்கான மக்களை அன்பாக ஆதரித்து உதவி செய்தார். அவருடைய சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவருக்கு நோபல் பரிசே அளிக்கப்பட்டது.

எமது நாட்டிலும் சேவை மனப்பான்மை கொண்ட பெரியவர்கள், பல அமைப்புக்கள் மூலம் யுத்தத்தினால் பாதிப்புற்றோரை, கதியற்றோரையெல்லாம் மனதில் கொண்டு, அவர்களுக்கு உதவுவதற்காக அகதிமுகாம்கள், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்கள் எனப் பல அமைப்புக்களை ஏற்படுத்திச் சேவைகளை ஆற்றுகின்றனர்.

சேவையாற்ற ஆர்வமுறுவதே ஒரு நல்ல அடையாளம். மாணவர்களை இத்துறையில் வழிநடத்த நினைக்கும் உங்கள் ஆர்வத்தை மிக மிகப் பாராட்டுகின்றேன். எங்கேயோ பத்திரிகையில் வாசித்த விடயம் ஒன்று எனது ஞாபகத்தில் வருகிறது. அமெரிக்காவில் நீண்ட காலம் வாழ்ந்த ஒரு தமிழர் கூறியதாக ஞாபகம். மேலைத் தேசங்களில் பெரிய வாசிகசாலைகளில் சம்பளமெதுவும் பெறாமல் சேவை செய்பவர்களை அதிகமாகக் காணலாம். புத்தகங்களின் அருமை வாசிகசாலைகளின் பெருமையை உணர்ந்த பல பள்ளி மாணவர்கள் பெரியவர்களும் கூட, புத்தகங்களுக்கு இலக்கமிடுவது அவ்வப்பிரிவுக்கான லேபல்களை ஒட்டுவது, பார்வையற்றோருக்கெனப் பேசும் நூல்களை பதிவு செய்வது ஆகிய வேலைகளில் ஈடுபடுவார்களாம். எமது பாடசாலை மட்டங்களில் வகுப்பறைத் தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றை ஒழுங்காகவும் சுத்தமாகவும் வைத்திருக்கப் பழக்குதல், அடுத்தடுத்த வகுப்பறைகளின் சுத்தங்களையும் கண்காணித்தல், விளையாட்டு மைதானம், நீர்க் குழாயும் சுற்றுப்புறங்களும், கழிவு இடங்கள், கூடையும் குப்பை போடும் இடங்களும், ஒழுங்காக சுத்தமாக இருக்க வைத்தல் முதலியவற்றில் மாணவர்களுடைய கவனத்தைத்திருப்பலாம்.

வகுப்பில் அமைதி பேணுதல் , பிரார்த்தனை நேரம்,தமிழ் இலக்கிய மன்றங்கள் என்பவற்றில் ஒழுங்கையும் அமைதியையும் கடைப்பிடித்தல் என்பனவும் மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியவையே. பிறருக்கு உதவ முன்வருமுன் அவர்களுக்கு எவ்வித இடைஞ்சல்களும் உபத்திரவங்களும் கொடுக்காமல் இருப்பதே முதலில் வேண்டியது. அதன் பின்னர் படிப்படியாக பிறரிடம் செயற்பாடுகளின் மூலம் அன்பு காட்டுதல். பரிவு கொள்ளல் எனத் தொடங்கி நேரடியாகவே உதவி செய்ய முன்வரப் பழக்குதல் வேண்டும். அறையில் ஆடிய பின்பே அம்பலத்தில் ஆட வேண்டும் என்பது ஒரு பழமொழி. அப்படியே வகுப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றையில் பாடசாலையில் சுற்றுப்புறச் சூழலில், வீட்டில் எனச் சேவை செய்வதன் மூலம் பரப்பு விரிவடைய வேண்டும்.

இப்படி ஒழுங்கும் கடமையுணர்வும் பிறர்நலத்தில் கருணையும் கொண்ட மாணவர்களாக அவர்களை வளர்த்த பின், அவர்கள் உயர்வகுப்புக்கு வந்ததும் ஆசிரியர்களுடைய அல்லது அதிபருடைய மேற்பார்வையின் கீழ் ஆஸ்பத்திரிகள், வழிபாடு செய்யும் தலங்கள், முதியோர் இல்லங்கள், நூல் நிலையங்கள் முதலிய பொது இடங்களில் பொது நலம் கருதிய சேவைகளில் ஈடுபடத் தூண்டிவிட வேண்டும். அவ்விடயங்களில் சேவையாற்றப் பழகுவதனால் அனுபவரீதியாக பல விசயங்களை மாணவர்கள் அறிவதோடு தலைமைத்துவம், சேவை மனப்பாங்கு, அறிவுத் தீட்சண்யம், முதலியவற்றையும் பெற்றுக் கொள்வர்.

மாணவர்களைப் பொதுச் சேவையில் ஈடுபடத் தூண்டி விடும் ஆசிரியர்கள் தாமும் பொதுநலச் சேவையில் கூடிய ஈடுபாடு கொண்டவராகவும், பேச்சுக்கும் புகழுக்கும் என்றில் லாமல் அர்ப்பணிப்போடு சேவையாற்றும் மனப்பாங்கு கொண்ட வராகவும், மாணவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் இருக்க வேண்டியதும். இத்தகைய ஆசிரியர்களின் நடத்தையினால் மாணவர்கள் தாமாகவே கவரப்பட்டுப் பின் தொடர்வார்கள்.

✉ ✉ ✉ ✉

**? நான் ஒருவரைக் காதலிக்கின்றேன். அவரும் என்னை உயிராய் நேசிக்கின்றார். ஆனால் அவரை நானும், என்னை அவரும் இதுவரை பார்த்துக் கொண்டதே இல்லை. இரண்டு வருடங்களில் இந்தக் காதல் வேர்பிடித்துவிட்டது. இதிலென்ன பிரச்சினையென்றால் எனக்கும் அவருக்கும் ஒரே வயது. ஆரம்பத்தில் நான் விளையாட்டாக பிறந்த ஆண்டை மாற்றிக் கூறி விட்டேன். பின்பு எமக்குள் காதல் வெளிப்பட நான் அவரின் காதலை ஏற்க மறுத்தேன். நாட்கள் கடக்க அவரின் கடித அணுகுமுறை தவிர்க்க முடியாமல் என்னுள் காதலை உருவாக்கிற்று. நானும் சம்மதம் சொல்லி விட்டேன். அவர் பல்கலைக்கழகத்தில் முதல்வருடத்தில் படிக்கிறார். நான் க.பொ.த உயர்தரம் தனிப்பட்ட ரீதியில் சென்ற ஆண்டு பரீட்சை எடுத்தேன். ஆனால் அவருக்குத் தெரியாது. அவர் எனது மனதும் அன்புமே அவருக்கு பிடித்துள்ளது என்கிறார். அடிக்கடி சந்திக்க வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுகிறார். நானோ மறுத்து நாட்கள் போகட்டும் என்றேன். நான் பெரிய**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியும் கிடையாது என்னைப் பார்த்த பின்பு வெறுத்து விடுவாரோ என்றும் எனக்குப் பயமாயுள்ளது. அப்படி ஒரு நிலைமையை என்னால் தாங்க முடியாது. அவரைச் சேர வேண்டுமெனில் இன்னும் 4 வருடம் காத்திருக்க வேண்டும். எனக்கு வயது 21. அதுவரை காத்திருக்க என் வீட்டார் சம்மதிப்பார்களோ தெரியாது. அவரிடம் இந்த விடயங்களை எப்படிச் சொல்வேன்? என் காதலை மட்டும் அவர் சந்தே கிக்கக் கூடாதென இறைவனை இறைஞ்சுகிறேன். இது என் முதல் காதல். கடைசிவரை இந்தக் காதல் மட்டும் எனக்கு வேண்டும். அவரில்லாமல் எனக்கு இன்னொரு வாழ்க்கை யை கற்பனையில் கூட நினைக்க முடியவில்லை. அவர் ஒரு நல்ல திறமைசாலி. என் நிலை தெரிந்தால் அவர் விலகி விடுவாரோ என்ற பயம் என்னை உதைக்கிறது. எங்கள் தொடர்பு தொடர்கிறது. அவரை சந்திக்காமலே இருப் போமா என்றும் தோன்றுகின்றது. ஆனால் உண்மைக் காதலை மனதிற்குள் சுமக்கிறேன். என் விளையாட்டு என் வாழ்க்கையில் விளையாடுகிறது. என் வேதனை தீரவில்லை. அவரும் பல தடவை உங்களுக்கு என்ன பிரச்சினை என்னிடம் சொல்லுங்கள், ஏன் சில விடயங்களை மறைக் கின்றீர்கள். எனக் கேட்டுக்கொண்டிருக்கிறார். என் காதல னுடன் வாழ என்ன செய்ய? அவரைச் சந்திக்கவா? உங்களது ஆலோசனையை எதிர்பார்த்து ஏங்குகின்றேன்.

தேவிகா, வந்தாறுமூலை

* நீர் A/L உயர்தரம் படித்து 21 வயதை எட்டிய இளம் பெண்.கல்வி என்பது மனஉறுதியையும்அறிவையும் தன்னம் பிக்கையும் தருவது. இந்தளவு கல்வியோடு உமது வீட்டுச் சூழல், உமது எதிர் காலம் முதலியவற்றையும் யோசித்து சரி பிழையை விளங்கக் கூடிய வயதையெட்டி இருக்கிறீர். இரு வருடங்களாக வேர் பிடித்துக் கிளை பரப்பி விருட்சமான உங்கள் காதல் - நேரே ஒருவரை ஒருவர் காணாமலே மடல்கள் மூலம் வளர்ந்துள்ள காதல் - நேரேகண்டால் நீ பெரிய அழகியாக இல்லாதபடியால் உம்மை வெறுத்துவிடுவாரோ என்று நீர் பயப்படும் காதல்... இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்பது எனக்கு விளங்கவே இல்லை. காதல் கொள்பவர்கள் கூட தமது காதலி அழகியென்றால் தான் திருமணம், அழகி இல்லை என்றால் காதல் தோற்றுப் போய்விடுவதா?, அழகியாக இருப்பவர்கள் மட்டுமே மணம் செய்யலாம் அழகற்றோர் திருமணம் இன்றியே வாழ்வதா? ஏ.எல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை படித்த ஒரு பெண் இவற்றைப் பற்றியெல்லாம் ஏன் சிந்திக்க வில்லை? காதல் என்ற புனிதமான சொல்லை அநேகமான பெண்கள் சரியாகப் புரிந்துகொள்ளாமல் ஓர் இளம் ஆணைக் கண்டதும் காதல் என்று தமது பருவ உணர்வுகளுக்குப் பெயர் சூட்டிக் கொண்டு, தமது நிலை, தராதரம், கல்வி, பெற்றோர், அந்த ஆணின் கல்வித்தகுதி தன்மைகள் என எதனையுமே கருத்தில் கொள்ளாமல் தம்மை ஏதோ ரோமியோ - யூலியட் ஆகவோ பார்வதி - தேவதாஸ் ஆகவோ கற்பனை பண்ணிக் கொண்டு விசித்திர உலகில் சஞ்சரிக்க ஆரம்பித்து விடுகின்றனர். இவையெல்லாம் வெறும் அபத்தம். ஒருவரை ஒருவர் சந்திக்கா மலே, ஆளை ஆள் தெரியாமலே காதலிப்பது என்பதும், காத்து இருப்பது என்பதும், கல்யாணத்திற்காக அவசரப்படுவது என்பதும் ஏற்றுக் கொள்ள முடியாதவை. நீர் அழகில்லை என்பதற்காக நீர் விரும்புபவர் உம்மைத் தண்டித்து விடுவார் எனப் பயப்படுகின்றீர். அதேபோல நீர் இதுவரை நேரில் பார்க்காமலே காதலிப்பதாக எண்ணிக்கொண்டிருப்பவர் குருடனாகவோ அல்லது நொண்டி யாகவோ அல்லது குள்ளமாகவோ, குண்டாகவோ வேறேதும் குறையோடு உள்ளவராயின் நீர் என்ன செய்வீர்? வேண்டாம் என்று சொல்ல மாட்டீரா? வெளிச்சத்திலேயே சில விஷயங்கள் தெளிவில்லாத போது இருட்டிலே தெளிவு பெறலாமென நீர் எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்? எனவே வீண் சிந்தனை களில் மனதைப் போட்டுக் குழப்பாமல் உமது பரீட்சையில் சிறப்பாக எழுதி வெற்றி பெற முயற்சியெடும். கல்வி தன்னம் பிக்கையூட்டும், தற்றுணிவைத்தரும், பின்னர் நல்ல ஒரு தொழி லைத் தேர்ந்தெடுக்கக் கூடிய அளவுக்கு உயர்த்தும். இவை யெல்லாம் சரிவந்த பின்னர் காதலைப் பற்றி யோசிக்கலாம். நன்றாகப்படித்துச் சிறந்ததொரு தொழிலைத் தேடிக் கொள்ள விடாமல் குழப்புவதுதான் இந்தக்காதலும், பருவமயக்கங்களும். இவற்றையெல்லாம் களைந்தெறிந்துவிட்டு கல்வியைத் தொடரவும்.

✉ ✉ ✉ ✉

**? நான் தற்போது பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப் பட்டு அங்கு செல்வதற்குகாத்துக் கொண்டிருக்கிறேன். போரினால் 90 களில் தந்தையை இழந்த நான் கல்வி கற்றது ஹொஸ்டலில்தான். நான் தங்கியிருந்த ஹொஸ்டலில் எனக்கு நல்லதொரு நண்பி கிடைத்தாள். அவளுக்கு தாய் உயிரோடு இல்லை. இருவரும் மிகவும் ஒற்றுமையாகவும், சகோதர பாசத்துடனும் இருந்தோம். எங்களிடம் நட்பை விட**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகோதரபாசமே மேலோங்கி நின்றது. கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் எங்கள் உறவு தொடர்ந்தது. ஒரு நாள் அவள் தனது (சொந்த உறவுக்காரர்) பெண்ணுடன் ஹொஸ்டலை விட்டு விலகிச் சென்று விட்டாள். பிரிய முடியாமல் நாங்கள் அன்று கண்ணீருடன் பிரிந்தோம். அதன் பிறகு அவள் தனது சொந்த ஊரிலிருந்து கடிதங்கள் மூலம் தொடர்பு கொண் டாள். கடந்த ஒருவருடமாக அவளிடமிருந்து எந்த தொடர்பும் இல்லை. அவளது ஊருக்குச் சென்று உறவினர்களிடம் கேட்டேன். எங்கு இருக்கிறாள் என்பதைச் சொல்ல மறுக் கின்றார்கள். ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை. என்னால் அவளை மறக்க முடியாது. எந்நேரமும் அவளது ஞாபகங்கள் தான் என்னை வாட்டுகின்றன. மீண்டும் அவளுடன் தொடர்பை எவ்வாறு பெறுவது?**

சரிதா , ரம்பைக் குளம்

* தந்தையை இழந்த நீரும் தாயை இழந்த உமது நண்பியும் ஒரே வகையான துயருற்ற நிலையில், ஒருவருக்கொருவர் அன்பா கவும் ஆதரவாகவும் இருந்துள்ளீர்கள். யாருமற்றவர்களுக்கு அன்பு காட்டுவோர்தான் உண்மையான துணையென்பர். நல்ல அன்பாக ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு ஒன்றிரண்டல்ல, ஆறு ஆண்டுகாலம் நன்றாகப் பழகிய பின், திடீரென மறைந்து விடுவது போல உமது நண்பி உம்மைவிட்டுப் போனது ஆச்சரியமாகவே உள்ளது. ஏதாவது சண்டை சச்சரவோ, அல்லது கருத்து முரண் பாடுகளுடனோ பிரிந்திருந்தால் கதை வேறு. அப்படி எவ்வித அசம்பாவிதங்களுமின்றி நீர் காண்பித்த அன்பை அவள் மறந்திருப்பதை நம்பமுடியாமலே இருக்கிறது. கடிதத்தில் உங்கள் கண்ணீர் பெருக்கெடுத்தாலும், பிரிவுக்கு என்ன காரணம் என்பதை அவள் உமக்குத் தெரிவிக்காததோடு, பின்னர் கடிதமெழுது வதையும் நிறுத்தி விட்டாள். பிரிவு என்பது இவ்வுலகில் மிகவும் கொடுமையானது. தாங்க முடியாத வேதனை தருவது. யுத்தம் காரணமாக எமது பூமியில் எத்தனை குடும்பங்கள் சிதறிவிட்டன; பிரிந்து விட்டன, எத்தனை ஆயிரம் உயிர்கள் இத்தகைய பிரிவால் வாடித்துவண்டுபோயுள்ளன? கலங்கிக் கண்ணீர் சிந்துகின்றன. நினைக்கும் போதே மனம் கனக்கிறது. அவள் எங்கேயிருந்தாலும் உமது அன்பை எண்ணி உம்மைப்போல துடித்துக் கொண்டி ருப்பாளென நம்புகிறேன். எனினும் இன்றைய நாட்டின் சூழ்நிலை அவளை என்ன பாடுபடுத்தியுள்ளதோ, கூடப்பழகிய நண்பியான உமக்கு அவளுடைய மன இயல்புகள், போக்குகள் நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியிருக்கக் கூடும். பருவவயதென்பதால் யார்மீதாவது காதல் கொண்டு அதில் மூழ்கி உம்மை மறந்திருக்கவும் நியாயமுண்டு. அல்லாவிட்டாலும் தாயை இழந்த வெப்பிசாரத்தில் - வன் செயல் காரணமாயிருந்திருந்தால் - அதற்கு வழிதேட விடுதலை இயக்கத் தோடு இணைந்திருக்கலாம். வேறேதாவது துர்க்கதி ஏற்பட்டிருக்கலாம். இவையெல்லாம் எமது வெறும் ஊகங்களே "விஜய்" தொலைக்காட்சியில் நடிகை லஷ்மி நடத்தும் "கதையல்ல நிஜம்" என்ற நிகழ்ச்சியில் இப்படிக் குடும்பத்தையே தொலைத்து விட்டு சிங்கப்பூரில் வீட்டு வேலைக்குச் சேர்ந்து, பல வருடங்களின் பின் தமிழ் நாட்டில் மகள் மகன் பேரக்குழந்தைகளென்று பெருத்து விட்ட குடும்பங்களைக் கண்டறிந்து இணைவதும், இலங்கையிலிருந்து அகதியாகத் தமிழகம் சென்று தொலைந்து போன சிறுவர்கள் தமது பெற்றோரைச் சேர்ந்துகொள்வதுமான பல உண்மைச்சம்பவம் இடம் பெற்றிருப்பதை அவதானித்துள்ளேன். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பெற்ற பின்னர் காணாமல் போனவர்களைத் தேடும் முயற்சிக்குரிய அமைப்புக்கள் நம்நாட்டில் இயங்கிவருகின்றன. அவற்றினூடாக தேடிப் பார்க்க முயற்சிக்கவும்.

✉ ✉ ✉ ✉

**? நான் தற்பொழுது தரம் 12 இல் கல்வி கற்று வருகிறேன். நான் ஒரு வருடத்திற்கு முன்பு ஒருவரைக் காதலித்தேன். அவரும் என்னைக் காதலித்தார். நீங்கள் நினைக்கலாம் படிக்கும் வயதில் இதெல்லாம் தேவையில்லாத விடயம் என்று. நானும் அதை உணர்ந்தேன். நானும் அவரும் வேறு வேறு மதம் என்பதால் எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை எண்ணிப்பார்த்து அவரை விரும்பவில்லை என்று கூறி விட்டேன். ஆனால் நான் அதை நினைத்து நினைத்து அழாத நாட்களே இல்லை. சில நாட்களில் அவர் வேறொரு பெண்ணை விரும்பி விட்டார். அதன் பிறகு பல பெண்களை விரும்பினார். பிரச்சினை என்னவென்றால் நானும் அவரும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் கல்வி கற்பதனால், எனக்கு அவருடைய முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் பழைய ஞாபகமே வரும். என்னால் மனதை ஒரு நிலைதப் படுத்திப் படிக்கவும் முடியவில்லை. இந்தப் பிரச்சினை எனது அப்பாவிற்குத் தெரியாது. ஆனால் அப்பா என் மேல் அளவுக் கதிக பாசம் வைத்திருக்கிறார். இப்பொழுது என்னுடைய**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விருப்பம் என்னவென்றால் எனது பெற்றோர்களை கடைசி நாள் வரை சந்தோஷமாகவும் அவர்களுக்கு ஒரு நல்ல பிள்ளையாகவும் வாழ வெண்டுமென்பதே. ஆனால் ஒழுங்காக என்னால் கல்வி கற்க முடியவில்லை. எனக்கு சில வேளைகளில் நிம்மதி கிடைப்பதில்லை. தயவு செய்து எனது ஆறுதலுக்கும் இச்சிக்கலுக்கும் வழி கூறுங்கள்.**

சொ.ரூபிணி, ஹல்கிரனோயா

* வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் காதலித்துக் கலியாணம் செய்து, குழந்தைகளைப் பெற்ற பின்பு, அவர்களிடையே பிரச்சினைகள் தலையெடுக்கலாம் என்பது அநேகமாக எல்லோரும் எதிர்பார்ப்பதே. சில வேளைகளில் நல்ல விளக்கமும் சமயத்தைப் பற்றிய போதிய அறிவுமுள்ளவர்கள், சமயமென்பது நாம் வாழ்வதற்கான நெறிமுறைகளே என்பதனை உணர்ந்து, விட்டுக் கொடுத்து வாழ்ந்து வெற்றியும் கண்டுள்ளனர். அந்தளவுக்கு மனவிரிவும் விளக்கமுமில்லாவிடில் பிரச்சினைகள் தலை நீட்ட வாய்ப்புண்டு. எனினும் நீர் தரம் 12 இல் கல்வி கற்கும் மாணவி. பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க விரும்பாமல் உமது காதலைத் துறந்து விட்டீர். வரவேற்கக் கூடியதே. மேலும் நீர் காதலித்த பையன் யாரையோ விரும்புவதாகவும் பின்னும் பலரை விரும்புவதாகவும் குறிப்பிட்டுவிட்டு, அவனைப் பார்க்கும் போதெல்லாம் பழைய ஞாபகம் வருவதாகவும் மனம் தடுமாறுவதாகவும் கூறுகிறீர். நீர் உமது காதலை விட்டுவிட்டீர். பிறகேன் அப் பையன் யாரை விரும்புகிறான், என்ன செய்கிறான் என்ற ஆராய்ச்சியெல்லாம் உமக்கு? இவையெல்லாம் தேவையற்றவை. நீர் உம்மைச் சரியாக நிலைநிறுத்திக் கொண்டு, காதல் கூதல் என்று மனதை அலையவிடாமல் எதிர்காலத்தில் நல்ல தொழிலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கவனமெடுத்துப் படிக்கவும். இந்த வயதில் காதல் எண்ணங்கள் தோன்றுவது இயல்புதான், என்றாலும் அதற்காகவே உமது நேரம் காலம் சிந்தனை என்பவற்றைச் செலவிடாமல், நீர் எதிர்பார்ப்பது போல உமது பெற்றோருக்கு ஒரு நல்ல பிள்ளையாக, அவர்களை மகிழவைக்கக் கூடிய வகையில் படிப்பில் உமது திறமையை வெளிப்படுத்த முயற்சி செய்யவும். காதல் நினைவுகளில் காலத்தைப் போக்க வேண்டாம். அறிவு வளர்ச்சிக்கும் மனவிரிவுக்குமான கல்வியைக் கற்றுப் பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சியடைய முயற்சிக்கவும். வீண் விடயங்களில் மனதை அலையவிடாமல், மனதைக் கட்டுப்படுத்திப் பாட அலகுகளில் மனதைப் பதியவைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையில் சிறப்பாகச் சித்தியெய்தும் வரை வேறொன்றிலும் மனதைச் செலுத்த வேண்டாம். உங்கள் பாட நூல்களிலேயே பல சாதனைகளைச் சாதித்தவர்கள் பற்றிய வரலாறுகளெல்லாம் உண்டே. அவர்களெல்லாம் தமது இலட்சியங்களில் எவ்வளவு பற்றுக் கோட்டோடு வாழ்ந்தார்கள்? எத்தனை பெரிய காரியங்களையெல்லாம் சாதித்தார்கள்?அவர்கள்இவற்றைச் சாதிப்பதற்கு எத்தனை கஷ்டங்களையும் இன்னல்களையும் பட்டிருப்பார்கள்? இவற்றை நீர் உணர்ந்து பார்க்க வேண்டும்.

✉ ✉ ✉ ✉

**? நான் 10 ஆம் ஆண்டு வரை படித்து விட்டு தற்போது கடையில் வேலை செய்கின்றேன். அத்துடன் கொம்பியூட்டரும் படித்துக் கொண்டிருக்கின்றேன். எனது வயது 23. எனது பிரச்சினை யாதெனில் நான் கறுப்பு நிறம் உடையவன், அழகும் குறைந்தவன் தற்போது நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக நானும் பெற்றோரும் வறுமைக்குள் தள்ளப்பட்டு விட்டோம். இதனால் 2 வருடமாக, கொழும்பில் வேலை செய்கின்றேன். அதாவது எனது அம்மாவின் மாமாவின் கடையில் வேலை செய்கின்றேன். என்னுடன் 7 பேர் வேலை செய்கின்றார்கள் அதில் என்னுடன் வேலை செய்யும் அனைவருக்கும் நான் வேறு ஒரு கடையில் இருந்து ஒரு நாளைக்கு 4 தடவைகள் தண்ணீர் கொண்டு வரவேணும். இது ஒரு வித மனத் தாக்கத்தையும் வேதனையையும் தருகின்றது. இதனை எல்லாம் பெரிதும் சிந்திக்காமல் வேலை செய்யும் நான், எனது அழகு விசயத்தில் பாதிப்படைகின்றேன். இதனை என்னால் தாங்க முடியவில்லை. சில வேளையில் தற்கொலை செய்தால் என்ன என்றும் தோன்றும். ஆனால் அது மடைமைத்தனம் என்பதும் தெரியும். என்னுடன் வேலை செய்யும் அனைவரும் நிறத்தில் சிவப்பானவர்கள். ஆனால் அவர்கள் அனைவரையும் விட நான் படித்தவன். அவர்களில் 5 பேருக்கு சிங்களம் தெரியும். எனக்கும் இன்னும் ஒருவருக்கும் தான் சிங்கள மொழி தெரியாது. ஆனால் அவர்கள் எனக்கு முன்பே கடையில் வேலை செய்கின்றார்கள். அதனால் அவர்களுக்கு என்னை விட ஓர் அளவு மரியாதையுண்டு. என்னை எனது நிறக் குறைவு காரணமாக கேலி செய்கின்றார்கள். "உன்னை ஒரு பெண்ணும் திரும்பிப்பார்க்காள். அப்படிப் பார்க்கிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்றால் அவள் உனது நிறத்தில் தான் இருப்பாள்" என்று சொல்லுகிறார்கள் எல்லா விடயமும் வெளிப்படையாக எழுதி இருக்கின்றேன். எனக்கு உண்மையில் அவர்கள் சொல்வது போலவே வாழ்க்கை அமையுமா? தயவு செய்து எனக்கு ஆறுதலான பதில் தாருங்கள்.**

சுமன், ஹல்ஸ்டோப்

* உமது கடிதம், எனக்கு ஒரு பக்கம் வியப்பையும் மறுபக்கம் வேதனையையும் தந்தது. உமது பிரச்சினையென நீர்கருதி எழுதியிருப்பவை: 1) உமது கறுப்பு நிறம், 2) வறுமை, 3) கடையில் வேலை பார்ப்பது. உம்முடன் கடையில் வேலைசெய்யும் நண்பர்கள் வேடிக்கையாக அல்லது உமது மனதைச் சீண்டி விட்டுக் கூத்துப் பார்ப்பதற்காக உமது கரிய நிறத்தைப் பயன்படுத்துகிறார்கள். அப்பாவியும் அறியாமை மிக்கவருமாகிய நீர் அவர்களுடைய பேச்சுக்கு அடிமையாகி வருந்துவதை அறிகிறேன். கறுப்பு நிறம் அழகில்லையென்று யார் சொன்னது? நீர் அழகில்லை என்று ஏன் நினைக்கிறீர்? உமது நினைப்பில் அல்லவா தவறு கிடக்கிறது. அம்பாள் கருமை நிறத்தவள், இராமர் கரியவர். ஆகையினாலல்லவா, முனிவர் தமது யாகத்திற்கு உதவுமாறு தசரதனிடம் மைந்தனை விடும்படி கேட்டபோது "கரிய செம்மலைத்தா" என்றே விழித்துக் கேட்டார். இராமன் கருமை நிறமென்பதால் அழகில்லையென்றா காப்பியங்கள் வர்ணிக்கின்றன? கிருஷ்ணருடைய நிறமென்ன? காரிருள் வண்ணன், கார்மேக வண்ணன் என்றுதானே கண்ணனைக் கவிதைகள் வர்ணிக்கின்றன. நீரும் உம்மைக் கார்மேக வண்ணனாக பெருமைப்படுவதற்குப் பதிலாக, என்ன கீழ்மைத்தனமான கவலை? சினிமாவை எடுத்துக் கொண்டாலும் கூட சுப்பர் ஸ்டார் ரஜனியின் நிறம்என்ன? "கறுப்புத்தான் எனக்குப் பிடித்த கலரு" என்ற பாடலை நீர் கேட்டதில்லையா? அல்லாமலும் அழகென்பது கறுப்பு வெள்ளையிலில்லை. நாட்டுப்புறப் பழமொழிகள், பாடல்கள், விடுகதைகள் என்பவற்றை நடத்தி வரும் புஷ்பவனம் குப்புசாமியையும் அவரின் மனைவியையும் நீர் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பார்த்திருப்பீர். அதிலே புஷ்பவனம் குப்புசாமி கரியென்ற கறுப்பு. ஆனால் மனைவி மாநிற அழகி. கறுத்த மாப்பிள்ளைக்குப் பெண் கறுப்பாகத்தான் அமைவாள் என்று எப்படிக் கூறமுடியும்? உமது சகபாடிகளின் பேச்சால் நீர் அடையும் அவலமேயன்றி இவற்றில் எவ்வித உண்மையுமில்லை. எனவே நீர் மனந்தளரவேண்டாம். இருக்கிற அழகு போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரென்ன ஆணழகன் போட்டிக்கா போகப் போகிறீர்? இல்லையே? உமது சகாக்கள் சும்மா புரளிகிளப்பிவிட நீர் ஆழமாகச் சிந்திக்காமல் எடுத்த எடுப்பில் உம்மைத் தாழ்த்திக் கொள்வது பெரும் தவறு. எனவே இன்றுடன் நீர் அழகில்லை என்ற எண்ணத்தைத் தூக்கி எறிந்து விட்டு, நான் அழகானவன் என்று பல தடவை மனதில் நினைத்துச் சொல்லிப் பாரும். நீர் அழகாகவே இருப்பீர் அழகாகவே காணப்படுவீர். உது விடயத்தில் தாழ்வுச் சிக்கல் உம்மைப் பெரிதும் பாதித்திருப்பது போல நான் கருதுகின்றேன். ஏனெனில் கடையில் வேலை செய்வதையிட்டு நீர் கூச்சப்படுகிறீர். எமது தலைநகரில் உள்ள கடைகளின் தொகை எத்தனை? அங்கு வேலை செய்யும் ஆயிரக்கணக்கானோர் வெட்கப்பட்டுக் கொண்டா வேலை செய்கின்றனர்? இந்த ஆட்டமெல்லாம் வெறும்மாயை. அதை விட்டு நீர் வெளியே வரவேண்டும். அமெரிக்க ஜனாதிபதி யாயிருந்த ஜோர்ஜ் வாஷிங்டன் சிறுவனாகவிருந்த போது கடையில் வேலை செய்தவரே. தனது உழைப்பால் - உயர்ந்து அவர் நாட்டின் ஜனாதிபதியானார். ரஷ்ய நாட்டின் பிரதமராக விருந்த குருஷ்ஷேவ் மூன்றாம் தரக்கல்வியுடன் மந்தை மேய்த்துத் திரிந்தவர். தனது முயற்சியால் நாட்டின் பிரதமரானார். எமது உயர்ச்சி, வறுமை நீக்கம் என்பன எமது இடையறாத நேர்மை யான உழைப்பிலும் முயற்சியிலும் தான் தங்கியுள்ளன. "செய்யும் தொழிலே தெய்வம் - அதில் திறமைதான் நமது செல்வம்" இதுதான் உண்மையும் உயர்வானதும் கூட.

✉ ✉ ✉ ✉

**? நான்பெண்கள் கல்லூரியொன்றில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயில்கிறேன். எல்லாப் பாடங்களிலுமே சுமார் 70-75 க்கு மேல் புள்ளிகள் பெறுவேன். வகுப்பில் ஆசிரியர்கள் எல்லோருமே, என்னைக் கெட்டிக்காரி எனத் தட்டிக் கொடுக்கிறார்கள். கூடவே நான் சங்கீதமும், நடனமும் பயில்கிறேன். அவற்றிலும் நான் நல்ல சூடிகைதான். இப்படி நான் எல்லாவற்றிலும் பிரகாசிப்பதையிட்டு எமது அண்டை அயலார், உறவினர் எல்லோரும் என்மீது பொறாமைப்படு கிறார்கள். தாங்க முடியாத தங்கள் மனக் கொதிப்பை தீய வார்த்தைகளால் கொட்டித் தீர்க்கிறார்கள். எனக்கு நல்ல மனமில்லையாம். எனக்குத் தலைக்கனம் கூடவாம். உள்ளம் சுத்தமில்லையென்றெல்லாம் குறை காணுகிறார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடலைச் சுத்தமாக்கலாம். உள்ளத்தை எப்படிக் கழுவுகிறது, துப்பரவாக்குவது? எனக் கெதுவும் விளங்கவில்லை. மனச் சுத்தத்திற்கு ஏதாவது வழி சொல்லுவீர்களா அம்மா?**

கனகேஸ்வரி , சீதுவை

* நீர் படிப்பில் சூடிகையாயிருப்பது மல்லாமல் இசை - நடனத் துறைகளில் ஆர்வம் காட்டுவது மிக மகிழ்ச்சியைத் தருகிறது. ஆனால் அயலவர் உம்மைப் பொறாமைக்காரி எனச் சந்தேகிக்க நீர் அதனை ஏற்றுக்கொள்வதும் விட்டுத் தொலைக்க வழிதேடு வதும் ஆச்சரியமாக உள்ளது. என்றாலும் உமது கேள்விக்கான விளக்கம் பலருக்கும் பிரயோசனமாக இருக்கலாம்.

அறியாமை, பொறாமை, விளங்காமை எனப் பல ஆமை களால் பலரும் பலவிதமான அபிப்பிராயங்களை வெளியிடு வதுண்டு. ஆனால், இப்படியாக அபிப்பிராயங்களை வெளியிடு பவர்களுடைய தகுதியைவைத்தே நாம் அவற்றை ஏற்பதும், கவனத்தில் கொள்ளாமலிருப்பதும் தங்கியுள்ளது.

"புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை வாய்மை யால் காணப்படும்" என்பது குறள். வெளிச் சுத்தத்தை நீரால் கழுவி எற்படுத்துவது போல மனச்சுத்தத்தை வாய்மையால் ஏற்படுத்த முடியும் என்பது வள்ளுவர் கருத்து.

நாம் நல்ல சிந்தனை, நல்ல நோக்கம், நல்ல மனப்பாங்கு கொண்டவர்களாக வாழ, எமது வாழ்க்கையை வடிவமைத்துச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். மகாத்மா காந்தியின் மேசையில் மூன்று பொம்மைகள் இருந்தனவாம். ஒன்று கண்களைப் பொத்தியபடி "தீயதைப் பாராதே" என்பதையும், மற்றது காதுகளைப் பொத்தியபடி "தீயவற்றைக் கேளாதே" என்றும், மூன்றாம் பொம்மை "தீயவற்றைப் பேசாதே" என்பதாக வாயைப்பொத்தியபடியும் காட்சி அளித்தனவாம். இந்த மூன்று அறிவுரைகளுமே நமது உள்ளம் தூய்மையாக இருப்பதற்கான காரணிகளாக அமையும். நல்லோர் கூட்டம், பெரியவர்களு டனான தொடர்பு, சிறந்த நூல்களை வாசிப்பதில் அதிக நாட்டம், நல்ல விடயங்களில் தம்மை ஈடுபடுத்தல், எல்லோரிடத்திலும் அன்பு காட்டல், மன்னிக்கும் மனப்பான்மை, கருணை, பிறருக்காக விட்டுக் கொடுத்தல் போன்ற பண்புகளை வளர்த்தல் முதலியன மனச் சுத்தத்திற்கான அடிப்படை உணர்வுகள். இவற் றோடு திருக்குறள் போன்ற அற நூல்களைக் கற்கும்போதெல்லாம் நம்மையறியாமலே நல்ல தன்மைகள் நம்மோடு ஒட்டிக் கொள்ளும். தேவையற்றவையை, வேண்டாதவற்றை விலக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடலும் அவசியமானது. விளக்கின் அடிப்பகுதி ஒளியை அறியாமல் இருளாகிக் கிடப்பது போல நாமும் நம்மைச் சுற்றியிருக்கும் மிக அருமையான நல்ல விஷயங்களையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் இருப்பதால், மனம் இருளாகிவிடுகிறது. எனவே இனிமேலாவது நாம் நல்லவற்றைப் பார்க்க, கேட்க, பேச, அறிய முயற்சிப்போம், நலம் பெறுவோம்.

**?** **வாரந்தோறும் நீங்கள் அளிக்கும் பதில்கள் எம்போன்றோருக்கு மிகமிகப் பயனுள்ளதாக இருக்கின்றன. நாடெங்கும் பரவலாக அடிக்கடி பல வகையான நூல்கள் வெளியிடப்படுகின்றன. இந்த நூல்களின் உள்ளடக்கம், அமைப்பு, பக்கங்கள் என எவ்வித விஷயங்களையும் கவனத்தில் கொள்ளாமல் அவற்றின் விலைகள் போகிற போக்கில் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு நூலின் விலை அதன் உள்ளடக்கத்தின் கனதியிலா அல்லது அதனை வெளிக்கொணர ஏற்பட்ட செலவுகளைக் கணக்கிலெடுத்தா விலையிடப்படுகின்றன? நானும் குழந்தைகளுக்கென எழுதிய கவிதை நூலொன்றை வெளியிட இருக்கிறேன். இது பற்றிய உங்கள் கருத்தையும் அறிய ஆவலாக உள்ளேன்.**

ஹரிணி, உக்குவளை

சர்ச்சைக்குரிய விடயத்தையொட்டித் தான் உமது கேள்வி அமைந்துள்ளது. ஒரு படைப்பாளி தனது நூலை வெளிக் கொணர முயற்சிப்பதில் பல எண்ணங்கள் புதைந்து கிடக்கின்றன

1. தனது ஆற்றல்களை வெளிப்படுத்தல்.
2. தனது கருத்துகள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற விருப்பு.
3. தனது எண்ணங்களைப் பதிவு செய்தல்.
4. நூலுருவில் வெளிக்கொணருவதால் ஏற்படும் சிரமங்கள் கஷ்டங்களைப் பொருளாதார ரீதியில் ஓரளவு நிறைவு செய்தல்.
5. பணம் பண்ணுவதற்காக என்ற கருத்தும் நிலவுகின்றது.

ஆனால் எதற்கும் ஒரு நீதி, நேர்மை, கண்ணியம் முதலியவை உண்டென்பதை நாம் மறந்துவிடலாகாது. கருத்தாழம் மிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களாகிய திருக்குறள் , பகவத் கீதை, திருவாசகம் போன்ற அரும் பொக்கிஷங்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமென மலிவுப்பதிப்பாக, கையடக்கமான நூல்களாக ரூபா 10,15 என மிக மலிவான விலையில் வெளிவந்துள்ளன என்பதைப் பலர் அறிவார்கள். எனினும் நூல்களை வெளியிடும் ஆசிரியர் பணம் பண்ணும் நோக்கத்தை அறவே கைவிட்டு நிதானமாகவும் கண்ணியமாகவும் நூல்களின் விலைகளை நிர்ணயிப்பதே சரியானதும் வரவேற்கக் கூடியதுமாகும். "திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என பாரதி குறிப்பிட்டதைப் போல சமீபத்தில் அவுஸ்திரேலியாவின் பெரியநகரான சிட்னியில் இன்பத் தமிழ் வானொலி என்ற ஒலிபரப்பு ஸ்தாபனம் மிகமிகப் பாராட்டிற்குரிய காரியமொன்றை ஆற்றியுள்ளது. எமது நாட்டின் மட்டக்களப்பைச் சேர்ந்த காசி ஆனந்தன் திறமைமிக்க கவிஞன், அவர் "நறுக்குகள்" என்றொரு கவிதை நூலை சில மாதங்களுக்கு முன் வெளியிட்டிருந்தார். அவுஸ்திரேலியாவிலே இன்பத் தமிழ் வானொலி மூலம் இந்நூலின் பிரதியொன்று ஏலத்திற்கு விடப்பட்டது. அறிவிப்பு வெளியாகி இரண்டொரு மணித்தியால இடைவேளையில் 20 பேர் ஏலத்தில் கலந்து கொள்ள வந்தனர். ஏ.ஜே. மரியதாசன் என்ற தமிழன்பர் ஏலத்தில் கலந்து கொண்டு "நறுக்குகள்" என்ற காசி ஆனந்தனின் இக்கவிதை நூலுக்கு ஒரு இலட்சத்து முப்பத்தே ழாயிரத்து இருபத்தைந்து ரூபா (1,37,025/=) கொடுத்து இந்நூலை வாங்கியுள்ளார். ஏலத்தில் கிடைத்த முழுப்பணமும் கவிஞர் காசி ஆனந்தனிடமே ஒப்படைக்கப்படுமெனவும் வானொலி அறி வித்தது. உண்மையிலேயே இது மிகவும் பாராட்ட வேண்டிய வரவேற்கக் கூடிய விடயமேயாகும். இப்படிச் சில நூல்கள் பெரும்பாராட்டைப் பெறுகின்றன. எழுதி எழுதி முன்னுக்கு வர முயற்சிப்போருக்கு உற்சாகமளிக்கும் செய்தி இது. ஊதுகிற சங்கை ஊதி வைப்போம் விடிகிற போது விடியட்டும். ஆங்கில மொழி யிலும் மற்றும் ஏனைய மொழிகளிலும் வெளி வந்த நூல்கள் விலை யில் இப்படிச் சில சிகரங்களைத் தொட்டிருக்கின்றன. கோடி பணத்தைக் கொட்டிய ஹரி பொட்டரின் சிறுவர் நூலையும் நாம் மறப்பதற்கில்லை. ஆனால் சமீபத்தில் வெளியான தமிழ் நூலுக்கு இத்தனை பணமும் பெருமையும் கிடைத்தசம்பவம், நாம் எல்லோருமே மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ளக்கூடிய செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? நான் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். எமக்கு மட்டுமட்டான வருவாய்தான் உண்டு. நானும் எனது கணவரும் இரு குழந்தைகளும் யாரிடமும் வீணாகக் கடமைப்படாமல் நேர்மையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்து வருகிறோம். ஆனால் எனக்கு மனதில் வேதனை தரும் சம்பவமொன்று நிகழ்ந்தது. அதனை வெளிப்படையாக உங்களிடம் கூறி ஆறுதல் பெறவே இதனை எழுதுகிறேன். என்னிடம் அதிக நகை நட்டுக்கள் இல்லை. இருந்த ஒன்றிரண்டையும் வாடகை வீட்டிற்கு முற்பணம் கொடுப்பதற்காக அடைவு வைத்து விட்டோம். எமது நண்பரொருவரின் திருமணத்திற்கு நாம் போயிருந்தோம். அங்கு என்னைத் தெரிந்த சில நண்பிகள் பலர் முன்னிலையிலும் தாம் அணிந்துள்ள நகைகளைப் பற்றிப் பெருமையாக எண்ணிக் கொண்டு "ஏன் மாலா உன் கணவன் உன்னை நன்றாகக் கவனிப்பதில்லையா? நகை நட்டெல்லாம் வாங்கித் தருவதில்லையா? என்ன இப்படி வெறும் கழுத்தோடு வந்திருக்கிறாய்" என்று கேட்டு என்னைக் காயப்படுத்தினர். பெண்களுக்கு இந்த இழிவான செயல்களில் ஈடுபடுவதில் அலாதி விருப்பம். ஏன்? ஆண்கள் இப்படியா பழகுகிறார்கள்? பெண்கள் சந்திக்கும் போது நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசலாமே இப்படியாகப் பேசி மற்றவர்களை நோகடிக்க வேண்டுமா?**

மாலா, ஹெந்தளை

* உங்களின் நியாயமான கோபத்தையும் கொதிப்பையும் குமுறலையும் நான் மட்டுமல்ல இதனை வாசிப்போரும் நன்கு விளங்கிக்கொள்வர். நகை நட்டெல்லாம் கணவன் வாங்கித் தருவதில்லையா என்ற உங்கள் நண்பிகளின் கேள்விக்குப் பின்னணியில் இச்சமூகத்தில் வாழும் ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களும் கூட தாம் வெறும் அலங்காரப் பொம்மைகள் , நகை நட்டுக்களைச் சுமந்து திரிவதற்கே பிறந்தவர்கள், இந்த அணிகலன்களைச் சூடிக் கொள்வதில்தான் பிறப்பெடுத்ததன் பாக்கியமே தங்கியிருக்கிறது எனத் தவறாகத் தமது தோற்றத் தையும், சமூகத்தையும் , குடும்ப வாழ்வின் அர்த்தத்தையும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பெண்களென்றால் நகைகளைக் கட்டாயமாகச் சுமந்து கொள்ளவேண்டுமென்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. நன்றாக யோசித்து ஆராய்ந்து பார்த்தால், இத்தகைய எண்ணங்கள் உங்கள் நண்பிகளுக்கு இயல்பாக ஏற்பட்டதல்ல இது பரம்பரை பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரையாக, காலம் காலமாக பெண்களுக்கு ஊட்டப்பட்டது. பழக்க வழக்கங்களாலும் இலக்கியங்களாலும் வரலாறுகளாலும் பெண் இப்படித்தான் இருக்க வேண்டுமென, அதுவும் அநேகமாக ஆண்களாலேயே வடிவமைக்கப்பட்டு வந்த வாழ்வு முறைகள். பெண்களெண்றால் நகைப்பெட்டகம். காலுக்கும் காதுக்கும் கைக்கும் கழுத்துக்குமென வகை வகையான நகைகளைப்பூட்டி அழகுபார்த்த ஆணினத்தின் போக்கில் பெண்ணும் மயங்கி விட்டாள். உணர்வைத் தட்டிவிட்டு அறிவை மழுங்கடித்ததன் காரணமாகவே இன்றும் பெரும்பாலான பெண்கள் அறிவைப் புறக்கணித்து அலங்கார உணர்ச்சிக்கு அடிமையாகியுள்ளனர்.

சமூகமும் ஆண்கள் அறிவுக்கென்றே படைக்கப்பட்ட வர்கள், பெண்கள் வெறும் உணர்ச்சிக்குழம்புகளே என்றுதான் அடித்துச் சொல்லி வருகிறது. உடலும் உள்ளமும் அமைதிப்பட்டு ஓய்வொழிச்சலான வேளைகளில் நயத்தற்கலைகளில் மனித மனம் திழைப்பது இயல்பு. அழகைச் சுவைப்பதும் அலங்காரத்தை ரசிப்பதும் மனம் ஓய்வான வேளைகளில் இயல்பாக நிகழ்பவை அதனாலேயே பெண்கள் வீட்டை, சுற்றாடலை தம்மை அலங் கரிக்கும் தன்மை ஏற்படுகின்றது.

இந்த நகை சமாச்சாரத்தில் பொருளாதாரமே முதன்மை பெறுகின்றது. பொருளைச் சேமித்து வைப்பதற்கும் நகைகள் ஒரு சாதனமாக அமைகின்றன. பொருளாதாரம் குன்ற இவையும் குறைந்துவிடும். ஏற்கெனவே இத்தகையதொரு சூழ்நிலையால் நகைகளைக் கைவிட்டு நொந்து போயிருந்த உங்களிடம் காலம், நேரம், இடங்களை விளங்கிக் கொள்ளாமல் பலர் நடுவில் மொட் டையாக உங்கள் நண்பிகள் இப்படியாகப் பேசிக் கொண்டது தவறுதான்.

பேசுவதற்கு வேறு சுவையான விஷயங்கள் அவர்கள் மனதில் எழவில்லைப் போலும், இதனால்தான் பெண்களுக்கு கேள்வி அறிவு, ஞானம் சிறிது குறைவெனப் பெரியோர் கூறு வதுண்டு. சமூகச் சிக்கல்கள் அரசியல், பொருளாதாரம், ஆன்மீகம், சமூகப் போக்குகள் என்பவற்றைப் பற்றி எவ்வித அக்கறையு மில்லாதோர் அவை பற்றிய அறிவில்லாதோர் இப்படி எதை யாவது பொழுது போக்குக்காக அலட்டிக் கொள்வதால் தமது அறிவீனத்தை வெளிப்படுத்தி பிறரையும் புண்படுத்தி விடுகின்றனர். ஆனால் நண்பிகளைச் சந்திக்கும்போது பேசுவதற்கு விஷயங்கள் ஏராளம் இருந்த போதிலும் சிலருக்கு மற்ற வர்களை இப்படிச் சொறிந்து பார்ப்பதிலும் ஓர் ஆறுதலும் ஏற்படுவதுண்டு. நொந்தி ருப்பவரை விட தாம் பெரும் திருப்தியாக இருக்கிறோம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை வீக்கத்தின் ஒரு பார்வையும் இப்படித் தொழிற்படும். அல்லது சிலர் இத்தகைய கேள்வியால் குறிப்பிட்ட நபர் வேதனைப் படுவாரே என்ற அறிவு இல்லாத அப்பிராணிகளாகவும் இருக்கலாம். எனவே இப்படியே நினைத்த உங்கள் நண்பிகளை மன்னித்து அச்சம்பவத்தை மறந்து விடுங்கள்.

✉ ✉ ✉ ✉

**? நான் க.பொ.த படிக்கும் மாணவி. நான் எனது நண்பர்களுடனும் உறவினர்களுடனும் நன்றாகப் பேசுவேன். வீட்டில் என்னை வாயாடி, எதையும் பேசிச் சமாளிப்பாள் என்றெல்லாம் பாராட்டிக் கூறுவர். எனக்கும் மேடைகளில் வானொலியில், தொலைக்காட்சியில் தோன்றி நன்றாகப் பேச வேண்டுமென்று நிறைய ஆசையுண்டு. ஆனால் மேடையில் பேசத் தொடங்கியதும் சொற்கள் வருவதில்லை. கை கால்கள் நடுக்கம் எடுக்கின்றன. மனதிலே ஒரு எண்ணமும் தோன்றுவதில்லை. என்ன பேசுவதென்றே தெரியாமல் நாக்கே அண்ணத்தில் ஒட்டிக் கொள்ளும். இந்நிலையில் நான் பேச்சாளராக வர வேண்டுமென்ற எனது ஆசையை எப்படி நிறைவேற்றுவது? வழிசொல்லுங்கள் அம்மா?**

பவித்ரா, மொரட்டுவை

* மேடையில் பலரும் பாராட்டக் கூடியவகையில் திறமாகப் பேசி, சிறந்த பேச்சாளராக வர வேண்டும் என்ற உமது கொள்ளை ஆசையே நீர் எதிர்காலத்தில் நல்லதொரு பேச்சாளராக வருவதற்கான பிரதான அறிகுறியாகும். நீர் ஆசைப்படுவது போல பேச்சு ஓர் அருமையான கலை. ஏனைய கலைகளைப் போலவே பேச்சுக் கலையையும் நல்ல கவனத்தோடும் ஊக்கத்தோடும் பயிற்சிசெய்து வளர்த்துக் கொண்டால் அதன் பலன் மிக நன்றாக அமையும். பேச்சுக்கலை என்பது எழுந்தமானத்தில் நாம் எட்டிவிடக்கூடிய எல்லையில் இல்லை. அதனைப் படிப்படியாக அணுகிக் கற்றுக் கொள்வதில்தான் அதன்வெற்றியிருக்கிறது. பேச ஆரம்பிப்பதன் முன் ஏனையோருடைய சொற்பொழிவுகளை, அவற்றின் பொருளுக்காகவன்றி அவர்களது பேச்சின் ஆரம்பம், தொடரும் திறமை , உச்சக் கட்டம், முடிக்கும் விதம் என்ற கோவைகளையும் விளக்கமாக அவதானிக்க வேண்டும். பேசுவதென்றால் அதுவெறும் சொற் சிலம்பம் என்பதல்ல அழகான நல்ல சொற்களின் மூலம் சரியான பொருத்தமான புதிய கருத்துக்களைக் கேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் மனதில் பதிய வைத்தலே நல்ல பேச்சிற்கு அடையாளம். பேச்சுக் கலையைப் பற்றி மிக நீளமாகவும் ஆழமாகவும் பல மணி நேரம் ஒரு சொற் பொழிவே ஆற்ற முடியும். "பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய்போலுமே மெய் போலுமே என்றபடி, சொல்வன்மையினால், பொய்யை உண்மையென்றும் இல்லாததை உள்ளதாகவும், தன்னைப் பலவாகவும் கருத்துக்களைப் புரட்டி விடக் கூடிய வன்மை பேச்சுக்கலைக் குண்டு. பேச்சுக்கலையின் சிறப்பை பேரறிஞர் அண்ணா, ம.பொ.சி. ரா.பி.சேதுப்பிள்ளை, பேரறிஞர் அ.ச.ஞான சம்பந்தன், இரா. நெடுஞ்செழியன், கம்பவாரிதி ஜெயராஜ் எனப் பல பெரியார்கள், அவர்தம் சொற்பொழிவுகளின் மூலம் நன்கு வெளிப்படுத்தியுள்ளார்கள். இது பற்றி பல நூல்களும் வெளி வந்துள்ளன. ராஜ் டி.வி.யில் குமரி அனந்தன் தமிழகத்துப் பாடசாலை மாணவர்களின் பேச்சுக் கலையை வளர்க்கவென ஒரு அருமையான நிகழ்ச்சியை ஞாயிறு தோறும் நடத்தி வருகின்றார். தான் எடுத்துக் கொண்ட பொருளை நல்ல இனிய அழகு தமிழிலே சபை விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில், ஆற்றொழுக்கு நடையில் கருத்துக்களை லாவகமாக முன்வைக்க முடிந்தால்அது நல்ல பேச்சாக அமையும். சொல் முரண்பாடு கருத்து முரண்பாடு, முன்கூறிய கூற்றுக்கு மாறாகக் கூற்று முரண்பாடு, என்பன பேச்சில் சிறிதும் தலைகாட்டக் கூடாது. நல்ல கேள்விஞானம் உடையவர்களும் சிறந்த பேச்சாளராக வரக்கூடிய சாத்தியப் பாடுகள் உண்டு. நல்ல அறிவார்ந்த கருத்துக்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். அக்கருத்துக்களை நயமாகவும் தெளிவாகவும் எடுத்துவிளக்கக் கூடிய சொல்லாட்சி, கவர்ச்சியும் கம்பீரமுமான குரல் அவற்றிற்கேற்ற முகபாவம், நிற்கும் நிலை, தொனியின் ஏற்ற இறக்கம் என்பன சொற்பொழிவின் வெற்றிக்குச் சிறப்புச் அழகும்சேர்ப்பன. அதேவேளை ஆணித்தரமான கருத்துகளுக்கு கனதிகூட்ட ஏற்ற எடுகோள்கள், உதாரணங்கள், சந்தர்ப்பங்கள் முதலியவற்றையும் சொல்லலாம். நல்ல பேச் சாளராக வருவதற்குப் பல பெரியார்களுடைய பேச்சுக்களையும் அவதானமாகக் கேட்க வேண்டும். பின் அவற்றைப் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். பல விஷயங்களைப் பற்றி வாசிக்க வேண்டும். பல விதமான நூல்களையும் ஆழமாக வாசித்தால்தான் சிந்தனை தெளிவடையும். மேடையில் ஏறி முழங்கும் போது எடுத்துக் கொண்ட கருத்தைக் கைவிடாமல் சரியாக நிறுவ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? எனக்கு 54 வயது , கணவர் இறந்து விட்டார். பெண் பிள்ளைகள் இருவரும் திருமணமாகிக் கணவருடன் வெளிநாடு சென்று விட்டனர். நான் கொழும்பில் நண்பரொருவருடைய வீட்டில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து அதிலிருக்கிறேன். பிள்ளைகள் என்னை விட்டுப் போனதும் நான் தனிமையில் வேதனைப்படுகிறேன். கடைசி மகள் போய் இரு மாதங்களே ஆகின்றன. பிள்ளைகளையும் எனது குடும்பத்தையும் நினைத்து நினைத்து மனத் துன்பத்தால் வருந்துகிறேன். இதனைப் போக்க உங்கள் "நெஞ்சுக்கு நிம்மதி" பகுதி மூலம் எனக்கொரு வழிசொல்லித் தாருங்கள்.**

இந்திராணி, களுபோவில

** பிள்ளைகள் மணமாகி வெளிநாடு சென்றுவிடத் தனிமையிலிருந்து நீங்கள் துயருறுவதை என்னால் நன்கு உணர முடிகிறது. எமது வாழ்க்கை என்பது எமது மனத்திலும் எண்ணங்களிலும் தான் பெரிதும் தங்கியுள்ளது. தற்போது இலங்கையில் அதுவும் தமிழர் மத்தியில், அதிகமான பெற்றோர் உங்களைப் போன்ற நிலையில்தான் தம் பிற்கால வாழ்க்கையைக் கழிக்கின்றனர். எமது நாடும், அரசியல் நிலைமைகளும் இதற்குப் பக்கத்துணையாகிவிட்டன. என்றாலும் எமது பிரச்சினைகளை நாம் எம்முடைய சூழ்நிலையை வைத்துக்கொண்டே தீர்க்க முன்வர வேண்டும். நீங்கள் ஓய்வான வேளைகளில் உறவினர் வீட்டிற்கோ, நண்பர்களிடமோ, கோவில்களுக்கோ போய்வந்தால் மனதிற்கு ஆறுதலாக இருக்கும். நேரமும் காத்திருக்காமல் கழிந்துவிடும்.*

*உங்களுடைய விருப்பமான ஈடுபாடுகளைப் பற்றி எனக்கெதுவும் தெரியவில்லை. நீங்கள் வாசிப்பதில் ஆர்வமுள்ளவராக இருந்தால் நல்ல நூல்களை ஆன்மீக, சமய, கட்டுரைகள் , கதைகள், நாவல்கள், வரலாற்று நூல்கள் என்பவற்றைப் பெற்று வாசிக்கலாம். சமூக சேவையில் விருப்பமிருப்பின் இந்து மகளிர் சங்கம் அல்லது உங்கள் இருப்பிடத்திற்கு அருகாமையிலுள்ள பொது நல அமைப்புகளோடு இணைந்து ஏதாவது சமூகப்பணிகளில் ஈடுபடலாம். வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன், தமிழ்ச்சங்கம் போன்ற இடங்களில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், விழாக்கள் என்பவற்றில் பங்கு கொள்வதனால் உங்கள் பொழுது சந்தோஷமாக கழிவதுடன் அறிவு வளர்ச்சியும் பெருகும். மாலை வேளைகளில் சிறிதுதூரம் நடக்கலாம். அருகே பூங்காக்கள் இருப்பின் அங்கு சென்று பூக்களின் அழகில் மனதைச் செலுத்தலாம். தொலைக்காட்சி,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி போன்றவற்றில் மனதை ஈடுபடச் செய்யலாம். நல்ல இனிய இசையைக் கேட்டு ரசிக்கலாம். அருகில் உறவினர், நண்பர்களிருப்பின் அவர்களுடைய குழந்தைகளோடு சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்கலாம். தையல் அல்லது ஏதாவது கைவேலை தெரிந்தவராயின் அவற்றில் சில ஆக்கவேலைகளைச் செய்யலாம். இரத்மலானையில் சாரதா சமித்தி, இந்துமாமன்றம் மற்றும் கிறிஸ்தவ பெண்கள் சங்கம், பிரம்மகுமாரிகள் முதலிய அமைப்புக்கள், ஆதரவற்ற பெண்கள் சிறுவர்களுக்காகச் நிலையங்களை ஏற்படுத்தி அவர்களை நன்கு பராமரித்து கல்வி, பாதுகாப்பு, பொழுதுபோக்கு எனப்பல வழிகளில் அவர்களுக்கு உதவி செய்கின்றன.இத்தகைய நிலையங்களை நீங்கள் சென்று பார்வையிட்டு அங்குள்ளவர்களோடு மனந்திறந்து பேசி மகிழலாம். அவர்களோடு சேர்ந்து சில வேலைகளையும் செய்யலாம். நாமெல்லோருமே மனிதர்கள் ஒருவரோடொருவர் அன்பாகவும், நட்பாகவும் சேர்ந்து வாழ்வதே உன்னதமான வாழ்க்கை என எண்ணி எல்லோருடனும் அன்பாகப் பழகத் தொடங்கிவிட்டால் உங்கள் மன இறுக்கம் தணிந்துவிடும். இவை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருமென நம்புகிறேன்.

✉ ✉ ✉ ✉

**? இன்றைய பெண்கள் முன்னர் போல வீட்டுக்குள் அடைந்து கிடப்பதில்லை. எங்கும் போய் வருகிறார்கள். தாம் நினைத்தவற்றைச் செய்கிறார்கள். எங்கு பார்த்தாலும் பெண்களே நிறையச் சூழ்ந்திருக்கிறார்கள். சந்தைகளில், கோவில்களில், கடைவீதிகள் கல்யாணம் போன்ற சடங்குகளில் விழாக்களிலெல்லாம் ஆண்களை விடப் பெண்களே பெருந்தொகையினராகக் கூடுகிறார்கள். இப்படியிருந்தும் படித்த பெண்கள், அறிவுள்ளவர்கள் கூட பெண்களுக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லை. பெண்கள் சுதந்திரமாக வாழவில்லையென்றெல்லாம் தகராறு பண்ணுகிறார்களே? இது நியாயமா?. எனக்கொன்றும் விளங்கவில்லை. நீங்கள் விளக்கிச் சொல்லுங்கள் அம்மா?**

மரகதம், உளுகங்கை

✱ இன்றைய சமூகத்தில் பெண்களுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பது பற்றி நீர் மட்டுமல்ல, அநேகமான ஆண் பெண் இருபாலாருமே நீர் சிந்திப்பது போலே சிந்திக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். பெண் விடுதலை என்றால் என்ன? என்பதைப் பலரும் ஆழமாக யோசித்துப் பார்ப்பதில்லை. பெண்கள் அலங்காரமாக உடுத்தி, நகைகளையும் மாட்டிக் கொண்டு பெருந்தொகையாகப் பலரும் கூடும் இடங்களில் அவர்களும் சேர்ந்து கொள்வது தான் பெண் விடுதலை. இப்படி அதிகமான பெண்கள் வீட்டை விட்டு வெளியே நடமாடத் தொடங்கிவிட்டால், அவர்களுக்கு எல்லாச் சுதந்திரமும் விடுதலையும் கிடைத்துவிட்டது. இவற்றுடன் அவர்கள் திருப்திய டையாமல் ஏன் சமத்துவம் வேண்டும் என ஆர்வப்படுகிறார்கள் என்பதுதானே உமது மனதில் எழும் கேள்வி?

சமத்துவம் என்பது இச்சமுதாயத்தில் ஆண்களுக்கு என்னென்ன வகையில் சுதந்திரமும் உரிமைகளும் உண்டோ அதேபோன்ற அளவுக்கு அவை பெண்களுக்கும் இருக்க வேண்டும், எல்லோரும் மனிதர்களே ஆண், பெண் என்ற வித்தியாசம் உடலமைப்பின் பாற்பட்டது. அதைமாத்திரம் வைத்துக்கொண்டு ஆண் மேலானவன், பெண் தாழ்ந்தவள் என்ற எண்ணம் எங்குமே அழுத்தம் பெற்று, குடும்ப வாழ்வு, சமூக பொருளாதாரம், கல்வி என எல்லாவற்றினாலும் பெண் அடிமை யானவள் என்ற கருத்து காலம் காலமாகக் கலை இலக்கியங்கள், சமூக கட்டஅமைப்பு முறைகள் மூலமாகவும் நிலை பெற்று வந்துள்ளது. பெண் உரிமை என்பது மனித உரிமையே என்று விடுதலைப் புரட்சியாளர்களான ராஜாராம் மோகன்ராய், வ.வே. சு.ஐயர், புரட்சிக் கவிஞன் பாரதி, மகாத்மாகாந்தி போன்றோர் களால் அடித்துச் செல்லப்பட்ட போதிலும் எம் சமூகம் இது பற்றிய முற்று முழுதான விழிப்புணர்வை அடையவில்லை. பழை மையின் கட்டுக் கோப்பிலிருந்து விடுபடமுடியாமையும், மூடத் தனத்துள் மூழ்கியிருப்பதும் இந்நிலைக்குக் காரணமாகும்.

பெண் விடுதலையைப் பற்றி புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை விரும்புகிற விடுதலை வீரர்கள் யாவருமே பேசியிருக் கிறார்கள். தேசியத்தலைவர் பிரபாகரனின் கருத்துகள் உமக்கு நல்ல விளக்கத்தைத் தருமென நம்புகிறேன். "பெண் ஒடுக்கு முறை என்பது யுகம் யுகமாக எல்லா நாடுகளிலும், எல்லாச் சமூகங்க ளிலும் எல்லா பண்பாடுகளிலும், நிலவிவந்த ஒரு சமூக அநீதி, பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும், ஆண்களின் மனோ உலகில் பெண்மை பற்றிய கருத்தில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல், பெண் சமத்துவம் சாத்தியமாகப் போவதில்லை. ஆண் - பெண் உறவிலும் அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை. உண்மையான சமத்துவம் என்பது ஆண்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் உறவில் எழும் ஆழமான புரிதலில்தான் சாத்தியமாகிறது. இந்த ஒடுக்கு முறைச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதற்குப் பெண்ணினம் முதலில் தனக்கு ஏவப்பட்டுவரும் ஒடுக்குமுறையின் தன்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். தலைவிதி என்றும், பண்பாட்டுக் கோலம் என்றும் காலம் காலமாக மன உலக இருளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்ணினம் விழித்தெழ வேண்டும். ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் பேராட்டம்" இதற்கும் மேலதிகமாக உமக்கு விளக்கம் அவசியமில்லையென நம்பு கிறேன்.

✉ ✉ ✉ ✉

**? நான் ஒரு துரதிர்ஷ்ட சாலி. O/L பரீட்சை இருதடவை எடுத்தும் சித்தியடையவில்லை. விளையாட்டிலும் எப்பொழுதும் தோல்விதான் என்ன செய்தாலும் சரிவரு வதில்லை. அதனால் எல்லாவற்றிலுமே மனம் கசந்து விட்டது. வெற்றியை அடைய வழியொன்றைச் சொல்லித் தாருங்கள்.**

குமார் , மாபொல

* உமது கடிதம் எனக்கு வியப்பையும் வேதனையையும் தருகிறது. எதைச் செய்தாலும் சரிவருவதில்லை என முற்றுமுழுதாக முடிவெடுத்துள்ளீர் நீர் உம்மைப் பற்றிக் கூறும் "துரதிர்ஷ்டசாலி" என்ற கூற்று மாத்திரம் எப்படிச் சரியாயிருக்கும் ? தம்பி, உம்மைப் போன்ற இளம் பிள்ளைகள் சரியான வழிகாட்டுதல்கள் இன்றி பிஞ்சிலே பழுத்து, இந்த உலகம் மாயை எமக்கொன்றும் சரிவராது எனத்திடமாக முடிவெடுத்துக்கொண்டு விரக்தியாக வாழ முற்படுவது வெறும் அபத்தமான போக்காகும்.

ஒழுங்கான பெற்றோரோ, ஆசிரியர்களோ நல்ல நண்பர் களோ, பெரியோர்களோ உம்மைப் போன்றோருடன் நெருங்கிய உறவு வைத்திருப்பின் நிச்சயம் உங்களுக்கு நல்வழியைக் காட்டி யிருப்பர். இப்படியொரு கேள்விமூலம் உம்மை வெளிப்படுத்தியது மாத்திரமல்ல, உம்மைப்போலப் படிப்பிலும் விளையாட்டிலும் வெற்றி பெறாமல் சலிப்புற்றுச் சோம்பேறிகளாகும் பல இளைஞர் களுக்கு எனது விளக்கம் உதவியாக அமையுமென நம்புகிறேன். O/L பரீட்சை இரண்டே இரண்டு தடவைகள் எடுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிவரவில்லையென்கிறீர். பரீட்சை எழுதுவதென்பது இலேசான காரியமல்ல. ஏதோ பரீட்சை மண்டபத்தில் உட்கார்ந்து கன்னா பின்னாவென்று எதையாவது கிறுக்கிவிட்டு வந்து, சித்திவருமென எதிர்பார்ப்பது அபத்தமானது. ஒழுங்காகப் பாடங்களை விளங்கிப் படிக்க வேண்டும். கேட்கும் வினாக்களுக்கு உரிய பதில்களைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதினால் சித்தி நிச்சயம் கிடைக்கும். பாடுபடாமல், கஷ்டப்படாமல், முயற்சி எடுக்காமல் நாம் வெற்றியைத் தழுவமுடியாது.

பரீட்சைக்கு மிக்க அக்கறையுடன் கண்விழித்தும் கூட நீண்ட நேரம் படிக்க வேண்டும். வினாக்களுக்குவிடையெழுதும் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆசிரியர் தரும் விளக்கங் களைத் தெளிவுறக் கேட்டு விளங்கிக் கொண்டால் இலகுவாக பரீட்சை எழுத முடியும். அல்லாமலும் 6 தடவைகள் யுத்தத்திற்குச் சென்று தோல்வியைத் தழுவிய றொபேர்ட் புரூஸ் என்ற அரசன், ஓய்வாக இருந்து தன் தோல்வியைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த போது ஒரு சிலந்தி கூடு கட்டுவதற்குப் பல தடவைகள் முயன்று இறுதியிலேயே வெற்றி கண்டு கூட்டை உருவாக்கியதைப் பார்த்து உற்சாக மடைந்த அவ்வரசன் அம்முயற்சியை மனதில் எண்ணிக்கொண்டு மீண்டும் யுத்தம் செய்து வெற்றியடைந்த கதையைப் பலரும் கூறக்கேட்டிருப்பீர், எனவே தோல்வி என்பது வெற்றியின் அடிப்படை. நீர் தோற்றி ருக்கிறீர் எனவே வெற்றிக்கு ஆயத்தமாகிறீர் என்பதுதான் அர்த்தம். அதை விட்டு மனக் கசப்பு அப்படியிப்படியெல்லாம் கூறி மனதைக் கெடுத்துக்கொள்ளவேண்டாம். பல பெரியார்களுடைய வரலாறு களையெல்லாம் எடுத்துபாரும். மிக மிகக் கஷ்டப்பட்டு இடை யறாத முயற்சியினாலும் கடும் உழைப்பினாலும் பலர் முன்னுக்கு வந்துள்ளனர். இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் மிகமிகச் சாதாரணமான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது கடும் உழைப்பும் விடாமுயற்சியுமே அவரை மிகவும் உயர் பதவியில் இருத்தியுள்ளது. வாழ்வில் முன்னேறமுடியும் என்பதற்குப் பல அறிஞர்கள் வாழ்ந்து காட்டியதுமன்றிப் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். அற்புத மான சிந்தனையாளரான ஜேப்றி ஜே. மேயர் என்பவர் வாழ்வின் முன்னேற்றத்துக்கான எட்டு வழிகளைக் கூறுகிறார். நான் எப்போதோ வாசித்ததை நீரும் அறிய வேண்டும் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன்.

1. வெற்றிகள் கிடைக்காவிடில், வெற்றியடையவே முடியாது என்று தவறான முடிவிற்கு வரக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வெற்றியடைய முயற்சி, முயற்சி, மேலும் முயற்சியே செய்ய வேண்டும். இடையில் மனம் சலித்துக் கைவிடக் கூடாது.
3. ஐயோ இது கடனே என பொழுது போக்காக எடுத்த முயற்சியைச் சாட்டுக்காகச் செய்யாமல், உண்மையான பற்றுடன் அனுபவித்துச் செய்தல்.
4. எதிலும் அவநம்பிக்கை கொள்ளாமல் முற்றுமுழுதான நம்பிக்கையோடு ஈடுபடுதல்.
5. வெற்றி என்பது அதிர்ஷ்டமல்ல அது தானாகத் தேடிவருமென எதிர்பார்க்காமல், வெற்றிக்கான களங்களை நீங்களே உருவாக்க வேண்டும்.
6. வெற்றியை அடைவதற்கு, முதலில் தோல்வியைக் கண்டு அச்சமோ சலிப்போ கொள்ளக் கூடாது.
7. வெற்றியாளர்கள் கனவு காண்பார்கள், வெற்றியை அடையக் கனவு காண வேண்டும்.
8. காணும் கனவு உங்கள் இலட்சியம். அதைச் செயல் படுத்த வேண்டும் என்று வெறிகொள்ள வேண்டும்.

குமார் இவற்றைக் கவனமாக வாசித்து வாழ்க்கையில் கடைப் பிடித்து அதன் படி முயற்சித்து வெற்றிகளைக் குவிக்கவும்.

✉ ✉ ✉ ✉

**? எனக்கு மூன்றுபெண் குழந்தைகள். மூத்தவள் A/L வகுப்பிலும், அடுத்தவள் O/L வகுப்பிலும், கடைசி 7ஆம் வகுப்பிலும் கல்வி கற்கின்றனர். மூத்த இரு பிள்ளைகளும் அடக்கமாக நாம் சொல்வதைக் கேட்டு ஒழுங்காக நடக் கின்றனர். ஆனால் கடைசி மகள் ஒரே துடியாட்டமும் குழப் படியுமாக பெடியன்களைப் போல ஆட்டமும், ஓட்டமும் எகிறித்துள்ளுவதுமாக இருக்கிறாள். சொல்வழி கேட்காமல் நாம் எதைச் சொன்னாலும் எதிர்த்துக் கதைப்பாள் அவளின் செயல்கள் மனதிற்குப் பெரும் சங்கடமாக இருக்கிறது. பையன்களோடு சேருவது, விளையாடுவது என இவளின் போக்கே எனக்குக்கு கிஞ்சித்தும்பிடிப்பதில்லை. இத்தகைய பெண்பிள்ளையை எப்படி அடக்கமான பிள்ளையாக வழிக்குக் கொண்டு வரலாம்?**

கண்மணி, அராலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பெண்குழந்தைகளை வளர்த்தெடுப்பதில் தாய்மார்காட்டும் அக்கறை அதிகமானதுதான். ஆனால் அதேவேளையில் எல்லாப்பிள்ளைகளும் ஒரே மாதிரியே இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. குழந்தைகள் வளரும் போது "ஆண் இப்படித்தான் இருக்க வேண்டும். பெண் அடங்கித்தான் வாழ வேண்டும்" என எதிர்பார்ப்பதும் பெண்குழந்தையை அடக்கு வதும் பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் பாகுபாடு காட்டு வதும் பெருந்தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குழந்தைகள் அவர்களுடைய இயல்புக்கேற்பவே வளர வேண்டும். அதற்குப் பெற்றோர் உறுதுணையாக இருக்க வேண்டுமேயன்றி உபத்திரவமாகவோ, அல்லது தாம் நினைப்பதைப்போல் பிள்ளைகள் வளர வேண்டுமெனத் தமது எண்ணங்களை அவர்கள் மீது திணிப்பதோ பெருந்தவறாகும். படித்தவர்க ளாயிருந்தும் அநேகமான பெற்றோர் இத்தகைய தவறுகளையே புரிகின்றனர்.

பிள்ளைகள் அவரவர்களுடைய இயல்பான திறமை களுடனும், கனவுகளுடனும், கற்பனைகளுடனும், அவர்களின் அனுபவங்களைக் கொண்டு தாமாகவே திட்டமிடவும் தீர்மான மெடுக்கவும் கூடிய வகையில் வளர வேண்டும் அதற்கேற்ற கல்வி புகட்டப்பட வேண்டும். அவர்கள் தவறு இழைக்கும், போதும், அவர்களுக்கு ஏதாவது தடைகள் ஏற்படும் போதும், பெற்றோர் களோ ஆசிரியர்களோ அவர்களுக்கு உதவ முன் வரலாம். அவரவர் வளர்ச்சிக்குத் தேவையான உபகரணங்களை, சூழலை, வசதிகளை நாம் ஏற்படுத்திக்கொடுப்பதே.

நல்லது சுமார் 12 வயதான உங்கள் கடைசிப் பெண் ஆடிப்பாடி உலாவித் திரிவதில் என்ன பிழை? அது அவளுடைய இயல்பான போக்கு. அதனை அடக்க நீங்கள் ஏன் யோசிக்க வேண்டும்? களங்கமற்ற சுயாதீனமான போக்கிலே வளர்வதினால் அவளின் தனித் தன்மையே வளர்ச்சியடையும். பழைய காலத்துப் பழக்க வழக்கங்களை மனதில் நினைத்துக் கொண்டு அப்படியே உங்கள் மகளும் அமைய வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்க முடியாது. இன்று காலம் வெகுதுரிதமாக மாறிக் கொண்டே செல்கிறது. அதற்கு உரமூட்டுவது போல இன்றைய மக்களின் சிந்தனைப் போக்கிலும் பழக்கவழக்கங்களிலும் பாரியமாற்றங்கள் தோன்று கின்றன. அதற்கேற்ப நாமும் நம்மை மாற்றிக் கொள்வதை விட்டு விட்டு அந்தக் காலம் போல அடங்கியிருக்கிறாளில்லையே? ஆண் பிள்ளைபோல குதியாட்டம் போடுகிறாளே என்று நாம் அங்கலாய்ப்பது வீணானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாமலும் பெண்களுடைய வளர்ச்சியின் பின்னடைவுக்கும் இத்தகைய அடக்குமுறையும் ஒரு காரணம் என்பதை நாம் மனங் கொள்ளவேண்டும். ஆண், பெண் இருபாலாருமே ஒரே வகையான உயிரினம், இதில் வேறுபாடு இல்லை. ஆனால் அவர்கள் திடகாத்திரமானவர்களாகவும் திறமைமிக்கவர்களாகவும் பிற உயிர்களிடம் பற்றும் பாசமும் கொண்டவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் ஒழுக்கம் மிக்கவர்களாகவும் வளர்கிறார்களா என அவதானித்து அவற்றிற்கு உதவ வேண்டியது பெற்றோரின் கடமை.

⊠ ⊠ ⊠ ⊠

**? எனக்கு ஒரே ஒரு மகள். அவளுக்கு வயது 15 ஆகிறது. இன்னும் பூப்படையவில்லை. உடம்பு வளர்ச்சியாகவும் இல்லை. 9ஆம் வகுப்பில் கல்வி கற்கின்றாள் . அவளோடு கூடப் படிக்கும் பிள்ளைகள், அயலிலுள்ள அவளின் வயதுப் பிள்ளைகள் யாவரும் பருவமடைந்து விட்டனர். இவளுக்கு என்ன நேருமோ என எனக்கு இரவு பகல் யோசனையாகவே இருக்கிறது. இதற்கு ஏதாவது கைமருந்து செய்ய வேண்டுமா? ஆறுதலின்றியிருக்கும் எனக்குத் தயவு செய்து பதில் தாருங்கள்**

யோகம்மா, ஆராச்சிக்கட்டு

* ஒரே மகளை அருமை பெருமையாக வளர்க்கும் நீங்கள் அவளுடைய எதிர்காலத்திலும் மிகமிக அக்கறையாக இருப்பது நன்கு விளங்குகிறது. ஆனால் 15 வயதாகியும் மகள் பூப்படையவில்லையே என்ற மனவருத்தத்தைக் கைவிடுங்கள் சிலர் 18, 20 வயதிலும் பக்குவமடைகின்றனர். இதற்காக நீங்கள் மனவருத்தம் கொள்ள வேண்டாம். பிள்ளையின் உடம்பு உரிய ஹார்மோன்ஸ்கள் பெருக்கமடைய தோற்றத்திலும் மாறுதல் பெற்று அவள் பூப்படைவாள். இன்னும் சில வருடங்கள் காத்திருக்கலாம். பருவமாற்றங்களெல்லாம் பரம்பரை மரபணுக்களை ஒட்டியே இடம்பெறும்.

ஆனால் இவற்றுக்கெல்லாம் கைமருந்தை நாடுவதென்பது மிகத்தவறானது. அறிவு வளர்ச்சி போதாத மூடக்கொள்கையில் மூழ்கியவர்களே கைமருந்து அது இது வெனக் குறுக்கு வழியை நாடுவர். கிராமப்புறங்களில் அறியாமை அதிகமாகக் கோலோச்சுகிறது தமிழ் நாட்டில் வத்தலக்குண்டுக்குப் பக்கத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராலிக் கிராமத்தில் இப்படியொரு விசித்திரமான பாட்டி வைத்தியமொன்று நடைபெற்றுவருவதாக எங்கோ வாசித்த ஞாபகம் மீண்டும் நினைவுக்கு வருகிறது.

வயதுக்கு வராத இளம் பெண் பிள்ளைகளை அவர்கள் விரைவாக வளர்ச்சியடையவும், அவர்களுக்கு நன்றாகப் பசி, தூக்கம் ஏற்படவும் "சட்டென்று வயசுக்கு வருவதற்குமாக ஒரு பாட்டி வைத்தியம் செய்கிறார்களாம். அதாவது ஏதோ ஒரு வகை மூலிகைச் செடியின் தழைகளை எடுத்து இரு கைகளாலும் கசக்கிப்பிழிந்து கொதித்த நீரில் சில சொட்டுக்களை விடுவர். பின்னர் சிறுமியை அழைத்து மூதாட்டி ஒருவரின் தொடையில் இருத்தி அப்பிள்ளையைக் குனியப்பண்ணி அக்கொதிநீரை துடிக்கப்பதைக்க அச்சிறுமிகளின் முதுகில் ஊற்றுவர். அவள் பதறித் துடிக்கும்போதும் மிட்டாய், இனிப்பு வகைகளைக் கொடுத்து அவளை ஆற்றுவர். சிலரது முதுகில் இந்நீரை ஊற்றிய பின் வெள்ளி நிறமாக நரமுள் தோன்றுமாம். அவற்றை பிய்த்து எடுப்பார்கள். அதன் போது சிறுமிகளுடைய அழுகையை மாற்றச் சிறுதின்பண்டங்களைக் கொடுப்பர். பலர் சூழ்ந்து நிற்கும்போது அச்சடங்கு நிகழும். பெற்றோர் அவ்வைபவத்தை செய்த மூதாட்டிக்கு காணிக்கையாக சிறு தொகைப் பணத்தைக் கொடுப்பர். இச்சடங்குகளால் பெண் குழந்தைகள் விரைவில் பூப்படைவர் என்ற நம்பிக்கை அவ்வட்டார மக்களுக்கு உண்டு. இப்படியாகப் பெண் குழந்தைகளுக்கு பல வகையான வலிகளைக் கொடுக்கும் வீணான சடங்குகள் முன்னேறாத, கல்வி வசதிகளைப் பெறாத இடங்களில் இன்றும் நிலவுகின்றன.

இத்தகைய கொடுமையான விடயங்களில் நம்பிக்கை வைத்து நீங்கள் ஏமாற வேண்டாம். மேலும் உங்களைத் திருப்திப்படுத்தவும் குழந்தையின் உடல் பாங்கைப் பற்றி அறியவும் ஒரு சிறந்த பெண் மருத்துவரை நாடி அவருடைய புத்திமதிகளையும் வழிநடத்தல்களையும் பெற்றுக் கொள்வதே நல்லது என்பது என் அபிப்பிராயம்.

✉ ✉ ✉ ✉

**?• ஒரு மாதத்துக்கு முன் கொழும்பில் நடந்த மலையகப் பெண்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கில் வளப்பகிர் வாளராக வந்திருந்த நீங்கள் உரையாற்றிய போது, சமுதாயத்தில் எத்தகைய பிரச்சினைகள் தலை நீட்டும் போதும் அதனால் அதிகமதிகமாகத் தாக்குப்படுபவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண்களும், குழந்தைகளுமேயெனக் குறிப்பிட்டீர்கள். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற உரையாடல் நாம் நிறைய விஷயங்களை மனம் விட்டுக் கூறக்கூடியதாகவும் எமது ஆற்றல்களைத் தூண்டிவிடும் தன்மையாகவும் அமைந் திருந்தது. எமது நாட்டில் சுனாமிக் கடற் கொந்தளிப்பு அனர்த் தத்தால் பல்லாயிரம் உயிர்களும் சொத்துக்களும் கிராமங் களும் அழிந்து போனதைத் தொலைக்காட்சியில் பார்த் தேன். மனம் பதறிப் போனது நினைக்கவே பயங்கரமாயிருக் கிறது. எனவே எம் ஊரில் நிவாரணப் பணி புரிவோருடன் நானும் இணைந்து கொண்டு நீங்கள் கூறியது போல எம்மாலான சேவைகளைச் செய்யவுள்ளோம். குழந்தை களும் பெண்களும் ஏனையோரும் எத்தனை பாதிப்புக் குள்ளாகியுள்ளனர். இறைவன் எமக்கு இவர்களுக்கு உதவும் மனப்பான்மையையும் பெலத்தையும் தர வேண்டும்.**

மலர், கம்பளை

* விலகிச் சென்ற 2004ம் ஆண்டு எத்தனையோ ஆயிரம் உயிர்களையும் சொத்துக்களையும் கட்டிடங்களையும், அழித்துச் சீரழித்துச் சென்று விட்டதே சோகத்தில் எல்லோரும் மனம் "உறைந்துவிட்ட வேளையில் இத்தனை துயரத்தின் மத்தி யிலும், கொடுமை என்னவென்றால் துளிகூட மனிதநேயமின்றிச் சில கயவர்கள் அவலத்திலும் ஆதாய அறுவடை செய்ய முனைந்தமையே. இறந்த பெண்களின் சடலங்களில் இருந்த நகைகளைச் சில ஊர்களில் கள்ளத்தனமாகக் கழற்றிச் சென்றுள்ளனர். வீடு வாசல்களை விட்டோடியவர்களின் வீடுகளுள் புகுந்து கொள்ளையிட்டிருக்கின்றனர்.

பதறித்திரிந்த சில பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். மனித நேயம் துளியும் இல்லாத இவ்வரக்கர்கள் மனித தோற்றம் பூண்டு செய்யும் கொடுமைகள் அப்பப்பா அனர்த்தம் நடந்துவிட்டது. பலர் அழிந்து விட்டார்கள். எஞ்சியவர்களின் துன்பங்களை நீக்கி அவர்களை வாழவைக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கும் சமுதாயத்திற்கும் உரிய கடமை. நீர் நிவாரணப் பணியில் உம்மை இணைத்துக்கொண்டிருப்பது மிக மகிழ்ச்சியும் ஆறுதலும் தருகிறது. பருப்பும் அரிசியும் துணி சேகரிப்பும் போதாது. பலரும் அதைத்தான் செய்கிறார்கள். இளம் பெண்கள், மற்றும் குழந்தைகளுக்குப் பயன்படக் கூடியவை எவை என்பது உம்மைப் போன்றோருக்குத் தெரிந்ததே அவ்வித பொருட்களும் மருந்து வகைகளுமே இப்போது அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாகத் தேவைப்படும். வீடுவாசல்களை இழந்தோரின் வாழ்க்கை நிரந்தர அகதி முகாம்களாக ஆகிவிடக்கூடாது. எல்லாம் இழந்து விட்டோமே என்று விரக்தியுடன் ஏங்கி இருக்க விடாமல் அவர்களை இயங்க வைக்க வேண்டியது எம் எல்லோரதும் கடமை.

வெளிநாடுகளில் இருந்தும் நிவாரண உதவிகள் வந்து குவிகின்றன. இவற்றைப் பகிர்வதிலும் உரியவர்களிடம் அவற்றைச் சேர்ப்பதிலும் புனர் நிர்மாணப் பணிகளிலும் இனம், இடம், சாதி, சமயம் என பாரபட்சம் தலை தூக்காமல், பாதிப்படைந்த பகுதிகளுக்கு இவை சென்றடைய வேண்டும் என்பதே மனிதாபிமானம் கொண்டவர்களின் எதிர்பார்ப்பு. இவையாவும் புதிய ஆண்டிலாவது சரியாகவும் ஒழுங்காகவும் இடம் பெற வேண்டும்.

✉ ✉ ✉ ✉

**? எனக்குத் திருமணமாகி எட்டு வருடங்கள் கடந்து விட்டன. நானும் துணைவரும் மகிழ்ச்சியாகவே வாழ்கிறோம். ஆனால் எனக்கொரு பெரிய மனத்துன்பம் உண்டு. அதாவது என்னுடன் திருமணமாகிய நண்பிகள், சகோதரிகள் ஆகியோர் குழந்தை குட்டிகளோடு மகிழ்வாக வாழ்கின்றனர். எனக்கும் கணவருக்கும் இதைப்பற்றிப் பெரிதாகக் கவலை இல்லாவிடினும், நான் கோயில், குளம், திருமண வீடு என்றெல்லாம் செல்லும் போது என்னைக் காணும் நண்பிகளும், உறவுக்காரப் பெண்களும் எனக்கு குழந்தை இல்லையா? திருமணமாகி இத்தனை வருடங்கள் ஆகி விட்டன என்று விடுப்புக் கேட்கும் போது என் மனம் கலங்குகின்றது. நான் மிகவும் கூச்சமும் வெட்கமும் அடைகிறேன். அதனால் வெளியே பலரும் கூடும் இடங்களுக்குச் செல்ல வெறுப்பு ஏற்படுகின்றது. இதனை எனது கணவரிடம் சொல்ல முடியாமல் தவிக்கின்றேன். எனது மனதுக்கு இவ் விசயம் பெரும்பாரமாக இருக்கிறது என் மன ஆறுதலுக்கு ஆலோசனை சொல்லுங்கள்.**

கனகமணி, நத்தோட்டை

✱ எச்சந்தர்ப்பங்களில் யாரிடம் என்னென்ன விசயங்களைப் பற்றி கேட்பது என்ற யோசனையே இல்லாமல், விடுப்புக் கேட்பவர்களால் நீர் கூச்சப்படுவதையும் வேதனை கொள்வதையும் உணர்கிறேன். இப்படிப் பிறருடைய விசயங்களை அறிந்து கொள்வதிலும், கேள்விகள் தொடுப்பதிலும் சிலர் முன்னணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றனர். என்றாலும் இதற்காக நீங்கள் வெட்கப்படவோ, கூச்சப்படவோ வேண்டியதில்லை. உமது கடிதத்தில் உங்களிருவரதும் வயதினை நீர் குறிப்பிடவில்லை. திருமணமான யாவருமே குழந்தை குட்டிகளைப் பெற்றுக் கொள்வது நிச்சயம் என்றும் இல்லை. சிலருக்கு அதற்கான வாய்ப்பு இல்லாமலும் போவதுண்டு. அதற்காக வேதனைப்படக் கூடாது. மனதை தளர விடவும் கூடாது. காலம் இன்று முன்னரைப் போல இல்லை. மருத்தவத் துறை நன்கு முன்னேறி உள்ளது. எனவே உங்களுக்கு இதுவரை குழந்தை கிடைக்கவில்லையே எனக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், சிறந்த மகப்பேற்று நிபுணர்களை அணுகினால் அதற்கான வழி முறைகளைப் பற்றி தகுந்த ஆலோசனை வழங்குவர். அவற்றைக் கடைப்பிடித்தால் குழந்தைப் பேறு கிடைக்க வாய்ப்பு உண்டு. இப்பொழுது கணவன் மனைவி இருவரும் மனம் விரும்பிக் கொண்டால் ரெஸ்ற்றியூப் மூலமும் குழந்தை பெற வழியுண்டு. எதற்கும் குழந்தைப் பேற்றுக்கு ஆற்றுப்படுத்தக் கூடிய வைத்தியரைச் சந்தித்து அவரது ஆலோசனைகளைக்கேட்கவும்.

போரின் அனர்த்தங்களாலும் பல குழந்தைகள் பெற்றோரை இழந்து அநாதரவாகியுள்ளனர். இத்தகைய குழந்தைகளில் ஒன்றைத் தத்தெடுத்து உங்கள் குழந்தையாக வளர்த்தெடுக்கக்கூடிய வாய்ப்புகளுமுண்டு. எனவே நீரும் உமது கணவரும் கலந்து பேசி ஒரு தீர்மானத்தை எடுக்கவும். இதனையிட்டு வெட்கப்பட்டு வெளியேவராமல் இருக்க வேண்டாம். இத்தாழ்வுச் சிக்கலைப் போக்க நீங்கள் முயன்றால் வெற்றியடையலாம். எதற்கும் கவலைப்பட்டுப் பின்வாங்காமல் துணிச்சலுடனும் நம்பிக்கையுடனும் செயற்பட்டு வெற்றி காண முயற்சியுங்கள்.

✉ ✉ ✉ ✉

**? பெண்கள் முன்னேற்றம் பற்றிய கருத்துக்களை துணிச்சலாக நன்றாகவே எழுதுகிறீர்கள். எனக்கு ஒரு விளக்கம் தேவை இவ்வுலகில் ஆண், பெண், வேறுபாடு இல்லை என்றால் 60 வயசு பூர்த்தியானதும் ஏன் ஆண்களுக்கு மாத்திரம் மணி விழா கொண்டாடுகின்றார்கள்? பெண்களுக்கு 60 வயது வந்தால் மணிவிழா கொண்டாடியதாக கேள்விப்பட இல்லையே ஏன்?**

மங்களநாயகி , கட்டுகஸ்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 60 வயதைப் பூர்த்தி செய்த பெண்களுக்கு ஏன் மணிவிழா கொண்டாடுவதில்லை என்ற நியாயமான கேள்வியொன் றையே நீங்கள் எழுப்பியுள்ளீர்கள்.

முதலில் 60 ஆண்டு பூர்த்தி விழா, மணிவிழா ஏன் "கொண்டாடப்படுகின்றது என்பதன் தாற் பரியத்தை அறிந்து கொள்ள வேண்டும். இது இந்து சாஸ்திரத்தோடு சம்பந்தப்பட்ட விடயம். நாள், நேரம், மணி, கிழமை, மாதம், வருடம் என்பன வகுக்கப்பட்டது போல, வருடங்களை 60 ஆக வகுத்துள்ளனர். அவையொவ்வொன்றும் பெயரிடப்பட்டுள்ளன. மனிதன் தன் வாழ்நாளில் இந்த 60 ஆண்டு வாழ்க்கையைப் பூர்த்தி செய்த பின், அறுபது வருடச் சக்கரத்தை முடித்து இரண்டாவது தடவையாக அந்த 60 ஆண்டு சுழற்சிக்குள் காலடி வைக்கிறான். முதல் சக்கரத்தின் பூரணமான வாழ்வே, அறுபதாண்டாகக் கணிக்கப் பட்டுள்ளது. இதனை வெற்றிகரமாக வாழ்ந்து முடித்து அடுத்த வட்டத்துள் அடி எடுத்து வைக்கும் நன்நாளே இந்த மணிவிழா, இதனைக் கொண்டாடுவதில் ஆண், பெண், என்ற பேதமில்லை. கணக்கு எல்லோருக்கும் பொதுவானதே.

வெளிப்படையாகத் தமது வயதைக்கூறி வாழ்ந்த பெண்களின் தொகை மிகக் குறைவானதே. 60 ஆண்டு வரை சுக பலமாக இருப்பது கொஞ்சநாட்களல்லவே, எனினும் நம் நாட்டை பொறுத்தளவில் பொதுச் சேவையில் முன்னணி வகிக்கும் துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் மணிவிழா சிறப்பாக நடைபெற்றதே எனது அறிவுக்கெட்டாமல் வேறு பெண்மணிகளின் மணிவிழாக்களும் நடந்திருக்கலாமென நினைக்கிறேன்.

பெண்களுடைய சேவை, அவர்களது பெருமை, திறமை என்பன ஏடுகளில் பதியப்பட்டிருந்தாலும் நடைமுறையில் நேரடியாக அவர்களைப் பாராட்டுவது, எமது சமூக வரலாற்றில் பெரிதாக இடம்பெறவில்லை. அவர்கள் ஆற்றிய நற்செயல் களைவிடத் தவறுகளையே பெரிதுபடுத்தி பெண்களென்றால் குற்றத்தின் பாற்பட்டவர்கள் என்ற ஆணாதிக்க எண்ணமே அதிகமாகப் பரவிக்கிடந்தது. அப்பாலும் குடும்ப நிறுவனம் என்ற நிலையில் அதன் தலைவனான ஆணே எல்லா விஷயங்களுக்கும் முதன்மைப்படுத்தப்பட்டான். அத்தலைவனின் மகிழ்ச்சியும் நிறைவுமே தனது வாழ்வாக ஏற்றுக்கொண்டாள் அக்குடும்பத்தின் தலைவி. இத்தகையதொரு நிலையிலேயே சமுதாயத்தில் குடும்பங்கள் இடம் பெற்றிருந்தன. பெண் தனக்கென்றொரு சிந்தனையோ சுதந்திரமோ விருப்பு வெறுப்போ அற்றவளாக, தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு மூச்செல்லாம் தன் குழந்தையும் கணவனும் குடும்பமுமே என்ற வாழ்க்கை நடத்தினாள்.

தற்போது எமது சமுதாயப் பெண்களின் நிலைமையில் சிறிது மாற்றம் ஏற்பட்டு வருவது கண்கூடு. தம்மை முற்றுமுழுதாக குடும்பத்திற்கெனவே அர்ப்பணித்த பெண்களின் தொண்டு இப்போது வளர்ச்சி பெற்று தமது கல்வி அறிவையும் திறமை யையும் சேவையையும் விரிவுபடுத்தி வருகின்றனர். அவர் களுடைய பணி யாவராலும் கணிக்கப்படுகின்றது.

பெண்கள் தமது வயதை வெளியிடுவதில்லை என்று மக்கள் மத்தியில் ஓர் எண்ணமுண்டு. இவற்றையெல்லாம் விட்டு விட்டு, அவர்கள் எத்தனையாண்டு காலம் பொதுப்பணியில் ஈடுபட் டார்கள். என்னென்ன காரியங்களையெல்லாம் நிறைவேற்றி யுள்ளனர் என எண்ணிப்பார்க்க வேண்டும்.

அநேகமாகச் சென்றகாலங்களில் கல்லூரிகளிலும் ஆசிரிய கலாசாலைகளிலும் அதிபராகவும், விரிவுரையாளர்களாகவும் பணியாற்றிய பெண்கள், பலர் உள்ளனர். பத்திரிகைத்துறையில் முதன்முதலாக ஈடுபட்ட மங்களம்மாள் மாசிலாமணி, மீனாட்சி யம்மாள் நடேசய்யர் போன்றோர் நம் மனதில் வரிசையாக நடைபோடுகின்றனர். ஆனாலும் அக்காலத்தில் 60 வயதைப் பூர்த்தி அடைந்தோரின் மணிவிழா பெரிய அளவில் கொண்டாடப் படும் வழக்கம் இருந்ததாக நாம் அறிந்து கொள்ளமுடியவில்லை. பொதுவாழ்வில் அபரிமிதமாக பங்கேற்கும் பெண்களின் சேவை கணக்கில் கொள்ளப்பட்டு, அவர்களைப்போல் மற்றவர்களும் சேவைபுரிய முன்வரவேண்டுமென்பதை ஊக்கப்படுத்தும் நோக்கில், எதிர்காலத்தில் வரைமுறையான மரபுகள் உடைந்து பெண்ணும் முக்கியப்படுத்தப்படுவாள் என நம்புவோம்.

⊠ ⊠ ⊠ ⊠

**? நான் A/L படித்துக்கொண்டிருக்கும் மாணவன். நான் ஒரு வருடகாலமாக ஒரு பெண்ணைக் காதலித்து வந்தேன். ஆரம்பத்தில் அவள் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும் பின்பு அவள் சம்மதம் தந்து விட்டாள். நான் காதலிக்க ஆரம்பித்தபோது எனது வகுப்பு மாணவிகள் அவளைக் காதலிக்காதே அவள் ஒரு வாயாடி, ஆட்டக்காரி என்றெல்லாம் கூறினார்கள் நான் இதைப் பொருட்படுத்த வில்லை. காலம் செல்லச் செல்ல எங்கள் இருவரினதும் காதல் செய்தி பாடசாலையிலும், வீட்டிலும் பரவியது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் வீட்டார் அந்தக் குடும்பம் சரியில்லை. அந்த வீட்டில் கணவன் மனைவிக்கிடையில் ஒரே சண்டை. பக்கத்து வீட்டாரோடும் சண்டை பிடிக்கிறார்கள் என்றெல்லாம் கூறுகின்றார்கள். இன்னும் கூறப்போனால் என் காதலியின் பெரியப்பாவின் மகன் கூட உனக்கு வேறு எந்தப் பெண்ணும் கிடைக்கவில்லையா எனக் கேட்கிறான். இந்நிலையில் எனக்கு படித்துத் தரும் ஆசிரியர் ஒருவர் என்னை அழைத்து ஏதோ நீ காதலித்து விட்டாய். உன்னுடைய விடயம் ஊரெங்கும் தெரிந்துவிட்டது. பாடசாலைப் படிப்பு முடியும் வரையில் அவளைப் பார்க்கக்கூடாது. அவளோடு பேசக் கூடாது. பாடசாலை வாழ்க்கை முடிந்ததும் நீ அவளைத் தான் கட்டிக்கொள்ள வேண்டும். வேறு யாரையும் கட்டிக் கொள்ளக் கூடாது என்று உறுதியாகக் கூறுகின்றார். இந் நிலையில் நான் வீட்டார் பக்கம் சாய்வதா? அல்லது ஆசிரியர் பக்கம் சாய்வதா,?**

நஹறியாய், வாழைச்சேனை

* உம்முடைய பிரச்சினை ஒரு பெண்ணோடு சம்பந்தப்பட்டதாக இருப்பதால் அதற்கான பதிலைத்தரவிரும்புகிறேன். A/L படிக்கும் மாணவராகிய நீர் ஒரு வருடமாக ஒரு பெண்ணைக் காதலிக்கிறீர் அவள் சம்மதித்தும் அவளது பக்கத்தினர் அதற்குப் பெரிதாக ஆதரவில்லை. எனினும் உமது ஆசிரியர் உமது பரீட்சை முடியும் வரை அமைதியாக இருந்து படிப்பில் கவனம் செலுத்திய பின்னர் கட்டாயமாக அப்பெண்ணையே திருமணம் செய்யும் படியும் கூறியிருப்பதாகவும் தெரிவித்துள்ளீர்.

எனது முந்தைய பதில்கள் பலவற்றில், நான் இளம் பருவத்தில் ஆண் - பெண்ணிடையே ஏற்படும் பருவக் கவர்ச்சி பற்றியும், வாலிப வயது ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகுவதால் பஞ்சும் நெருப்பும் போல பற்றிக்கொள்வது எளிதாகுமெனவும் பல தடவைகள் அடித்தடித்துக் கூறியிருக்கிறேன். சாதாரண பருவத்தில் ஏற்படும் இனக் கவர்ச்சியையும் மாணவ நண்பர்கள் பெரிதுபடுத்திச் சோடி கட்டி இணைத்துச் சொல்வதிலும் நாம் மனதைத் தளரவிடக்கூடாது. அநேகமான காதல் உணர்வுகள் சந்தர்ப்பம் சூழ்நிலைகளால் ஏற்படுத்தப் படுபவையே.

இவை பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுடைய கவனத்தையும் திருப்பிவிடும் தன்மை கொண்டவை. மனதை ஒரு நிலைப்படுத்திக் கல்வியில் முழுக்கவனத்தையும் செலுத்துவதே நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது மேற்கொள்ள வேண்டியது. எதற்கும் உமது கல்வி அறிவையும் தகுதியையும் பலப்படுத்திக் கொண்ட பின்னர் காதல் விஷயத்தைப் பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வரலாம். வகுப்பு மாணவர்கள் உற்சாகப்படுத்துகிறார்களே என்பதை மட்டும் நம்பி நீர் உமது நிலையைத் தளரவிடக்கூடாது. உமது ஆசிரியர் கூறியதைப்போல முதலில் உமது உயர்தர வகுப்பு பரீட்சையைப் பற்றிக் கருத்தில் கொண்டு கவனமாகப் படிக்கவும். அதன் பின்னர் காதல் பற்றி யோசிக்கலாம்.

✉ ✉ ✉ ✉

**? எனக்குள்ள பிரச்சினை என்னவென்றால் எங்களுக்கு மூன்று வயதில் பெண் பிள்ளை ஒன்று உள்ளது. இவளுக்கு நல்ல ஞாபகசக்தியுள்ளது போல் தடிப்புத்தனமும் அதிகமாகக் காணப்படுகின்றது. இதைப் பற்றி எங்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால் இவள் தனக்கு முன்னால் ஏதாவது ஒரு சடப்பொருளை வைத்து, அதை ஒரு நபராகக் கருதிக் கொண்டு, அதனுடன் நீண்ட நேரமாக பேசிக் கொண்டிருப்பாள். இதைப் பார்க்கும் போது நாம் கவலைப் படுவதுடன், இதை நாங்கள் சிலவேளைகளில் தடுப்பதும் உண்டு. இவள் இவ்வாறு செய்வது சரியா அல்லது பிழையா, என்பதற்கு உங்களுடைய ஆலோசனையை எதிர்பார்க் கிறேன்.**

நல்லம்மா, முந்தல்

* உங்கள் குழந்தை சடப்பொருளை வைத்துப் பேசுகிறா ரென்றால் அதில் தவறில்லை. அவள் மூன்று வயசுத்தளிர். அவளைப்போன்ற வயதுள்ளவர்களுக்கு கற்பனை அதிகம். அதை எமக்கு எடுத்துச் சொல்லக் குழந்தைகளென்பதால் அவர்களுக்குத் தெரியவில்லை.

எனவே இப்பழக்கத்தைக் கொண்டு நீங்கள் குழப்பமடையத் தேவையில்லை. புத்திக்கூர்மைமிக்க குழந்தைகள் இப்படி ஏதாவது செய்து கொண்டும் சொல்லிக் கொண்டுமே இருப்பது அவர்களின் இயல்பு. அதனால்தான் இந்த வயதில் இவர்கள் பல பொம்மை களை, பொருட்களை, படங்களைக் கையாளவும், பார்த்து அனுபவிக்கவும் கூடிய சூழலை ஏற்படுத்தி கொடுக்க வேண்டு மெனக் கல்வி உளநூல் வல்லுநர் கூறுவர். நாம் பழகுவதைப் பார்த்துப் பாவனை செய்யும் பழக்கமும் இவ் வயதுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளிடம் உண்டு. தாம் விளையாடும் பொம்மைகள் ஆணாக இருந்தால் தம்பியென்று அன்பு பாராட்டி அழகு படுத்திச் செல்லம் கொண்டாடுவர். தாய் தந்தை தமக்குச்செய்வது போலப் போத்தலில் பாலூட்டி, உணவூட்டி, தம்முடனே படுக்கவைத்துத் தாமும் தூங்குவர். கதை, பாட்டுகள் பாடி மகிழ்வர். வேறு யாரையும் தொடவிடமாட்டார்கள். இப்படியே செல்லப்பிராணி களுடனும் கதைத்து விளையாடுவர். அவர்களுடைய விளை யாட்டை நாம் குழப்பக் கூடாது.

ஏனெனில் அவர்களுடைய கற்பனை வளம், நயத்தல் வளம் என்பன தடைப்பட்டு விடும். நாமும் இணைவதாயின் அவர் களைப் போல மழலைபேசி, அவர்களோடு கலந்து கொண்டு அவர்கள் கற்பனையில் செல்வதுபோல நாமும் நடித்துச் செல்லம் விளையாடினால் அதனை அவர்களும் விரும்பி வரவேற்பர்.

நாம் இப்படி நடந்தால் அவர்களைக் குழப்புவதாக இருக்காது. உங்களுக்கு ஒரே மகள் என்பதால் அவளின் செயல்கள் உங்களுக்கு அசாதாரணமாகப்படுகின்றன. நீங்கள் கவலைப்படும் விதத்தில் அக்குழந்தையிடம் எவ்வித குறையுமிருப்பதாகத் தெரியவில்லை. உங்கள் மனதில் இன்னும் அதிகமாக அச்சமிருக்குமெனில், உங்கள் மனஆறுதலுக்காக ஒரு உளவியல் மருத்துவரிடம் குழந்தையைக் காண்பித்து யோசனை கேட்பது நல்லது.

✉ ✉ ✉ ✉

**? நான் ஒரு வரை மனதார விரும்புகிறேன். அவர் என் அக்காவின் கணவருடைய தம்பி. எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் எங்கள் காதலுக்கு இரு இடத்திலும் பச்சைக் கொடி காட்டி விட்டார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். ஆனால் இந்த மகிழ்ச்சி இன்று வரை நீடிக்கவில்லை. காரணம் அவருக்கு ஒரு அக்காவும் அண்ணாவும் இருக்கிறார்கள். அவரது அக்காவின் திருமணம் முடிந்தபின்பே எமது திருமணமாம். அதற்கு எங்கள் குடும்பமும் சம்மதித்தார்கள். அது அப்படியே இருக்க, அவர் ஆரம்பத்தில் என்னுடன் தொலைபேசியில் மிகவும் அன்பாகவும் பாசமாகவும் கதைத்தார். எல்லா விஷயங்களையும் நமக்குள் பகிர்ந்து கொண்டோம். ஆனால் கடந்த இருமாதங்களாக ஒரு தொலைபேசியும் வரவில்லை. நானாக அவருக்கு எடுத்துக் கதைக்கக் கூடிய சூழ்நிலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்லை. அவர் ரொம்ப தூரத்தில் இருப்பதால் அவர் வரவோ நான் போகவோ சந்தர்ப்பம் இல்லை. என் சகோதரி மூலம் கேட்டதற்கு, எந்த வித பிடிமானமும் இல்லாத பதிலைக் கூறியிருக்கிறார். எனது பிடிவாதத்தால் தான் என்பெற்றோர் இதற்கு சம்மதித்தனர். அவரை என்னால் மறக்கவும் முடியாது. என்னால் என் சகோதரிக்கும் அவரது கணவருக்கும் ஏதாவது பிரச்சினை வருமா? அவரை மீண்டும் எவ்வாறு பழைய நிலைக்கு கொண்டு வருவது? அவர் மீண்டும் என்னுடன் கதைப்பதற்கு வழியேதாவது உண்டா?**

ராணி, தெல்தோட்டை

✻ உம்மை விரும்பிய உங்கள் நெருங்கிய உறவினருமானவர் தூர இடத்துக்குப் போனதுமல்லாமல், உம்முடன் தொடர்பு மற்றிருக்கிறார். உமது சகோதரிமூலம் விசாரித்ததற்கு எவ்வித பிடிமானமுமில்லாத பதிலே கிடைத்துள்ளது என்கிறீர். அவர் இங்கே இருக்கும்போது நெருங்கிய உறவுமுறையும் இருந்ததால், அவர் உம்மைத் திருமணம் செய்யும் நோக்குடன் கலந்து பேசியிருக்கலாம்.

ஊர் விட்டு வேறு இடம்சென்றிருப்பதால் இட வித்தியாசம், நேர மாற்றம், உணவு, உடை, சூழல் முதலியவை மாறுபட்டிருக்கும் போது, தன்னை அதில் பொருத்திக் கொள்வதற்கான அவகாசம் அவருக்குத் தேவைப்பட்டிருக்கலாம். என்றாலும் கூட, உமது விஷயம் பற்றிப் பிரஸ்தாபித்தபோது அவர் அலட்சியம் காட்டியிருக்கிறார் போல் தெரிகிறது. எதற்கும் அமைதியாக, ஆறுதலாக உமது அக்கா அத்தான் மூலம் அவருடன் தொடர்பை ஏற்படுத்தி, அவரது மனப்போக்கை அறிவதே உசிதமானது. எடுத்த எடுப்பில் அவர் கைவிட்டு விட்டாரோ என நீர் சந்தேகிக்க வேண்டியதில்லை. பிற நாடு சென்றவர்களுக்கு வேலை வசதிகள் தேவை. அவற்றில் அதிகம் கவனம் செலுத்தும் போது இங்குள்ள தொடர்புகளை உடனடியாக வளர்த்துக்கொள்ள முடியாதே அங்கும் அவர்கள் நிலையை ஸ்திரப்படுத்தவேண்டுமே. எனவே நீர் சற்றுப் பொறுமையாக இருப்பது நல்லது

சில நாட்களே நீங்கள் ஒருவரையொருவர் விளங்கிக் கொண்டாலும், சூழல் மாற்றத்தால் அவருடைய மன நிலையில் சில மாற்றங்கள் ஏற்படக் கூடிய சாத்தியங்களும் உண்டு. எதற்கும் பதற்றமடையாமல், ஆறுதலாக, அமைதியாக அத்தான், அக்கா மூலம் உமது எண்ணங்களை வெளிப்படுத்தி நல்ல முடிவைப் பெற முயற்சி செய்யவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? நான் அடுத்தவருடம் A/L பரீட்சை எடுக்கிறேன். என்னோடு படிக்கும் மாணவர்களில் ஒருவன் நல்ல அழகும் சிறந்த குணமும், படிப்பில் கெட்டிக்காரத்தனமும் உள்ளவன். எனது வகுப்பு மாணவிகள் எல்லோருக்கும் அவனின் காதல் கிடைக்காதா என்ற ஏக்கம். அவனுக்கு என் மீது கொள்ளை விருப்பம். எனது கனவில் கூட அவன் அடிக்கடி வருகிறான். இரு பகுதிப் பெற்றோரிடமும் இதனை எப்படிச் சொல்லலாம்?**

*ரதிலெட்சுமி , நக்குவானை*

*உமது மலரும் காதலைக் கேட்கவோ, புத்திமதி சொல்லவோ எனக்கு இப்போது அவகாசமில்லை. சற்று பொறுபிள்ளாய் சுனாமி அனர்த்தப் பாதிப்பை ஒட்டி அவர்களுக்கு எழுந்துள்ள அவலமான பிரச்சினையைப் பற்றிப் பல பெண்கள் எழுதியுள்ள சோகக் கடிதங்களைப் படித்து ஆலோசனை வழங்குவதிலேயே இப்போது எனது முழுக்கவனமும் இருக்கிறது. உமக்கு அடுத்த ஆண்டு A/L பரீட்சை, படிக்காமல் வெறும் கனவில் மிதந்து பரீட்சையில் நீர் கோட்டை விட்டு, அந்தப் பையனின் படிப்பையும் பாழடித்துக் கொள்ளாமல் இருப்பதே சில வருடங்களுக்காவது நீர் மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணி என்பதே தற்போதைக்கு எனது புத்திமதி. சில காலத்துக்குப் பின்னர், உமது காதற் கதைபற்றிக் கலந்துரையாடலாம். காதல் கனவுகளைப் புறந்தள்ளி விட்டுக் கல்வியைப் பற்றிய, பாடங்கள் தொடர்பான கனவுகளில் காலத்தைச் செலவழிக்கவும்.

✉ ✉ ✉ ✉

**? அம்மா நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளும் காதலிக்கிறாள். அவள் வசதி படைத்தவள். அவளுடைய அப்பா, மாமா, அன்ரி , சித்தப்பா முதலியோர் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நாட்டில். கனடா, ஜேர்மன், லண்டன் என வசிக்கிறார்கள். நான், தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறேன். நான் இரண்டு வருடமாக அந்தப் பெண்ணைக் காதலிக்கிறேன். நான் அவளிடம் என் குடும்பத்தைப் பற்றிச் சொல்லிவிட்டேன். அவளுக்கும் பிடித்து விட்டது. ஆனால் அவளுடைய அப்பா, அம்மா அவளை வெளிநாட்டுக்கு அனுப்பி அங்கு ஒரு மாப்பிள்ளையை பார்த்து கட்டி வைக் கப்பார்க்கிறார்கள். ஆனால் அவளுக்கு விருப்பமில்லை. இந்த விடயம் என்னுடைய அம்மா அப்பாவுக்குத் தெரியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர்களுக்கும் விருப்பம். இதில் முக்கியமானது நான் இந்து மதம். அவள் கிறிஸ்தவம். அம்மா நான் அவளுடன் சேர்ந்து வாழ வேண்டும். இதற்கு என்ன வழி?**

கிருஷ்ணா, தென்னக்கும்புர

* எந்தப் பெற்றோரும் தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறப்பாகவுமஸ் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டுமென்றே விரும்புவர். உமக்கும் உமது பெற்றோருக்கும் வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதால் அப்பெண்ணைப் பிடித்திருக்கிறது. அவளுக்கு உம்மைப் பிடித்துவிட்ட போதிலும் அவளின் பெற்றோர் சம்மதிக்கவில்லை. ஒரு வேளை இருவரும் வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாயும் இருக்கலாம். அல்லது தமது மகளுக்கு உமது அந்தஸ்து போதாது என அவர்கள் நினைத்திருக்கவும் கூடும்.

இங்குள்ள எமது தமிழ் சமுதாயத்தில் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு தமது மகள்மாரைத் திருமணம் செய்து வைப்பது ஒரு அந்தஸ்துக்குரிய விடயமாகப் பல பெற்றோர்களால் கருதப்படுகிறது. பல சந்தர்ப்பங்களில் முகம் தெரியாத மாப்பிள்ளைகளை கலியாண புரோக்கர்கள் மூலமாக ஒழுங்கு படுத்தித் தொலைபேசியினூடாகக் கதைத்து நிச்சயித்து விட்டு, மகள்மாரை அங்கே அனுப்பிவிடுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட வெளிநாட்டு மாப்பிள்ளை நோயாளியா? அங்கு வேறொரு பெண்ணுடன் வாழ்கிறானா? மது, போதை வஸ்துக்களுக்கு அடிமையானவனா? உண்மையாக என்ன தொழில் புரிகின்றான் என்பதைப் பற்றி ஆராயாமல் அவசரப்பட்டு மகள்மாரை திருமணத்திற்கென ஏற்றுமதி செய்து விடுகிறார்கள்.

அநேக சந்தர்ப்பங்களில் இவ்வாறான அவசரத் திரும ணங்கள் பரிதாப கரமாகக் கண்ணீரில் தான் முடிகின்றன.

உமது காதலியின் சிறிய தகப்பன் மற்றும் நெருங்கிய உறவினர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருப்பதால் அவளுக்குப் பொருத்தமான மாப்பிள்ளையைத் தேடி தெரிவு செய்வதில் பிரச்சினை இருக்காது என நம்புகிறேன். உமது காதலி உம்மைக் காதலிப்பது உறுதியானால் பெற்றோரிடம் படிப் படியாக எடுத்துச் சொல்லி அவர்களை சம்மதிக்க வைக்கலாம். இரு ஆண்டுகளாகத்தானே காதலிக்கிறீர்கள். அவள் வயதில் சிறியவள் என்றால் அவளின் காதல் வெறும் பருவக் கவர்ச்சி யாகவும் இருக்கலாம். அவளும் பெற்றோர் சொற்படி மனம்மாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவனோ ஒரு வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு ஆசைப்படவும் கூடும்.

நீர் நிர்ப்பந்தமான முடிவு எடுக்காமல் உமது அந்தஸ்தை மேலும் உயர்த்துவதில் அதிக முயற்சியும் அக்கறையும் எடுப்பதே புத்திசாலித்தனமானது.

✉ ✉ ✉ ✉

**? எனது வயது 26. ஓ.எல் வரை கல்வி கற்றிருக்கிறேன். எனக்கு தமிழ் என்றால் உயிர். நான் கவிதை எழுதி பரிசும் பெற்றிருக்கிறேன். மற்றவருக்கு கல்வி கற்றுக் கொடுக்க எனக்கு இருந்த ஆர்வத்தால் ஒரு பாடசாலையில் தொண்ட ராசிரியையாக ஒரு வருடம் கடமையாற்றினேன். அக் குறுகிய காலத்திற்குள் நானே பாடல் இயற்றிச் சொல்லிக் கொடுத்து பாராட்டும் பெற்றிருக்கிறேன். ஒரு முறை அதிபர் "உங்களால் இந்தப் பாடசாலையில் பிரிவினை ஏற்படுகிறது" என்று கூறினார். ஏன் என்றால் அது நான் முன்னர் கல்வி கற்ற முஸ்லிம் பாடசாலை. எனக்கு கற்பித்துக் கொடுத்த ஆசிரியை தான் அங்கு அதிபராக கடமையாற்றினார். அதனால் நான் மனம் பெரிதும் துக்கப்பட்டேன். மனம் உடைந்து போய் விட்டது. பெற்றோர் என்னை அங்கு இனிப்போக வேண்டாம் என்றார்கள். அதே போல் நானும் போகவில்லை. இருப்பினும் அங்கு கல்வி பயிலும் இந்து மாணவர்களை நினைத்தால் இன்னும் கண்கள் கலங்கு கின்றன. பிறருக்காக வாழ்வதே என் இலட்சியம். இப்போது எனக்கு திருமணம் செய்துவைக்கப் பெற்றோர் ஆயத்தமா கிறார்கள். அநாதைச் சிறுவர்களுக்கு ஏதாவது செய்ய நினைக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?**

தர்ஷினி, கொள்ளுப்பிட்டி

✲ தமிழ் மொழி மீது உமக்குள்ள பற்று, கவிதை எழுதும் ஆற்றல், அநாதைச் சிறுவர்களுக்கு உதவ வேண்டுமென்ற தொண்டுள்ளம், இவற்றைப் பார்த்து நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தகைய பண்புகள் நிறைந்த உம்மைப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டிய உமது ஆசிரியை அதிபராகத் தற்போது பதவி உயர்ந்துள்ளவர் மதத்தை காரணம் வைத்துத் தொண்டரா சிரியராக பணிபுரிந்த உம்மீது அபாண்டமாகக் குற்றஞ் சாட்டியிருப்பது ஏனோ தெரியவில்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் கற்பித்த மாணவி பெயரும் புகழும் பெறுவதையிட்டு ஆசிரியர் பெருமைப்படுவதை விட்டு எரிச்சல் கொள்வது ஏற்றுக் கொள்ள முடியாததொன்று. இன்று தலைமைப் பதவியிலுள்ளோர் தம் நடுநிலையினின்றும் பிறழ்வதனால் பல அநீதியான, தவறுதலான முடிவுகள் ஏற்படுகின்றன. நீர் ஓ.எல் வரை தான் படித்திருக்கிறீர் என்பதில் என்ன வெட்கம்? வெட்கப்படாமல் மேற்கொண்டும் கல்வியில் முன்னேற முயற்சி செய்யவும். தராதரப் பத்திரங்கள் வெறும் தொழில் பெறத் தான் உதவும்.

வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் சுயமாக எவ்வளவோ கற்றுக் கொள்வதற்கும் உமது தராதரம் போதும். பேரறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் முதலியோர் தாமாகவே அறிவு தேடல் மூலம் பெற்ற ஞானத்தினால் பிரபலமும் புகழும் பெற்றிருக்கிறார்கள்.

வயது கல்விக்கு தடையல்ல. அறிவை வளர்த்துக்கொள்ளத் திருமணமும் தடையல்ல. பெற்றோர் தமது மகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமென ஆசைப்படுவதில் தவறொன்று மில்லை. திருமணம் செய்து கொண்ட பின்னரோ அல்லது இப்போதோ நீர் அநாதைச் சிறார்களுக்கு உதவி புரியலாம்.

போரினால் பெற்றோர்களை இழந்த, பல ஆயிரக் கணக் கான ஆண் - பெண் சிறார்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக் களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி என பல மாவட்டங்களிலும் தொண்டு நிறுவனங்களாலும், சமய அமைப்புக்களாலும் நடத்தப்படுகின்ற சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். நீர் விரும்பினால் இவற்றில் ஒன்றுடன் இணைந்து பணிபுரியலாம்.

✉ ✉ ✉ ✉

**? நான் ஒரு இளம் பெண். O/L படித்து விட்டு வீட்டில் இருக்கிறேன். ஒவ்வொரு நாளும் எனக்குப் பயமாக இருக்கிறது. நித்திரை கூட வராமல் அந்தரமாக இருக்கிறது. சுனாமி ஏற்பட்ட பகுதிகளில் நில வெடிப்பு, கிணறுக ளிலிருந்து வெந்நீர் கொப்பழித்துப் பாய்தல் எனச் செய்திகள் வரும் போது, மீண்டும் சுனாமி எமது நாட்டைத் தாக்குமோ என அச்சமாக இருக்கிறது. சுனாமியினால் ஏற்பட்ட உயிரி ழப்புக்களையும், மக்களுக் கேற்பட்ட பதற்றங் களையும், அழிவுகளையும் டி.வி.யில் பார்த்து நடுங்கிப் போனேன். சில நாட்கள் சாப்பிடக் கூட மனம் வரவில்லையம்மா உயிர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தப்பிய மக்கள், குடும்ப உறவுகளை இழந்து முகாம்களில் கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிற போது, சுனாமி வந்துவிட்டது எனச் சிலர் விசமத்தனமான வதந்திகளைப் பரப்புகிற போது, சனங்கள் பதறி அடித்து ஓடுவதைக் காணப் பரிதாபமாயிருக்கிறது. மீண்டும் ஒரு சுனாமி வந்தால் ...நினைக்கவே என்னமோ செய்கிறது. உடம்பு பதறுகிறது. சுனாமி மீண்டும் வருமா அம்மா?**

ஊர்மிளா, கொழும்பு-05

* O/L படித்த உமது கடிதத்தில் எத்தனை எழுத்துப் பிழைகள், வசனப் பிழைகள்... எல்லாவற்றையும் திருத்தியிருக்கிறேன். மனப் பயத்தின் காரணமாக அவசரத்தில் பல பிழைகளோடு எழுதி அனுப்பியிருக்கிறீர். சுனாமியால் ஏற்பட்ட உயிரழிவு களையும் பரிதாபங்களையும் எவராலும் இலகுவில் மறக்க முடியாது. மீண்டும் இவ்வாறானதொரு இயற்கைப் பேரனர்த்தம் ஏற்பட்டுவிடுமோ என்ற பீதி பலரிடமும் காணப்படுவது உண்மையே. தொழில் நுட்பமும் விஞ்ஞானமும் தமது அறிவாற்றலால் உலக உச்சிக்கே வளர்ந்து விட்டது என மனித இனம் மார்தட்டிக் கொண்டிருந்தது. ஆனால் இயற்கையோ இவையெல்லாவற்றையும் மிஞ்சிக் கொண்டதொரு சக்தி தன்னிடமிருப்பதைத் தெட்டத் தெளிவாக்கி உள்ளது.

பேராசை காரணமாக நமக்குத் தெரியாமலே இயற்கையுடன் மனிதர்கள் மோதிக் கொள்கிறார்கள். கடற் கரைகளில் மணலை அகழ்ந் தெடுத்து வியாபாரம், கடல் நீரில் கப்பல்களின் நச்சு அமில எண்ணெயைக் கொட்டி அசுத்தப்படுத்தல், கரையோர மரங்களைத் தறித்தெறிந்து உல்லாசப் பயண விடுதிகள் அமைத்தல், கடல் அலைகளைத் தடுக்கும் பாதுகாப்பு அரண்களாகவுள்ள மணல் மேடுகளை அழித்தல், இயற்கைச் சூழலைத் துவம்சமாடுதல் என மனிதர்களின் அசுர வேட்டையை இயற்கை பார்த்துப் பொறுத்துக் கொண்டிருப்பதற்கும் ஓர் எல்லையுண்டு தானே ?

மண்சரிவு, நிலநடுக்கம், பூகம்பம், வெள்ள அபாயம், காற்று மாசடைதல், கடற்கோள் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதைத் தணிப்பதற்காகவே பெண்கள் இயக்கங்கள் இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்பதை வலியு றுத்திக் குரல் கொடுத்து வருகின்றன. ஆனாலும் யாரும் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

சுனாமி ஏற்பட்டு எத்தனையோ ஆயிரம் உயிர்களைப் பலி எடுத்ததோடு, பெரும் பொருள் அழிவுகளையும் ஏற்படுத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தான் எல்லோரும், விஞ்ஞானிகள் உட்பட, ஓடி விழிக்கிறார்கள். சில பஞ்சாங்கங்கள் தாம் பல வருடங்களுக்கு முன்னரே இது சம்பந்தமாக எதிர்வு கூறிவிட்ட தாகப் பீற்றிக் கொள்கின்றன. அதை ஒரு மாசத்துக்கு முன்னராவது மக்களுக்கு மீண்டும் ஊடகங்கள் வாயிலாகத் தெரிவிக்காமல் வாயில் கொழுக்கட்டையை அடைத்து மென்று கொண்டிருந்தார்களோ?

பசுபிக் பிராந்தியத்தின் ஹாவாயில் அமைந்துள்ள இயற்கை அனர்த்த அவதானிப்பு நிலையம், சுமாத்திராவின் கடலடியில் பூகம்பம் வெடித்த உடனேயே தென் கிழக்கு ஆசிய நாடுகளை எச்சரித்தது. சுனாமிப் பேரலைகள் எழுந்து வந்து ஆயிரமாயிரம் உயிர்களை அடித்துச் செல்லும் வரை குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனராம் காலநிலை அவதானிப்பு நிலையத்தினர். இதுதான் இங்குள்ள அதிகாரிகளின் இலட்சணம் மக்களை எச்சரித்து எத்தனையோ இழப்புக்களைத் தவிர்த்திருக்கலாமே.

சுனாமி கடற்கோள் கடல் நீருக்கடியில் ஏற்படும் பூகம்பத்தினால் ஏற்படுகின்றது. ஆனால் எல்லாப் பூகம்பங்க ளினாலும் மோசமான வகையில் கடற்பேரலைகள் எழுந்தடித்து இழுத்துச் செல்வதில்லை. 7.0 ரிச்டர் அளவை விடக் கூடுதலான அதிர்வுள்ள பூகம்பங்களே கடற் பேரலைகளை ஏற்படுத்தக் கூடியவை என்பது பூகர்ப்பவியலாளரின் கருத்து. சென்ற டிசம்பர் 26 இல் சுமாத்திரா, நிக்கோபார் , அந்தமான் தீவுகளில் ஏற்பட்ட பூகம்பம் 9.0 ரிச்டர் அளவிலானது என்பதாலேயே ஆழிப்பே ரலைகள் இவ்வளவு பேரனர்த்தங்களை ஏற்படுத்தின என்கின்றனர் ஆய்வாளர்கள். இயற்கை அனர்த்தங்களை மனிதராலோ, விஞ்ஞானத்தினாலேயோ முழுமையாகக் கட்டிப் போட்டு விட முடியாது.

ஆபத்துக்களை முன்கூட்டியே அறிவிக்கக் கூடிய கருவிகள், கடல் அலைகளுக்கு ஓரளவாவது ஈடுகொடுக்கக் கூடிய பாது காப்பு அரண்கள், மணல் திட்டுகள், பெரிய மரங்கள், கரையோரங் களில் செழித்து வளரக் கூடிய தாவரங்கள் போன்றவை அமைக்கப் பட்டால் அழிவுகள் குறைவாக இருக்கும். மக்களிடம் இவை பற்றிய விழிப்புணர்வு அவசியம். வதந்திகளை நம்பக் கூடாது. வதந்திகளைப் பரப்புவோர் "பூனைக் குட்டிக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது" என்பது போன்ற செயல்களை விடுத்து, இரக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

?• எனக்கு வீட்டு வேலை, சமையல் செய்ய ஒரு வேலைக்காரி உதவிக்கு வருகிறாள் . அவளுக்கு மூன்று பெண் குழந்தைகள். அவளுடைய கணவன் இக் குடும்ப பாரத்தைச் சுமக்க விரும்பாமல் இவளை விட்டு விட்டு ஓடிப் போய் இன்னொருத்தியோடு வாழ்கிறான். இவளை அவன் அறவே கைவிட்டு விட்டான். பாவம் இந்தப் பெண் தானே கஷ்டப்பட்டு இதுவரையும் பெண் பிள்ளைகளை வளர்த்த பின், மூத்த இரு பெண் பிள்ளைகளையும் ஒருத்திக்கு 16 வயது, மற்றவள் 14 - தன்னைப் போலவே வீட்டு வேலைக்கு அனுப்பியுள்ளாள். மூன்றாவது பெண் குழந்தை 12 வயதான வள். சிறிது நோஞ்சானாக இருந்தாலும் கூட அவளும் ஒரு வீட்டில் குழந்தை பார்க்கும் வேலைக்குச் செல்வதும் இடையிடையே வருத்தமென்று கிடப்பதுமாகக் காலம் போகிறது. இந்தப் பிள்ளைகளும் வீட்டு வேலை பார்ப்பதால் ஒருவாறு தங்கள் சீவியம் போகிறது, இல்லாவிட்டால் உணவு, உடை, இருப்பிடம் என்பவற்றிற்கு தாம் எங்கே போவது என்கிறாள். எத்தனையோ தடவைகள் நான் அவளிடம் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பாதே, எப் படியும் கஷ்டப்பட்டுப் படிக்கவை பின்னடிக்கு கல்வியும் அறிவும் உதவும், பிள்ளைகள் நல்லாயிருப்பார்கள் என்று எவ்வளவோ புத்திமதிகள் கூறினேன். நான் சொல்வதெதுவும் அவளுக்குச் சரியாகப் புரியவில்லைப் போலும். ஏழ்மையில் உழலும் கல்வியறிவில்லாத இத்தகையோருக்கு கற்விகற்ப திலுள்ள சிரமம், காலம், பணம் போன்றவை பூதாகாரமாகத் தெரிவதோடு உடனடிப் பயனையே அவர்கள் கருதுகி றார்கள். சாப்பாட்டுக்கு வழியில்லாமல் உடுக்க வசதியில்லாமல் உழல்பவர்களுக்கு உடனடித் தேவையைப் பூர்த்தி பண்ணு வதற்கு சிறார்களின் ஊதியம் உதவுகிறது என்கிறாள். ஒரு வழியில் படியாதவளாக இருந்தும் அவள் கூறுவது சரி போலத்தான் எனக்கும்படுகிறது. உங்களுடைய அபிப்பி ராயம் என்ன?

கனகமணி , உவர்மலை

* வறுமையில் வாடும் தாய், பிள்ளைகளுக்கு கல்வியறிவூட்ட முடியாமல் வேலைக்கமர்த்துவது தவறென்று பட்டாலும் கூட, அன்றாட வயிற்றுப் பிழைப்பைப் பார்க்க பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவது உங்களுக்கும் ஓரளவு சரிபோலத் தெரிவதான உங்கள் கருத்தைப் புரிந்து கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வீட்டு வேலைக்காரியைப் பொறுத்தளவில் அவளுக்குக் கணவனுடைய துணையோ ஒழுங்கான வாழ்க்கையோ இல்லை என்பது புலப்படுகிறது. வறுமையால் பல குழந்தைகளுடைய வாழ்க்கை பந்தாடப்படுகிறது. இதனால் தான் ஔவையாரும் "கொடிது கொடிது இளமையில் வறுமை" என்று கூறியுள்ளார்.

இப்படி எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏழைக் குழந்தைகள், அறியாமை மிகுந்த பெற்றோரின் குழந்தைகள், அநாதைக் குழந்தைகள் என இளம் சமூகமே கல்வியறிவில்லாமல் அல்லாடுகின்றது. இந்தப் பிரச்சினைபற்றி அரசாங்கம் தான் முற்றுமுழுதாகக் கவனமெடுத்து இத்தகைய குழந்தைகளுக்குக் கல்வியறிவூட்டி அவர்களையும் சமூகத்தின் அறிவுமிக்க பிரஜைகளாக்க முயற்சிக்க வேண்டும். எமது நாட்டின் சட்டப்படி 14 வயது வரை எல்லாப் பிள்ளைகளுக்குமே கட்டாயக் கல்வி வற்புறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு சிறார்களை வேலைக்கமர்த்துவது சட்டப்படி குற்றமாகும். பிள்ளைகளுக்கு உரிய முறையில் கல்வி புகட்டுவிக்க வேண்டியது பெற்றோருடைய பிரதான கடமை என்பதை எந்தத் தாயும் தந்தையும் மறந்துவிடலாகாது.

வறுமை என்பதைக் காரணம் காட்டிப் பெற்றோர் தவறு செய்யவும் கூடாது. வறுமையில் வாடும் குழந்தைகளையும் கல்வியில் ஈடுபடுத்துவதற்கென்றே இலங்கையில் இலவசக் கல்வி முறைஅறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கப் பாடசாலைகளில் இலவசக் கல்வி, இலவச மதிய உணவு, இலவச உடை, என்பன வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு உயர வேண்டியது ஏழை மக்களின் கடமையாகும்.

கற்க வேண்டிய காலமும் இளமைப் பருவமே. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பர். இளமைப் பருவத்திலேயே கல்வியை கற்பதால் அன்பு, இரக்கம், நேர்மை, நீதி, நன்றி உணர்ச்சி, பணிவு என நல்ல பணபுகளைச் பிற்காலத்தில் ஒழுகவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பெரியவர்களாக, அறிவாளிகளாக, தலைவர்களாக இன்று உயர்ந்து நிற்கும் பலர், இளைமையில் கஷ்டப்பட்டு தமது சொந்த முயற்சியாலேயே கல்வி கற்று முன்னுக்கு வந்தவர்களென்பதை இவர்கள் அறிய வேண்டும். உணர வேண்டும்.

ஒரு மனிதனுடைய வளர்ச்சியை இரண்டாக நாம் கணிப்பிடலாம். உடல் வளர்ச்சி ஒன்று மற்றது உள வளர்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் வளர்வது போல உளமும் வளருவதற்கு கற்றல் அறிவு அவசியம். மாணவருடைய உடல் உள ஆற்றல்களைக் கருத்தில் கொண்டே கல்வியியலாளரும், பாடநூல் வல்லுனரும், உளவியலாளரும் பாட நூல்களை வகுத்து எழுதியுள்ளனர்.

அவற்றைப் படிப்படியாகக் கற்பதனால் பிள்ளைகளுடைய கல்வியறிவு உயருகிறது. இதனால் அவர்களுடைய திறமையும் விவேகமும் வெளிப்படுகிறது. படியாதவர்கள் உடல் வளர்ந்தாலும் (அது இயற்கை), அறிவு வளர்ச்சி போதாமையால் முட்டாள் களாகவே இருப்பர். அதனால் வாழ்க்கையில் எதிலும் தோல்வி யையே தழுவ நேரும். அதன் பயனாக சோர்வும் சலிப்பும் ஏற்படும். எனவே தான் குறுக்கு வழிகளில் காரியங்களைச் சாதிக்க பொய், வஞ்சகம், பொறாமை, திருட்டு என்ற வழிகளைக் கையாளத் தொடங்கிச் சமூகத்தின் சாக்கடை யாக நாற்றமெடுக்க நேரிடுகிறது. கல்வியின் முக்கியத்துவத்தை உங்கள் வேலைக்காரிக்கு நன்கு விளங்கும் படி கூறி, அவளுடைய பிள்ளைகள் படிக்க வேண்டு மெனத் தூண்டுதலும் உதவியும், சமூக அக்கறை கொண்ட உங்களால் அளிக்க முடியுமென நம்புகிறேன்.

ஒரு ஆண் கற்ற கல்வியால் அவன் மட்டுமே பயனடை கிறான். ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு சமூகமே பயனடைகிறது என்பர் பெரியோர். ஆணென்றாலென்ன பெண்ணென்றாலென்ன, பிள்ளைகள் யாவரும் கல்வி கற்க வேண்டியது அவசியம். அதுவும் குழந்தை வளர்த்தல், குடும்பச் சுமையைத் தாங்குதல், அயலா ரோடு உறவாடல் எனப் பொறுப்பான காரியங்களில் ஈடுபடவுள்ள பெண் குழந்தைகளுக்குக் கல்வியறிவு மிக மிக அவசியம்.

✉ ✉ ✉ ✉

**?. நீங்கள் சுமார் ஆறுமாதகாலம் "நெஞ்சுக்கு நிம்மதியை" எங்களுக்குத் தராமல் கனடாவில் இருந்து விட்டு வந்திருக் கிறீர்கள். மிகவும் சந்தோஷம். அங்கே பல புதிய அனுபவங் களைப் பெற்றிருப்பீர்கள் என நம்புகிறோம். அங்குள்ள பெண்கள் நிலை எப்படி இருக்கிறது எமது தமிழர்கள் மூன்று லட்சம் பேர் அங்கு வாழ்கிறார்களாம். அவர்களில் ஒரு லட்சத்துக்கும் குறையாமல் தமிழ்ப் பெண்களின் தொகை இருக்கக்கூடும். அவர்களெல்லாம் எப்படி இருக்கிறார்கள்? என அறிய ஆவலாயுள்ளோம். தயவு செய்து சொல்லுங்கள்.**

பவானி, மேனகா, சீதுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உங்களுடைய கேள்வி சிறிதாக இருந்தாலும் அதன் பதில் நிறைய விஷயங்களை அடக்கியதாக இருக்கும் அத்தனை விரிவாக இப்பகுதியில் முழு விஷயங்களையும் விபரமாகத் தருவது கடினம். அவ்வப்போது சில கட்டுரைகளாக எழுதும் நோக்க முண்டு எனினும் உங்கள் ஆவலைப் பூர்த்தி செய்ய சில விஷயங் களைக் கூறுகிறேன்.

கனடா உலகிலேயே பரப்பளவால் இரண்டாவது பெரிய நாடு. அதன் பரப்பளவு சுமார் 10 மில்லியன் சதுர கி.மீற்றர். பல்லின, பல்கலாசார மக்களைக் கொண்டிருக்கின்ற போதிலும் அந்தப் பரந்த நாடு எந்த இனத்துக்கும் சிக்கல்களை ஏற்படுத்தாத வாறு சமஷ்டி முறையிலான ஆட்சி முறை மூலம் உலகத்துக்கே முன் உதாரணமாக விளங்குகிறது.

அமெரிக்கக் கண்டத்தின் வடக்கில் உள்ள இந்நாடு அமெரிக்காவை போன்ற செல்வந்த நாடே. செல்வச் செழிப்புக்குக் காரணம் அங்குள்ள நீர்வளம், நிலவளம், வனவளம், கனிமவளம், பண்ணைகள், தொழிற்சாலைகள், பாரிய மின் உற்பத்தி நிலையங்கள் முதலியவை ஏராளமாக இருப்பதே, அங்கு வாழ்கின்ற 31 பில்லியன் சனங்களில் அரைவாசிப் பேராவது பெண்களாக இருப்பர்.

பெண்களின் உரிமைகள் ஆசிய நாடுகளை விட, அங்கு சட்ட மூலமாக நன்கு உத்தரவாதப்படுத்தப்பட் டுள்ளன. 1982 இல் அந்நாட்டில் நடைமுறைக்கு வந்த கனடிய உரிமைகளும் சுதந்திரங்களும் என்னும் சாசனத்தில் பெண்ணுக்குச் சம உரிமை வழங்கப் பெற்றுள்ளது.

கல்வி, அரசியல், தொழில், விளையாட்டு போன்றவற்றில் சம உரிமையும், புரியும் தொழிலுக்கு ஆண்களைப் போன்ற சமசம்பளமும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கணவர் தனது மனைவியை அடிக்கவோ, துன்புறுத்தவோ முடியாது. பெண்முறைப்பாடு செய்தால் கணவனைப் பொலிஸ் அள்ளிக் கொண்டு போய் அடைத்து வைத்து குற்றப் பதிவு செய்து விடுகிறது. கருத்தரிக்கும் விஷயத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கொண்டவர்களாகப் பெண்கள் உள்ளனர்.

சென்ற ஆண்டு நடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் 21 வீதமான பெண்கள் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஏனைய சில ஐரோப்பிய நாடுகளைபோலவே பெண்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்திலும் நகராட்சி மன்றங்களிலும் 30முதல்50 வீதமாக அதிகரிக்க வேண்டுமெனற குரல் அங்கும் ஒலித்த வண்ணம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி இடத்துக்குப் பெண்களை இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவு புரிவதென்பது கயவர்களின் விசர்நாய்த் தனமான உலகளாவிய கொடும் நோயாகவே இருக்கிறது.

கனடாவிலும் இந்நோய் பிடித்தவர்களின் இழிசெயல்கள் காணப்படாமலில்லை. ஆனால் பொலிஸார் விளையாட்டுப் பார்த்துக் கொண்டிராமல் துரத்திப் பிடித்து உரிய வகையில் நடவடிக்கை எடுத்து விடுகிறார்கள் குற்றமிழைத்தவர்கள் ஒழித்துத் தப்பி ஓட முடியாமல் நேர்மையாகவும் சுறு சுறுப்பாகவும் கண்டிப்பாகவும் நடவடிக்கை எடுத்து விடுகிறார்கள் பொலிஸார். அங்கு வாழும் சுமார் மூன்று இலட்சம் ஈழத்தமிழர்களில் கணிசமான அளவு தொகையினர் பெண்களே. அவர்களுள் உயர் கல்வி ஆளுமையுள்ளவர்கள், தகைமைக்குத் தகுந்த தொழில்களில் அமர்ந்து சிறப்பாகப் பணிபுரிகின்றனர். வீட்டில் அடைந்து கிடக்கும் தமிழ் பெண்கள் மிகக் குறைவு.

தொழிற்சாலை, உணவகம் போன்றவற்றிலாவது வேலை தேடிக் கொள்கின்றனர். உடலுழைப்புப்புரிய இயலாத வயோதிபர் களைத் தவிர, கனடாவில் எவரும் சோம்பேறிகளாக இருப்ப தில்லை.

குடும்பம் வசதியாக வாழ்வதற்கும் இங்குள்ள உறவினர், தாய், சகோதரர்களுக்கு உதவுவதற்கும் ஒவ்வொருவரும் உழைத்தே ஆக வேண்டியுள்ளது. வேலைபார்க்கும் எமது தமிழ்ப்பெண்கள் அனேகர் கூந்தலைச் சற்று சுருக்கி, ஜீன்சும் மேற்சட்டையுமாகவே தொழிலுக்குச் செல்கின்றனர்.

பல்லினத்தைச் சேர்ந்தவர்களுடன் பணியாற்றுவதாலும், போக்குவரத்து, சுவாத்தியம், போன்ற வசதிக்காகவும் காற் சட்டையும் சேட்டும் அணிகின்றனர். இதில் தவறேதும் இல்லை என்றே தோன்றுகிறது.

ஆனால் கோவில்கள், திருமண வைபவங்கள், விருந்து பாசாரம், கலைவிழாக்களின் போதெல்லாம் நமதுகலாசாரம் பளிச்சிட நகைகள், பட்டுச் சேலைகள், ஸ்டிக்கர் பொட்டு, பூமாலை என அணிந்து அழகைக் கொலுவிருத்தி விடுகின்றனர். விரிவான கட்டுரை ஒன்றைப் பின்னர் எழுத உத்தேசித்துள்ளேன். நீங்கள் வாசித்து இத்துடன் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்புவதற்காக எமது நகரத்தில் நிவாரணப் பொருட்கள் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தோருடன் நானும் என்னோடு படிக்கும் வேறு சில பெண்களும் சேர்ந்து வீடுகளிலும் கடைகளிலும் பொருட்கள் சேகரிக்கச் சென்ற போது, பலர் உதவி புரிந்தார்கள். ஆனால் சில வீடுகளில் பழைய உடுப்புகளையும் கொடுத்தார்கள். சேகரிப்பு மத்திய நிலையத்தில் கொண்டு வந்து பொருட்களை வகைப்படுத்திய போது, அவர்கள், தந்த உடுப்புகளில் அநேகமானவை கிழிந்தவையாகவும், அழுக்கானவையாகவும் காணப்பட்டன. அகதி முகாமில் தஞ்சமடைந் திருந்த மக்களுக்கு இவற்றைக் கொண்டு போய்க் கொடுப்பது சரியல்ல எனக் கழித்து விட்டோம். மனமிரங்கித் தந்தவற்றை இவ்வாறாக நாம் செய்திருக்கக் கூடாது எனச் சிலர் எதிர்த்தனர். நாம் செய்தது தவறு என நீங்களும் கருதுகிறீர் களா?**

மேரி, வென்னப்புவ

* எதிர்பாராத இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக உதவிப் பொருட்கள் சேகரிப்பில் ஈடுபட முன்வந்த உம்மைப் போன்ற இளம் பெண்களை முதலில் பாராட்டுகிறேன்.

மனிதாபிமானம் மனதில் உள்ள போதிலும் அதற்கான பணிகளை வெளியே வந்து செய்பவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களே.

அதுவும் பெண்கள், சமூகத்தில் எவ்வளவு பின்னடிப்பு? இந் நிலையில் நீரும் உமது நண்பிகளும் மனிதநேய உதவிப் பணிகளில் ஈடுபட்டதில் உண்மையாகவே நான் பெருமைப்படுகிறேன்.

வாயளவில் மனிதாபிமானம் பற்றிப் பேசுவதும், எழுத் தளவில் அதன் சிறப்பை விஸ்தரிப்பதுமாகவே பல படித்த பெண்கள் நிம்மதி அடைந்து விடுகிறார்கள். சமூகப் பணிபுரிய முன்வருவோர் மிகவும் குறைவே அவ்வாறானவர்களுக்கு உம்மைப் போன்றவர்களின் செயல் எடுத்துக் காட்டாக இருக்கட்டும்.

சற்றும் எதிர்பாராத இயற்கை அனர்த்தத்தால் எல்லாவற்றையும் இழந்து விட்டு அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்தவர்கள், தெருவில் கையேந்தி பிச்சைக்கார வாழ்வு நடத்தியவர்களல்லர் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். அவர்கள் வசதியான வாழ்க்கையை நடத்திய மனித ஜீவன்கள் தான். திடீரென நிர்க்கதியாகியுள்ள அவர்களுக்கு உடுக்க உடையும், உணவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்க ஓரிடமும் கொடுப்பது சமூகத்தினதும் அரசாங்கத்தினதும் பொறுப்பு.

அரசயந்திரம் போர்க்கால வேகத்தில் முடுக்கிவிடப்படாமல், அதிகாரத்திலுள்ளவர்கள் உலகைச் சுற்றி வந்து உல்லாசமாக ஆடிப்பாடி நித்திரையாகி, மெல்ல எழுந்து கொட்டாவி விட்டு அசதி முறித்துக் கொண்டிருந்த வேளையில், அகதிகளாகி அந்தரத்தில் துடிக்கும் ஜீவன்களின் துயர் துடைப்பதற்காக ஓடோடிச் சென்று உதவிய தொண்டு நிறுவனங்களையும், நிவாரணம் சேகரித்துக் கொண்டு போய்க் கொடுத்த மனித நேயம் மிக்க சமூகத் தொண்டர்களையும் பாராட்ட வேண்டும்.

நீங்கள் உள்ளூரில் நிவாரணப் பொருட்களைச் சேகரிக்கச் சென்றிருந்த போது, சிலர் பாவிக்க முடியாத கிழிந்த பழைய உடுப்புக்களை உபகரித்து தமது "வள்ளல்" தன்மையைக் காட்டியதாகக் குறிப்பிட்டிருந்தீர். நீங்கள் அவற்றை ஒதுக்கி வீசியது மிகச் சரியானது. கிழிந்த அழுக்குத் துணிகளைக் கொண்டு போய் அகதி முகாம்களில் இருப்பவர்களுக்குக் கொடுத்தால் அவற்றை அவர்களும் வீசித்தானே இருப்பர்? அவற்றைக் கொண்டு அவர்கள் என்ன செய்ய முடியும்? நீங்கள் உதவிப் பொருட்கள் சேகரிக்கச் சென்றதனால் தாமும் உதவி புரிவதாக ஒப்பாசாரத்துக்கு தாம் கழித்து வைத்த உடுப்புகளை உங்களிடம் கொடுத்திருக்கிறார்கள். கழித்தவற்றிலும் ஏதாவது சிறிது நல்லவை இருந்தால், அவற்றை வீடுவீடாக வந்து பழைய உடுப்புகளுக்குப் பதிலாக பிளாஸ்ரிக் பொருட்களைக் கொடுக்கும் வியாபாரிகளுக்குக் கொடுத்து பிளாஸ்ரிக் வாளி, சட்டி, கோப்பை போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாமென ஒதுக்கி வைத்து விட்டு, நைந்து போன உடுப்புகளை "உபகரிப்பு" என்ற பேரில் உங்களிடம் அளித்திருக்கிறார்கள்.

இத்தகைய கஞ்சத்தனமான பேராசை கொண்டவர்களும் நம்மத்தியில் உளர். எதிர் பாராவிதமாக தமக்கும் இப்படியொரு நிலை ஏற்படும் (அப்படி ஏற்படக்கூடாது) என்ற எண்ணம் துளி கூட அவர்களுக்கு இல்லை.

நிவாரணம் என்ற பெயரில் அனுப்பப்பட்ட பால்மா, ரின்மீன், மருந்துப் பொருட்களில் அநேகமானவை பாவனக்குரிய காலத்தைக் கடந்த பண்டங்களாம். அவற்றை உபகரித்தவர்களின் தர்மகைங்கரியங்கள் எத்தனை உச்சமானது அரசாங்கம் அனுப்பி வைத்த அரிசி கூட பாவனைக்கு உதவாதபடி புழுக்களால் மலிந்திருந்ததாம்.

அகதிகள் என்றால் அவர்களும் மனித ஜீவன்களே என்பதைப் பலர் உணர மறந்து விடுகின்றனர். நிவாரணப் பொருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் விநியோகத்தில் கூட கிராம சேவகர் மற்றும் அதிகாரிகளும் புரிந்த தில்லுமுல்லுகள் "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும்" செயலாக இருக்கிறது. மனித நேயம் என்பது வாய்ப் பேச்சளவில் தான் வாழ்கிறதோ எனச் சந்தேகப்பட வேண்டியுள்ளது.

? நான் கொழும்பிலுள்ள அரச அலுவலகம் ஒன்றில் பணிபுரிகிறேன். மாத்தறையில் எனது வீடு உள்ளது. ஒவ்வொருநாளும் அங்கிருந்து பயணம் செய்து வந்து அலுவலகம் சேர்வதற்கு அலுப்பும் களைப்புமாக இருப்பதனால் கொம்பனித்தெருவில் வாடகை அறையொன்றில் நானும் எனது சினேகிதி ஒருத்தியும் தங்கியிருந்து வேலைக்குப் போகிறோம். வார இறுதி நாட்களில் ஊருக்குச் சென்று பெற்றோர் சகோதரிகளுடன் இருந்து விட்டுத் திங்கட்கிழமை காலை திரும்புவேன். வருட இறுதி என்பதால் அலுவலகத்தில் ஓவர் டைம் வேலை இருந்தது. சனிக்கிழமையும் வேலை செய்து விட்டு டிசம்பர் 26 அன்று ரயிலில் பயணம் செய்து, ஊருக்குப் போய் பெற்றோருக்குப் பணம் கொடுத்து விட்டு மறுநாள் திரும்புவதாக திட்டமிட்டிருந்தேன். திடீரெனப் பேராதெனிய விலிருந்து எனது சிநேகிதி ஒருத்தி சனிக்கிழமை என்னோடு வந்து தங்கியதால், ஞாயிறு (டிச.26) ரெயிலில் நான் போக வில்லை. அந்த ரெயிலில் பயணம் செய்து வழியில் சுனாமி யில் சிக்கி அதில் பயணஞ் செய்த ஆயிரக்கணக்கானோர் பலியானதை எண்ணும் போது அருளாளனாகிய அல்லாவே எனது பயணத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார் என முழு மையாக நம்பி வணங்குகிறேன். நான் அழகிய இளம் பெண். அந்த ரெயிலில் சென்ற பல அழகான இளம் பெண்கள் அவல மாக இறந்த பின், சில தீயவர்கள் அவர்களின் நிர்வாணக் கோலங்களைப் புகைப்படம் பிடித்துப் பார்த்து மகிழ்ந்த செய்தி யைத் தினசரிப் பத்திரிகைகளில் படித்தேன். எனக்கும் அப்படி யொரு கதி நேர்ந்திருந்தால்.... இந்தக் கேடு கெட்ட செயல் புரிவோரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சரினா, வெலிகம

* நீர் புண்ணியஞ் செய்தவர். இறைவன் உம் நண்பி உருவில் வந்து உம்மைத் தடுத்தாட்கொண்டு விட்டார். உயிர் பிரிந்த பின் அந்த உடல்கள் வெட்கத்தை உணர முடியாது. ஆனால் இறப் பதற்கு முன் அந்தப் பயணிகள் துடித்த துடிப்புக்களைக் கற்பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கையில்.... இறைவா என்ன கொடுமை எத்தனை ஆசைகளைச் சுமந்து கொண்டு திட்டங்களை மனதில் தீட்டியபடி, இனிய கற்பனைகளை மனதில் படரவிட்டபடி, அவர்கள் பயணம் செய்திருப்பர்.

சில நிமிடங்களில் அவர்களின் வாழ்வும் கற்பனைகளும் நொறுங்கி அவர்கள் அவலமாக மரணித்து விட்டார்கள். அவ்வாறு மரணித்த அழகிய இளம் பெண்களின் அங்கங்களைப் புகைப்படமெடுத்தவர்களைப் பற்றி கேடு கெட்டவர்கள் என நீரே அபிப்பிராயம் கூறிவிட்டீர். இன்னும் பல காட்டு மிராண்டித் தனமான செயல்களும் நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இறந்த பெண்களின் உடல்களை மடியில் தூக்கி வைத்துக் கதறும் கணவன் போல நடித்து, அவ்வுடல்களின் காதுகளிலும் கழுத்துகளிலும் இருந்த நகைகளைக் கழற்றி எடுத்திருக்கிறார்கள். கழற்ற முடியாவதற்றை உறுப்போடு சேர்த்து அறுத்துக் கொண்டு ஓடிச் சென்றிருக்கிறார்களாம் வேறு சில காம வெறியர்கள்.

அழகிய இளம் பெண்களின் மரணித்த உடல்களுடன் பாலுறவு புரிந்திருக்கிறார்களாம்.

சீ இவர்கள் மனிதர்களா? செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாத குருட்டு நாய்கள்.

நாய்கள் என்றும் கூறமுடியாது. அவை மிருகம் என்ற போதிலும் நன்றியுணர்வு கொண்டவை. அவைகளிலும் கீழான ஜென்மங்கள், பிணந்தின்னிக் கழுகுகள், மலத்தில்நெழியும் நச்சுப் புழுக்கள். நச்சுக்கிருமிகளை அழிக்கும் பொலிடோல் போன்ற கிருமிநாசினிகளைத் தெளித்துச் சமூகத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டிய பீடைகள்.

⊠ ⊠ ⊠ ⊠

**?• பிறருக்கு நாம் எம்மாலியன்றளவு உதவி செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். பிச்சைக்காரர்களுக்கு எம்மாலியன்றபடி ஒன்றிரண்டு ரூபாய்களைப் போட்டால் அவர்கள் கெட்ட வார்த்தைகளால் திட்டுகிறார்கள். ஏசுகிறார்கள். நாம் உதவி செய்த சிலரும் எம்மை ஏனென்று திரும்பிப் பார்ப்பதோ, நன்றியாக இருப்பதோ இல்லை. அப்படியிருக்கும் போது நாம் மாத்திரம் இரங்கி அவர்களுக்காக உதவ வேண்டுமா?**

சைலஜா, குணசிங்கபுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உங்களுடைய கடிதத்திலிருந்து, உங்களுக்கு நேர்ந்த சில கசப்பான அனுபவங்களை உணரமுடிகிறது. உங்களிடம் உதவி வேண்டுவோர் போன்ற நிலையில் நீங்கள் இல்லாமல் , பிறருக்கு உதவக் கூடிய நிலையில் உங்களை இறைவன் வைத்திருப்பதற்கு நன்றியாகக் கருதி , பிறருக்கு உதவ நீங்கள் முன்வரவேண்டும்.

ஒருவருக்கு நாம் உதவும் போது அதற்கு பதிலாக அவர் எமக்கென்ன செய்வாரென எதிர்பார்த்து எதையும் செய்யக்கூடாது. எம்மால் முடிந்தளவு நாம் பிறருக்கு உதவினால் நாம் எமக்கு ஏற்படும் இடையூறுகளை இலகுவாக தவிர்த்து வாழலாம்.

நன்றிக்கு உதாரணமாகத் தென்னை மரத்தைக் குறிப்பிடுவர். தென்னையின் தாழ்களில் நாம்கழிவு நீரை ஊற்ற, தளரா வளர்தெங்கு தானுண்ட நீரைத் தலையாலே தான் தரும். அதனுடைய உச்சியிலிருந்து இளநீராக, இனிய நீரை எமக்குத் தென்னை தருகிறது.

அதே போலத்தான் பிறருக்கு நாம் சிறிய உதவிபுரிந்தால் கூட, பின்னர் ஏதோ வகையில் நாம் எதிர் பாராமலே எமக்குப் பேருதவிகள் வந்து சேரும். பிச்சைக்காரர்களுக்கு நாம் ஓரிரு ரூபாய்க்களைக் கொடுக்க அவர்கள் எரிந்து விழுவது தவறு தான்.

கல்வியறிவு பெற்ற நல்ல வசதி வாய்ப்புக்களை கொண்ட பெரியவர்களே தவறுவிடும் போது, ஏழைப் பிச்சைக்காரருடைய எரிச்சலை நாம் பெரிதுபடுத்தக்கூடாது. இன்று பொருள்களின் விலை உச்சத்தில் இருக்கிறது இச்சிறு பணத்தைக் கொண்டு பாவம் அவன் தனது கஷ்டங்களை எப்படித் தீர்ப்பது? அந்த இயலாமையினாலேயே அவன் நாம் தானமாகக் கொடுக்கும் பணத்திற்கும் சினம் கொண்டு ஏசுகிறான். தனக் கெட்டியது தான் தானமும் தர்மமும். அதனால், எம்மால் இயன்றதை நாம் தானமாக வழங்கும் போது அவன் எரிந்து விழுவது ஏற்கக் கூடியசெயல் அல்ல. எதற்கும் நீங்கள் மனந்தளராது, பிரதியு பகாரத்தை எதிர்பாராமல் பிறருக்கு உதவுங்கள் ஆண்டவன் உங்கள் செயலைக் கணக்கில் எடுப்பார். அவர்களின் தவறுகளை மறந்து விடுங்கள். அவர்களை மன்னியுங்கள்.

கீதையின் சாரம் "கடமையைச் செய். பலனை எதிர்பாராதே" என்பது. எனவே எதையும் எதிர்பார்க்காமல் மனித நேயம் மிக்க கடமைகளில் நாம் ஈடுபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? நான் மகளிர் பாடசாலையொன்றில் 8ஆம் வகுப்பில் கல்வி கற்கிறேன். எமது கல்லூரியில் கற்பித்தலில் நன்கு அனுபவம் மிக்க சிறந்த ஆளுமை கொண்ட ஆசிரியைகள் பல நல்ல அறிவான விஷயங்களைச் எமக்குச் சொல்லித் தருகிறார்கள். ஆனால் அவர்களுக்கிடையில் ஒருவரை ஒருவர் தாக்குவதும், சண்டையிடுவதும், பழி சொல்வதுமாக ஒற்றுமையுமின்றி அவர்களில் சிலர் காணப்படுகின்றனர். இதனால் எமக்குக் கற்பதிலும் வெறுப்பு ஏற்படப்பார்க்கிறது. இதனை எப்படி நிவர்த்திப்பது?**

பெயர் கூற விரும்பாத மாணவி, கண்டி

* திறமையும் ஆளுமையும் மிக்க ஆசிரியர்களாக இருந்தும் சிலர் தமது குறைபாடுகளை அதுவும் மாணவர்கள் அவதானிக்கக் கூடிய வகையில் வெளிக்காட்டி கொள்வது தவறென்றே எனக்குப் படுகிறது.

ஆசிரியர்கள் கற்பித்தலில் மாத்திரமல்லாமல் நடத்தையிலும் பண்பானவர்களாக நடந்து மாணவர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டியது மிக அவசியம். துரதிஷ்டவசமாக சில கல்வி ஸ்தாபனங்களில், கல்லூரிகளில் குழுக்கள், கோஷ்டிகளாக பிரிந்து ஆசிரியர்கள் மோதுவதையும், ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்பதையும் காண முடிகிறது. முடிந்தளவு இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட்டால் அதன் அறுவடை மிக உச்சமாகும். சில சந்தர்ப்பங்களில் தலைமையினுடைய பலவீனத்தாலும் இயலாமையாலும் இத்தகைய நெருக்கடி தலை தூக்குவதும் உண்டு.

எது எப்படி இருப்பினும் ஆசிரியர்கள் ஆசு + இரியர்களாக (குற்றமற்றவர்களாக, குற்றங்களை களைபவர்களாக ) நடந்து காட்ட வேண்டியது மிக மிக அவசியமே திறமையின் காரணமாக நீயா நானா பெரிது என்ற இத்தகைய ஒற்றுமை இன்மைகளும், போட்டி பொறாமையும் தலைதூக்குவது உண்டு.

அவற்றை ஒதுக்கி வைத்து விட்டு பண்பாளர்களாகத் திகழ வேண்டியது ஆசிரியர்களுடைய கடமை.

ஏனைய தொழில்களில் அமர்ந்துள்ளவர்களை விட ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் உயிரும் உணர்வுகளும் உள்ள எதிர்காலச் சந்ததியை வழிப்படுத்தும் உயர்ந்த பணியாளர்களாவர். ஒவ்வொரு ஆசிரியரின் ஆளுமையும் குணாம்சங்களும் மாணவர் மனதில் படிகின்றன. ஆசிரியர்களுடைய ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தையையும் செயலையும், உணர்வுகளையும் களங்கமற்ற பசுமையான உள்ளத்தோடு மாணவர்கள் அவதானிப்பதுடன், அவற்றையே முன்னுதாரணமாகக் கைக் கொள்கிறார்கள் என்பதை ஆசிரியர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். எனவே, ஆசிரியர்களே, உசாராக இருங்கள் என அவர்களை ஊக்கப்படுத்துவதுடன் மாணவர்களாகிய உங்களுக்கும் ஒரு சிறு அறிவுரை.

நீங்கள் 8ஆம் வகுப்பில் கற்கிறீர்கள். ஓரளவு சரி எது, பிழை எது என் அறிந்து கொள்ளக் கூடிய பக்குவம் அடைந்திருப்பீர்கள். மாணவர்களிலும் மூன்று வகையானவர்கள் எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. 1) முதல் மாணாக்கர் 2) இடை மாணாக்கர். 3) கடை மாணாக்கர். இதில் முதல் வகையானோர் அன்னப் பறவைபோலத் தன்மை கொண்டிருக்க வேண்டும் அன்னத்திடம் பாலையும் நீரையும் கலந்து வைத்தால் அது பாலை மாத்திரம் பருகி நீரைத் தவிர்த்து விடும். அது போல முதல்வகை மாணவர்கள் ஆசிரியர்களின் கற்பித்தலில் உள்ள நல்ல விஷயங்களை ஏற்று தேவையற்றவைகளை விட்டுவிடுவர்.

இடை மாணாக்கர் கிளிகளைப் போல என்பர். ஆசிரியர் சொல்லிக் கொடுத்ததை அப்படியே திருப்பி ஒப்படைக் கும் தன்மையர். இவர்களை மாட்டிற்கும் ஒப்பிடலாம். மாடு இரையை அப்படியே விழுங்குவது போல உட்கொண்டு விட்டு பின் ஆறுதலாக இரை மீட்கும். அது போலச் சில மாணாக்கர்கள் ஆசிரியர்கள் சொல்பவற்றை அப்படியே உள்வாங்கிக் கொண்டு, பின் மாடுகள் இரை மீட்பது போல ஆறுதலாக ஒவ்வொன்றாகச் சிந்திப்பர்.

கடை மாணாக்கர் என்போரைப் பன்னாடைக்கு அல்லது வட்டிகட்டிக்கு ஒப்பிடலாம். அதாவது குரு சொன்ன நல்ல விஷயங்களை எல்லாம் ஓடவிட்டு விட்டு, கேலிகள், வெட்டிப் பேச்சுக்கள் முதலியவற்றை மட்டுமே மனதில் இருத்திக் கொள்வர். இங்கே மூன்றுவகையான மாணாக்கரைப் பற்றி நான் கூறியுள்ளேன். நீர் முதல் தரமான மாணாக்கராக இருப்பதையே நான் விரும்புகிறேன். அப்படியே இருக்க நீர் முயற்சி செய்து கொண்டு உமது பெயரைக் குறிப்பிட்டு அடுத்த கேள்விகளை எழுதி அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? அம்மா என் வயது 25. நான் ஆசிரியர் தொழில்
• செய்கிறேன். என் பிரச்சினை என்னவென்றால், நான் ஒருவருடமாக ஒருவரை மனமார விரும்பினேன். அவரும் என்னை விரும்பினார். சில மாதங்களுக்குப் பிறகு அவர் அவ்வளவு நல்லவரில்லை என்ற உண்மையை தெரிந்து கொண்டேன். அத்தோடு என் வீட்டாருக்கும் இப்பிரச்சினை தெரிய வந்தது. அவரைப் பற்றி விசாரித்துப் பார்த்திருக் கிறார்கள். அவர் மோசமானவர் என என்னைக் கண்டித் தார்கள். அவரால் என் குடும்பத்துக்குள்ளும் சிறு சிறு பிரச்சினைகள் வர ஆரம்பித்தன. எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தேன். என்னைப் பெற்றவர்கள் எனக்கு நன்மை தான் செய்வார்கள். நம் வாழ்க்கையை விட குடும்பத்தில் எல்லோரின் நிம்மதியும் முக்கியம் என்று முடிவு செய்து அவரிடம் இருந்து விலக ஆரம்பித்துப் பிரிந்தும் விட்டேன். அவரோடு ஒரு வருடம் பழகி இருந்தாலும் நான் மிக கவனத்துடன் தான் பழகினேன். எந்தவித தப்பும் எங்களிடையே நடக்கவில்லை. கடிதம் எழுதிக் கொள்வோம். சேர்ந்து படம் பிடித்தோம். அவை எல்லாவற்றையும் திருப்பித் தருமாறு எத்தனையோ முறை கேட்டேன். கொண்டு வந்து தருகிறேன் என்றார். அதன் பிறகு ஒருவருடமாக எங்கள் இருவரிடமும் எந்தத் தொடர்பும் இல்லை அவரும் என்னை எதற்காகவும் தொந்தரவு செய்யவில்லை. எனக்குத் தொழிலும் கிடைத்து மகிழ்ச்சியோடு இருந்தேன். இந்நேரத்தில் எனது தங்கை ஒருவரை விரும்பியுள்ளாள். அவர் தமது வீட்டில் உள்ள எல்லோரையும் கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு பெண் கேட்டு வந்தார். அவர்கள் வீட்டில் அவர் தான் மூத்த பிள்ளை. உடனே திருமணம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு முன்பே எனக்கு எங்கள் வீட்டில் மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்நிலையில் என் அக்காவின் கணவரின் தம்பி எனது அத்தை மகன் என்னை விரும்புவதாகவும், அதைச் சொல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும் என் வீட்டுக்கு அடிக்கடி வந்து என்னிடம் கேட்க ஆரம்பித்தார். தனது வீட்டில் உள்ள எல்லோரையும் கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டுக்குப் பெண் கேட்டு வந்தார். அத்தோடு இவருக்கும் என் கதைகள் எல்லாம் தெரியும். எந்தப் பிரச்சினையும் வராது என்று நம்பி நானும் விரும்பத் தொடங்கினேன். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். நாங்கள் இருவரும் உண்மையாகப் பழகினோம். இந்த விஷயம் அவர் வீட்டாருக்கும் தெரிய வந்தது. எங்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க முடிவும் செய்து விட்டார்கள். இந்நேரத்தில் என் பழைய காதலன் அவர்கள் வீட்டிற்குப் போய் என் படத்தையும், கடிதங்களையும் காட்டி தான் என்னை விரும்பியதாகவும், என்னைப் பற்றி தேவையில்லாத அவதூறுகளையும் சொல்லி விட்டான். இப்போது பெரும் பிரச்சினையாக உள்ளது. இப்போது என் தொழிலிலும் ஒழுங்காக கவனம் செலுத்தமுடியவில்லை. ஆனால், அவர் (அத்தையின் மகன்) இன்னமும் என்னை விரும்புகிறார். என்னைத் தேடி என் வீட்டுக்கு வருகிறார். அவர் எப்படியும் தமது பெற்றோரைச் சம்மதப்படுத்தி திருமணம் செய்வதாகக் கூறுகிறார். ஆனால், அவர்கள் வீட்டில் இதற்கு கொஞ்சங்கூட விருப்பமில்லை. என் அக்காவுக்கும் அவர்கள் பேசும் பேச்சைக் கேட்டுக் கொண்டு இருக்க முடியவில்லை. அவரின் அம்மா, அப்பா இருவரும் சுகமில்லாதவர்கள். இவர் என்னைக் கட்டிக்கொண்டால் அவர்களுக்கு ஏதும் ஆகிவிடுமோ?**

விஜி, பலாங்கொடை

* வெளியே சென்று வேலை பார்க்க ஆரம்பித்ததும் உம்மைப் போன்ற இளம் பெண்களில் பலர், தாம் காதலிப்பவனின் பின்னணியையும் நடத்தைகளையும் நன்கு ஆராயாமல் பருவ மயக்கத்துக்கு ஆளாகிப் பிரச்சினைகளுக்குள் வீழ்ந்து விடுகிறார்கள். ஒருவருடமாக அவனுடன் புகைப்படம் எடுத்துக் கடிதங்கள் பரிமாறியும் அவன் ஒரு போலி என்பதை உணராமல் காதற் கற்பனையில் சிறகடித்துப் பறந்திருக்கிறீர்.

ஆனாலும், உடற்சேட்டைகளில் ஈடுபடாமல் புத்திசாலித் தனமாக நீர் நடந்து கொண்டது நல்லதாகப் போயிற்று. அக்கயவனிடமிருந்து நீர் ஒதுங்கிக்கொண்டது உமது அதிர்ஷ்ட மென்றே கூற வேண்டும். உமது மைத்துனர் முறையான பையன், உமது பழைய காதல் சம்பவங்கள் தெரிந்திருந்தும் உம்மை விரும்புகிறார்.

எனினும், உமது கடிதங்கள் போட்டோக்களை அவரின் பெற்றோருக்குக் காட்டி அவர்களின் மனநிலையைக் குடைந்து குழப்பி விட்டிருக்கின்றான் உமது பழைய காதலன். உமது மைத்துனர் பையன் உறுதியாக இருப்பதால் மெதுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் சஞ்சலத்தைத் தெளிவுபடுத்தி நல்ல முடிவை அவரின் " பெற்றோர் எடுக்கும்படி செய்வாரென நம்புகிறேன். நீர் காதலிப்பதிலும் பார்க்க, யார் உம்மைக் கூடுதலாக காதலிக்கி றார்களோ அவரைத் திருமணம் செய்து கொள்வது அதிகம் அன்பு நிறைந்த வாழ்க்கையாக அமையும். சில காலத்துக்கு அமைதியாக மனதை வைத்துக் கொள்ளும். எல்லாம் நல்லபடியாக நடக்கும்.

அக்கா இருக்க அவளை முந்திக் கொண்டு தங்கை திருமணம் செய்து கொள்வது இக்காலத்தில் புதிய சங்கதியல்ல. அதை உமது பெற்றோருக்குப் பக்குவமாக எடுத்துக் கூறி, தங்கையின் திருமணம் நிறைவேறச் செய்யும். நீர் உமது மைத்துனர் முறையானவரை மணஞ் செய்தால், அவரின் சுகயீனமான பெற்றோருக்கு ஏதாவது ஆகிவிடுமோ என மனதை அலட்டிக் கொள்ள வேண்டாம். உமது மைத்துனர் அவர்களைச் சமாதான மாக்கி சம்மதம் பெற்று, உமது கழுத்தில் மாலை சூட்டுவார். அதுவரை உமக்குப் பொறுமை தேவை.

✉ ✉ ✉ ✉

**? நான் ஒரு வாலிபன் எனினும், ஒரு பெண் சம்பந்தப்பட்ட விடயம் என்றபடியால் உங்களுக்கு எழுதுகிறேன். நான் ஒரு பெண்ணை உயிருக்குயிராக நேசிக்கிறேன். ஆனால், என்னுடைய காதல் அவளுக்குத் தெரியாது. என் வாழ்க்கை யிலே திருமணம் என்றால் அவளுடன் மட்டும்தான் என நான் எனது காதலைச் சொல்லப் போன போது, நான் அவளின் சகோதரன் மாதிரி என்று என்னிடம் கூறி விட்டாள். இதை என்னால் தாங்க முடியாமல் உள்ளது. எனவே, இப்பிரச்சினைக்கு நல்லதொரு ஆலோசனை தேவை.**

ஜேக்கப், மாறவில

* நீர் அந்தப் பெண்ணின் அழகில் மயங்கி அதைக் காதலாகக் கற்பிதஞ் செய்து கொண்டு, ஒரு தலைப்பட்சமான திருமண விருப்பத்தை அவளுக்குத் தெரிவித்திருக்கின்றீர். இரு மனங்கள் இணைந்ததே காதல். ஆணொருவன் தானாக விரும்பிவிட்டால் ஒரு பெண்ணிடம் ஓடிப் போய், அவளின் விருப்பம் அறியாமல் உன்னைக் கல்யாணம்செய்யப் போகின்றேன் என்றவுடன் அவள் ஓம் என்று சொல்லிவிட வேண்டும் என எதிர்பார்ப்பது சுத்த முட்டாள் தனமான பைத்தியக்காரச் செயல். அதனைத்தான் நீரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்கிறீர். உமது பைத்தியக்காரச் செயலை மறந்து "சகோதரன்" என அப்பெண் உம்மை அழைத்தது அவளின் பெருந்தன்மையையே காட்டுகின்றது. அதற்காக நீர் அவளுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இனி இவ்வாறு ஒரு தலைக்காதலாக வேறு எந்தப் பெண்ணிடமாவது நடந்து கொள்ளாமல் இருப்பதே பெண் குலத்துக்கு நீர் செய்யும் உதவியாகும்.

✉ ✉ ✉ ✉

**? நான் 27 வயது இளம் பெண். பல்கலைக்கழகப்படிப்பு முடித்து தற்போது அரசாங்க வேலையில் நிரந்தரமாகப் பணிபுரிகிறேன். பல்கலைக்கழகம் இவ்வருடம் தான் முடிந்துள்ளது. பட்டமளிப்பு விழா இன்னும் நடைபெற வில்லை. என்னுடைய பிரச்சினை என்னவெனில் நான் கடந்த சில மாதங்களாக ஒருவரைக்கண்டு வருகிறேன். அவருடைய குணநலன் நடவடிக்கை முதலியவை ஏனையவர் களிடமிருந்து அவரை இனம் காணக் கூடியதாக உள்ளன. எனது எதிர்கால வாழ்வில் எனக்கு வருபவர் எப்படி இருக்க வேணுமென்று நினைத்தேனோ அப்படி இருக்கிறார். அவருடன் வாழ்வில் இணைந்தால் எனக்கு நிம்மதி, பாதுகாப்பு, நிறைவு கிடைக்கும் என என் மனது கூறுகிறது. இதுவரை அவருடன் கதைக்கவில்லை.**

**அவர் நான் வேலை பார்க்கும் இடத்திலேயே வேறு வேலைத் தளத்தில் வேலை செய்கிறார். (அரசாங்க வேலை யில்லை) என்னுடைய சில நண்பிகளிடம் இது பற்றிக் கேட்ட போது "அவன் வேண்டாம். உனது வேலைக்கும், படிப் பிற்கும் அவன் தகுதியில்லை. அவனது பின்னணியும் தெரியாது வேண்டாம்" என்கிறார்கள். தகுதி என்பது நாமாக வளர்த்துக் கொள்ளும் விடயம்தானே? அவர் மற்றவரைச் சாராமல் நேர்மையாக உழைக்கிறார்.**

**எனக்கு எந்த மனக்குறையும் இல்லை. ஆனால் காலப்போக்கில் அவர் என்னை விட தான் தகுதி குறைந் தவர் என நினைப்பாரோ என்றும் யோசனையாகவுள்ளது. எனது தாயார் என்னை வெளிநாட்டுக்கு அனுப்பத் துடிக் கிறார், இங்கு சீதனப் பிரச்சினை இருப்பதால் எனக்கு இறைவன் தந்த வரப்பிரசாதம்" இந்தக் கல்வியும் வேலையும் என நினைக்கிறேன், இதைவிட்டு வேறிடம் போகவிருப்ப மில்லை. சொந்தக்காலில் நிற்க வேண்டும், நான் எப்படிக்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தேனோ அப்படி மற்றவர்களும் வருவதற்கு என்னால் இயன்றளவு உதவ வேண்டும் என்பது என எண்ணம்.**

**சில வேளை இவை எல்லாம் ஓர் கவர்ச்சியோ என்று எண்ணுவதும் உண்டு. A/L படிக்கும் போது, பல்கலைக் கழகத்தில் சலனப்படாத மனம் இப்போது மட்டும் ஏன்இப்படி? ஆயினும் நான் எதற்கும் அவசரப்பட வில்லை பொறுமையாக உள்ளேன். இது பற்றி அவரிடம் கதைக் கட்டுமா? சரி பிழைகளை பேசும்போதும், ஆராயும் போதும், எந்தவிடயமும் சுலபமாகும். உங்களின் அன்பான அறிவுரையை எதிர்பார்க்கிறேன்.**

பவித்ரா, ஈகொடஉயன்ன

* உமது எதிர்கால வாழ்க்கைக்குப் பொருத்தமானவர் எப்படி இருக்க வேண்டும் என நீர் கற்பனை செய்திருப்பவரைப் போன்ற ஒருவரைச் சில மாதங்களாகக் கண்டு வருகிறீர். ஆனால் அவருடன் திருமணத்தைப் பற்றியோ, அவரின் பின்னணி பற்றியோ இதுவரை நீர் விசாரித்துப் பார்க்கவில்லை.

முதலில் ஆறுதலாகவும் முழுமையாகவும் இவற்றை விசாரித்து உம்மைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும். தோற்றத்தில் மட்டும் அவர் பொருத்தமானவர் என எண்ணிக்கொண்டு ஆழம் தெரியாமல் காலை விட்டு எதிர்காலத்தில் கரைச்சலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். உமது நண்பிகள் கூறுவதிலும் உண்மை இருக்கிறது. சமமான படிப்பறிவு, சமமான தொழில் மற்றும் சமமான அந்தஸ்து உள்ளவர்களாக ஆணும் பெண்ணும் இருக்கும் போது திருமண வாழ்வு சிறக்கிறது ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து வைத்துக் கொள்வது அவசியம். அல்லாவிடில் தாழ்வுச்சிக்கல், உயர்வுச் சிக்கல், போட்டி, பொறாமை எனத் திருமண வாழ்க்கையில் அவ்வப்போது நெருக்கடிகள் தலை தூக்கும். அடிக்கடி நீர் தமிழ் நாட்டுத் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்க்கிறீர் போல் எனக்குப்படுகிறது. அவற்றிலே தான் கணவன் படிப்பில், அந்தஸ்தில் குறைவாக இருந்தாலும், உழைப்பால் உயர்ந்து முன்னுக்கு வந்துவிடுவான் என மனைவி மனப்பால் குடித்து ஏமாறும் காட்சிகள் அடிக்கடி வருகின்றன.

நீர் பிறந்த மண்ணிலே காலூன்றி நின்று கஷ்டப்படு பவர்களைக் கைதூக்கி விடவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன். அதே வேளை உமது பட்டப்படிப்பில் பெற்ற அறிவும் உமது வயதும் திருமண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயமாக நன்கு ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு போதுமானவை. உமக்குத் திருமண வயதாகிவிட்டது. உம்மால் தனியாக முடிவெடுக்க முடியாவிட்டால் இவ்விடயமாக உமது தாயாருடன் கலந்தாலோசித்து முடிவு செய்யலாம். சீதனப் பிரச்சனை என்பதற்காக வெளிநாட்டுக்கு செல்ல வேண்டும் என்ற உமது தாயாரின் கருத்து பொருத்தமற்றது. வெளிநாட்டு மாப்பிள்ளை என்றால் மேலும் பல மடங்கு சீதனம் கேட்பார். அதை உமது அன்னையாரிடம் எடுத்து விளக்கவும். வெளிநாட்டில் வேலை செய்யும் மாப்பிள்ளைமாரின் தேகாரோக்கியம், நடத்தை, குடும்பப் பிண்ணணி, தொழில், வருமானம் போன்றவை தொடர்பாக உமது தாயாரின் கற்பனை கொடி கட்டிப் பறக்கிறது. நீர் அறிவார்ந்த பிள்ளை. அவசரப்படாமல் எல்லாவற்றையும் ஆழந்து சிந்தித்துச் சரியாக எடைபோட்டு முடிவை எடுக்க வேண்டும்.

✉ ✉ ✉ ✉

**? நான் இருபது வயதுடைய இளைஞன். பல்கலைக் கழகத்தில் 6 ஆண்டு கற்கை நெறியைத் தொடர இருப்பதோடு, அதன் மூலமாக எதிர்காலத்தில் சமூகத்தில் மதிப்புள்ள ஒரு பதவியையும் வகிக்க எண்ணியுள்ளேன். கடந்த இரண்டு வருடங்களாக ஒரு பெண்ணை நான் மனதார நேசித்து வருகின்றேன். தொலைபேசி மூலமாகத்தான் எங்கள் அறிமுகம்.**

**அதன் பின்னர் காதலும் மலர்ந்தது. ஒரே ஒரு முறைதான் அவளைச் சந்தித்திருக்கிறேன். இதற்குக் காரணம் அவளது ஊருக்கும் எனது ஊருக்கும் இடையே நீண்ட தூர இடைவெளி உள்ளது. இதனால் அடிக்கடி தொலைபேசி வாயிலாகத்தான் மணிக்கணக்கில் உரையாடிக் கொள்வோம். எனது வீட்டில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை.**

**ஆனால் அவளது வீட்டில் இது வரைக்கும் எங்கள் காதல் தெரியாது. அது தெரியவரும் சந்தர்ப்பத்தில் பெரியளவில் எதிர்ப்புக்கள் உருவாகும் எனச் சொல்லி இருக்கின்றாள். ஆனால் இப்போதைக்கு அதுவல்ல எனது பிரச்சினை. எமது பிரச்சினை வயது சம்பந்தப்பட்டது தான். அவள் என்னை விட 2 வருடங்கள் இளையவள். அது மாத்திரமன்றி அவளின் பெற்றோருக்கு ஒரேயொரு பெண்பிள்ளை. இதன் காரணமாக அவளது வீட்டில் இப்போதே திருமணப் பேச்சுகள் ஆரம்பித்து விட்டன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் படிக்கின்ற காலப்பகுதியில் அவளுக்கு திருமணம் நடைபெற்றதை கேள்விப்பட்டால். அதன் பின்னர் எனது கல்வி, எதிர்காலம், என்னை நம்பியிருக்கும் எனது குடும்பத்தவர் நிலைமை என்பவையெல்லாம் என்ன வாகுமோ என்று எனக்கே தெரியாது. அவள் என்னை விடவும் வசதியானவள். எனினும் அவள் பெற்றோரிடம் இருந்து துளியளவு சீதனத்தையும் நான் எதிர்பார்க்கவில்லை.

என் காதலி மட்டும் எனக்குக் கிடைத்தால் போதும், அதுவும் பெற்றோரைப் பகைத்துக் கொண்டல்ல. மாறாக அவர்களது ஆசீர்வாதத்துடனேயே அவள் என் வாழ்க்கைத் துணையாக வரவேண்டும். என் கல்வியைக் கொண்டு தொழில்தேடி அவளை நான் வாழவைப்பேன் என்ற நம்பிக்கை உண்டு.

ஜெகன் , பொரளை

* எதிர்கால சமுதாயம் உம்மைப்போன்ற துடிப்புள்ள இளைஞர்களிலேயே தங்கியிருக்கிறது. அரசியல், சமூகம், பொருளாதாரம் முதலியவற்றைச் சீராக்கி கட்டியெழுப்ப வேண்டிய பெரும் கடமை இளைய சமூகத்துக்கே உரிய மாபெரும் பொறுப்பாகும்.

ஒடுக்குமுறை, வன்முறை, ஆயுதக்கலாசாரம், கொள்ளை, கொலை, வறுமை, பாலியல் வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம், ஏமாற்றல் முதலியவை இன்று நாளிலும் பொழுதிலும் பெருகிவருகின்றன. அவற்றின் அட்டகாசமும் ஏற்பட்டுள்ளது. கொட்டத்தையும் எதிர்காலத்தில் மடக்கிக் குழிதோண்டிப் புதைக்க வேண்டியது எதிர்காலச் சந்ததியின் கடமையென்று நீர் கருதவில்லையா?

பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகளாக கற்கை நெறியை தொடர இருக்கின்றீர். அதன் மூலம் சமூகத்தில் மதிப்புள்ள ஒரு பதவியையும் வகிக்க இருப்பதாகக் கூறுகிறீர். இவ்வாறு நல்ல பல நம்பிக்கைகளைச் சுமந்து கொண்டிருக்கும் உமது மனம், ஒரு தடவை மட்டுமே சந்தித்த அந்தப் பெண்ணைப் பற்றி ஏங்கிக் கொண்டிருப்பதும், தூரத்தில் இருக்கும் அவளுடன் தொலை பேசியில் உரையாடிக் கற்பனையில் மிதப்பதுவும் வரவேற்கக் கூடியவையல்ல. உமது படிப்புக்காலத்தில் அவளுக்கு அவளது பெற்றோர் விரும்புவதைப் போலத் திருமணம் நடைபெற்று விட்டாலும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. நீர் பட்ட தாரியாகித் தொழில் ஒன்றில் அமர்ந்ததும் அவளிலும் பார்க்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பான பெண்ணொருத்தி உமக்கு கிடைப்பாள். சமுதாயக் கடமைகளையும் மறந்து விடவேண்டாம்.

✉ ✉ ✉ ✉

**? எனக்குத் திருமணமாகி ஏழெட்டு மாதங்கள் ஆகின்றன. எனது கணவர் மிக நல்லவர், எமது திருமண வாழ்வு சந்தோஷமாகக் கழிகிறது. நாம் ஒரு பெண்ணும், ஒரு ஆணுமாக இருகுழந்தைகளை மாத்திரம் பெற்றுக் குடும்பத்தைச் சந்தோஷமாக நடத்த வேண்டும் என மனம் நிறைந்த ஆசையோடு இருக்கிறேன். ஆனால் எமது தோட்டப் பகுதிங்களிலே சில நெருக்கடிகள் கஷ்டங்கள் எற்படுகின்றன. அதாவது பெண்களை அவர்கள் மிக இளமையாக இருக்கும்போதே பிள்ளைப் பெற்றால் உடல் இளைத்துப் பெலவீனமாகிவிடும், குழந்தைகளை வளர்த்தெடுப்பதற்கு அதிக பணம் செலவாகும். எனக் காரணங்களைக் கூறி கருத்தடை செய்யுமாறு வற்புறுத்துகின்றனர். இதை நினைக்க எனக்குப் பயமாகவும் வெறுப்பாகவும் இருக்கிறது. எனது ஆசையில் மண் விழுந்துவிடுமோ என்று பயமாகவும் இருக்கிறது. கருத்தடை செய்து கொள்பவர்களுக்குச் சலுகையாக உடனே கையில் பணமும் கொடுக்கிறார்கள். பல ஏழைகள் உடனடியாக இத்தொகைப் பணத்தைப் பெற ஆசைபட்டுப் பிரசாரம் செய்பவர்களின் கதையில் எடுபட்டுக் கருத்தடை செய்கிறார்கள். எனக்கோ கருத்தடை செய்ய சிறிதும் விருப்பமில்லை. எனக்குச் சரியான வழி காட்டுதல்களைச் சொல்லித் தாருங்கள்.**

சரசா, புவாக்பிட்டி

* இன்று பெண் உரிமை அமைப்புக்களும் மகளிர் முன்னேற்ற மன்றங்களும் உரத்துக்குரல் கொடுக்கும் பெண்களின் உரிமைகள் தொடர்பான விஷயம் பற்றியே நீங்கள் கேள்வி தொடுத்துள்ளீர்கள்.

பெருந்தோட்டப்பகுதிகளில் கருத்தடை சம்பந்தமாக அரசாங்கம் எடுக்கும் தீவிர நடவடிக்கைகளைப் பற்றி நானும் பத்திரிகைகள் மூலம் அறிந்து வைத்துள்ளேன். திருமணமான பெண் எத்தனை குழந்தைகள் பெறுவது, அவற்றை எப்போது பெறுவது என்ற தீர்மானங்களையெடுப்பதெல்லாம் பெண்ணுடைய உரிமையாகும். இதனைத் தட்டிப் பறிக்க கணவனுக்குக் கூட உரிமையில்லையென்று குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாதிகாலமாக நிலவிவரும் பெண்ணடிமைத் தனத்தின் ஒரு வெளிப்பாடுதான் இதுவும். குழந்தை பெறுவது பெண்ணுக்குரிய ஒரு இயல்பான நிகழ்வு. குழந்தையைக் கருவில் சுமந்து பெற்று வளர்த்தெடுப்பது ஒரு பெண்ணின்பொறுப்பு மனித வளத்தைச் செழிப்பாக்கும் மனிதச் சங்கிலியைத் தொடரும் பணியில் பெண்ணுடைய பங்கு பெரும் பங்கென்பதை மறுக்க முடியாது. கருவளத்தைப் பெருக்குவதும் சுருக்குவதும் கருவைச் சுமக்கும் தாயினுடைய தீர்மானத்தைப் பொறுத்தே இடம் பெறவேண்டு மேயன்றி, அரசாங்கமோ மற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்களோ மேற்கொள்ள வேண்டிய முடிவு அல்ல. நீங்கள் ஆசைப்படுவதுபோல உங்கள் மனவிருப்பத்திற்கும். பண வசதிக்கும் ஏற்ப எத்தனை குழந்தைகளையும் பெற்றெடுத்துக் கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு. இதனையாருமே தடுத்துவிட முடியாது.

பிள்ளைகளைப் பெற்றால் உடல் வலிமை குறைந்து வருத்தமுற்றிடுவர் என்ற பிரசாரம் உண்மையற்ற பச்சைப் பொய். அது உண்மையாயிருப்பின் இதுவரை காலமும் குழந்தைகளைப் பெற்ற தாய்மாரெல்லாம் பிணியாளர்களாக வைத்தியசாலையில் படுத்துக் கிடக்கிறார்களா? குழந்தை பெறுவது பெண்ணுக்கு மேன் மேலும் மன உறுதியையும் உடல் வலிமையையும் கொடுக்குமேயன்றி நோயாளியாக்கிவிடாது என்பதை முதலில் உணருங்கள்.

சிலருக்கு ஏற்கனவே சில வருத்தங்கள் இருந்தால், அல்லது பிள்ளைப் பேற்றின் போது இரத்தப்பெருக்கு அதிகமானால், பேற்றின்பின் உடம்பை உரியபடி பராமரிக்காமல் விட்டால், உரிய மருந்துகள் உணவுகளை உட்கொள்ளத் தவறினால் சில வருத்தங்கள் ஏற்படக்கூடும்.

அவற்றிற்கு உரிய வைத்தியரை நாடிச் சிகிச்சை பெற்றுக் கொண்டால் யாவும் சுகமாகிவிடும். பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்கு அதிக பணம் செலவாகுமென்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. கருத்தடைத்திட்டத்தைப் பரப்புவதற்கான வார்த்தைகள் தான் இவை. 6,7 பிள்ளைகள் இருப்பின் பொருளாதாரக் கஷ்டத்தைச் சந்திக்க வேண்டி நேரிடலா மென்பதும் உண்மையே. எல்லாப் பிள்ளைகளுக்கும் உணவு, உடை, கல்வி, பொழுது போக்கு எனச் செலவுகள் கூடலாம். ஆனால் ஒன்றிரண்டு பிள்ளைகளாயின், கொடிக்குக் காய் பாரமென்று கூறமுடியுமா? அல்லாமலும் கூட வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு, கல்வி, உணவு, பாடசாலைச் சீருடை, இலவச பாடநூல் திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அரசாங்கம் ஏழை மக்களுக்காகப் பல உதவிகளையும் அளித்து வருகிறது.

அதோடு சில தேவாலயங்கள், அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள், தர்மவான்கள் என்போரும் ஏழைகளுக்கு உதவும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடைய உதவிகளையும் பெற்றுப் பிள்ளைகளை முன்னேற்ற முடியும்.

சில தோட்டக் கமிட்டியினரும், தொழிற்சங்கங்களும் கூட, இக்கருத் தடைப் பணிகளில் வலோற்காரமாக மக்களை ஈடுபடுத்துவது ஒரு துக்ககரமான செய்தியே. ஏழை மக்களும் உடனே கையில் ரூபா ஐந்நூறைப் பெற்றுக்கொள்ளும் ஆசையில் இப்பசப்பு வார்த்தைகளில் மயங்கி விடுகின்றனர்.

கடந்த வாரம் சர்வதேச மகளிர் தினவிழா வைபவமொன்றில் கலந்து கொள்ள நான் கண்டிக்கு வந்திருந்த போது இத்தகைய செய்திகளைக் கேள்வியுற்று வருந்தினேன். சுகயீனமுற்றவர்கள், குழந்தை பெற முடியாத உடல் நிலை கொண்டவர்கள், இனி மேலும் குழந்தைகள் வேண்டாம், பெற்றுக் கொண்டவை போதும் எனத் திருப்தியுடையோர், கருத்தடையை மேற் கொள்வதில் தவறில்லை.

ஆனால் இளந் தம்பதிகள் தம் விருப்பப்படி குழந்தைச் செல்வங்களைப் பெற்றுக் கொள்ளவதை யாரும் தடுக்க முடியாது. எனவே நீர்வீண் பிரசாரங்களுக்குக் காது கொடுத்து, மனதில் ஏக்கத்தையும் பீதியையும் வளர்த்துக் கொள்ள வேண்டாம். கருத்தடைப் பிரசாரம் தவறான முறையில் மேலும் பரவுமாயின் நீங்கள் யாவரும் ஒன்று பட்டு எதிர்ப்புக் குரல் எழுப்புங்கள்.

அருகிலுள்ள தொண்டர் ஸ்தாபனங்கள், பெண்கள் அமைப்புகள், பொலிஸ் நிலையம் போன்றவற்றில் உங்கள் பிரச்சினைக்கான உதவியை நாடுங்கள்.

✉ ✉ ✉ ✉

**? நாங்கள் நாலுபேர் உயிர் நண்பர்களாக இருந்தோம். எங்கள் நட்பைக் கண்டு பலர் பொறாமை கொண்டனர். அவர்களின் திருஷ்டிதானோ தெரியவில்லை இன்று பிரிந்து விட்டோம். நால்வரில் இருவர் இங்கிருக்க மற்றிருவர் வேறு மாவட்டத்திற்கு மாறிச் சென்று விட்டனர். இங்கிருக் கின்ற நாங்கள் இருவரும் மற்றைய இருவருடன் தொடர்பு கொள்ளும்பொழுதெல்லாம் அவர்கள் எங்களைப் புறக்கணிக்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கின்றனர் அதற்கு நாங்கள் என்ன செய்வது? அவர்களை ஒதுக்கி விடுவதா அல்லது நினைத்து வருந்துவதா?**

ஜெயசீலி, மகாரகம

* நீங்கள் நால்வரும் நல்ல ஒற்றுமையாகவும் நட்பாகவும் இருந்தீர்கள். தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ உங்கள் மத்தியில் ஏதோ பிரச்சினை தலைதூக்கி யிருக்கிறதென எண்ணுகிறேன். அப்பிரச்சினை என்னவென்று விளக்கமாக நீங்கள் எனக்கு எழுதவில்லை.

நல்ல மாங்கனியில் சூத்தை விழுவதுபோல் உங்கள் நட்புக்கும் இப்படியொரு விபத்து ஏற்பட்டு விட்டது. இதற்கு திருஷ்டியே காரணமென நீங்கள் ஏங்கத்தேவையில்லை. அப்படியாக ஒன்றும் இல்லை. ஆனால் சிறிது கருத்து வேறுபாடோ, மனத்தாக்கமோ ஏற்பட்டுள்ளது போல் தெரிகின்றது. எதற்கும் நீங்கள் மனதை அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருங்கள். நல்ல நட்பென்பது மண்சட்டி போன்றதல்ல. மண்சட்டி உடைந்தால் ஒட்ட முடியாது. அது தங்கத்தாம்பாளம் போன்றது. வெடிப்பு ஏற்பட்டாலும் பின்னர் ஒட்டிக் கொள்ளும் தன்மை வாய்ந்தது உண்மைநட்பு. எனவே மனம் சோராமல், துயருறாமல் நீங்கள் அமைதியாக இருங்கள். காலம் செல்லச் சரியான புரிந்துணர்வு தானாகவே ஏற்படும் அவர்கள் உங்களுடன் தொடர்பு கொண்டு பழைய நட்பைத் தொடர்வர். அதுவரை நீங்கள் ஏங்கி வருந்த வேண்டாம்.

✉ ✉ ✉ ✉

**? எனக்கு வயது 42, எனது துணைவருக்கு வயது 48. இருவரும் தொழில் பார்க்கிறோம். நல்ல பதவியில் இருக்கிறோம். நம்மிருவருக்கும் பதவி உயர்வுகளும் கூடுதலான வேதனமும் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு. எமக்கு நாலு பெண் குழந்தைகள் 4,6,9,13 என்ற வயதுகளில் உள்ளனர். நான் கூறும் சங்கடம் எனக்கும் எனது கணவருக்குமுள்ள இவ்விஷயம் சம்பந்தமான மாறுபாடான கருத்து மோதல்களே. எனது கணவர் என்மீது அன்பும் குழந்தைகள் மீது பாசமும் கொண்ட கண்ணியம் மிக்கவர். ஆனால் அவருக்கு ஒரு ஆண்குழந்தை வேண்டுமென்ற நீண்டநாள் ஆசையுண்டு. பொருளாதார ரீதியில் எமக்கு எவ்வித கஷ்டங்களும் இல்லையென்றாலும் இந்த நான்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழந்தைகளையுமே நன்றாகக் கற்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்து விட்டால் போதுமானது என்பது எனது அபிலாஷை. ஆனால் எனது கணவர் இன்னுமொரு குழந்தைக்கு அது ஆணாகவும் அமையக் கூடும் என்ற நப்பாசையில் உள்ளார். எனக்கோ இதில் சிறிதும் இஷ்டமில்லை. அடுத்தது ஆணாகப்பிறக்கும் என எதிர்பார்த்து எதிர்பார்த் துத்தான் 3வது 4ஆவதாகவும் பெண் குழந்தைகள் பிறந்தனர். திரும்பவும் ஆணுக்காக நாம் ஆசைப்பட்டு அதுவும் பெண்ணாகப் பிறந்து விட்டால் 5 பெண் பிள்ளைகளையும் எப்படிச் சுமப்பது? ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்றொரு பழமொழியும் உண்டல்லவா? எனவே என் மனதிற்கு அமைதி தரக்கூடிய தான உங்களின் ஆலோசனையை எழுதுங்கள்.**

மைதிலி, குண்டகசாலை

✱ குடும்பத்தின் குதூகலத்துக்கும் மகிழ்ச்சிக்கும் குழந்தைகள் அவசியம்தான். நான்கும் பெண் குழந்தைகளாயிருக்கிறார் களேயெனக் கருதக்கூடாது. எந்தக் குழந்தையென்றாலும் ஆண், பெண் என்ற பேதமின்றிச் செல்வமாகவே கருத வேண்டும். முற்காலத்தில் தான் "ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியா வான்" எனக் கருதினர்.

அக்காலத்தில் பெண்களுக்கு கல்வி அறிவு ஊட்டப் படவில்லை வெளியே சென்று தொழில்ப்பட பார்க்க அனுமதிக் கப்படவில்லை. அதனால் பெற்றோருக்குச் சுமையாகப் பெண் பிள்ளைகள் கருதப்பட்டனர்.

தற்காலத்தில் ஆண்களை விடப் பெண்களில் பலர் உயர்கல்வி கற்றுப் பெரியபதவிகளில் அமர்ந்திருக்கின்றனர். இரு தடவைகள் ஆண் குழந்தை கிடைக்குமென எதிர்பார்த்து ஏமாந்து விட்டதனால் நீங்கள் பின்வாங்குவதன் காரணம் விளங்குகிறது.

இருவரும் நன்கு கற்று நல்ல பதவியிலும் அமர்ந்திருக் கிறீர்கள். குழந்தைகளின் கல்வி, வளர்ப்பு என்ற குடும்பப் பொறுப்புகளோடு உங்களுக்கு இன்னும் பொறுப்புமிக்க உயர் பதவிகள் காத்திருக்கின்றன. வயசும் உடல் நலமும், பொருளாதா ரமும் ஏற்புடையதாகவிருப்பின் இன்னொரு குழந்தைக்கு உங்கள் கணவர் ஆசைப்படுவதுபோல, நீங்கள் முயற்சிக்கலாம்.

முற்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் 10,12, 16 என்று குழந்தைச் செல்வங்களுக்குக் குறைவேயிராது. ஆனால் இன்றைய அவசர யுகத்தில் பொருளாதார மற்றும் சகல வசதிகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து ஆசைக்கும் ஆஸ்திக்குமென இரு குழந்தைகளையே எதிர் பார்ப்பது இயல்பாகிவிட்டது. அல்லா மலும் எத்தனை குழந்தைகளைப் பெறுவது எப்போது பெறுவது என்ற பொறுப் பெல்லாம் தாயினுடைய உரிமையாகவே இன்று கருதப்படுகிறது.

பெருகிவரும் சனத்தொகையைக் கணக்கில் கொண்டும் தமது பொருளாதார வசதிகளைக் கருதியும் இன்றைய பெற்றோர் மிகக் குறைந்த எண்ணிக்கையான குழந்தைகளைப் பெற்றெடுக்க விரும்புகின்றனர்.

உங்கள் கணவரும் நன்கு படித்தவர். பிரச்சினை, பொறுப்புக் களை உணரக் கூடியவர். அவரிடம் உங்கள் சங்கடங்களை விளக்கமாக எடுத்துக் கூறி ஒற்றுமையாக இருவரும் சேர்ந்து ஒரு முடிவை எடுக்கலாம்.

✉ ✉ ✉ ✉

**? நான் தற்போது கல்வியியல் கல்லூரி மாணவியாக இருக்கிறேன். நான் தரம் 10 படிக்கும் காலத்திலிருந்தே ஒருவர் என்னை மிகவும் நேசித்தார். ஆனால் அதற்கு இடம் கொடாமல் என்னை ஒருமுகப்படுத்திக்கொண்டு எனது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்தேன். எந்த ஒரு வார்த்தைக்கும் இடம் கொடுக்காமல் அவரைப் புறக்கணித்து விட்டேன். அதன் பின் சென்ற வருடம் தூரத்து உறவுக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அதன் பிறகு சாதாரணமாகக் கதைப்பேன். இதே நிலையில் சென்ற மாதம் இருவரும் மனம் விட்டு பேசியபோது என்னைக் காணும் போதெல்லாம் அவருக்கு மனதில்ஒரு விதமான மாற்றம் ஏற்படுவதாகவும் உற்சாகம் ஏற்படுவதாகவும் என்னை இன்னும் நேசிப்பதாகவும் கூறினார் அன்றிலிருந்து எனக்கு மனக்குழப்பமாகவும் அவர் மீது ஒருவித பரிவும் ஏற்க படுகிறது. ஒரு நேசிப்பாளனின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் மிதித்து, புறந்தள்ளி, அழித்து விட்டேனே என்று இப்போது எனக்கு அவர் மீது நேசப் பார்வையுள்ளது. முன்பு மனதை ஒருமுகப்படுத்தியதைப் போல, இப்போது ஒரு முகப்படுத்த முடியாதுள்ளது. இந்த மனக்குழப்பத் திலிருந்து விடுபட சிறந்த ஆலோசனைக்களைத் தருவீர்கள் என எதிர்பார்கிறேன்.**

ஊர்வசி, தலாத்துஓயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இளமையில் நாம் விமான ஓட்டிகளாக கப்பற் சொந்தக் காரராக, நாட்டின் பிரதமராக என எத்தனை கனவுகளுக்குச் சொந்தமாகிறோம். அவை நிறைவேறுகின்றனவா? வெறும் கனவுகளாகவே மறைந்து விடுகின்றன. அதைப்போல் பருவ வயதில் பல கற்பனைக் கோட்டைகள் எழலாம் அவையாவும் நிஜமாவதில்லை. நீர் முன்பு சந்தித்த ஒருவர் திருமணமான பின்னர் உம்மீது ஒரு வித பரிவும் தப்பான பாசமும் ஏற்படுவதாகக் கூறியதையிட்டு நீரும் உமது மனதைக் மிகவும் குழப்புவது தவறானது. ஆணோ, பெண்ணோ திருமணமான ஒருவருடைய மனதுள் புகுந்து பச்சாத்தாபம் காட்டி இரக்கம் கொள்வது போல் தம் இயலாமையைக் கொட்டியளப்பதற்கு மன்னிப்பே கிடையாது.

அவற்றை நன்கு புரிந்துகொள்ளவும், திருமணமான ஒருவருடன் நீர் கதைத்துப் பேசினாலும், தேவையற்ற விஷயங் களைப் பேசி உம்மையும் அவரையும் குழப்பிக் கொள்ளாமல், எல்லை மீறக் கூடாது என்பதை இறுக்கமாக மனதில் பதித்துக் கொள்ளவும். வெறும் மாய்மாலப் பேச்சுக்களுக்கும் பசப்பு வார்த்தைகளுக்கும் இடம் வைக்கவே கூடாது.

✉ ✉ ✉ ✉

**? எனது வயது 23, நான் ஓ.எல் வரை கல்வி கற்று விட்டு தற்போது வீட்டில் இருக்கிறேன். எங்கள் வீட்டில் நான்கு பெண் பிள்ளைகள். நான் வீட்டில் மூன்றாவது பிள்ளை. எனக்கு மூத்த அக்கா இருவரும் இன்னும் திருமணம் முடிக்கவில்லை. நானும் ஒரு வருடமாக ஒரு அமைப்பில் வேலை பார்த்தேன். அதற்குள் என் வாழ்க்கையில் விதி விளையாடிவிட்டது. கோயில் ஒன்றில் சுவாமியாக இருக்கும் ஒருவருக்கு என்னைப் பெண் கேட்கிறார்கள். சரி என்று அம்மா, அப்பா பேசி முடித்து, நிச்சயாதார்த்தமும் முடிந்து விட்டது. சென்ற வருடம் ஜுலை மாதம் எனக்கு நிச்ச யார்த்தம் நடந்தது அப்போது மாப்பிள்ளை வீட்டார்கள் ஜனவரிக்கு திருமணம் வைப்பதாகக் கூறியிருந்தார்கள். ஆனால் இப்போது விவாகப் பொருத்தம் இல்லை, திருமணம் நடக்காது என்று, சொல்கிறார்கள் அவர்களிடம் என்னுடைய போட்டோவும் ஜாதகமும் இருக்கின்றது. அதைத் திருப்பிக் கேட்டால் அதுவும் தொலைந்து விட்டதாகச் சொல்கிறார்கள். இதற்கு என்ன செய்வது? கேள்விக் குறியாக நிற்கும் என் வாழ்க்கைக்கு ஆலோச னைகூறுங்கள்**

கல்பனா, தெரணியகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கடந்த ஜுலையில் நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஜனவரியில் இல்லையென்றாகி விட்டதுடன் உமது ஜாதகம் புகைப்படம் ஆகியவற்றையும் அவர்கள் தொலைத்து விட்டார்கள் போல் தெரிகிறது. ஏற்கனவே உமது மூத்த சகோதரிகள் இருவரும் இன்னும் திருமணமாகாமல் உள்ளனர். இவற்றை வைத்து உமது வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது என நீர் வேதனைப்படுவது சரியல்ல.

கூடியளவு உமது கல்வியறிவை வளர்த்துக் கொண்டு வெறும் திருமணக் கனவு ஏக்கங்களில் உம்மைப் பறி கொடுக்காமல் உமது காலில் ஸ்திரமாக நிற்கும் வழியைப் பார்க்கவும். உமது பெற்றோர் பாவம். பெண்பிள்ளைகளென்றால் தமக்குப் பாரமாகி விடுவார்களென எண்ணி, அவர்களுக்குக் கல்வியைக் கொடுப்பதைக் காட்டிலும் ஒருவருடைய கையில் பிடித்துக் கொடுத்துக் கல்யாணத்தை முடித்து வைப்பதிலேயே குறியாக உள்ளனர்.

கல்வியையூட்டி பெண்களுடைய ஆளுமையை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற எண்ணம் இன்னும் பலபெற்றோரிடம் காணப்படவில்லை. பெண்ணுக்கு திருமணம் அவசியம் தான். ஆனால் அதுதான் முற்று முழுதான வாழ்க்கை என்று நம்பி, ஏனையவற்றில் உதாசீனமாயிருந்துவிடக் கூடாது.

திருமண வாழ்வு சிறந்து விளங்கப் பெண்ணுடைய அறிவும் ஆளுமையும் விசாலமானதாக இருப்பின் வாழ்க்கை மிகச் சிறப்பாக அமையும். முதல் நிச்சயிக்கப்பட்டவரைவிட உமக்கு அவரினும் மேலான ஒருவர் 000000000000000எதிர்காலத்தில் உமக்குத் துணையாக வரக்கூடும் எதற்கும் மனதை அலையவிட்டு அங்கலாய்த்து ஐயோ எல்லாம் போச்சே என ஏக்கம் கொள்ளாமல் அமைதியாக இருக்கவும். உமது மனவிருப்பிற்கும் தகுந்திக்குமேற்ப ஒரு தொழிலைத்தேடி அதனைச் சிறப்புற ஆற்ற முயற்சிக்கவும், காலம் வரும்போது எல்லாம் நன்றாகவே கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராமுகங்கள்..... சிலபார்வைகள்



## பத்மா சோமகாந்தன்

இந்நூல் வெறும் கேள்வி - பதில் கூறும் நூல் அல்ல. பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த பிரச்சனைகளையும் அலசும் நூல். ஆசிரியர் பத்மா சோமகாந்தன் அவர்களின் பல்துறை அறிவையும் அனுபவங்களையும் விவேகத்தையும் அறிவிக்கும் நூல்........... பத்மா சோமகாந்தன் பயிற்சி பெற்ற ஆசிரியராகச் சேர்ந்து ஆசிரியராக, அதிபராக பணி செய்து ஓய்வு பெற்றவர். பல ஆயிரம் மாணவ, மாணவியரைப் பயிற்றுவித்த அனுபவம் பெற்றவர். இலக்கியம் படைப்பதிலும் அனுபவம் பெற்றவர். அவரது சிறுகதைகள், கட்டுரைகள் நூலாக வெளியிடப் பெற்றது. ஈழத்தில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் பரவலாகப் புகழ் பெற்றவர்.

— செ. கணேசலிங்கன்

எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் எழுதியிருக்கும் இந்நூல் எத்தனையோ பேருக்குப் பயன்தரக்கூடிய, வாழ்வின் மிக நுட்பமான பகுதிகளில் நிலவும் சிக்கல்களுக்குத் தீர்வு தருகிற நூல். "வீரகேசரி" வார இதழில், "நெஞ்சுக்கு நிம்மதி" என்ற தலைப்பில் கேள்வி - பதில்களாக வந்தவை ஒரு தொகுப்பாக வெளிவந்திருக் கின்றது................ இலக்கியம் என்பது மனிதர்களுக்கானது. மனித வாழ்க்கையைப் பேசுவது, ஆராய்ந்து, சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது ஆகியவைதான் இலக்கியத்தின் தலையாயப் பணியாக இருக்க முடியும். "கேள்வி - பதில்" வாயிலாக இப்பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் பத்மா சோமகாந்தன். எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டிய மிக முக்கியமான நூல் இந்நூல்.

— திலகவதி ஐ.பி.எஸ்.

விலை ரூபா 300.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org